அருந்தமிழ் நூற்காவலர்

# அடிகளார்

முனைவர் வே. இரா. மாதவன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

# அருந்தமிழ்நூற் காவலர் அடிகளார்

முனைவர் வே.இரா. மாதவன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
இரண்டாம் முதன்மைச் சாலை, சி.ஐ.டி. வளாகம்,
தரமணி, சென்னை-600113

மறைமலையடிகளார் அறக்கட்டளைச் சொற்பொழிவு
(அறக்கட்டளை நிறுவியோர்-சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை)
வரிசை எண் : 7 நாள் : 04-05-2004

# BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Title of the Book | : | Aruntamil Nūr Kāvalar Aṭikaḷār |
| Author | : | Dr. V.R.Madhavan<br>Assiociate Professor<br>Manuscript Department<br>Tamil University, Thanjavur. |
| Publisher & © | : | International Institute of Tamil Studies<br>II Main Road, C.I.T. Campus,<br>Chennai-600 113.<br>Ph: 22542992 |
| General Editor | : | Dr. Annie Thomas<br>Professor<br>International Institute of Tamil Studies<br>Faculty of Sociology Art and Culture. |
| Publication No. | : | 493 |
| Language | : | Tamil |
| Edition | : | First Edition |
| Year of Publication | : | 2004 |
| Paper Used | : | 18.6 Kg TNPL Maplitho |
| Size of the Book | : | 1/8 Demy |
| Printing type used | : | 10 Point |
| No. of Pages | : | x + 182 |
| No. of Copies | : | 1200 |
| Price | : | Rs.55/- (Rupees Fifty Five Only) |
| Printed by | : | United Bind Graphics<br>101-D, Royapettah High Road<br>Chennai - 600 004. |
| Subject | : | A Critical Study on the Contributions of Maraimalaiaṭigaḷ |



அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகட்கு நிறுவனம் பொறுப்பன்று

*முனைவர் சா. கிருட்டினமூர்த்தி*
*இயக்குநர்*
*உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்*
*தரமணி, சென்னை—600 113.*

# அணிந்துரை

"நாம் தமிழை உயிர்ப்புடன் இருக்க உழைத்தாக வேண்டும். நூற்றுக்கு எண்பது விழுக்காடு வடசொல்லும், இருபது தமிழ்ச் சொல்லுமாக எழுதினால், பேசினால் தமிழ் எப்படிப் பிழைக்கும்?" என்று தனித்தமிழின் சிறப்பை எடுத்துக்கூறிய மறைமலை அடிகளார் தனித்தமிழ் உணர்வும், ஊக்கமும், தமிழர் வாழ்வில் நிலைத்தோங்கப் பல கட்டுரைகளை எழுதி வெளியிட்டுள்ளார். தமிழகத்தில் தனித்தமிழ் இயக்க விழிப்புணர்வு ஏற்பட்டதற்கு மறைமலை அடிகளாரே காரணம். தன்னை ஒரு தனித்தமிழ் இயக்கச் சிந்தனையாளர் எனக் காட்டும் வகையில் தன்னுடைய பெயரைத் தனித்தமிழில் மாற்றிக்கொண்டார். இல்லறத்துறவியாக இருந்த சுவாமி வேதாசலம் **மறைமலை அடிகளார்** என்ற தனித்தமிழ்ப் பெயரால் போற்றப்பெற்றார்.

நாகபட்டினம் வெதலியா கிறித்தவக் கல்லூரியில் பயின்றார். மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை, நாராயணக் கவி ஆகியோரிடம் தமிழ் இலக்கியம் பயின்றார். தம் 21ஆவது வயதிலேயே தமிழில் ஆழ்ந்த புலமை பெற்றவராக விளங்கினார். திருவனந்தபுரத்தில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். பின்னர்ச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் பேராசிரியராகப் பல்லாண்டுகள் பணியாற்றியுள்ளார். சோமசுந்தரபாரதியார், ரசிகமணி டி.கே.சி, பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை போன்றோர் அடிகளாரிடம் தமிழ் பயின்றனர்.

தமிழ் மொழிக்கும், தமிழ் இனத்திற்கும் பாதுகாவலராக விளங்கிய மறைமலை அடிகளாரின் தமிழ்த்தொண்டு தமிழ் உள்ளளவும் நிலைத்துநிற்கும் தன்மையுடையதாகும். தமிழோடு ஆங்கிலம், வடமொழி ஆகியவற்றிலும் பெரும் புலமை சான்றவராக விளங்கினார். இத்தகு அடிகளாரின் தமிழ்ப்பணியை, அடிகளாரின் பெருமையை எண்ணிப் பார்ப்பதும், அவருடைய ஆய்வைப் பற்றித் தமிழ் உலகிற்கு எடுத்துக் கூறுவதும் இன்றியமையாப் பணிகளாகும்.

இந்நிறுவனத்தில் மறைமலை அடிகளாரின் பெயரில் அமைந்த அறக்கட்டளையின் ஏழாம் சொற்பொழிவாக இது நடைபெறுகிறது. இவ்வேழாம் சொற்பொழிவை 'அருந்தமிழ்நூற் காவலர் அடிகளார்' என்ற பொருண்மையில் நிகழ்த்தத் தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை இணைப்பேராசிரியர் முனைவர் வே.இரா. மாதவன் அவர்கள் இசைவு அளித்தார். உரிய காலத்தில் எழுத்துருவை அனுப்பி நூல் உருவாவதற்குப் பெரிதும் துணைபுரிந்துள்ளார். முனைவர் வே.இரா. மாதவன் அவர்கள் இந்நிறுவனத்தின் முன்னாள் ஆய்வு மாணவர். நல்ல ஆராய்ச்சியாளராகவும், சுவடிப் பதிப்பாசிரியராகவும் விளங்கும் இவர் இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவினை நிகழ்த்துவது குறிப்பிடத்தக்க நிகழ்வாகும். நிறுவனத்தின் சார்பில் அவருக்கு நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவின் எழுத்துரு '**அருந்தமிழ்நூற் காவலர் அடிகளார்**' என்ற பெயரில் நூலாக வெளிவருகிறது. இந்நூலில் அடிகளாரின் பன்முகச் சிறப்புகள் மிகத் தெளிவாக உரிய சான்றுகளுடன் விளக்கிக் கூறப்பட்டுள்ளன. இவ்வறக்கட்டளைப் பொழிவு தமிழ் இலக்கிய உலகிற்கு ஒரு புதிய வரவாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவு உரிய காலத்தில் நூலாக்கம் பெறுவதற்கு அனைத்து முயற்சிகளையும் மேற்கொண்ட இவ்வறக் கட்டளைப் பொறுப்பாளர் முனைவர் அன்னி மிருதுலகுமாரி தாமசு அவர்களுக்கும், இந்நூலுக்கு மெய்ப்புத் திருத்தம் செய்ய உதவிய திட்டக்கல்வியர் செல்வி ஜெ. சரசுவதிக்கும் நன்றி.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகின்ற நிறுவனத் தலைவர் **மாண்புமிகு கல்வியமைச்சர் திருமிகு செ. செம்மலை** அவர்களுக்கும், தமிழ் வளர்ச்சி பண்பாடு-மற்றும் அறநிலையத்துறைச் **செயலாளர் திருமிகு பு.ஏ. இராமையா இ.ஆ.ப.** அவர்களுக்கும், **சிறப்புச் செயலாளர் திருமிகு தா. சந்திரசேகரன் இ.ஆ.ப.** அவர்களுக்கும் என் நன்றியறிதலைப் புலப்படுத்திக் கொள்கிறேன்.

இந்நூலுக்கு ஒளி அச்சுக்கோப்புச் செய்த கணிப்பொறி உதவியாளர் திருமதி பி. கௌசல்யாவுக்கும், அழகுற அச்சிட்டுத்தந்த யுனைடெட் பைன்ட் கிராபிக்ஸ் அச்சகத்தார்க்கும் பாராட்டுகள்.

சென்னை
*22-04-2004*

**இயக்குநர்**

# ஆசிரியரைப் பற்றி



முனைவர் வே.இரா. மாதவன், எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., அவர்கள் வடஆர்க்காடு மாவட்டம் வேலூரில் 6-4-1952இல் பிறந்தார். இவர், தமிழ், அறிவியல், கல்வியியல், சுவடியியல், சித்த மருத்துவம், ஓவியம் போன்ற பல துறைகளிலும் பட்டங்களும் பட்டயங்களும் பெற்றவர்.

ஆகியவற்றை ஆராய்வதிலும் பதிப்பிப்பதிலும் மிகுந்த பயிற்சியும் திறமையும் பெற்ற இவர் இதுவரை 50க்கும் மேற்பட்ட அரிய நூல்களைப் பதிப்பித்தளித்துள்ளார். தமிழ்ச் சுவடியியலில், குழந்தை மருத்துவச்சுவடிகளை ஆய்வு செய்து, சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதன் முதலில் டாக்டர் பட்டம் பெற்ற பெருமையுடையவர் இவர். சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஆறு ஆண்டுகள் (1980-86) சிறக்கப் பணி புரிந்த பின்னர்க் கடந்த 18 ஆண்டுகளாகத் தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழக ஓலைச் சுவடித்துறையில் இணைப் பேராசிரியராகப் பணியாற்றி வருகின்றார். இவர் அரிதின் முயன்று பதிப்பித்துள்ள 'கண் மருத்துவம்' என்ற நூலுக்கு 1982 ஆம் ஆண்டின் சிறந்த மருத்துவ நூலுக்கான முதற் பரிசையும், 'சித்திரக் கவிகள்' என்ற நூலுக்கு 1983ஆம் ஆண்டின் சிறந்த மொழி இலக்கியம் பற்றிய ஆய்வு நூலுக்கான முதற்பரிசையும் அளித்து தமிழக அரசு இவரைப் பெருமைபடுத்தியுள்ளது.

இவருடைய 'தமிழில் தலபுராணங்கள்' இரண்டு தொகுதிகள் ஆய்வாளர்கள் பலருக்கும் பயன்நல்கி வரும் அரிய படைப்பாகும். 1994இல் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் வெளியிடப்பெற்ற இவருடைய அரிய சுவடிப் பதிப்பான 'அகத்தியர் வைத்திய காவியம் 1500' என்னும் பெருநூல் இத்துறை வல்லுநர் பலர் பாராட்டைப் பெற்றதாகும். வைத்திய சிந்தாமணி, குழந்தைகள் மகளிர் மருத்துவம், தன்வந்தரி வைத்தியகும்மி 300 போன்ற அரிய பதிப்புகளையும் அண்மையில் இவர் உருவாக்கி அளித்துள்ளார்.

இருநூறுக்கும் மேற்பட்ட ஆய்வுக் கட்டுரைகளை வழங்கியுள்ள இவர் சிறந்த மரபுக் கவிஞராகவும், பதிப்பாசிரியராகவும், உரையாசிரியராகவும், சொற்பொழி வாளராகவும் விளங்கி வருகிறார். 'கவிக்காவலர்', 'நற்பதிப்பாசிரியர்', 'தெய்விக இயற்றமிழ் வேந்தர்' போன்ற பல பட்டங்களையும் சிறப்புகளையும் பெற்றுள்ளார். பழந்தமிழ்நூல் மற்றும் நூலாசிரியர் வரலாற்று ஆய்வில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு பல்கலைக்கழகங்களிலும் பல நிறுவனங்களிலும் இவர் நிகழ்த்திவரும் அறக்கட்டளைச் சொற்பொழிவுகள் மற்றும் நூலாக்கங்கள் இவண் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கன.

# நன்றியுரை

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் நிறுவப்பட்டுள்ள மறைமலை அடிகளார் அறக்கட்டளை சார்பில் 'அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார்' என்னும் தலைப்பில் சொற்பொழிவினை நிகழ்த்த வேண்டுமெனத் தெரிவு செய்தும் எழுத்துருவை அச்சில் வெளியிட்டும் வழங்கிய நிறுவன இயக்குநர் முனைவர் சா.கிருட்டினமூர்த்தி அவர்கட்கும், அறக்கட்டளைப் பொறுப்பாளர் பேராசிரியை முனைவர் அன்னி மிருதுல குமாரி தாமசு அவர்கட்கும், அறக்கட்டளையினருக்கும், நிறுவனத்தினர்க்கும் பெரிதும் நன்றியுடையேன்.

அறக்கட்டளைச் சொற்பொழிவுக்கான அழைப்பு வந்த நாள் 5-2-2004, எழுத்துரு அளித்த நாள் 4-4-2004, பொழிவு நாள் 4-5-2004 என இவ்வாறு மிகக் குறுகிய காலத்தில் மறைமலை அடிகளாரின் ஐம்பதிற்கும் மேற்பட்ட நூல்களைக் கற்கும் அரிய பேறு வாய்த்தமைக்காகப் பெரிதும் மகிழ்கிறேன்.

இத்தகு தமிழாராய்ச்சிப் பணிகளில் எனக்கு அவ்வப்போது ஆக்கமும் ஊக்கமும் நல்கி வரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவன முன்னை இயக்குநர் பேராசிரியர் முனைவர் ச.வே.சுப்பிரமணியன் அவர்களும், தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் மாண்புநிறை முனைவர் இ.சுந்தரமூர்த்தி அவர்களும் இந்நூலாக்கத்திற்கும் பெரிதும் துணை நின்றமையை நினைந்து போற்றுகின்றேன்.

அடிகளாரின் பழைய பதிப்புகள் பலவற்றையும் ஆராய்வதற்குத் துணையாக அரிய நூல்களை வழங்கியுதவிய தமிழ்ப் பல்கலைக் கழக முதுமுனைவர் வ.அய். சுப்பிரமணியம் நூலக இயக்குநர் (பொ.) முனைவர் பா.சுந்தரேசன் அவர்கட்கு நன்றிபாராட்டும் கடமையுடையேன். சென்னை மறைமலையடிகளார் நூலகத்தில் சிறப்பாகப் பணிபுரிந்து என் போன்ற ஆய்வாளர்களுக்குப் பல்லாண்டுகளாகப் பல அரிய நூல்களை அளித்துதவியவரும், என்னுடைய மாணாக்க நண்பரும், தமிழ்ப் பல்கலைக் கழக முதுநிலை நூலகருமாக விளங்கும் முனைவர் ஆ.குணசேகரன் அவர்கள் இப்பொழிவு நூலாக்கத்திற்குத் தேவையான நூல்களையெல்லாம் திரட்டித் தந்துதவியமைக்காக நெஞ்சார்ந்த நன்றியுடையேன்.

மறைமலை அடிகளாரின் திறன் போற்றும் அறிஞர் பெருமக்கட்கும், பொழிவினைச் செவிமடுத்த பெரியோர்க்கும், நூலாக்கம் பெறத் துணை நின்ற நிறுவன அன்பர்களுக்கும் நன்றிகள் பல என்றும் உரித்தாகும்.

அன்பன்

**வே.இரா. மாதவன்**

# முன்னுரை

அருந்தமிழ் நூல்களையும் மறைமலையடிகளாரையும் தனித்தனியே பிரித்துக் காணல் அரிது. அடிகளாரின் தமிழ்க்காதல் அவர் நூல் பல கற்கவும், கற்றவற்றை ஆய்ந்து நூலாக்கவும் செய்தது. மும்மொழிப் புலமைச் செம்மலாகவும், அறிவுக் களஞ்சியமாகவும், ஆராய்ச்சிப் புதையலாகவும் அடிகளார் விளங்கியமையை அவர்தம் நூல்களே உணர்த்தும். 'அருந்தமிழ் நூற் காவலர் அடிகளார்' என்னும் இப்பொழிவு நூல், ஆறு பகுதிகளைக்கொண்டு இயல்கின்றது.

தமிழோடு இணைந்த மறைமலையடிகளாரின் வாழ்வும் பணிகளும் ஒவ்வொரு தமிழரும் அறியத்தக்கன. அவற்றை அறிமுகமாக விளக்குவது 'தமிழ்ப்பெருமலை' என்னும் முதற்பகுதி.

மறைமலையடிகளார் தம் இளமைப் பருவ முதல் தலை சிறந்த சொற்பொழிவாளர்களின் தொடர்பைப் பெற்றிருந்தார். தாமும் அத்தகைய திறன் பெறவேண்டுமென்பதற்காகப் பழகிப் பழகிச் சொல்லின் செல்வரானார். உயரிய நடையில் தமிழிலும் ஆங்கிலத்திலும் சொல்மாரி பொழிந்தார். அவர் தாம் கற்றதை எடுத்துச் சொல்லும் வல்லமை பெற்றதையும் அதனால் தமிழ் வளம் பெற்றதையும் விளக்குவது 'சொலல் வல்லார்' என்னும் இரண்டாம் பகுதி.

புலமையின் ஊற்றாகத் திகழ்ந்தவர் மறைமலையடிகளார். அறிவு விருந்தாகத் திகழ்வன அவர்தம் நூல்கள். பல்நோக்குச் சிந்தனையாளரான அடிகளாரின் சங்க இலக்கிய ஆராய்ச்சியுரைகள், பண்டைத் தமிழ்ப் புலவர்கள் பற்றிய எண்ணங்கள். பழந்தமிழிலக்கியங்கள் பற்றிய ஆய்வுகள், நாடகத் தமிழ், புத்திலக்கியம், மருத்துவம், ம்றைபொருளியல், சமூக இயல் போன்றவை தொடர்பான அவர்தம் கருத்துரைகளைத் தொகுத்துரைப்பது 'புலமைக் களஞ்சியம்' என்னும் மூன்றாம் பகுதி.

தமிழையும் சைவத்தையும் இருகண்களாகப் போற்றியவர் மறைமலையடிகளார். தமிழ் நெறியாம் சிவநெறியைச் செம்மையாக உரைத்தவர் அவர். பிறவி எடுத்ததன் நோக்கம், கடவுள் நிலை, கடவுள் நிலை பற்றிய மெய்க்கதைகளும் பொய்க்கதைகளும், சாதி வேற்றுமையும் போலிச் சைவரும் போன்றவற்றைப் பழந்தமிழ்க் கொள்கைகள் வழி விளக்கும் அடிகளாரின் நூல்கள் பற்றி ஆய்வது 'சிவநெறிக் செல்வர்' என்னும் நான்காம் பகுதி.

தனித்தமிழ்த் தந்தை எனப் போற்றப்பெற்றவர் மறைமலையடிகள். தமிழரின் கண் திறக்க வந்த கால்டுவெல்லாரின் ஆய்வு முடிவுகள் வெளிவந்த காலத்திருந்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளை போன்றோர் தனிச் செந்தமிழின் திறம் வியந்து

பாராட்டியவர்களாவர். தனித்து இயங்க வல்ல தமிழின் மாண்பையும் பழமையையும் எடுத்துக்கூறி, அவ்வாறு இயங்கவியலாத வடமொழி சார்ந்த இந்தி முதலான மொழிகளையும் விளக்கும் அடிகளாரின் அரிய நூல்களை நுணுகி அறியுமுகமாக அமைவது 'தனிச்செந்தமிழ் நெஞ்சர்' என்னும் ஐந்தாம் பகுதி.

பழந்தமிழ் நூல்களை எழுத்தெண்ணிப் படித்த பெருமகனார் மறைமலையடிகளார். பெற்றவருக்குகே தெரியும் பிள்ளைகளின் அருமை என்பது போல எண்ணி எண்ணிப் படித்த அருந்தமிழ் நூல்களைப் பிறகாலத்தார்க்குச் சேர்த்து வைப்பதிலும், பயன் பெறச் செய்வதிலும் தனிக்கவனம் செலுத்திய அடிகளாரின் தனித்தன்மையை எடுத்துரைப்பது 'அருந்தமிழ்நூற் காவலர்' என்னும் ஆறாம் பகுதி. இதுவே இப்பொழிவின் மையப் பொருளுமாகும். மறைமலையடிகள் வாழ்க்கைக் குறிப்புகள் மற்றும் மறைமலையடிகள் நிகழ்த்திய சொற்பொழிவுகள் சிலவற்றின் பட்டியல் ஆகியன பின்னிணைப்புகளாக இணைத்தளிக்கப் பெற்றுள்ளன. வாழ்நாள் முழுமையும் தமிழுக்காகவும் சிவநெறிக்காகவும், கற்றலும், கற்றவற்றை வகையாக்கிப் பொழிவுகளாக வழங்கியும்,மறுவற்ற தனிச் செந்தமிழ் நூல்களாக உருவாக்கியும் மகிழ்ந்தவர் மறைமலையடிகளார். இவை அனைத்தும் அவர் தம் அறிவுக் கூர்மையையும் புலமைப் பேற்றையும் தெள்ளிதின் காட்டுவனவாம்.

**"வாழ்த்தாத நாளில்லை வையகம்**
**மறைமலையடிகள் மறையாத் திருப்பெயர்-வாழ்த்.**

**ஆழ்ந்து கடலில் முத்தெடுப் பார்போல்**
**அகன்ற உலக இலக்கியம் அனைத்திலும்**
**வீழ்ந்து பொருளுண்மை விளக்கும் ஆற்றலால்**
**வெல்ல முடியாத நல்லா சிரியனை-வாழ்த்.**

**தென்னாடு சார்ந்த குமரிப் பெருநிலம்**
**திரைகடல் மறந்த உண்மைச் செய்திக்குப்**
**பொன்னேடு காட்டும் புலவர்க்குப் புலவனைப்**
**பொழுதெல்லாம் தமிழுக் குழைத்த தலைவனை-வாழ்த்.**

**மறையெனப் படுவது தமிழ்நான் மறைநூல்**
**மற்றை மறைநூல் பின்வந்த குறைநூல்**
**முறையாய் இவைகட்குச் சான்றுகள் காட்டி**
**முழக்கஞ் செய்த முத்தமிழ் அறிஞனை-வாழ்த்.**

என்னும் பாவேந்தர் பாரதிதாசனாரின் மொழிப்படி மறைமலையடிகளாரின் பேருழைப்பை உணர்ந்து ஏற்றுப் போற்றுவோரால் தமிழ்வளம் பெறும். தமிழர் வளம் பெறுவர். தமிழ்நாடு உலக அரங்கிஓல் முன்னணியில் திகழும் என்பது உறுதியாம்.

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| | அணிந்துரை | |
| | ஆசிரியரைப்பற்றி | |
| | நன்றியுரை | |
| | முன்னுரை | |
| 1. | தமிழ்ப்பெருமலை | 1 |
| 2. | சொலல் வல்லார் | 17 |
| 3. | புலமைக் களஞ்சியம் | 28 |
| 4. | சிவநெறிச்செல்வர் | 82 |
| 5. | தனிச்செந்தமிழ் நெஞ்சர் | 99 |
| 6. | அருந்தமிழ்நூற் காவலர் | 140 |
| பின்னிணைப்புகள் | | |
| 1. | மறைமலையடிகள் வாழ்க்கைக் குறிப்புகள் | 162 |
| 2. | மறைமலையடிகள் நிகழ்த்திய சொற்பொழிவுகள் சில | 169 |
| | துணைநூல்கள் | 179 |

# தமிழ்ப்பெருமலை

அழகும் வளமும் மிக்க மலை ஒரு நாட்டின் இயற்கை அரணும் பெருமையுமாகும். இயற்கையிலேயே அழகிய தோற்றமும் அறிவு பொங்கும் பேருள்ளமும், செயலுறுதியும், சிந்தனையைத் தூண்டும் சிறப்பான பேச்சும், சமய ஈடுபாடும், சீர்திருத்த இயக்கத்தை உருவாக்கும் எழுத்தாற்றலும், இயல் இசை நாடகம் என்னும் முத்தமிழே மூச்சாகவும் விளங்கிய மறைமலையடிகளார், தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் பழந்தமிழ் நூல்களுக்கும் அரணாய் விளங்கியவர் என்பதால் 'தமிழ்ப்பெருமலை' என்றே போற்றப் பெறுகிறார். தமிழோடு இணைந்த அவர்தம் வாழ்வும் பணிகளும் அனைவரும் அறியத்தக்கனவாம்.

## இளமையில் பெற்ற ஏற்றமிகு கல்வி

தமிழ்நாட்டில் நாகப்பட்டினத்திற்கு அருகேயுள்ள காடம்பாடி என்னும் சிற்றூரில் மருத்துவப் பணி புரிந்துவந்த திருவாளர் சொக்கநாத பிள்ளை என்பாருக்கும், திருவாட்டி சின்னம்மையார்க்கும் அருமை மகவாக 15-7-1876இல் தோன்றியவர் இவர். தந்தையாருக்கு அறுபத்து நான்கு வயதிற்கு மேலாகியும் மகப்பேறு வாய்க்காததால் சின்னம்மையார் திருக்கழுக்குன்றம் என்னும் திருத்தலத்தில் நோன்பிருந்து அதன் பின்னர் பிறந்த மகவானதால் அத்தல இறைவன் திருப்பெயராகிய வேதாசலம் என்பதையே இம்மகவுக்குப் பெற்றோர் சூட்டி மகிழ்ந்தனர். குடும்பத்தில் நல்ல வருவாயும் வளமுமிருந்ததால் இவருடைய இளமைக்காலம் சீரும் சிறப்புமாகவே விளங்கியது. இந்நிலையில் இவர் நாகை வெசிலியன் மிசன் பள்ளியில் தொடக்கக் கல்வியில் முதன்மை மாணாக்கராக விளங்கினார்.

இவர்தம் பன்னிரண்டாவது வயதில், ஆறாம் வகுப்பில் சேர்ந்த நிலையில் தந்தையார் சொக்கநாத பிள்ளை இயற்கை எய்தினார். அக்காலத்தில், தம் ஒரே மகனின் கல்விப் பயிற்சிக்குத் தடை ஏற்படக் கூடாதென விழைந்த அன்னை சின்னம்மையார் இவரைத் தொடர்ந்து பள்ளிக்கு அனுப்பினார். இவர் பள்ளி சென்ற காலத்து,

தாய்மொழிப் பயிற்சி உணர்வு காரணமாகப் பாட நூல்களுடன், கிடைத்த தமிழ் நூல்களையெல்லாம் திறம்படக் கற்றார். 'இந்துமதாபிமான சங்கம்' என ஒரு சங்கத்தை நிறுவி அதன்வழியே சைவ சமய அறிவைப் பெற்று மற்ற மாணவர்களுக்கும் சமயக் கல்வியை ஊட்டினார்.

குடும்பச் சூழலின் காரணமாக இவர் பள்ளி சென்று படிப்பதை ஒன்பதாம் வகுப்பளவில் நிறுத்த வேண்டியதாயிற்று.

## பள்ளிப் பருவத்தில் பழந்தமிழ் நூற்பயிற்சி

நாகப்பட்டினத்தில் புத்தகக்கடை நடத்தி வந்தவர் வெ. நாராயணசாமிப்பிள்ளை. இவர், மகாவித்துவான் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்களிடத்தும், உறையூர் இலக்கணப் புலவர் முத்து வீரைய உபாத்தியாயரிடத்தும் இலக்கண இலக்கியங்களைப் பயின்றவர். இவர்தம் புத்தக விற்பனையுடன், புலமை மிக்கவர்களுக்குத் தமிழ்ப்பயிற்சியும் அளித்து வந்தார். இவரிடம் தமிழ் பயின்றவர்களுள் பேராசிரியர் பெ.சுந்தரம் பிள்ளை, நாகூர்ப் புலவர் வா. குலாம் காதிறு நாவலர், மதுரை நாயகம் பிள்ளை போன்றோர் குறிப்பிடத் தக்கவர்களாவர்.

நாகை நாராயணசாமிப் பிளளையவர்களின் தொடர்பினைத் தம் பள்ளிப் பருவத்திலேயே பெற்ற அடிகள், அவரிடம் தொல்காப்பியம், இறையனார் அகப்பொருள், திருக்குறள், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலான பல தமிழ் நூல்களையும் பாடங்கேட்டுத் தெளிந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

அடிகளார் இயற்றிய 'திருவொற்றி முருகர் மும்மணிக் கோவை' நூலின் முகப்பில் அவரே பின்வருமாறு இவற்றைக் குறிக்கின்றார்.

"எமது பதினைந்தாம் ஆண்டில் முறைப்படி துவங்கிய தமிழ்ப் பயிற்சியானது எமது இருபத்தோராம் ஆண்டிற்குள், தொல்காப்பியம், திருக்குறள், சிற்றம்பலக் கோவையார் என்னும் மூன்று நூல்களையும் முழுதும் நெட்டுருச் செய்து முடித்தேம்.

சிவஞான போதம், சிவஞான சித்தியார் என்னும் நூல்கள் இரண்டும் முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டன. இவையேயன்றி நன்னூல் விருத்தி, இறையனார் அகப்பொருள் உரை, தண்டியலங்காரம் முதலான நூல்களும் முன்னமே முழுமையும் நெட்டுருச் செய்து முடிக்கப்பட்டனவாகும்.

கல்லாடம், சிந்தாமணி, பெரியபுராணம் என்னும் நூல்களின் சொற்சுவை பொருட்சுவைகளில் பெரிதும் மூழ்கியிருந்தும், அவற்றிலிருந்தெடுத்துப் பாடஞ் செய்த செய்யுட்கள் மிகுதியாய் இல்லை. என்றாலும், அவற்றின் சொற்பொருள் நயங்கள் எமதுள்ளத்தில் வேரூன்றி நின்றன.

இங்ஙனமாக விழுமிய தமிழ்ப்பழ நூல்களில் எமது கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினாலேயே செய்யுளும் உரையும் தனிச் செந்தமிழ் நடையில் எழுதும் திறம் எமது இளமைப்பருவத்திலேயே எமக்கு வாய்ப்பது ஆயிற்று'' என அடிகளார் பின்னாளில் நினைவுகூர்வது எண்ணத்தக்கது.

பள்ளிப்பருவத்திலேயே தாமாகவே முயன்று பழந்தமிழ் நூற்பயிற்சி மேற்கொண்டு அந்நூல்களை முழுவதுமாக நெட்டுருச் செய்ததன் பயனாகவே பின்னாளில் அடிகள் ஒரு தனிப்பெரும் தமிழ்மலையானார் என்பது தெளிவு.

அடிகளார் குறிப்பிடும் முதல் இருபத்தோர் ஆண்டுகள் கி.பி. 1876 முதல் 1897 வரையுள்ள காலம், தொல்காப்பியம் முதலான பல பழந்தமிழ் நூல்கள் அச்சில் பதிப்பாகி வெளியில் பரவத் தொடங்கிய காலமாகும். எனவே, பழந்தமிழ் நூல்கள் அச்சான காலம் முதலாகவே அவற்றைப் பயன்கொண்ட பெருமை இவருக்கேயுரியதாம்.

## எழுத்தும் பேச்சும்

இளமையிலேயே விழுமிய தமிழ்ப்பழநூல்களின் பயிற்சியின் காரணமாக அடிகளாரின் எழுத்தும் பேச்சும் செந்தமிழ் வண்ணமாயின. அடிகளின் பதினேழாம் வயதில், ஒன்றுவிட்ட மாமன் மகள் சவுந்தர வல்லியை மணந்தார். பதினெட்டாம் வயதில் ஒருபெண் மகவுக்குத் தந்தையானார். அந்நாளில் சீவகசிந்தாமணியை ஆழ்ந்து கற்றிருந்த அடிகளார் தம் முதற் பெண்குழந்தைக்குச் 'சிந்தாமணி' என்றே பெயர் சூட்டி மகிழ்ந்தது அவர்தம் தமிழ் இலக்கியக் காதலுக்கு ஓர் எடுத்துக்காட்டாம்.

குடும்பப் பொறுப்பை ஏற்றிருந்த அக்காலத்திலேயே சங்க இலக்கியத் தேர்ச்சி, தொல்காப்பியம் முதலிய இலக்கணங்கள் அனைத்திலும் பயிற்சி, சங்கப் பிற்கால இலக்கண இலக்கியங்களில் பெரும் புலமை, உரையாசிரியர்களின் திறத்தில் முற்றறிவு, சமய நூல்களில் ஆழ்ந்த அறிவு, திருமுறைகளில் ஆய்வு என ஆழ்ந்தகன்ற தமிழ்ப்புலமையில் நிறைவு பெற்ற அடிகளார் எழுத்திலும் பேச்சிலும் மிகச்சிறப்புற்று விளங்கினார்.

அந்நாளில் வெளிவந்த 'நாகை நீலலோசனி', 'பாஸ்கர ஞானோதயம்', 'திராவிட மந்திரி' முதலிய வார இதழ்களில் 'முருகவேள்' என்னும் புனை பெயரில் ஆய்வுக் கட்டுரைகளையும் மறுப்புக் கட்டுரைகளையும் அடிகளார் எழுதி வந்தார். அக்காலச் சான்றோர் பலரும் அடிகளாரின் எழுத்தை வியந்து போற்றியுள்ளனர்.

## சுந்தரம் பிள்ளையின் தொடர்பு

இளமையில் தமக்கு இயற்றமிழாசிரியராக விளங்கிய நாகை நாராயணசாமிப் பிள்ளையவர்களிடம் மனோன்மணீய நூலாசிரியர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் தமிழ் கற்றவர் என்பதை அறிந்த அடிகளார் தம் ஆசிரியர் பற்றியும் தம்மைப் பற்றியும் ஓர் அகவற்பா எழுதி பேராசிரியர் அவர்கட்கு அனுப்பினார். அக்கடிதத்தினைக் கண்ட அவர் அதை எழுதிய அடிகளார் மிக முதியவராக இருக்கக் கூடுமென எண்ணினார். ஆயின், அடிகளாருக்கு அப்போது வயது பதினெட்டு மட்டுமே. 1895ஆம் ஆண்டிறுதியில் அடிகளாரைத் திருவனந்தபுரத்திற்கு நேரில் வரவழைத்த பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் அடிகளாருடைய இளமைக் கோலத்தைக் கண்டு வியப்புற்றார். தம் கைப்படச் சான்றிதழ் ஒன்றையும் 2-12-1895 அன்று பேராசிரியர் அடிகளுக்கு வழங்கியுள்ளார்.

## நற்சான்றிதழ்

"நாகை திரு. வேதாசலம் பிள்ளை அவர்கள் ஒருபோது திருவனந்தபுரத்தில் ஒரு வாரம் தங்கியிருந்த ஞான்று, அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தமைக்குச் சாலவும் மகிழ்கின்றோம். வருங்காலத் தமிழ் மக்களுக்கு மட்டற்ற தமிழ்ப் புலமை மிகுந்து வருமென்பதற்குச் சான்றாக இவர் இளமையிலேயே நுண்மாண் நுழைபுலம் உடையவராயிருப்பது களிப்பூட்டுகின்றது. மற்றும் தாய்மொழிப்பற்றுக் குறைந்த இக்காலத்தில், இவர் தமது நுண்ணறிவைத் தமிழ்நூல்களில் முற்றும் செலுத்தி நன்கு ஆராய்ந்துள்ளதும் பாராட்டிற்குரியது. பத்துப்பாட்டு, கலித்தொகை, சீவக சிந்தாமணி முதலிய பழந்தமிழ் நூல்களில் ஆராய்ச்சியுடன் கூடிய இவர்தம் அறிவுடைமையே என்னை இவர்பால் மதிப்புறுமாறு செய்தது. தமிழாசிரியர்களின் தொகை சுருங்கிவரும் இக்காலத்தில் இவருக்குச் சிறந்த ஊக்கமளித்தால், இவர் ஒரு சிறந்த தமிழாசிரியராவாரென்று நாம் உறுதியாக நம்புகின்றோம். முன்னரே இரண்டாந்தரக் கல்லூரிகளில் தமிழ் கற்பிக்கப் போதுமான அளவு இலக்கண இலக்கியத்திற் சிறந்த தேர்ச்சி பெற்றவராய் இருக்கிறார்

எனக் கருதுகின்றோம். குறைந்த அளவில் எப்.ஏ., (F.A.,) வகுப்புக்குரிய ஆங்கில அறிவு பெற்றாரானால் மேல்நாட்டு முறைப்படி தமிழ்நூல்களை வரலாற்றுச் சான்றுடன் ஆராயவும் எழுதவும் வல்லுநர் ஆவாரென்பது எம்முடைய சிறந்த எண்ணம்" என்னும் இந்நற்சான்றிதழை அறிஞர் போற்றி மகிழ்வர்.[1]

## ஆசிரியப்பணி

பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்களின் விருப்பப்படி, திருவனந்தபுரத்தில் மார்த்தாண்டன் தம்பி என்பாரின் ஆங்கிலப் பள்ளியில் தமிழாசிரியராகவும் சிலகாலம் அடிகளார் பணிபுரிந்தார். அக்காலத்தில் அங்கிருந்த சைவ சபைகளில் அடிகள் பல சொற்பொழிவுகளையும் நிகழ்த்தியுள்ளார். பின்பு, உடல் நலம் காரணமாக அடிகளார் நாகைக்கே திரும்பி வந்து வாழலானார்.

## சோமசுந்தரரின் தொடர்பு

அந்நாளில் சென்னையிலிருந்த அறிஞரும், 'வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம்' எனப் போற்றப்பட்டவரும், நூற்றுக்கு மேற்பட்ட சமய ஆய்வு நூல்களை இயற்றியவருமான சோமசுந்தர நாயகர் என்பாரின் சமயச் சொற்பொழிவுகளை அடிக்கடி கேட்டுவந்தார் அடிகளார். அவருடைய பொழிவுகளின் மேன்மை குறித்து இதழ்களில் எழுதிய கட்டுரைகளின் வாயிலாக நாயகரின் நேரடித்தொடர்பும் அடிகள் பெற்றார். அடிகளின் சைவசித்தாந்த நுட்ப அறிவினையுணர்ந்த நாயகர், சீர்காழிச் சிற்றம்பல நாடிகள் இயற்றிய 'துகளறுபோதம்' என்னும் சித்தாந்த நூலுக்கு உரை எழுதுமாறு அவரைப் பணித்தார். அந்நூற் பாடல்களுக்கு அடிகள் எழுதிய உரையைக் கண்டு மகிழ்ந்த நாயகரவர்கள் 'இவ்வுரை, சிவஞான முனிவர் உரையோடு ஒப்பது' எனப் பாராட்டித் தம் செலவிலேயே நூலை வெளியிட்டார். அடுத்து, அடிகளாரின் 'முதற்குறள் வாத நிராகரணம்' என்னும் கட்டுரையையும் நூலாக வெளியிட்டார். அடிகளாருக்கு அப்பொழுது வயது இருபத்தொன்று ஆகும்.

## நல்லசாமிப் பிள்ளையின் தொடர்பு

சைவ சித்தாந்தப் பெருநூலாகிய சிவஞான போதத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர் திரு ஜெ.எம். நல்லசாமிப்பிள்ளை

---

1. இரா. இளங்குமரன், மறைமலையடிகள், பக்.22, 23.

அவர்கள். அந்நாளில் அவர், 'சித்தாந்த தீபிகை' அல்லது 'உண்மை விளக்கம்' என்னும் திங்கள் இதழைத் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிட விரும்பினார். ஆங்கில இதழ் வெளியீட்டுப் பொறுப்பைத் தாமே ஏற்றுக் கொண்ட நல்லசாமிப்பிள்ளையவர்கள் தமிழ் இதழுக்குத் தகுந்த அறிஞரைத் தேடி இருந்தார். அப்பொழுது, சென்னை சோமசுந்தர நாயகர் வழியாக அடிகளாரின் புலமை பற்றி அறிந்த நல்லசாமிப் பிள்ளையவர்கள் அடிகளையே அத்தமிழ்த் திங்களிதழின் ஆசிரியராக்கி மகிழ்ந்தார்.

## சித்தாந்த தீபிகை

21-6-1897 முதல் வெளிவந்த ஐந்து இதழ்களுக்கு அடிகள் ஆசிரியராக இருந்தார். திருமந்திரத்திலுள்ள அன்புடைமை, இரந்தார்க்கு ஈதல், அறஞ்செயான் திறம் என்னும் மூன்று இயல்களின் முப்பது பாடல்களுக்கும் உரை, சிவஞான சித்தியார் அளவை இயல் காப்புச் செய்யுட்களோடு பதினான்கு செய்யுட்களுக்கு விரிவுரை, தாயுமானவர் அருளிய பரிபூரணானந்த போதம் பத்துப் பாடல்களுக்கும் பொருள் வணக்கத்தில் எட்டுப் பாடல்களுக்கும் உரை, குறிஞ்சிப்பாட்டுக்கு உரை, அன்பு, அருள் பற்றிய கட்டுரைகள், மூன்று கனவு என்னும் ஆங்கில மொழிபெயர்ப்பு ஆகியவற்றை அடிகளார் எழுதி அத்திங்கள் இதழில் வெளியிட்டுள்ளார். அடிகளாரின் இருபத்தோராம் வயதில் அவருக்கிருந்த தமிழ்நூற்புலமையும் ஆழ்ந்த அறிவும் இவற்றால் நன்கு விளங்கும்.

## சென்னைக் கிறித்தவக் கல்லூரிப்பணி

சித்தாந்த தீபிகையின் இதழ் பொறுப்பிலிருந்து விலகிச் சித்தூரிலிருந்து சென்னை வந்து சேர்ந்த அடிகளாரை மீண்டும் சென்னைக்கே வரவழைப்பதில் பெருவிருப்புக் கொண்டிருந்தார் சோம சுந்தர நாயகர். அந்நாளில், டாக்டர் வில்லியம் மில்லர் என்னும் ஆங்கிலேயர் தலைமையில் இயங்கி வந்த சென்னைக் கிறித்தவக் கல்லூரிக்குத் தமிழாசிரியர் ஒருவர் தேவை என்னும் விளம்பரம் வரக்கண்ட நாயகர் அடிகளாருக்குத் தெரிவித்து அவரைச் சென்னைக்கு அழைத்தார். அப்போது அக்கல்லூரியில் தலைமைத் தமிழ்ப் பேராசிரியராகவிருந்த திரு.வி.கோ. சூரிய நாராயண சாத்திரியார் அவர்களே தகுதித் தேர்வு நடத்தினார். வயதிலும் புலமையிலும் முதுமை பெற்ற அறுபது புலவர்கள் தேர்வு எழுதினர். மிகவும் இளையவரான மறைமலையடிகளார் (இருபத்திரண்டு வயது) முதன்மையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அடிகளாரின் சிறந்த நூற் புலமையே அவருக்கு இப்பணியைப் பெற்றுத் தந்தது. சாத்திரியார்

டாக்டர் மில்லரிடம் அடிகளாரின் பழந்தமிழ் நூற்புலமை பற்றி எடுத்துரைத்து அவ்வாசிரியப் பணிக்கு மிகமிக ஏற்றவரெனப் பரிந்துரை செய்தார். 9-3-1898 அன்று அப்பணியை ஏற்ற அடிகளார் பதின்மூன்று ஆண்டுகள் மிகச் சிறந்த முறையில் அப்பணியைச் செய்து வந்தார்.

## ஆழ்ந்தகன்ற நூலாராய்ச்சி

மாணாக்கர் அனைவரும் போற்றும் பேராசிரியராகத் திகழ்ந்த அடிகளார் கல்லூரிப் பணியுடன் சமயப்பணி, நூலாக்கப்பணி, இதழாசிரியப்பணி, சொற்பொழிவுப்பணி ஆகியவற்றிலும் சிறந்து விளங்கினார். தமிழ், ஆங்கிலம் இரண்டிலும் வல்லவரான அடிகள் வடமொழியிலும் தேர்ச்சி பெற்றார். கற்பிக்கும் ஆசிரியர் மேலும் மேலும் புதுப்புது நூல்களைப் பயில வேண்டும் என்னும் கருத்துக்கேற்ப அடிகள் எண்ணற்ற நூல்களைக் கற்று வந்தார் என அறிகிறோம்.

குர்-ஆன் (7-1-1899), இராமகிருட்டிணர் வரலாறு (3-3-1900), மாக்சு மூலரின் Comparative Philology (30-8-1900), உபநிடதங்கள் (25-3-1901), விவேகானந்தரின் பக்தியோகம், கர்மயோகம், ஆத்மா ஆகிய நூல்கள் (22-12-1901), திலகரின் வேதம்பற்றிய நூல் (5-5-1905), தத்துவ நூல்கள் (27-11-1907), நீலகண்ட பாடியம், செந்திநாத அய்யர் மொழிபெயர்ப்பு (14-1-1910), விவேகானந்தரின் கர்மயோகம் (6-8-1910) போன்ற பல நூல்களை அவ்வப்போது பெற்றும் படித்தும் ஆய்ந்தும் உணர்ந்து வந்ததையெல்லாம் அடிகளார் தம் நாட்குறிப்பினால் அறிகின்றோம்.[1]

## பாடம் சொல்லும் பாங்கு

அடிகள் கல்லூரியில் பாடம் சொல்லும் பாங்கு அனைவரையும் கவர்ந்தது. அழகிய பேச்சு, இனிய குரலமைதி, தெளிவான விளக்கவுரைகள், பண்டை நூல்களின் மேற்கோள்கள், நகைச்சுவை கலந்த உலகியல் பார்வைகள் என இவருடைய கற்பிப்பால் தமிழ் வகுப்புகள் மாணாக்கர்களால் பெரிதும் விரும்பப்பெற்றன. பத்துப் பாட்டில் முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை ஆகியவற்றைப் பாடஞ் சொல்லி வருகையில், அவற்றிற்கு முன்னரே இருந்த நச்சினார்க்கினியர் உரை போன்றவை தெளிவாக இல்லாததால், மாணாக்கர்களின் வேண்டுகோளுக்கிணங்க

1. இரா. இளங்குமரன், மறைமலையடிகள், பக். 27-28.

அடிகளே அரிய புத்துரைகளைக்கண்டு எடுத்துச் சொல்லி அவற்றைப் பதிப்பித்தும் வெளியிட்டுள்ளார்.

ஆராய்ச்சித் திறன் மிக்க அடிகளின் வகுப்பில் பயின்ற மாணாக்கர்களில் பலர் பின்னாளில் தமிழகத்தில் மிகச்சிறந்து விளங்கினர். நாவலர் டாக்டர் எஸ். சோமசுந்தர பாரதியார், இராவ்பகதூர் வ.சு. செங்கல்வராய பிள்ளை, திருப்புகழ்மணி டி.எம். கிருஷ்ணசாமி ஐயர், டாக்டர் பி. சுப்பராயன், திவான்பகதூர் ஆர்.வி. கிருஷ்ணையர், திரு.சி.என். முத்துரங்க முதலியார், இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார், பேராசிரியர் எஸ்.வையாபுரிப்பிள்ளை போன்றோர் இவ்வகையில் குறிப்பிடத் தக்கவர்களாவர். இத்தகைய அறிஞர் பெருமக்கள் பலர் உருவாவதற்கு அடித்தளம் அமைத்தளித்தவர் அடிகளாவார்.

## பாடம் கேட்டல்

அடிகளார் கல்லூரி ஆசிரியராகச் சென்னையில் இருந்தது சோமசுந்தர நாயகருக்குப் பெருந்துணையாயிற்று. அடிகளாருக்கு அதுவே நாயகரிடம் நெருங்கிப் பழக பெருவாய்ப்பாயிற்று. நாயகருக்கு அப்போது வயது ஐம்பது. அடிகளுக்கு வயது இருபத்திரண்டு ஆகும். அவ்வளவில் இருவரும் குடும்ப நிலையிலும் நெருங்கிப் பழகியதற்குக் காரணம் நூலாராய்ச்சியும் பாடம் கேட்டலுமேயாம்.

சோமசுந்தர நாயகர் மிகச்சிறந்த சொற்பொழிவாளராக அனைவராலும் பாராட்டப் பெற்றவர். விவேகானந்தர் போன்றோரைச் சொற்போரில் வென்றவர். அத்தகைய நாயகருடன் நூலாராய்ச்சி செய்வதில் அடிகள் பெருவிருப்புக் கொண்டிருந்தார். "இன்று நாயகர் என் இல்லம் வந்தார். என்னிடம் வேதாரண்ய புராணத்திற்கு முன்னுரை எழுதிக் கொண்டு நாளை நம் வீட்டுக்கு வா என்றார்." "இன்று நாயகர் என் வீட்டில் சித்தாந்த ஞான போதத்தை இரண்டு மணியளவு எழுதிக் கொண்டிருந்தார்." "நாயகர் வீட்டுக்கு வந்தார். இருசமய விளக்கத் தெளிவை இருவரும் படித்தோம். அதில் நாயகர் சில திருத்தங்கள் செய்தார். பின் இருவரும் சூளை சென்றோம்." "நாயகர் வீடு சென்றேன். இருசமய விளக்கத்தைப் படித்தேன். அவர் விளக்க உரை தந்தார்."[1] என இவ்வாறு அடிகள் தம் நாட்குறிப்பில் குறித்துள்ளதை நோக்கும் பொழுது அவ்விருவரின் நட்புறவும் இலக்கியப் பணிகள் பலவும் நன்கு புலனாகின்றன.

---

1. மறை. திருநாவுக்கரசு, மறைமலையடிகள் வரலாறு, ப.29.

ஒரு பொழுதில் நாயகரிடம் தாம் சிவஞானபோதம் பாடம் கேட்க வேண்டும் என்னும் விருப்பத்தை வெளியிட்டார் அடிகள். அதற்கு நாயகர், "அப்பன் நீயே சிறந்த அறிஞன்; புலவன்; சிவநெறியின் சாத்திர நூல்களையெல்லாம் முன்பே கற்றுத் தெளிந்திருக்கிறாய். சித்தாந்தக் கருத்துக்களை எடுத்து நுட்பமாக விளக்கி உரையாற்றுகின்றாய். கட்டுரைகள் வரைகின்றாய். உனக்கு யான் பாடஞ் சொல்ல என்ன இருக்கிறது" என்று கூறியபோது அடிகளார், "ஐயா, குருவிடம் முறைப்படி அறிவு நூல்களைப் பாடம் கேட்டல் மாணவன் கடமையன்றோ! தங்களிடம் பாடம் கேட்டேன் என்னும் பேறு எனக்கு வேண்டும் அல்லவோ! அன்றியும் நம் சித்தாந்த உண்மைகளையும் விளக்கங்களையும் எடுத்துரைக்கும் ஆற்றலுடையார் தங்களையன்றி யாருளர்? ஆதலின், அருள் கூர்ந்து சிவஞான போதத்தைப் பாடஞ் சொல்ல வேண்டும்" என்று வற்புறுத்தினராம். நாயகரும் மனமுவந்து சிறந்த முறையில் அவருக்குச் சிவஞான போதத்தைக் கற்பித்ததாக அறிகிறோம்.[1]

### பரிதிமாற் கலைஞரிடம் ஈடுபாடு

> **"நவில்தொறும் நூல்நயம் போலும் பயில்தொறும்**
> **பண்புடை யாளர் தொடர்பு."**

என்னும் அருங்குறளை நன்குணர்ந்தவர் அடிகளார். நூற்புலமை மிக்க அறிஞர் எவராயினும் அவர்பால் நட்பு மிகக் கொள்வர் இவர். அவ்வாறே, தமக்குச் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் ஆசிரியப் பணிக்குப் பரிந்துரை செய்த தமிழ்ப் பேராசிரியர் வி.கோ. சூரியநாராயண சாத்திரியாரின் பேரழகும், பேரறிவும், அருங்குணங்களும், பரந்த நூலறிவும் அடிகளாரை மிகவும் கவர்ந்தன. சாத்திரியர் முப்பத்து மூன்று வயதில் இயற்கை எய்தியமை குறித்து அடிகளார் அடிக்கடி கூறி வருந்துவர். 'பெரும்பாலும் அந்தணர்களுக்குத் தமிழ்ப் பற்றில்லை' என்பது அடிகள் கருத்து. "ஆனால், இந்தச் சூரிய நாராயணருக்கு மட்டும் ஏன் இவ்வளவு தமிழ்ப்பற்று! அதிலுந் தனித்தமிழ்ப்பற்று! நான் தனித்தமிழ் இயக்கங் காண்பதற்கு முன்பே அவர் தனித்தமிழ் உணர்ச்சி கொண்டு தம் வடமொழிப் பெயரைப் பரிதிமாற் கலைஞர் என்று மாற்றிக் கொண்டாரே" என்று அவரைப் பற்றித் தம் வாழ்நாள் முழுவதும் அடிகள் பாராட்டிக் கொண்டே இருந்தார் என்பர்.[2]

---

1. மறை. திருநாவுக்கரசு, மறைமலையடிகள் வரலாறு, ப.30.
2. மேற்படி, ப.23

## ஆசிரியரிடம் அன்புப் பிணைப்பு

22-2-1901இல் சோமசுந்தர நாயகர் இயற்கை எய்திய பொழுது அடிகளார் பெருந்துயருற்றார். இரங்கற்பா பாடும் பொழுது காஞ்சி என்னும் நிலையாமை நினைவுக்கு வர, 'சோமசுந்தரக் காஞ்சி' என்னும் இரங்கல் மாலையை எழுதிப் படைத்தார். பின்னே, 'சோமசுந்தரக் காஞ்சியாக்கம்' என்னும் நூலாயிற்று அது.

அடிகளார் துறவு கொண்ட பிற்காலத்தில் வாழ்ந்த பல்லவபுர மாளிகை மாடி மண்டபத்தில் அமைத்த நூலகத்தின் நடுவே அம்பலவாணர் திருக்கோயிலின் எதிரில் சோமசுந்தர நாயகரின் திருவுருவப் படம் ஒன்றை விளங்கச் செய்தமை அவர்தம் ஆசிரிய அன்புப் பிணைப்பை வெளிப்படுத்துகின்றது.

1902இல் 'ஞானசாகரம்' (அறிவுக்கடல்) என்னும் திங்கள் இதழை அடிகளார் துவங்கியதற்கும் நாயகரின் தூண்டுதலே காரணம் என்பதும் எண்ணத்தக்கதாம்.

## இதழ்ப் பணியோடு இணைந்த நூற்பணி

அடிகளாரின் கல்லூரிப் பணியோடு சொற்பொழிவுப் பணியும், நூலெழுதும் பணியும் மிகுதியாயின. எனவே, அவர் நூல்கள் எழுதும் பணியை இதழ்ப் பணியோடு இணைத்துக் கொண்டார். மாணிக்கவாசகர் கால ஆராய்ச்சி, திருவாசக உரை முதலியன ஞான சாகர இதழ் வழியே வெளிவந்தனவேயாம்.

## அருட்பா-மருட்பாப் போர்

வள்ளலார் இராமலிங்க அடிகள் (5-10-1823 - 3-4-1874) அருளிய பாடல் தொகுதிக்கு 'அருட்பா' என்று பெயர். சைவப் பற்றுமை மிக்க சிலர் இதற்கு எதிர்ப்புக் காட்டினர். நால்வர் பாடிய தேவார திருவாசகப் பாடல்களே அருட்பா என்றும், வள்ளலார் பாடியவை மருட்பா என்றும் சிலர் கூறினர். இதற்குத் தலைமையாக நின்றவர் யாழ்ப்பாணம் ஆறுமுக நாவலர் ஆவர்.

அக்காலத்தில், சமய அறிஞர்களும் தமிழ்ப் புலமையாளர்களும் அருட்பா-மருட்பாப் போரில் ஈரணியாக நின்றனர். பொது மேடைகளில் சொற்போரும், கட்டுரைகள் வழி மறுப்பும், முறைமன்றத்தில் வழக்குத் தொடுத்து வாதிட்டும் இது நிகழ்ந்து வந்தது. ஈழத்துப் பேரறிஞர் நா. கதிரைவேற் பிள்ளை

என்பார் 'மருட்பா' என்றொரு நூலையே இயற்றி, வள்ளலாரையும் அவருடைய பாடல்களையும் இகழ்ந்தும் மறுத்தும் பேசினார்.

வள்ளலார் பாடியவை அருட்பாக்களே என்பதை வலியுறுத்தி மெய்ப்பிக்கும் வகையில் மறைமலை அடிகளார் இப்போரில் ஆர்வமுடன் கலந்து கொண்டு வெற்றி பெற்றார். 20-9-1903, 27-9-1903, 18-10-1903 ஆகிய நாள்களில் சென்னையில் நடைபெற்ற மறுப்புக் கூட்டங்களிலும், காஞ்சி, திருச்சி ஆகிய நகர்களில் நிகழ்ந்த உரைகளிலும் அடிகளின் நாவன்மையும் திறமையும் அனைவராலும் பாராட்டப்பட்டது.

## மதுரைத் தமிழ்ச்சங்கத் தொடர்பு

1901இல் பாண்டித்துரைத் தேவர் மதுரையில் புதிய தமிழ்ச் சங்கத்தை நிறுவினார். தமிழ்ச்சங்க ஆண்டு விழாக்களில் அடிகளாரை அழைத்துச் சிறப்பித்தனர். 24-5-1904இல் 'தமிழர் நாகரிகத்தின் பழமையும் அதன் சிறப்பும்' பற்றியும், 25-5-1904இல் 'பண்டைக்காலத் தமிழர் ஆரியர்' பற்றியும், 26-5-1906இல் 'பட்டினப்பாலை ஆய்வுரை' பற்றியும், 24-5-1908இல் 'குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி' பற்றியும் அடிகள் அரிய ஆய்வுரைகளை நிகழ்த்தினார். டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர், சோழ வந்தான் அரசஞ் சண்முகனார், பாண்டித்துரைத் தேவர் போன்றோர் அடிகளின் பொழிவுகளைப் பாராட்டி மகிழ்ந்தனர்.

## சைவ சித்தாந்த மகாசமாசம்

பல்வேறு சமய நூல்களையும் கற்றவர் அடிகள். ஆரிய சமாஜம், பிரம்ம சமாஜம் போன்றவற்றின் தொண்டுகளை அறிந்த அடிகள் தாமும் சைவ சமயத் தொண்டு செய்வதற்கு வாய்ப்பாக ஒரு சமாசத்தை நிறுவ முனைந்தார். கல்லூரிப் பணியோடு இதையும் மேற்கொண்டார். திருப்பாதிரிப்புலியூர் ஞானியாரடிகள் முன்னிலையில் 'சைவ சித்தாந்த மகாசமாசம்' 7-7-1905இல் நிறுவப்பட்டது. அடிகளார் அதன் செயலாளராக இருந்து கடமை புரிந்தார். இதன் கிளைகள் பலவற்றில் நடைபெற்ற பல கூட்டங்களில் அடிகளார் பல சிறப்புரைகளை வழங்கியுள்ளார்.

அடிகளாரின் மாணவர் ச.வையாபுரிப்பிள்ளை அவர்கள் சங்க இலக்கியம் முழுவதையும் புலவர்கள் அகர வரிசையில் பதிப்பித்து வெளிப்படுத்தினார். இது சமாசப் பதிப்பாக வெளிவந்தது இவண் குறிப்பிடத்தக்கது.

## ஆங்கில இதழ்கள்

'The Oriental Mystic Myna' என்ற பெயரில் ஆங்கில இதழ் ஒன்றை அடிகளார் 1908இல் தொடங்கினார். கீழை நாட்டு மக்கள் மனவசியச் செயல்களைக் குறித்து இவ்விதழ் அமைந்தது.

1935இல் இருதிங்களுக்கு ஓரிதழாக 'The Ocean of Wisdom' என்னும் பெயரில் ஆங்கில இதழ் ஒன்றினை அடிகளார் வெளியிட்டார். இவ் ஆங்கில இதழ்களுக்கு அமெரிக்கா, பிரிட்டன், பிரான்சு, செருமனி, ஆத்திரியா, இலங்கை, பர்மா, தென்னாப்பிரிகா போன்ற அயல்நாடுகளிலும் வடஇந்தியாவிலும் உறுப்பினர்கள் பலர் சேர்ந்து பயன் பெற்றனர் என அறிகிறோம்.

“செந்தமிழ் மொழியிலும் சைவ சித்தாந்தத்திலும் பொதிந்து கிடக்கும் அரும்பெரும் பொருள்களை இவ்வுலகமெங்கணுமுள்ள ஆங்கில மொழியில் எழுதி இரண்டு திங்களுக்கு ஒரு கால் ஒரு வெளியீடாகச் சென்ற ஒன்றரை யாண்டுகளாக வெளியிட்டு வருவதால்”[1] என அடிகளார் கூறியுள்ளமையும் அவர்தம் நோக்கத்தை உணர்த்தும்.

இந்நன்நோக்கத்திலேயே அடிகளார் தம் நூல்கள் ஒவ்வொன்றின் முகப்பிலும் ஆங்கிலத்தில் நூற்செய்திகளைத் திரட்டி வரைந்துள்ளார்.

## கல்லூரி ஆசிரியப் பணியிலிருந்து விலகல்

அடிகள் 9-3-1898 முதல் கிறித்தவக் கல்லூரியில் பார்த்துவந்த தமிழாசிரியர் பணியிலிருந்து 10-4-1911 அன்று விலகினார். ஆங்கிலமும் வடமொழியும் கட்டாயப்பாடமாகவும், தாய் மொழிப் பாடம் விருப்பப் பாடமாகவும் கற்பிக்க வேண்டுமெனச் சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழு முடிவு செய்ததன் விளைவாகவே அடிகளார் தம் பணியிலிருந்து விலக நேரிட்டது.

## பல்லவபுர வாழ்க்கை

1-5-1911இல் பல்லவபுரம் இல்லத்தில் அடிகள் குடியேறினார். தம் இல்லத்தையே சமரச சன்மார்க்க நிலையமாகப் (பொதுநிலைக் கழகம்) பொலியச் செய்தார். பின்னர் அம்மாளிகையின் மாடப்பகுதியில் மணிமொழி நூல் நிலையம் ஒன்றையும்

---

1. மறைமலையடிகள், முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், முகவுரை.

உருவாக்கினார். வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளாரிடம் மட்டற்ற பற்றுமை கொண்டார். வள்ளலாரின் உயிரிரக்கக் கொள்கை, சாதிசமயப் பிணக்கறியாப் பெருநெறி, கண்மூடித்தனம், போலிச்சடங்குகளை ஒழித்தல், உயிர்க்கொலை புலைப்புசிப்பு நீக்கம் என்பவை பற்றிய பற்றுமை கொண்டு, வள்ளலார் தோற்றுவித்த பெயர் கொண்டே அவர் செய்த தொண்டினைப் பல்லவபுரத்தில் தொடர்ந்தார் மறைமலையடிகள்.

தொல்காப்பியர், திருவள்ளுவர் முதல் வள்ளலார் வரையானவர் நூல்களிலுள்ள பொதுமைக் கருத்துக்களை உணர்ந்து போற்றிய வகையிலேயே அடிகளின் இம் முயற்சியும் முகிழ்ந்தது.

## துறவு மேற்கொண்டமை

தொல்காப்பியத்தை முழுமையாக ஆய்ந்த அடிகள் தமிழர் நெறி நன்குணர்ந்தவர். இல்லறத்திலிருந்தே மனத்துறவு பூண்டு கடனாற்ற விழைந்தவர். 21-1-1907 அன்று குடந்தை நகரைச் சார்ந்த கோட்டையூரில், திருமூலர் வழிவந்த சிவராசயோகி இராசானந்த சுவாமி என்பாரின் தொடர்பு அடிகளுக்கு ஏற்பட்டது. 7-6-1908இல் மீண்டும் அடிகளார் இராசானந்தரைக் கண்டு வணங்கியபோது அவர் அடிகளார்க்குச் சிவராசயோகக் கலையை அறிவுறுத்தினார். அந்நாள் முதலே அடிகளார் உள்ளம் துறவில் நாட்டம் கொண்டது. மெய்யுணர்வும் மிகுந்து வந்தது.

1911இல் பல்லவபுரத்தில் அடிகள் குடிபுகுந்த சில மாதங்களில் திருபுரசுந்தரி என்னும் பெண் மகவு பிறந்தது. அப்போது, அடிகளின் அன்னையார், துணைவியார், மூன்று பெண்மக்கள், நான்கு ஆண் மக்கள் என மொத்தம் பதின்மர் கொண்ட குடும்பமாக அடிகளின் குடும்பம் அமைந்தது. இந்நிலையில், 27-8-1911 அன்று அடிகள் துறவு மேற்கொண்டார். காவியாடை புனைந்தார். 'நாகை வேதாசலம் பிள்ளை' என்னும் பெயர் 'சுவாமி வேதாசலம்' என மாறியது.

நூல் இயற்றல், பொழிவு ஆற்றல், மாதிகை வெளியிடல் ஆகியவற்றில் மாறாத ஈடுபாடு கொண்ட அடிகளுக்கு அன்பர்களின் காணிக்கையால் பொருட்தட்டுப்பாடே இல்லாமல் ஆயிற்று. குடும்பத்தினரும் உடனிருந்து போற்றி உதவி வந்தனர்.

## பல ஊர்களில் சொற்பொழிவு

தமிழகம் முழுவதிலும், வடஇந்தியாவிலும், இலங்கையிலும் அடிகளை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்து சிறப்பித்தவர்

பலர். அடிகளின் உரையைக் கேட்கப் பல ஊர்களிலும் மக்கள் குவிந்தனர். 7-1-1914இலும், 21-5-1917இலும் 16-12-1921இலும், அடிகள் இலங்கைச் செலவை மேற்கொண்டார்.

## அச்சகம் அமைத்தல்

அடிகள் தம் நூலாக்கப் பணிகளுக்கு உதவியாக இருக்கும் வகையில் ஓர் அச்சுக்கூடம் அமைக்க வேண்டுமென நீண்டகாலமாக எண்ணி வந்தார். கொழும்புக்கு அடிகளை அழைத்த செந்திலாறுமுகம் பிள்ளை, பெரிய நாயகம் பிள்ளை முதலியவர்கள் பலரிடமிருந்தும் பெருந்தொகையைத் திரட்டி அடிகளாருக்கு அளித்ததன் பயனாக அச்சகம் அமைக்கும் எண்ணமும் ஈடேறியது.

12-12-1916இல் வ.திருவரங்கம் பிள்ளையவர்கள் பேருதவியுடன் பல்லாவரம் சமரச சன்மார்க்க நிலையத்தின் கண் அச்சகம் நிறுவப்பட்டது. அச்சுப்பொறிக்குச் 'செந்தில் நாயக இயந்திரம்' என்றும், அச்சுக்கூட இருப்பிடத்திற்குத் 'திருவரங்க விலாசம்' என்றும் அடிகள்தம் நன்றியுணர்வோடு பெயரிட்டு மகிழ்ந்தார்.

## நூற்பதிப்பு

1915 பிப்ரவரிக்குப் பிறகு இரண்டாண்டுகள் வரையில் அடிகள் பயணங்களையும் சொற்பொழிவுகளையும் ஏற்கவில்லை. தம் பொது நிலைக்கழக மாளிகையில் தங்கி நூலாராய்ச்சி, நூலெழுதுதல், படித்தல் ஆகிய பணிகளிலேயே மூழ்கியிருந்தார். புதிய நூல்களை அச்சிட்டதுடன் மறுபதிப்புகளையும் வெளியிட்டு வந்தார்.

## செந்தமிழ்க் களஞ்சியம்

திருவாசகத்திற்கு அடிகளார் உரை எழுதி வெளியிட வேண்டுமெனத் திருவரங்கனார் விரும்பியதை ஏற்றுக் கொண்ட அடிகள் 1920 பிப்ரவரித் திங்களில் 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்ற பெயரில் ஒரு திங்கள் இதழைத் தொடங்கி அதில் திருவாசக விரிவுரையைத் தொடர்ந்து வெளியிட்டார். 1922 ஏப்ரல் வரை பன்னிரண்டு இதழ்கள் வெளிவந்துள்ளன. பின்பு, தொடர்ந்து பல ஊர்களுக்கும் அடிகள் பயணம் செய்து சைவத் தொண்டும் தமிழ்த்தொண்டும் ஒருங்கே ஆற்றி வந்தார். கல்லாடை பூண்ட பின் வேறு எந்தப் பணிக்கும் அடிகள் செல்ல விரும்பவில்லை. துறவுப் பயணம் தொடர்ந்தது.

## இந்தி எதிர்ப்பு

14-7-1937இல் இராசாசி சென்னை அரசின் முதல்வரானார். 5,6,7ஆம் வகுப்புகளில் இந்தியைக் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்ற சட்டத்தைக் கொண்டு வந்தார். அதனை எதிர்த்துத் தமிழ் அறிஞரும் பிறரும் போர்க்களத்தில் இறங்கினர். அடிகளாரும் இதில் பெருவிருப்புடன் பங்கு கொண்டார். 11-9-1937இல் திருவல்லிக்கேணிக் கடற்கரைக் கூட்டத்திலும், 3-6-1938இல் சைதாப்பேட்டையில் கூடிய இந்தி எதிர்ப்பு மாநாட்டிலும், 4-10-1937இல் கோகலே மண்டபத்தில் கூடிய மாநாட்டிலும் அடிகளார் தலைமை தாங்கி இந்தித் திணிப்பை எதிர்த்து முழங்கினார். 'இந்தி பொதுமொழியா?' என்ற நூலை எழுதி வெளியிட்டு அனைவருக்கும் வழங்கினார். 1940இல் கட்டாய இந்தி மறைந்தது. மீண்டும் 1948இல் கட்டாய இந்தித் திணிப்பு நிலைமை எழுந்தது. 17-7-1948இல் சென்னை தூயமேரி மன்றத்தில் கூடிய இந்தி எதிர்ப்பு மாநாட்டில் அடிகள் கலந்து கொண்டு கட்டாய இந்தித் திணிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

## இறுதிக்கால வாழ்க்கை

1940 முதல் 1950 செப்டம்பர் 15ஆம் நாள் வரை அடிகளின் இறுதிக்காலம் எனலாம். அடிகளின் தமிழ்ப்பணியால் ஈர்ப்புண்ட ஆசிரியர்களும், மாணாக்கர்களும், அன்பர்களும் பெருங்கூட்டமாக நேரில் வந்து காண்பதைப் பெருமையாகவே கருதினர். அடிகளின் நூல்கள் பல நன்கு விற்பனையாயின. அடிகளின் பெண்களுக்கும், பிள்ளைகளுக்கும் நல்ல கல்வியும் திருமணமும் செய்தளித்து அனைவரும் நல்ல நிலையிலிருக்கக் கண்டுவந்தார்.

அடிகளாரின் அன்பு மகள் நீலாம்பிகையாரின் முதல் மகள் மங்கையர்க்கரசி தம் பன்னிரண்டாம் வயதில் இறந்தார். அம்மகளின் இழப்பு பெற்றோராகிய திருவரங்கரையும் நீலாம்பிகையாரையும் பெரிதும் வருத்தியது. நோய்வாய்ப்பட்ட திருவரங்கரவர்கள் 28-4-1944 அன்று இயற்கை எய்தினார். மகள் பிரிவும் கணவர் பிரிவும் நோயும் சேர்ந்து, துன்பம் மிகுந்த நீலாம்பிகையார் 5-11-1945 அன்று இயற்கை எய்தினார். மகள் நீலாம்பிகையாரை இழந்த அடிகளும் அன்னை சவுந்தரவல்லியும் துயரத்தில் மூழ்கினர். 24-5-1950 அன்று அடிகளின் துணைவியார் சவுந்தரவல்லி இயற்கை எய்தினார். அன்புத் துணையை இழந்த அடிகளார் நோய்வாய்ப்பட்டார். 15-9-1950 அன்று தம் பொன்னுடல் நீங்கிப் புகழுடல் உற்றார்.

## தேடிய நூற்செல்வத்தைக் காத்தல்

மறைமலையடிகளார் தேடிய நிலைத்த செல்வங்கள் நூல்களும் நூலகமும் ஆகும். இவற்றைப் பயன்படுத்த வேண்டிய வகை குறித்து 'இறுதி முறி'யை 9-9-1950இல் அவரே எழுதி வைத்தார்.

தாம் தொகுத்த மணிமொழி நூல் நிலையம் பொது மக்களுக்குப் பயன்படும் வகையில் 'மறைமலையடிகள் நூல் நிலையம்' என்னும் பெயரால் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், தம் நூல்களைப் பதிப்பித்து அதனால் வரும் வாரமுறை வருவாய் தம் குடும்பத்தைச் சார வேண்டும் என்றும் இப்பணியைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் மேற்கொள்ள வேண்டும் என்றும் அடிகள் எழுதினார். இதன் நிறைவேற்றற் குழுவினராக எழுவரையும் குறிப்பிட்டார்.

அடிகளாரின் இறுதி விருப்பத்தின்படியே அவருடைய நூலகம் தமிழகத்தின் தனிப்பெரும் நூலகமாகச் சிறந்து விளங்கி வருவதை அனைவரும் அறிவர்.

மறைமலையடிகளார் தம் வாழ்நாளில் அறுபது ஆண்டுகட்கு மேலாகப் பழந்தமிழ் நூலாராய்ச்சியிலேயே அயராது ஈடுபட்டிருந்து ஐம்பதிற்கும் மேற்பட்ட அரிய நூல்களை எழுதியும் பதிப்பித்தும் தமிழ்த் தொண்டாற்றியுள்ளமை தமிழ்நாடு செய்த தவப்பயனாம். அவர்தம் சீரிய பணிகளுள் சிலவற்றை இனி நுணுகிக் காண்போமாக.

# சொலல் வல்லார்

நாவன்மை என்னும் சிறப்பைப் பெற்றிருப்பது ஒரு தனிச்சிறப்பாகும். கேட்பவர் உள்ளத்தைப் பிணிக்கும் தன்மை உடையவாயும், பகைவரும், கேட்பதற்கு விருப்பப்படும் வகையிலும் சொல்லப்படுவதே சிறந்த சொல்வன்மை யாகும் என்பர் திருவள்ளுவர். தாம்கற்ற கல்வியைப் பிறர் விரும்புமாறு சொலல் என்பது ஒரு சிலருக்கே வாய்ப்பதாகும்.

**"சொலல்வல்லன், சோர்விலன், அஞ்சான் அவனை**
**இகல் வெல்லல் யார்க்கும் அரிது."[1]**

என்பது வள்ளுவர் வாக்கு. சொல்லில் வல்லவனாய், சோர்வு இல்லாதவனாய் அஞ்சாதவனாய் உள்ளவனை வெல்வது அரிது என்பது இதன்பொருள்.

மும்மொழியையும் முற்றும் கற்றாராய்ந்து, அவற்றின் கண்ணுள்ள நூற்கருத்துக்களையெல்லாம் தெள்ளத் தெளிவாக எடுத்துரைக்கத் தக்க வல்லமையும், அதில் இறுதி வரையில் சோர்வு இல்லாமல், அஞ்சா நெஞ்ச உறுதியுடனும் திகழ்ந்தவர் மறைமலையடிகள். அவர் வாழ்ந்திருந்த காலத்தில் சொல்லால் அவரை வெல்வது எவர்க்கும் அரிதினும் அரிதாம்.

## இளமை தந்த வளமை

சொற்பொழிவுத் திறமை மிக்க அடிகள் பல நூறு பெருங்கூட்டங்களில் தலைமையேற்று விரிவுரையாற்றியுள்ளார். இவருடைய பேச்சுகள் அத்தனையும் செறிவுடையனவாய்ப் பலநூற் புலமை மணம் வீசுவனவாய், நூல் வடிவம் பெறத் தக்கதாகவே அமைந்தன. இத்திறன் இவருக்கு இளமை முதலே வாய்க்கப் பெற்றதாகும்.

அடிகள் தம் இளம்மக் காலத்தில், நாகப்பட்டினத்தில் 'இந்துமதாபிமான சங்கம்' என்றதோர் சங்கத்தைத் தோற்றுவித்து

---

1. திருக்குறள் : 647

நடத்தி வந்தார். அதில் தம்மோடு ஒத்த மாணவர்களுக்குத் தமிழறிவும் சமய உணர்வும் ஊட்டும் வகையில் அரிய பல சொற்பொழிவுகளாற்றி வந்துள்ளார். இப்பயிற்சியால் பின்னாளில் இவர் பெரும் பேச்சாளரானார். இப்பயிற்சியும் இவருக்கு இயல்பாய் அமைந்ததேயாம்.

அடிகள் தம் இருபதாம் வயதில் பேராசிரியர் சுந்தரம் பிள்ளையவர்கள் அழைப்பின் பேரில் திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் 'நாடகத்தமிழ்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றிய பொழுது, தலைமை தாங்கிய சுந்தரம் பிள்ளையவர்கள் இவரது ஆராய்ச்சித் திறனையும் சொல் வன்மையினையும் புகழ்ந்து பாராட்டியுள்ளார்.

## நாயகரின் நாநலம்

அக்காலத்தில் சென்னையிலிருந்த சோமசுந்தர நாயகர் என்னும் பெரும்புலவரிடம் பாடங்கேட்டதினாலும், அவருடைய வடமொழிப் புலமை, தமிழறிவு, சைவ சித்தாந்த நூல்களில் தேர்ந்த நிலைகளைக் கண்டதினாலும் மறைமலையடிகளாருக்குப் பெரும் எழுச்சியாயிற்று. நாயகரும் தாம் பேசுமிடங்களுக்கெல்லாம் இவரையும் அழைத்துச் சென்று பேசவைத்துள்ளார். நாயகருக்கு அப்போது வயது ஐம்பது. அடிகளுக்கு வயது இருபத்திரண்டு மட்டுமே.

நாயகர் சொற்பொழிவு ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் வழங்கப் பெற்ற காலம் அது. நான்கு அல்லது ஐந்து நாள்கள் அவர் பேசுவார். பேச்சின் இறுதியில் செல்வர்கள் நான்காயிரம், ஐயாயிரம் என்று பெருந்தொகையைக் காணிக்கையாக அளிப்பர். சுமார் நூறு ஆண்டுகட்கு முன்பு இதன் மதிப்பு எவ்வளவு என எண்ணினால் அவர்தம் பேச்சின் அருமை விளங்கும். இத்தகைய பெரும்புலவருடனிருந்த காலங்களில் அடிகளாரின் நாவன்மை மிகுந்தது எனலாம்.

## விடுமுறைகளில் விழுமிய பொழிவுகள்

சைவ சமயத்தில் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த அடிகளார், கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியர் பணிபெற்ற காலம் (1898) முதல் கோடை விடுமுறை, ஆவணி விடுமுறை, மார்கழி விடுமுறை முதலிய காலங்களிலும், ஏனைய விடுமுறைகளிலும், சனி ஞாயிறுகளிலும், சென்னையிலும், தமிழகம் முழுவதுமுள்ள நகர்களிலும், பேரூர்களிலும் சென்று சிவ சித்தாந்தம் பற்றியும்,

செந்தமிழ் நலம் பற்றியும் இடையறாது சொற்பொழிவுகள் ஆற்றி வந்தனர்.

14-9-1901இல் மதுரையில் நான்காம் தமிழ்ச் சங்கம் நிறுவப் பெற்ற பின்னர் நடைபெற்ற விழாக்களில் அடிகளார் கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். பாண்டித் துரைத்தேவர், ரா.ராகவையங்கார் போன்ற பெருமக்களின் நட்பும் பாராட்டும் பெற்றார்.

1903-1905ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற அருட்பா-மருட்பா போரில் மறைமலையடிகள் ஆற்றிய உரைகள் மிகவும் குறிப்பிடத்தக்கன. இவர்தம் நாவன்மையால் அருட்பா ஏற்றம் பெற்றது.

## பெருங்கூட்டங்கள்

1907இல் ஞானியாரடிகள் முன்னிலையில் அடிகளார் 'சைவசித்தாந்த மகா சமாசம்' நிறுவினார். இதன் கிளைச் சபைகளாகச் சென்னையில் 'திருவருட்பிரகாச சபை', 'மெய்கண்ட சித்தாந்த சபை', நாகை-வெளிப்பாளையம் 'சைவ சித்தாந்த சபை', தூத்துக்குடி 'சைவ சித்தாந்த சபை' என்னும் பல சபைகள் விளங்கின. இவற்றிலும், பிற சபைகளிலும் அடிகளார் பல சொற்பொழிவுகளை ஆற்றியுள்ளார்.

## சென்னைச் செல்வர்

சென்னையிலுள்ள கோயில்கள், சமய சபைகள், இலக்கியக் கழகங்கள், பொதுநல மன்றங்கள், கல்விக் கூடங்கள் போன்றவற்றில் அடிகள் அடிக்கடி சொற்பொழிவாற்றி வந்தார்.

"அடிகளின் பேச்சும், எழுத்தும், அழகும் சென்னை நகர மக்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டது. அதனால், சென்னையில் தமிழ், சைவம் பற்றிய எக்கூட்டமாயினும் அது அடிகளின்றிச் சிறப்புறுவதில்லை. அதனால், கூட்டம் நடத்துவோர் அடிகளை எவ்வாறாயினும் தங்கள் கூட்டத்தில் பேசுமாறு செய்வர். அடிகள் பேச்சென்றால் தக்கோரும் அன்பர்களும் ஏராளமாய்க் கூடி விடுவர். அடிகள் அவர்கள் எல்லார்க்கும் தம் அறிவுச் செல்வத்தை ஆர வழங்குவர். அது நுகர்ந்தாரனைவரும் தம் அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய செல்வராக அடிகளைப் போற்றலாயினர். இவ்வாற்றால் அடிகள் அன்றைய சென்னை வாழ் தமிழ், சைவப் பெருமக்களின் உரிமைச் செல்வராய் விளங்கினர்" என்பர்.[1]

---

1. மறை.திருநாவுக்கரசு, மறைமலையடிகள் வரலாறு, ப.115.

## துறவுக்குப் பின் தொடர்ந்தவை

10-4-1911இல் அடிகள் தம் தமிழாசிரியர் பணியிலிருந்து விலகினார். 1-5-1911இல் பல்லாவர இல்லத்தில் குடியேறினார். 27-8-1911இல் துறவியானார்.

பொதுநிலையில், அடிகள் தாம் இன்புறுகின்ற அருங்கருத்துக்களையெல்லாம் தம் நூல்களால் மட்டுமன்றித் தம் அருஞ்சொற்பொழிவுகளாலும் அன்பர்கள் அறிந்துணர்ந்து இன்புறல் வேண்டும் என்னும் ஆர்வங் கொண்டிருந்தார். ஆயின், கல்லூரிப் பணியின்போது வெளியூர் சென்று சொற்பொழிவுகள் செய்ய இயலாமலிருந்தது. இக்குறை, அடிகள் கல்லூரியை விட்டுத் துறவியானதால் நீங்கியது. பல இடங்களிலும் அவர்தம் சொற்பொழிவுகள் தொடர்ந்து நடைபெற்றன.

## குறையிலா நிறை வாழ்வு

அடிகள் தம் நண்பர்கள், மாணவர்கள், அன்பர்கள் முதலியவர்களின் வேண்டுகோட்கிணங்கித் தமிழகத்திலுள்ள பல ஊர்களுக்கும் சென்று சொற்பொழிவுகள் பல ஆற்றிவந்தனர். இவ்வாறு சொற்பொழிவுக்கு அழைப்போர் அடிகளைத் தெய்வமெனப் போற்றி நகர்வலமாக மேளதாளத்துடன் வரவேற்றுச் சிறப்பிப்பர். விருதுகள் அளித்தும், பொன் போன்ற காணிக்கைகள் அளித்தும் பாராட்டி மகிழ்வர்.

சொற்பொழிவுப் பணியால் கல்லூரி ஆசிரியர் நிலையினும் பல வகையில் தம் வாழ்வு மேம்பட்டு விளங்கியது என அவரே குறிக்கின்றார். 'இளவரசனை விட வாழ்க்கையை இனிதாக நடத்துகின்றேன். எங்கும் எனக்கு மிகச் சிறந்த வரவேற்பும், ஒப்புரவும் ஆற்றப்படுகின்றன' என்று தம் 8-5-1912 நாட்குறிப்பில் எழுதியுள்ளார்.

ஒருமுறை அடிகளின் தோற்றம், சொற்பொழிவுகளில் ஈடுபட்டோர் மீண்டும் மீண்டும் அடிகளை அழைத்துப் பேசச் செய்து வழிபட்டு மகிழ்வர். இவற்றால் அடிகள் இயற்றிய நூல்கள் விற்பனையும் மிகுதியாயிற்று. அறிவுக்கடல் இதழ் உறுப்பினர்கள் தொகையும் மிகுதியாயிற்று. சொற்பொழிவுகளுக்குக் கட்டணங்களேயன்றி அன்பர்களின் திருவடிக் காணிக்கைகளும் மிகுந்தன. இதனால் அடிகள் குறைவிலா நிறை வாழ்வு கொண்ட கோமானாக விளங்கினார்.

## விழா முன்னேற்பாடுகள்

அடிகள் தலைமை தாங்க ஒப்புக்கொள்ளும் விழாக்கள் செம்மையாக நடைபெற வேண்டுமென்பதில் மிகுந்த கவனம் கொள்வார். எனவே, விழா நடத்துவோருக்கு, விழா நடத்துங் காலம், நேரம், பந்தர் அமைக்கும் முறை, நிகழ்ச்சி அச்சிடுமுறை, அழைப்பு அனுப்பப்படும் முறை, தலைவர்க்கும் சொற்பொழிவாளர்க்கும் தகுதியான இருப்பிடம், உணவுத் தேவை முதலியன பற்றி முன்கூட்டியே எழுதுவார். பின், விழாவுக்கு முன்னர் தாமே நேரில் சென்று எல்லா ஏற்பாடுகளையும் பார்வையிடுவார். திறந்த வெளியில் பேச உடன்படார்.

காலை, மாலையில் குறித்த நேரத்தில் பொழிவை அமைத்தல், இடைவேளைகளில் தேவாரத் திருமுறைகளை ஓதுவார்களை அமைத்துப் பாடச் செய்தல் போன்றவற்றையும் முறையாகச் செய்வர்.

அடிகள் தம் ஆராய்ச்சிக்காக நூல்களை வாங்கவும், நூல்கள் எழுதவும், அவற்றை அச்சிடவும், இதற்காகத் தம் வாழ்க்கை வசதிக்காகவும் பணம் தேவைப்படுமாற்றை எடுத்துச் சொல்லி ஒரு சொற்பொழிவுக்கு முந்நூறு ரூபாய்கள் முன்கூட்டியே அனுப்புதல் வேண்டுமென்றும், பயணக் கட்டணம் தனியாகவும் தேவை என்பதையும் முன்கூட்டியே அறிவித்து விடுவார்.

சொற்பொழிவுக்கு முன்பின் தனியே தங்குமிடம் தமக்கும் உடன் வருவோருக்கும் தனி உணவு ஏற்பாடுகள் எனத் தனிப்பட்டியலே அடிகள் அளிப்பார். அவ்வாறு வசதி செய்ய இயலாதவர்களிடம், 'எம்மை ஏன் அவ்வளவு தொலைவு வருமாறு அழைக்கிறீர்கள். இயலாதென்றால் எம் நூல்களை வாங்கிப் படியுங்கள்' என்று கூறி விடுவார்.

## பொருளின் தேவை

"இருபது ஆயிரம் ரூபாய்களுக்கு நூல்கள் வாங்கி ஆராய்ந்து வருகின்றேன். எனது நூல்களை அச்சிட ஆயிரக் கணக்கில் செலவிடுகின்றேன். குறைந்த தொகைக்காக உங்கள் விழாவுக்கு வந்தால் என் முயற்சியினாலாம் வருவாயுங் குறையும். மேற்கொண்டு என் தொண்டுகளுக்கும், என் வாழ்க்கைச் செலவுக்கும் யான் என் செய்வேன்? இந்நாட்டில் என் போன்ற ஆராய்ச்சியாளர்க்கு அரசாங்க உதவி ஒன்றுமில்லை. செல்வர் பலர் பாழ்வழிகளில்-ஆடம்பர ஆரவாரத் தன்னல வழிகளில் பணத்தை வாரி வாரி இறைக்கின்றனர்.

ஒரு சிலர்-மிகச்சிலர்-விரல் விட்டெண்ணக் கூடிய சிறு செல்வரும், உங்களைப் போன்ற ஏழை மெய்யன்பர்கள் சிலருமே என் அறிவுப் பணிக்கு உதவி வருகின்றீர்கள். இவ்வுதவியும் குறைந்தால் என் பணிகள் தமிழகத்திற்கு எவ்வாறு கிடைக்கும்? மேலை நாடுகளில் கற்றவர்கட்கு ஏராளமாய் உதவுகின்றனர். அவர்கள் எழுதிய நூல்களை ஆயிரக்கணக்கானவர்கள் வாங்கிப் படிக்கின்றனர். அதனால் புலவர்கள் தம் வாழ்க்கையைத் துன்பமின்றிக் கவலையின்றி இனிதே நடத்துகின்றனர். அதனால் அரிய பல நூல்களை எழுதுகின்றனர்.

இப்பாழ்த்த, தமிழ் நாட்டில் அப்படி எல்லாம் உதவிகள் ஒன்றுமில்லையே? ஏழை மக்களும், பயனற்ற பல வழிகளில் பணத்தைப் பாழாக்குகின்றனரே! அவர்கள் சிறிது சிறிது கொடுத்தாலும் என் தொண்டு மேலும் பயன் தருமே" என்று அடிகள், தம்மை அழைப்போரிடம் உரைப்பர் என்பர்.[1]

இவ்வாறு, அடிகள் தேவையறிந்து சிறப்புடன் அழைக்கப்பெறும் விழாக்களில் மக்கள் கூட்டமும், அறிஞர் கூட்டமும் மிகுந்திருப்பதும், அனைத்து விழாக்களுமே மிகச் சிறப்பாக அமைவதும் அவர் காலத்தில் வழக்கமாயின.

## சிந்தனையைத் தூண்டும் சீரிய தலைப்புகள்

தமிழையும் சிவநெறியையும் இருகண்களாகப் போற்றியவர் மறைமலையடிகளார். எனவே, தம் வாழ்நாள் முழுமையும் இவ்விரு பொருளடிப்படையிலேயே தம் சொற்பொழிவுகளின் தலைப்புகளையும் அமைத்துக் கொண்டார்.

தமிழர் நாகரிகத்தின் பழமையும் சிறப்பும், முத்தமிழின் சிறப்பு, சங்க இலக்கிய ஆராய்ச்சி, பண்டைத் தமிழர் வீர வாழ்க்கை, திராவிட நாகரிகம், சைவமும் தமிழும் போன்ற பல தலைப்புகளில் செறிவான பல பொழிவுகளை அடிகள் ஆற்றியுள்ளார்.

சைவ சித்தாந்த நுட்பங்களையெல்லாம் தமிழிலும் ஆங்கிலத்திலும் உரைப்பதில் வல்லவரான அடிகள், திருச்சிற்றம்பல விளக்கம், மெய்கண்ட சித்தாந்தம், சித்தாந்தம், சாங்கியமும் சித்தாந்தமும், சித்தாந்தமும் இலக்கியமும், சித்தாந்த போதம், வேதாந்தமும் சித்தாந்தமும், சைவ சித்தாந்தத்தின் முடிவு, அத்வைத சித்தாந்தம், சிதம்பர தத்துவார்த்தம் போன்ற பல தலைப்புகளில் பலவிடங்களில் சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார்.

---

1. மறை.திருநாவுக்கரசு, மறைமலையடிகள் வரலாறு, பக்.133-134.

வடலூர் வள்ளலாரின் கொள்கைகளிலும் அருட்பாடல்களிலும் பெரிதும் ஈடுபாடு கொண்டிருந்த மறைமலையடிகள் அருட்பாவின் சிறப்புகளை வெகுவாகப் புகழ்ந்தும் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தியுள்ளார். சமரச சன்மார்க்கம், சன்மார்க்க இலட்சியம், ஊன் விலக்கு, சீவகாருண்யம், உலக மதமும் சமரச சன்மார்க்கமும், கொல்லாமை, உயிர்களிடத்தன்பு, சைவ உணவு போன்ற தலைப்புகளில் அடிகள் சிறப்புரையாற்றியுள்ளார்.

மக்கள் வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படைப் பண்புகளை விளக்கும் வண்ணமாகவும் அடிகளின் சொற்பொழிவுத் தலைப்புகள் பல அமைந்தன. இவ்வகையில், அன்பு, உயிரியல், கடவுளியல், கல்வியியல், பக்தி, தமிழ், பிறவிப்பயன், தாயின் கடமை, மக்கள் கடமை, உயிர்ப்பண்பு, திருக்குறள், பகுத்தறிவுக்கான உண்மைக் கொள்கைகள், தமிழர் மதம் போன்றவை மக்கள் சிந்தனைக்குரிய சிறப்பான தலைப்புகளாம்.

## நாவன்மை

அடிகள் தாம் பேச எடுத்துக்கொண்ட பொருளைப் படிப்படியே விளக்கிச் செல்வதில் வல்லவர். சுவையுடனும், இனிய மொழியுடனும், இசைப்பாடல் விளக்கங்களுடனும், உலகியல் மேற்கோள்களுடனும், உவமையுடனும், உருக்கமுடனும் பேசுவதில் அவருக்கு இணை அவரே ஆவர். அடிகள் எவ்வழி அவ்வழி அவையோரும் எனக் கேட்போரைப் பிணிக்கும் வகையில் அவருடைய பேச்சுகள் அமையும். எங்கும் அவையின் சூழல் அறிந்தே அவர் பேசுவார்.

வடமொழி, ஆங்கிலம் போன்ற பிறமொழி நூல்களை மேற்கோள் காட்டிப் பேசும்போது அம்மொழியறிஞர் போன்றே அடிகள் பேசுவதும் அனைவரையும் வியப்பில் ஆழ்த்தும்.

சொற்பொழிவுகளின் நிறைவில், முடிவுரையாகச் செய்திகளைத் தொகுத்துரைப்பதிலும் அடிகளார் தனித்தன்மை கொண்டவர்.

## உணர்ச்சிப் பெருக்கு

அடிகள் சொற்பொழிவின் போது அடையும் உணர்ச்சி நிலைகளைக் கேட்போரும் அடைவர். இதை ஒவ்வொரு கூட்டங்களிலும் காணலாம். காட்டாக, நால்வருள் திருஞானசம்பந்தர் பற்றி அடிகள் மிகவும் உணர்ச்சிப் பெருக்கோடு உரையாற்றுவதைச் சுட்டலாம்.

"அடிகள் திருஞானசம்பந்தரைப் பற்றிப் பேசுங்கால் அவையோரைச் சீர்காழிக்கே அழைத்துச் சென்று விடுவர். உலகில் உலவும் இளஞாயிறு போன்ற ஞானசம்பந்தர் ஞானப்பாலுண்டு கடைவாயில் பால் ஒழுக நிற்பதைக் காட்டுவர். மக்கள் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, சிவபாத இருதயர் தம்கையால் சிறு கோலாச்சி சம்பந்தரை நோக்கி அதட்டியபடி, எச்சிலாம்படி உனக்குப் பால் தந்தாரைக்காட்டு என்று கேட்பதையும், அதற்கு விடையாகச் சின்னஞ்சிறிய ஞானசம்பந்தக் குழந்தை தன் தாமரையனைய கண்களிலிருந்து நீர்த்துளிகளை முத்துப்போற் சிந்தியும், இடக்கையில் பால் கிண்ணத்துடன் செந்தாமரை போலச் சிவந்த சிறிய வலக்கையைத் தன் உச்சிக்கு மேலே உயர்த்தியும், சுட்டு விரலால்-சுட்டறிவுக் கெட்டாத பெரும் பொருளாம் ஒரு பொருளைச் சுட்டிக் காட்டியும், எனக்குப் பால் தந்தான் இவனே என்று மழலை மொழியாலே-இன்னிசையும் இன்புறும் இசையாலே "தோடுடைய செவியன்" என்று பாடுவதையும் காட்டிவிடுவர்.

ஞானசம்பந்தப் பெருமானின் இடக்கையில் பால் கிண்ணத்துடன் உச்சியின் மேல் வலது கையை உயர்த்திச் சுட்டு விரலால் சிவபெருமானைச் சுட்டிக் காட்டினார் என்று கூறுமிடத்தில் அடிகளும் அவ்வாறே தம் இடக்கையில் பாற்கிண்ணம் உள்ளது போல அமைத்துக் கொண்டு வலது கையை மேலே உயர்த்தித் தம் சுட்டு விரலால் வானத்தைச் சுட்டிக் காட்டிக் கொண்டிருப்பர்.

அப்போது அவையோர், மீண்டும் அத்திருஞான சம்பந்தப் பிள்ளையாரே தக்க வயதுற்று அழகுருவங் கொண்டு கல்லாடை பூண்டு அதே இனிய குரலுடன் இறைவனை உலகுக்குக் காட்ட வந்தாரோ என்று அடிகள் தோற்றம் இருக்கும் இந்நிலையைக் கண்டு அளவிலா மகிழ்ச்சியில் திளைத்திருப்பர்.

சிவபாத இருதயராகவும், சம்பந்தராகவும் அடிகளாரே நடித்துவிடுவர். குரலுங் கூடச் சிவபாதர் போலவும், குழந்தை சம்பந்தரது போலவும் விறைத்துங் குழைந்தும் இருக்கும். இது சொற்பொழிவு, அடிகள் பேசுகிறார் என்பதையும் மறந்த அவையோர், அடிகள் தாம் கடவுளை வானத்திற் காட்டுகின்றாரோ என்று அவர் சுட்டு விரலையும், வெறும் வானத்தையும் பார்த்திருப்பர். அடிகள் தோடுடைய செவியனை உளமுருக உயிர் உருகப் பாடிக் கண்ணீருடன் பேச முடியாமல் விம்மி நிற்பர். அவையினர் அனைவரும் அந்நிலையடைவர்.

அடிகள் பாடும் இன்னிசை அவை முழுதும் நிறைந்து, அன்பர்களின் உள்ளங்களிலும் நிறைந்து, விம்மி அவையைக் கடந்து எங்கும் பரவி மேலெழுந்து வானத்தையும் நிறைத்து, அதன் அப்பாலும் சென்று அம்பலத்தாடும் ஐயன் செவியில் நிறைந்து, அவனைச் சபையிலே அழைத்துக் கொண்டு வந்துவிடும்." என்று அடிகளாரின் உடனிருந்து அவர்தம் சொற்பொழிவுகளைப் பார்த்தும் கேட்டும் உணர்ந்தும் மகிழ்ந்த அடிகளின் திருமகனார் திருநாவுக்கரசு அவர்கள் எடுத்துரைக்கின்றார்.[1]

சமயப்பேச்சுகளில் அடிகளின் உள்ளம் ஈடுபட்டு அதன் வயமாய் நிற்பது போலவே, தமிழர் நாகரிகம், சங்க கால மக்கள் வாழ்க்கை, மக்கள் முன்னேற்றம் இன்ன பிற பொருள்களைப் பற்றிப் பேசும் போதெல்லாம் அவற்றிற்கேற்ப உணர்ச்சிகளும், மெய்ப்பாடுகளும் தம்பால் தோன்ற விளங்குவர்.

## தலைமைத்திறன்

பெரும்பாலும் அடிகள் தாமே தலைமை தாங்கித் தம் சொற்பொழிவினை நிகழ்த்துவார். தம் தலைமையின் கீழ்ப் பேசும் சொற்பொழிவாளர்களின் அரும்பொருள்களில் சிலவற்றை எடுத்து விளக்குவார். பிற பேச்சாளர்கள் பேசாதுவிட்ட நற்பொருள்களை எடுத்துக்காட்டுவார். அவர்களுடைய கருத்துகளையும் நன்கு பாராட்டுவார். இதனால் அப்பேச்சாளர்களின் தகுதியும் உயரும். பேச்சில் கருத்து வேற்றுமைக்காக ஒருவரை ஒருவர் இகழ்வதை அடிகள் ஏற்பதில்லை.

இவ்வாறு தமிழகத்திலும் இலங்கையிலும் பலவிடங்களில் அடிகளாரின் சொற்பொழிவு நிகழ்ச்சிகள் பல்லாண்டுகளாக மிகச் சிறப்பாக நடைபெற்று வந்தன.

## பேச்சினும் எழுத்தே பெரும் பயனளிப்பது

1915 பிப்ரவரிக்குப் பிறகு இரண்டாண்டுகள் வரையில் அடிகள் பயணங்களையும் சொற்பொழிவுகளையும் ஏற்கவில்லை. நூலாராய்ச்சி, நூலெழுதுதல், பதிப்பித்தல், அச்சிடுதல் என்பதிலேயே காலம் கழித்தார். பேசுவதில் தமக்கு ஆர்வங் குறைந்ததற்கும் அவரே காரணம் கூறுகின்றார்.

---

1. மறைமலையடிகள் வரலாறு, பக்.138-139.

"அரிய விரிவுரைகளைக் கேட்டோர் அப்போதைக்குப் பயனடைகின்றனர். பின்னுஞ் சில காலமும் அது அவர்கட்குப் பயன்படும். விரல்விட்டெண்ணக் கூடியவர்கட்கே அவர்கள் வாழ்நாள்காறும், அடுத்த பிறவிகளிலும் பயன்படும்; படலாம். நூல்களோ பயில்தொறும் இன்பந்தரும்; வெளிநாட்டவரும் நாட்டின் பல்வேறு பகுதியிலுள்ளாரும் பயின்று நல்லறிவும், பண்பும், பயனும் ஒருங்கே பெறுவர். அல்லாமலும் சொற்பொழிவுகளில் சில பல செய்திகளை விடவுங்கூடும். விளக்கஞ் செய்யவும், முழுதுங் கூறவும் இயலாது. கேட்பவர் அனைவரும் நுணுக்கமான ஆய்வுரைகளைக் கேட்டுச் சுவைக்க முடியாது. அதனால், பேசுவோர்க்குப் பேசும் ஆற்றல் குறைதலுங் கூடும். நூல்களில் இத்தகைய குறைகள் நேர இடமில்லை. ஆதலால் பேச்சின் பயன் அன்றைய செலவுக்குரிய பணம் போல்வது. நூல்களின் பயன் 'வைப்பு மாடு' (சேமநிதி) போல்வது. ஒரு பேரறிஞனுடைய பேரறிவு அவன் பேச்சினும் எழுத்திலேயே நன்கு விளங்கும்" என்பர் அடிகள்.[1]

அடிகள் இவ்வாறு கூறினும், தொடர்ந்து பல கூட்டங்களில் கலந்து கொண்டு அன்பர்களுக்காக அரிய சொற்பொழிவுகளை அவ்வப்போது ஆற்றிவந்தார் என்பதையும் அறிகின்றோம்.

## பொழிவுகள் நூலாதல்

அடிகளார் ஆற்றிய பல சொற்பொழிவுகள் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் மலர்ந்தன. பொது மக்களிடையே அவருடைய பேச்சிற்கும் எழுத்துக்கும் இருந்த பெருமையை அவரே பலவிடங்களில் குறித்துள்ளார்.

1941ஆம் ஆண்டில் அடிகள் எழுதிவெளியிட்ட 'தமிழர் மதம்' என்ற நூலின் முகவுரையில் பின்வருமாறு குறிக்கின்றார்.

"சென்ற ஆண்டு ஐப்பசித்திங்கள், 4ஆம் நாள் 5ஆம் நாள் சென்னை மாநகரிற் பச்சையப்பன் கல்லூரியில் அனைத்திந்திய தமிழர் மத மாநாடு கூடிற்று. பெருந்திரளான அன்பர்கள் கல்லூரியின் மேன்மண்டபத்திலும் அதன்கீழும் நிறைந்திருந்தனர். யாம் முன்னமே ஒப்புக் கொண்டபடி, தக்கார் பலர் வேண்ட அம்மாநாட்டின் பேரவைக்குத் தலைவராய் அமர்ந்து, 'தமிழர் மதம்' என்னும் தலைமையுரையின் முதற்பகுதியை முதலிற் படிக்கச் செய்தேம். அம் முதற்பகுதி முடிந்ததும், அவையிலுள்ளார் பலருங் கடவுளைப்

---

1. மறைமலையடிகள் வரலாறு, ப.255.

பற்றிய தமிழரின் கொள்கையைச் சொற்பொழிவாகவே நிகழ்த்துதல் வேண்டும் என எம்மைப் பெரிதும் வேண்டினர். அதற்கிசைந்து தமிழரின் கடவுட் கொள்கை இன்னதென்பதை ஒன்றரை மணிநேரம் வரையில் எம்மாலியன்ற மட்டும் நன்கினிது விளக்கிப் பேசினம். அவையிலிருந்தார் அனைவரும் அதனைக் கருத்தொருங்கி அமைதியுடன் கேட்டு, 'இத்தகைய அரிய சொற்பொழிவு அமெரிக்கா முதலான அறிஞர் நிறைந்த இடங்களிற் செய்யப்பட்டிருக்குமானால் இதன் மேன்மை உலக முழுவதுங் கொண்டாடப்பட்டிருக்கும்' என வியந்து பாராட்டி மகிழ்ந்தனர். கடவுள் நம்பிக்கை யில்லாதார் சிலரும் எம்பாற் போந்து, 'கடவுள் அறிவுச்சுடர் என்னும் இக்கொள்கை எங்கட்கும் ஏற்றதொன்றேயாகும்' எனக் கூறி மகிழ்ந்தனர். எங்ஙனமாயினும், எமது சிற்றறிவால் அளந்துரைத்த சிற்றுரை, அளக்கலாகாப் பேரொளி வடிவினனான இறைவன்தன் அளப்பரிய மாட்சியினை அன்பர்கட்கு ஒரு சிறிதாயினும் விளங்க வைத்து அவரை மகிழ்வித்ததே யாம் பெற்ற பேறெனக்கருதி இறைவன் திருவடிக்கு எமது புல்லிய வணக்கத்தைச் செலுத்தி, இந்நூலைத் தமிழுணர்ந்தார் எல்லார்க்கும் பயன்படும்படி அவர் எல்லாரிடையும் உய்க்கின்றேம்."[1]

மறைமலையடிகள் தம் கருத்துப்பொழிவால் செந்தமிழின் செறிவைச் சிறக்க விளக்கியவர். சிந்தனைத் திறனும், தேரிய ஆய்வு முனைப்பும், பேரறிவு ஒளியும், நூலாக்க நுட்பமும் கொண்ட இவர் தலைசிறந்த சொற்பொழிவாளர் என்ற தனிச்சிறப்புக்கும் உரியவராகின்றார். சொல்லில் வல்லவரானமையால் அவர்தம் எழுத்துக்களும் நிலைபெறலாயின.

பல்துறைப் புலமையை அடிகள் நாளெல்லாம் புதுக்கிக் கொண்டமையால் பார்புகழும் பெருமைகள் பலவும் பெறலானார்.

---

1. மறைமலையடிகள், தமிழர் மதம், முகவுரை, பக்.8,9.

# புலமைக் களஞ்சியம்

ஐம்புலன்களின் உதவி கொண்டு ஒருவன் ஒன்றைப் பற்றிய அறிவைப் பெறும் பான்மை புலமை எனப்படும்.

> **"அறியும் தன்மையைப் புலமை ஆம்எனப்**
> **பற்பல பெரியோர் பகர்ந்தனர் அன்றே."[1]**

என்பது அறுவகை இலக்கணம்.

புலமை பல பெறவேண்டும் என்னும் பெருவிருப்புடையவர் பெரும்புலமை பெற்றுள்ள அறிஞர்களைப் பணிந்தொழுகுதல் வேண்டுமென்பர் இலக்கணியார்.

மேலும், தமிழ் மொழிக்கும், அம்மொழி ஆய்வில் ஈடுபட்டுள்ள தனக்கும், தான் சார்ந்துள்ள சமயத்திற்கும், தமிழர்களாகிய தன் இனத்தினர்களுக்கும் எத்தகைய தீமையும் நேர்ந்து விடாதபடி விழிப்புடன் தொழில் புரிபவனின் அறிவாற்றல் தலைசிறந்தது என்றும் கூறுவர்.

> **"தமிழ்க்கும், தனக்கும், சார்தரு நெறிக்கும்**
> **தன்இனத் தினர்க்கும் தவறுஉறா வண்ணம்**
> **முயல்வோன் புலமை முதன்மைத்து ஆமே."[2]**

என்பர் வண்ணச்சரபம் தண்டபாணி அடிகள்.

இத்தகைய தலைசிறந்த அறிவாற்றல் கொண்டு விளங்கியவர் மறைமலையடிகள். பழந்தமிழ் நூலாசிரியர்களைப் பணிந்தொழுகிப் போற்றி மற்றவர்க்கும் வழிகாட்டியவர் இவர்.

## ஆய்வறிஞர் ஆக்கிய அரிய நூல்கள்

அடிகளாரின் நூற்புலமை அவரை ஆய்வறிஞராக்கியது. மும்மொழிப் புலமையால் ஆராய்ச்சியில் புதுமைப் போக்கு முகிழ்ந்தது. அடிகளின் தேடல் வேட்கை மிகுதியால் தெளிவுகள் பல பிறந்தன. தமிழ் இலக்கிய வரலாற்றில் பல ஆராய்ச்சி உரை நூல்கள் மலர்ந்தன.

---

1. *அறுவகை இலக்கணம், 644.* 2. *அறுவகை இலக்கணம், 747.*

சங்க இலக்கிய ஆய்வு, நாடகம், புதினம், மறைபொருளியல், மருத்துவம், சமூகவியல் என இவர்தம் ஆராய்ச்சி உரை நூல்கள் பன்முக நோக்கில் அமைந்துள்ளதைக் காணலாம்.

## சங்க இலக்கிய ஆய்வு

அடிகளின் சங்க இலக்கிய ஆய்வுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவன முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரையும், பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையுமாகும். இவற்றால் இவர் இந்நூல்களை எவ்வாறு அணுகி ஆராய்கின்றார் என்பது தெளிவுறும். மேலும், முற்காலப் புலவர்களின் மாண்புகளை எடுத்துக்கூறிப் பிற்காலத் தமிழ்ப் புலவோரின் நிலைகளையும் ஆராய்ந்துரைப்பதும் நம் சிந்தனைக்குரியனவாம்.

## முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை

கடைச்சங்க காலத்தில் நுண்மாண் நுழைபுலம் வாய்ந்த புலவர்களால் இயற்றப்பட்டவை எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாம். பத்துப்பாட்டினுள் ஒன்றாகிய முல்லைப்பாட்டிற்கு உரை வரைந்து பதிப்பித்த மறைமலையடிகள் அளித்துள்ள ஆராய்ச்சியுரை தமிழிலக்கிய உலகில் மிக ஆழ்ந்த சிந்தனைகளை உள்ளடக்கியதாகும். காட்டாகச் சிலவற்றை இவண் காணலாம்.

## பாட்டின் இயல்பு

பண்டைக் காலத்துத் தமிழ்ப்புலவர் பாட்டு என்பதன் இயல்பை நன்கறிந்து நலமுடைய செய்யுட்கள் பல இயற்றினர். ஆயின், பிற்காலத் தமிழ்ப் புலவரோ பாட்டென்பது இன்னதென்றே அறியாது பாடல் இயற்றினர். இதனை இனிதின் விளக்குகிறார் அடிகள்.

உலக இயற்கையிற் கண் முதலான புலன்களுக்கு விளங்கித் தோன்றும் அழகை யெல்லாந் தன்னகத்தே நெருங்கப் பொதிந்து வைத்துப், பின் அவற்றை நம் அறிவினிடத்தே புலப்படு வண்ணந் தோற்றுவித்துப், பொருள் நிகழ்ச்சியொடு மாறுபடுதல் இல்லா இனிய ஓசையுடன் இசைந்து நடைபெறும் இயல்பினை உடையதுதான் பாட்டு என்று அறிதல் வேண்டும்.

இன்னும் எங்கெங்கு நம் அறிவைத் தம் வயப்படுத்துகின்ற பேரழகும் பேரொளியும் பெருந்தன்மையும் விளங்கித் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும்.

இதனை விளக்கிக் காட்டுமிடத்துப், பேரழகாற் சிறந்த ஓர் அரசி தான் மேற்போர்த்திருந்த நீலப்பட்டு ஆடையினைச் சிறிது சிறிதாக நீக்கிப், பின் அதனைச் சுருட்டிக் கீழே எறிந்து விட்டுத் துயில் ஒழிந்து, ஒளி விளங்கு தன் நளிமுகங் காட்டி எழுந்ததை யொப்ப, இருள்கூட்டஞ் சுருண்டு மடங்கி அலைகடலிற் சென்று அடங்கிவிடுமாறு இளைய ஞாயிறு உருக்கித் திரட்டிய பசும்பொற் திரளைப்போலத் தளதள வெனக் கீழ்த்திசையில் தோன்றவும், அத்திசையின் பரப்பெல்லாம் பொன் உரைத்த கற்போற் பொலிந்து திகழவும், பசுமை பொன்மை நீலம் சிவப்பு வெண்மை முதலான நிறவேறுபாடுள்ள பொன் வெள்ளிகள் உருகி ஓடுகின்ற நிலம் போல வான் இடமெல்லாம் பல வண்ணமாய் விரிந்து விளங்கவும், கரிய முகில்களெல்லாஞ் செவ்வரக்கு வழித்த அகன்ற திரைச்சீலைகள் போலவும் வெளிய முகில்களெல்லாம் பொற்பட்டுத்துகில் போலவும் ஆங்காங்குச் சொல்லுதற்கரிய பேரொளியொடு திகழவும் உலக மங்கை நகைத்தாற் போலப் புதுமையுற்றுத் தோன்றும் விடியற் கால அழகெல்லாம் பாட்டு என்றே அறிதல் வேண்டும்.

காதலினாற் கட்டுண்ட இளைஞரும் மகளிரும் நெகிழாத காதலன்பின் மிகுதியால் தோளொடு தோள் பிணையத் தழுவிக் கொண்டு, மலையடிவாரத்தில் உள்ள பூஞ்சோலைகளிற் களிப்பாய் உலவுந் தோறுந், தூங்கணங் குருவிகள் மரக்கிளைகளில் வியப்பான கூடு கட்டுதலையும்; மரப்பொந்துகளிலிருந்து மணிப்புறாக்கள் கூவுதலையும்; ஆண் மயில்கள் தம் அழகிய தோகையினை விரித்துப் பெடை மயில் கண்டு களிப்ப ஒருபுறம் ஆடுதலையும்; மலையிலிருந்தொழுகும் அருவிநீர் கூழாங் கற்படையின்மேற் சிலுசிலுவென்று ஓடி வந்து அச்சோலையின் ஒரு பக்கத்துள்ள ஆழ்ந்த குட்டத்தில் நிரம்பித் துளும்ப, அதன்கண் உள்ள செந்தாமரை முகிழ்கள் அகன்ற இலைகளின்மேல் இதழ்களை விரித்து மிகச் சிவப்பாய் அலர்தலையும் விரும்பிக் கண்டு, நறுமணங் கமழும் பூக்களை மரங்களினின்றுந் தாவிப் பறித்துக் கரிய கூந்தலில் மாறி மாறி அணிந்துஞ், சிவக்கப் பழுத்த கொவ்வைக் கனி போன்ற தம் இதழ்கள் அழுந்த முத்தம் வைத்துக் கொண்டுந், தேன் ஒழுகினாலென இனிய நேய மொழிகள் பேசிக் கொண்டும் அவர்கள் செல்லுமிடத்து அங்கும் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும்.

சுருங்கச் சொல்லுங்கால் எங்கெல்லாம் நமது உணர்வைக் கவர்கின்ற பேரழகு உலக இயற்கையிற் காணப்படுமோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்பது தெளியப்படும் என்கிறார் அடிகள்.

இன்னும், மக்கள் அறிவு என்கின்ற தித்திப்பான அரிய அமிழ்தம் பலவகையான குற்றங்களொடுங் கலப்புற்றுத் தூயதன்றாய்ப் போக, நல்லிசைப் புலவன் தன் பேரறிவினால் அதனைத் தெளிய வடித்து அதன் இன்சுவையினை மிகுதிப்படுத்தி, நாமெல்லாம் அதனைப் பருகிப் பெரியதோர் ஆறுதலடையக் கொடுப்பன்; அங்ஙனங் கொடுக்கப்படுந் தூய இனிய அறிவின் விளக்கமும் பாட்டு என்றே அறிதல் வேண்டும்.

இக் கருத்துப் பற்றியே மிலிட்டன் என்னும் ஆங்கில மொழி வல்ல நல்லிசைப் புலவரும், "பாட்டென்பது மக்கள் மன அறிவினின்றும் வடித்து இறக்கப்பட்ட தூய அமிழ்தம் (Areopagitica) ஆம்" என்று உரை கூறினார் என அடிகளார் பாட்டு உண்டாகும் வழிகளைக் கூறிப் புலவனையும் ஓவியனையும் ஒப்பிட்டுரைக்கின்றார்.

## புலவனும் ஓவியனும்

ஓவியனாலும் காட்ட முடியாத ஒருபெருவியப்புணர்வினை நம் மனத்தகத்தே விளைவிக்கும் ஆற்றலுடையவன் புலவன் என்பர். இவ்வாறு மக்கள் மனவியல்பின் நுட்பம் உணர்த்து செய்ய வல்லரான நற்பெரும் புலவர் உலகிற் சிலரே யாவர் என்கிறார் அடிகள்.

புலவனுடைய திறமையெல்லாஞ் "சில்வகை யெழுத்திற் பல்வகைப் பொருளைக்" காட்டுகின்ற அரும்பெருஞ் செய்கையினாலே தான் அறியப்படும். இங்ஙனம் பாட்டு வழக்கின் நுட்பமுணர்ந்து பிற மொழிகளிற் புகழ் பெற்று விளங்கிய நல்லிசைப் புலவர்கள் ஓமர் (Homer), தாந்தே (Dante), செகப்பிரியர் (Shakespeare), மிலிட்டனார் (Milton), கீதே (Goethe), காளிதாசர் முதலியோரும், நஞ்செந்தமிழில் திருவள்ளுவர், நக்கீரனார், இளங்கோவடிகள், கூலவாணிகன் சாத்தனார், மாங்குடி மருதனார், கபிலர், சேக்கிழார் முதலானோரும் பண்டைக் காலத்து ஏனை நல்லிசைப் புலவருமே யாவர் என இத்தகைய புலவர் பெருமக்களை ஒப்பிட்டும் காட்டுகின்றார் அடிகள்.

## பழந்தமிழ்ப் பாட்டின் சிறப்பியல்பு

பண்டைக் காலத்துச் செந்தமிழ்ப் புலவரெல்லாரும் உலக இயற்கைத்திறம் பிறழாமல், அதனை நுணுகி ஆராய்ந்து பாட்டுப் பாடும் மனவுறுதி மிகுதியுமுடையராயிருந்தனர். உலக இயற்கையிற் காணப்படும் ஒளி விளக்கத்தையும் எழிலையும் மிக வியந்தனர். தம் மனனுணர்விற்கு இசைந்த வண்ணமெல்லாம் உலக இயற்கையினைத் திரித்துக் கூறாமல், அவ்வுலக இயற்கையின் அழகின் வழியே

தமதறிவினைப் பொருந்த வைத்துத் தம் நினைவினை விரிவு செய்து விளக்கி மகிழ்ந்தனர். இம்முறைமை நற்பெரும் புலவர்க்கு இன்றியமையாச் சிறப்பினதாம் என்னுங் கருத்துப் பற்றியே **இரசிகர்** என்னும் ஆங்கில மொழி உரை வல்ல ஆசிரியர், **காட்டு** என்ற புலவரைப் பற்றிச் சொல்ல வந்தவிடத்து, "அவர் தமதுணர்வின் வழியே உலக இயற்கையினை நிறுத்திக் கொள்ளாமல், அவ்வுலக இயற்கையின் வழியே தமது உணர்வினை நிறுத்திநின்றார்'' (Ruskin:Modern painters. Vol.III. p.284) என்று புகழ்ந்தெடுத்துக் கூறினார். ஆகவே, **உலக இயற்கையின் வழி நின்று பாட்டுப் பாடுதலே அருமையாம்** என்பதும், அதுவே நல்லிசைப் புலவர்க்கு அடையாளம் என்பதும் இதனால் நன்கு பெறப்படும். பழந்தமிழ்ப் புலவர்களெல்லாரும் இந்நுணுக்கம் இனிதறிந்து விளங்கினார்க ளென்பதற்குப் பழைய தமிழ்ப் பாட்டுக்களே சான்றாகும்.[1] என இவ்வாறு பழந்தமிழ்ப் பாட்டின் சிறப்பியல்பை அடிகள் மிக அழகாகத் தெளிவுபடுத்துகின்றார்.

**"முளிதயிர் பிசைந்த காந்தள் மெல்விரல்**
**கழுவுறு கலிங்கங் கழாஅ துடீஇக்**
**குவளை யுண்கண் குய்ப்புகை கமழத்**
**தான்துழந் தட்ட தீம்புளிப் பாகர்**
**இனிதெனக் கணவன் உண்டலின்**
**நுண்ணிதின் மகிழ்ந்தன்று ஒண்ணுதல் முகனே."[2]**

என்னும் பழைய பாட்டை இதற்கு எடுத்துக்காட்டாக அடிகள் காட்டுகின்றார்.

உள்ளமுவக்கும் முல்லை நிலத்திற் கணவனும் மனைவியும் நேயமாய் மருவி வாழும் இயற்கை இப்பாட்டின்கண் ஓவியம் எழுதிக் காட்டினாற்போல் எவ்வளவு உண்மையாகவும் இனிதாகவுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது! இப்பொருளருமையோடு இச்செய்யுளில் உள்ள சொற்கள் எல்லாம் நீர்மடையில் தெளிநீர் மொழுமொழு வென்று ஓடுவது போல் ஓசையின்பம் உடையவாய் ஒழுகுதலும், ஒரு சொல்லாயினும் பொருளின்றி வேண்டா கூறலாகாமல் முன்னும் பின்னுமுள்ள பொருட்தொடர்புக்கு ஏற்ப இடையே முழுமுழுச் சொற்களாய் அமைந்து நிற்றலும் மிகவும் பாராட்டற்பாலனவாகும் என உரைக்கும் அடிகள், அக்காலத்தமிழ்ப் புலவர்கள் தாம் விரித்துச்

---

1. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, ப.35.

2. குறுந்தொகை, 167.

சொல்லும் பொருள்களுக்கேற்ற உவமைகள் அமைக்கும் திறத்தை வியந்து பாராட்டுகின்றார்.

இத்துணை நுட்பமான உலகியற்பொருள் அறிவு பண்டைக்காலத்துத் தமிழ்ப் புலவரிடங் காணப்படுதல் போல, மற்றை மொழிகளில் வல்லராய் விளங்கிய ஏனைப் பழம் புலவரிடத்துங் காணப்படுதல் அரிது என்பது அடிகள் கருத்தாகும்.

## செந்தமிழ் சிறந்திருந்த காலம்

பிறமொழிக் கலப்பின்றி, தனித்திருந்த காலத்தில் தமிழ் இருந்த நிலையை எண்ணிப் பார்க்கின்றார் அடிகள். அந்நிலையில் தோன்றிய செந்தமிழ் நூல்களையும் ஆராய்ந்துரைக்கிறார்.

திருவள்ளுவர் பிறப்பதற்கு முற்சென்ற நூற்றாண்டுகளிலே மிகவும் புகழ்பெற்று விளங்கிய புலவர் காலமும், அவர் பிறந்த பின் நூற்றாண்டிலே அவ்வாறு விளங்கிய புலவர் காலமுஞ் செந்தமிழ் மிக உயர்ந்த காலமாகுமென்று அறிதல் வேண்டும்.

திருவள்ளுவர் பிறப்பதற்கு முன் ஒரு நானூறு ஆண்டும், அவர் பிறந்தபின் ஒரு நூறு ஆண்டும் சேர்ந்து முடிந்த ஓர் ஐந்நூறாண்டுந் தமிழ்மொழி மறுவற்ற மதிபோற் கலைநிரம்பி விளங்கிய காலமாகும். இக்காலத்திலேதான் சிறந்த புலவர் பலர் தோன்றிப் பலவகையான அரிய பெரிய செந்தமிழ் நூல்கள் இயற்றினார். இப்புலவர்களைப் போற்றித் தமிழை வளம்படுத்தற்கு ஆவல் மிக்க அரசர் பலரும் வள்ளல் பலரும் ஆங்காங்கு மிக்கிருந்தனர். தமிழ் அரசர்கள் பலர் கல்வி வளத்தாலுஞ் செல்வ வளத்தாலும் மேம்பட்டும், போர் வல்லமையிலும், பெருமையடைந்து, தமிழ்மொழியினைப் பல விடங்களிலும் பெருகச் செய்வதிற் கருத்தூன்றினராய் இருந்தார்.

இக்காலத்திலேதான் தனக்கு ஒப்பும் உயர்வும் இன்றி விளங்கா நிற்குந் **திருக்குறள்** என்னும் அரும்பெருநூல் எழுதப்பட்டது; **சிலப்பதிகாரம், மணிமேகலை** முதலான சிறந்த தமிழ்க்காப்பியங்களும், **பழமொழி, நான்மணிக்கடிகை** முதலான அறநூல்களுந் தோற்றமுற்று எழுந்தன. இவ்வைந்நூறாண்டுகளுக்கு முன்னும் பின்னுமிருந்த தமிழ்ப்புலவர்களாற் பாடப்பட்டுச் சிதறிக்கிடந்த அருந்தமிழ்ப் பாட்டுக்களெல்லாம் ஒருங்கு தொகுக்கப்பட்டு, **அகநானூறு, புறநானூறு, கலித்தொகை** முதலிய வகை வகைத் தொகை நூல்களாக இக்காலத்திலேதான்

ஒழுங்குபடுத்தப்பட்டன. பண்டைக் காலத்திலே செய்யப்பட்ட **தொல்காப்பியம்** என்னும் அரியபெரிய தமிழிலக்கணத்தில் மிகச் சிறந்த பகுதியான அகப்பொருளின் விரிவையெல்லாஞ் சுருக்கி அதனை வடித்த பிழிவாக இயற்றப்பட்ட **இறையனாரகப்பொருள்** என்னும் மனவியற்கை நூல் பன்னெடுங்காலமாக மறைந்து கிடந்து பின்னர் இக்காலத்திலேதான் வெளிவந்துலாவலாயிற்று.

இன்னும் இக்காலத்திலே இன்றியமையாது அறியற்பாலதாஞ் சிறப்பியல்பு ஒன்றுண்டு. இதற்கு முன்னெல்லாந் தமிழ் பெரும்பாலுஞ் செய்யுள் வழக்கிலேயே பெருகி வந்தது; மற்று இக்காலத்திலோ அதனோடு உரை வழக்கும் விரவிப் பரவத் தொடங்கிற்று; சொல் விழுப்பமும் பொருள் விழுப்பமும் பொதிந்த மிக இனியதோர் உரை மிக நுணுக்கமான அறிவினையுடைய நக்கீரர் என்னும் நல்லிசைப் புலவரால் இறையனாரகப் பொருள் என்னும் நூலுக்கு வரைந்து தரப்பட்டது. இவ்வுரை சூத்திரப்பொருளை இனிது விளக்கும் பொருட்டே எழுதப்பட்டதாயினும், மற்றை உரைகள் போற் சுருங்காது மிக விரிந்து இன்றியமையாது உணரற்பாலனவாம் அரும்பெருந்தமிழ் நுட்பங்களெல்லாம் ஒருங்குநிரம்பிப் பொலிகின்றது.

ஆகவே, இக்காலத்தில் மிகச்சிறந்த உரையாசிரியராய்த் தோன்றித், தமிழ்மொழியிற் பல வகையான நல்ல சீர்திருத்தங்களெல்லாஞ் செய்து, தமிழ்ப்பயிற்சியைப் பெருகச் செய்து வந்த நற்பெரும்புலவர் ஆசிரியர் நக்கீரனார் தாமென்று அறியற்பாற்று.

இதற்குப் பிற்காலத்தே வடமொழிக் கலப்பாற் புதிது தோன்றிய விருத்தப்பா என்பது, இவ்வைந்நூறாண்டுகளும் விரிந்து பெருகி வழங்கிய தமிழ் நூல்களில் எட்டுணையுங் காணப்படாமை பெரிதும் நினைவு கூரற்பாற்று,[1] என்று செந்தமிழ் சிறந்திருந்த காலத்தில் தோன்றிய நூல்களைப் பற்றிய வரலாற்றை வரைந்தளிக்கின்றார் அடிகள்.

பொதுநிலையில், பாட்டுக்குப் பொருள் உரைக்கும் முன்னர், அப்பாட்டின் இயல்பு, அதுதோன்றிய சூழல், தோன்றிய காலம், அப்பாட்டின் முன்னும் பின்னுமிருந்த பிறநூல்கள் போன்றவற்றையெல்லாம் எடுத்துரைப்பது இலக்கியக்கல்வியில் மிக

---

1. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, பக்.39-41.

இன்றியமையாததாகும் என்பதைக் கருதியே அடிகள் இத்தகைய விளக்கங்களை இவ் ஆராய்ச்சியுரையில் எழுதியமைத்துள்ளார் என்பது தெளிவு.

அடுத்து, முல்லைப்பாட்டின் இயற்கையும் அதன்பாட்டியற் திறனும் கூறி, முல்லைப்பாட்டில் நீளச்சென்று பொருந்தும் சொற்றொடர் முடிபு: மாட்டு என்பதை விளக்கி, முல்லைப் பாட்டின்மேல் நச்சினார்க்கினியருரையின் பொருத்தத்தை விளக்குகிறார். தொடர்ந்து, பாட்டின் வரலாறுடன் முல்லைப்பாட்டு மூலமும் பொருட் பாகுபாடும் கூறி, பாட்டின் பொருள் நயம் வியத்தல், பாவும் பாட்டின் நடையும், விளக்க உரைக்குறிப்புகள் வினைமுடிவும் கூறி இறுதியில் அருஞ்சொற் பொருள் அகரவரிசையும் அமைக்கின்றார் அடிகள். ஆங்கிலம் போன்ற பிறமொழி ஆய்வுரை நூல்களைப் பயின்றதன் பயனாகவே இந்நூலினை இவ்வாறு இவர் அமைத்துள்ளார் எனலாம்.

## பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை

பத்துப்பாட்டுக்கு உரை எழுதிய நச்சினார்க்கினியர் செய்யுளில் சொல் கிடந்த வாறே பொருள் கூறாது தாம் எண்ணும் பொருளுக்கேற்பச் சொற்களை வலிந்தும் திருத்தியும் உரை எழுதியுள்ளது அப்பாட்டின் கருத்தை முழுவதும் வெளிப்படுத்தாமையின் மறைமலையடிகள் பட்டினப்பாலைப் பாட்டில் காணப்படும் அரும்பெரும் பொருள்களையும் சிறப்புறு வகையில் விளக்கித் தனித்தமிழில் உரையெழுதியுள்ளனர்.

முதலில் உரைப்பாயிரம் கூறிய பின்னர் பாட்டின் இயல்பு கூறுகிறார். அடுத்து, பட்டினப்பாலை செய்யுள், பொருட்பாகுபாடு, பாலை, வாகை, பாட்டின் வரலாறு, ஆக்கியோன் வரலாறு, பாட்டுடைத் தலைவன், பாட்டின் நலம் வியத்தல், இப்பாட்டின்கட் தோன்றிய பழைய நாள் வழக்க வொழுக்க வரலாற்றுக் குறிப்புக்கள், பாவும் பாட்டின் நடையும், விளக்க உரைக் குறிப்புக்கள் எனப் பன்னிரண்டு தலைப்புகளில் தம் ஆராய்ச்சியுரையை அமைத்துள்ளார்.

## உரைப்பாயிரம்

'கொழுஞ்சுவை கெழுமிய செழுந்தமிழ் வழக்கில் உரையும் பாட்டுமென இருதிற னுளவே' எனத்தொடங்கி முப்பத்து மூன்று அடிகளில் தம் உரைப்பாயிரத்தை அமைக்கின்றார் அடிகள். இதில், பழந்தமிழ்நூல் வளமும், அவற்றுள் இந்நூல் வளமும், ஆசிரியர்

மாண்பும், இதற்கு உரை எழுத முற்பட்டதன் உள்ளுணர்வுப் பெருக்கம் பற்றியும் மிக அழகாக விவரிக்கின்றார்.

"... ... ... ...
இத்தகு சிறப்பின் நற்றமிழ்ப் பாக்கள்
பின்றைநாட் காண்டல் பெரிதரி தாயினும்
பண்டைக் காலத்துப் பழுத்தறிவு மாண்ட
நல்லிசைப் புலவோர் நயமுறக் கிளந்த
முதிர்கட லெக்கர் மணலினும் பலவே; அவற்றுள்,
ஓம்பா தொழிந்தன போக நாம்பெற
இற்றைநாட் போந்த முற்றுதமிழ்ப் பாவுள்
முருகுமுத னிறுத்த அரியன பத்தும்
வரம்பிட லாகாப் பெருஞ்சிறப் பினவே; அவற்றுட்
பட்டினப் பாலையின் முட்டறு மாட்சி
உரைவிளங்க விரித்தற் கறிவிலே னாயினு
முருத்திரங் கண்ணனெனுங் காட்சிசால் புலவன்
திருத்தகு சீரடி உள்ளக மலர்தலின்
அதன்வயிற் றுளும்பிய அறிவுநறை பிலிற்றி
விளங்கிய வுணர்வான் ஒருப்பட்டு
வளங்கெழு மற்றதன் மாட்சி தெரிக்குவெனே."

என்னும் உரைப்பாயிர அடிகளில் அவர்தம் உணர்வு நன்கு புலனாகும்.

காட்சிசால் புலவன் பாடிய உணர்ச்சிமிக்க பாடலில் தோய்ந்து ஒருப்பட்டு நிற்கும்போது தோன்றுவதே அதன் விளக்கங்கள் ஆகும். உரைகள் எவ்வளவு தோன்றினாலும் அவை மூலப்பாடலடிகளுக்கு இணையானவைகளாகா என்பது அடிகளாரின் ஆழ்ந்த கருத்தாகும்.

## பாட்டின் இயல்பு

அருவாய் அறிவாய் இன்பமாய் யாண்டும் பரந்து நிற்கும் முழுமுதற் பெரும்பொருளைக் கறை கெழுமிய அறிவும் முறை தழுவாச் செயலுமுடைய உயிர்கள் அறிந்தடைதற்கு இருதிறப்பட்ட நிலைகள் இருக்கின்றன. அவை, அறிவுநிலை, உணர்வுநிலை என்பனவாம்.

முழுமுதற் கடவுள் உண்டென்பதனை விளங்க அறிவித்தற்குரிய அறிவு நிலையும், பின் அதனோடு வேறறக் கலந்து நின்று இன்புறுதற்குரிய உணர்வு நிலையும் என்னும் இருதிற

நிலையினையும் உயிர்களுக்கு முறுகுவித்துப் பின் அவ் அறிவுநிலை யினையுங் கழலச் செய்து தூய அன்புருவாய் விளங்கும் உணர்வு நிலையை நிலைபேறாக் குவித்து உயிர்களுக்கு அளந்தறியப்படாத பெரும் பயனைத் தருதற்கு இன்றியமையாக் கருவியாவதுதான் பாட்டு என்பது என்று பாட்டின் இயல்பை இங்கே விளக்குகிறார் அடிகள்.

## உரையும் செய்யுளும்

உரையும் செய்யுளும் என்னும் இரண்டனுள் உரையும் அவ்விருதிற நிலையும் முறுகுவித்துப் பயன்தருமாகலின் செய்யுள் மாத்திரமே அதனைப் பயக்கும் என்று உரை கூறியதென்னை எனின் அதற்கும் அடிகள் விளக்கம் கூறுகின்றார்.

பால் கறந்த மாத்திரையே உண்பார்க்குச் சுவை பயக்குமாயினும், அதனை வற்றக் காய்ச்சிக் கட்டியாகத் திரட்டிப் பின் உண்பார்க்குக் கழிபெருஞ்சுவை தருதல் போலவும், முற்றின கருப்பங் கழியை நறுக்கிப் பிழிந்த மாத்திரையே அதன் சாற்றைப் பருகுவார்க்கு அஃதினிமை விளைக்குமாயினும் மேலும் அதனைப் பாகுதிரளக் காய்ச்சிச் சருக்கரைக் கட்டியாக எடுத்துண்பார்க்கு ஆற்றவும் பேரினிமை பயத்தல் போலவும், உரையும் நலம் பயப்பதொன்றேயாயினும் அதனைக் காட்டினுஞ் செய்யுளாற் பெறப்படும் பயன் சாலவும் பெரிதாம்.

கறந்தபால் நீராளமாய் நெகிழ்ந்திருத்தலின் அதன்கண்ணுள்ள சுவை மிகுந்து தோன்றாது குறைந்தே காணப்படுகின்றது. அதுபோல, உரையும் ஒரு பரம்பின்கட் படாது சொற்பெருக்கமுற்று நடைபெறுதலால் அதன்கட் புதைந்த பொருளும் ஆழமாகவின்றி அச்சொற்களோடு ஒத்து ஒழுகி மெல்லிதாய் விடுகின்றது. மற்றுக் காய்ச்சித் திரட்டிய பாற்கட்டியுஞ் சருக்கரைக் கட்டியும் இறுகித் திண்ணென்ற உருவுடையவா யிருத்தலின் அவற்றின்கட் சுவை மிக முதிர்ந்து தோன்றா நிற்கின்றது. அது போலச் செய்யுளும் எழுத்து அசை சீர் தளை அடி தொடைகளானமைந்த பாவாய் ஒரு வரம்புட்பட்டுச் சொற் சுருக்கம் உடைத்தாய் நடத்தலின் அதன்கட் புதைந்த பொருளும் அவற்றோடு ஒப்ப ஒழுகித் திட்பமும் ஆழமும் உடையதாகின்றது.

பாட்டெல்லாம் அறிவு நிலையைப் பற்றிக் கொண்டுபோய் உயிர்களின் உணர்வு நிலையை எழுப்பி விடுவதாகும். உரையெல்லாம் அறிவு நிலையைப் பற்றியே நிகழுமல்லது அதன் மேற் சென்று உணர்வு நிலையைத் தொடமாட்டாதாகும்.

பெரியதொரு மலைமுழைஞ்சினுட் பொன்னும் மணியுஞ் சிதறிக் கிடத்தல் ஒரு வியப்பன்று; ஒரு சிறு கற்பிளவிலே அரிய பெரிய முழுமணிகள் அடுக்கடுக்காய்க் கிடந்து எடுக்குந்தோறும் குறைபடாதிருத்தலே பெரிதும் வியக்கற்பாலதாகும்.

சிறிய வான்மீன்கள் அகன்ற அவ்வானத்திற் காணப்படுதல் ஒரு வியப்பன்று; அவ்வகன்ற வானும் வேறு மாட மாளிகை கூட கோபுரங்களும் ஒரு சிறிய கண்ணாடியினுட் காணப்படுதலே மிகவும் வியக்கற்பாலதாம்.

இதுபோலப் பெரிய ஓர் உரையிலே சிலபொருளேனும் பல பொருளேனுங் காணப்படுதல் வியப்பினை விளைவியாது. மற்றுச் **சிறியதொரு பாட்டிலே பல திறப்பட்ட ஆழ்ந்த பொருளெல்லாம் காணப்படுதலே வியக்கற்பாலதாகும்.**

உரையில் ஒரு வரையறை யின்மையினாலே பொருட்கு வேண்டுவனவும் வேண்டாதனவுமான பல சொற்கள் நிரம்பி நின்று வியப்பினைத் தாராவாய்த் தாமெடுத்த பொருளை மாத்திரம் எம்மறிவுக்குப் புலங்கொள விளக்கியொழிகின்றன. மற்றுச் செய்யுளிலோ பொருட்சாரமான சொற்கள் மாத்திரம் ஆய்ந்தமைக்கப் படுகின்றனவாகலின், அச் சொற்கள் கொண்ட பொருட் கருவை அறியப் புகுவானொருவன், தன் அறிவால் அதனைக் கூர்ந்தறிய வேண்டுதலின் தன்னறிவு மிக நுணுகப் பெறுதலோடு அச்சிறிய சொல்லிற் பெரிய பொருளடங்கி நிற்றலை அறிந்த மாத்திரையினானே தன்னை யறியாதொரு வியப்பு உடனெய்தி, அதன்கண் ஓர் இன்பந் தோன்ற அதன் வயப்பட்டுச் சிறக்கின்றான்.

ஆகவே, பாட்டு ஒன்றுமே உயிர்கட்கு அறிவை விளக்கி அதற்கும் மேற்பட்ட உணர்வை எழச்செய்து இன்பம் பயப்பதொன்றாய் நிலைபெறுகின்றது. உரைப்பயிற்சியில் அறிவு மாத்திரம் விளக்கம் எய்துமேயல்லது உணர்வின் வழித்தான இன்பந் தோன்றுதல் இல்லை என்க என இவ்வாறு செய்யுளின் மாண்பினை மிகத் தெளிவாக விளக்குகிறார் அடிகளார்.[1]

பழந்தமிழ் மூலநூற் பயிற்சியைத் தம் இளமைக் காலத்திலேயே அடிகளார் பெற்றதால், செய்யுளின் தனித்தன்மை பற்றி அவரால் இவ்வளவு தெளிவாகக் கூற முடிந்தது என்பதே உண்மை.

---

1. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, பக்.3-8.

## செய்யுளில் இசை இயைபு

செய்யுள்கள் இயற்கையிலேயே இசைதழுவி நடப்பன. உரையெல்லாம் இயற்கையிலேயே இசை தழுவாது நடப்பன. எனவே, உரைகள் உணர்வை எழுப்புவனவல்ல என்பது தெளிவு. மேலும், செய்யுள் என்பது சொற்சுருக்க பொருட்பெருக்க முற்று இசை தழீஇ நடந்து உயிர்களறிவை விளக்கிப் பின் அதன் மேற்பட்ட உணர்வை எழச்செயும் பான்மையுடைத்து என்பது அடிகளாரின் ஆழமான கருத்தாகும்.

மேலும், உருத்திரங்கண்ணனார் போன்ற பழந்தமிழ்ப் புலவர்கள் மிகச் சுருங்கக்கூறி விரிவாகக் காட்சிபடுத்தும் நுட்பங்களை விரிவாக விளக்குகின்றார் அடிகள்.

## பாட்டின் நலம் வியத்தல்

பட்டினப்பாலை ஆசிரியர் தம் நூலில் இருபது உவமைகள் காட்டியுள்ளமையை விவரிக்கிறார் மறைமலையடிகள். இங்கு, பழந்தமிழ் இலக்கண வழக்கில் உவமை அணி ஒன்றே என்றும் பிற்காலத்தில் அணிகள் பல எனப் பகுத்தது தேவையற்றது என்றும் கூறுகின்றார்.

“பாட்டின்கட் சொல்லப்படும் பொருளுக்கு இசைந்த வேறொரு தோற்றத்தினை எழுப்புதல் செய்யுளியற்றும் நல்லிசைப் புலவர்க்கு மட்டும் வாய்ந்ததொரு திறமாம். இங்ஙனம் அவர் செய்யும் செய்கைத் திறத்தினையே இலக்கண நூலார், உவமை, உருவகம் என வேறு பெயரிட்டு வழங்குவர். பொருள்களைக் கிடந்தவாறே சொல்லிக் கொண்டுபோம் நெறி **தன்மைநவிற்சி** எனவும் அங்ஙனஞ் சொல்லிப்போதற்கு இடையிடையே உணர்வு சலியாமைப் பொருட்டுச் சுவை வேறுபடுத்தி அப்பொருளோடு இயைந்த பிற பொருட் தோற்றத்தை எழுப்புநெறி உவமை உருவகம் எனவும் பெயர் பெறா நிற்கும்.

இன்னும் இவ்வுவமை உருவகம் முதலியவற்றின் வேறாகப் பிறர் ஆயிரம் புனைந்துரைகள் கூறினாராயினும் அவையெல்லாம் இவ்வுவமை உருவகம் என்னும் இரண்டிலேயடங்கும். தம்மாற் கூறப்படும் பொருள்களின் வழியே அறிவு செல்லுங்காற், புலவர்க்கு இயற்கையாய்த் தோன்றும் ஒப்புமைகள் உவமை உருவகம் என்னும் இவ்விரண்டே யாகலின், இவ்வியற்கை நெறி திறம்பி மிகவும் இடர்ப்பட்டுப் பலப்பலவான புனைந்துரைகளெல்லாம் அமைத்துப் பொருளுண்மை திரித்துக் கற்பார் தம் மன உணர்வைச் சிதைக்கும்

பிறரெல்லாம் புலவரெனப்படுதற்குச் சிறிதும் உரியர் ஆகார் என்பதூஉம், அவரான் அமைக்கப்படும் அவ்வணிகளெல்லாம் வெற்றாரவார வெறும் போலிகளேயா மென்பதூஉம் உண்மை யறிவுடையார்க்கெல்லாம் இனிது விளங்கற்பாலனவேயாம். இவ்வுண்மை கடைப்பிடித்தன்றே ஒப்புயர் வில்லாச் செந்நாவன்மைச் செவ்வறிவுத் தெய்வப் பெற்றியாளரான **ஆசிரியர் தொல்காப்பியனார்** பொருளதிகாரத்துள் **உவமவியல்** என ஒன்றே வகுத்து உவமம் ஒன்றையே அணிந்துரையாக வைத்து விளக்கினார். இத் தெய்வ ஆசிரியரொடு திறம்பிப் பிறர் தமக்கு வேண்டியவாறெல்லாம் அணிகளைப் பெருக்கி எழுதினாராயினும் அவையெல்லாந் தொல்காப்பியத்தின் முன் தலை தூக்கமாட்டாவா யொழிதல் காண்க" என்பர் அடிகள்.[1]

இங்ஙனம் உலகவியற்கைப் பொருள்களுள்ளும் அழகான மிகச் சிறந்தவற்றையே தெரிந்தெடுத்து அவை தம்மைத் தமது நுண்ணறிவால் பொருந்தக் குழைத்துத் தம் அருமைத் திருமொழிகளால் நம் நெஞ்சப்படாத்தில் அமைதிபெற வரைந்து பட்டினப்பாலை இயற்றிய ஆசிரியர் உருத்திரங்கண்ணனாரது நல்லிசைப் புலமை செந்தமிழ்ப் புகழ்மைக்கு ஒரு நந்தா மணிவிளக்காம் என்பர்.[2]

### பாவும் பாட்டின் நடையும்

பட்டினப்பாலை என்னுமிப்பாட்டு அகவலோசை தழுவி வந்த ஆசிரியப்பாவினால் அமைக்கப்பட்டிருப்பதையும், போற்றத் தக்க நடையழகையும் விரிவாக விளக்குகின்றார்.

இனிய தெளிதமிழ்ச்சுவை யூறிய முழுமுழுச் சொற்களால் இப்பாட்டு முற்றும் அமைந்திருக்கின்றது. மாம்பழச்சாறு பெய்த குடுவையின் எப்பக்கத்தே பொத்திட்டு நாவை நீட்டினும் அதன் வழியே யொழுகும் அச்சாறு தித்தித்தல் போல, இவ்வரிய செய்யுளின் எவ்விடத்தே அறிவு தோயினும் ஆண்டு இனிமையே விளையா நிற்கின்றது.

இதன் கண்ணுள்ள ஒவ்வொரு சொல்லும் பொருட்கரு நிரம்பிக் கொழுந்தீயிற் தெறித்த பொறிபோல் நம்மறிவைக் கொளுத்திப் பலபொருட் தோற்றங் காட்டி விளங்குகின்றன.

---

1. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, பக்.54-56.

2. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, ப.61.

பயன்படாது நிற்குஞ் சொல் ஒன்றாயினும் இதன்கட் காணப்படுவ தில்லை. விலைவரம்பறியாப் பட்டாடையின்கண் ஒவ்வோர் இழையும் பிணைந்து நின்று அவ்வாடையினை ஆக்குதல் போல, இதன்கண் ஒவ்வொரு சொல்லும் ஒன்றை யொன்று கௌவிக் கொண்டு இச்செய்யுளை ஆக்குகின்றது. பெயர் வினைச்சொற்களை அடுத்து நிற்கும் அடைமொழித் தொடர்களெல்லாம் உடம்பொடுகூடிய உறுப்புப்போல் இசைவு பெற்றிருக்கின்றன. இன்னும் இப்பாட்டின் சொன்னயம் பொருணயங்கள் விரிப்பிற் பெருகும்[1] என இவ்வாறு ஆராய்ந்துரைக்கும் அடிகளின் சொல்லும் நடையுமே கற்போருக்கு இன்பம் பயப்பனவாம்.

பழைய அருந்தமிழ்ச் செய்யுட்களை ஆராய்ந்து உணர்தற்குரிய முறைகள் இவையென்று காட்டியதில் மறைமலையடிகள் முதலிடம் பெறுகின்றார். அவருக்கு முன் இதுபோன்று எவரும் நூல் உருவாக்கவில்லை என்பதும் கருதத்தக்கதாம்.

## இனி வரவேண்டிய ஆராய்ச்சியுரைகள்

“இன்னும் யாம் எழுதி வைத்திருக்குங் குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி உரையும், மலைபடுகடாம் ஆராய்ச்சியுரையும், இனியெழுத நினைந்திருக்கும் ஆராய்ச்சியுரைகளும் விரைவில் வெளிவருதற்குத் திருவருள் உதவிபுரியுமென்று எதிர்பார்த்திருக்கின்றேம்” என அடிகளார் தம் பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை இரண்டாம் பதிப்பின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார். ஆயின், இவை எவையும் இதுவரையில் வெளியிடப்பட்டதாக அறியக் கூடவில்லை.

## முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர்

1933 ஆம் ஆண்டில் திருநெல்வேலியில் நடைபெற்ற சென்னை மாகாணத் தமிழர் மாநாட்டுப் புலவர் பேரவையில் அடிகளாற்றிய தலைமை உரையே 1936இல் முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர் என்னும் பெயரில் நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

முற்காலத் தமிழ்ப் புலவர்கள் செந்தமிழால் நூல் இயற்றியமையையும், பிற்காலப் புலவர்கள் அந்நெறியை விட்டுப் பிற சொற்கள் விரவிவர நூல்கள் எழுதிவைத்தமையையும் இந்நூலில் அடிகளார் மிக விரிவாக விளக்குகின்றார்.

முற்காலத்து விளங்கிய செந்தமிழ் நல்லிசைப் புலவர்கள் தமதருமைச் செந்தமிழ் மொழியைத் தம் இன்னுயிரினும் விழுமியதாக

---

1. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, பக்.76-77.

ஓம்பிய, பொய் சிறிதுங் கலவா அறவுரையே பகருந் தமது நாவால் மெய்ப்பொருள்களையே நிரப்பிய பாக்களும் நூல்களும் அதன்கண் இயற்றி, அதனை மேன்மேல் உரம்பெற வளர்த்து வந்தனர். அதனால் அஃது அஞ்ஞான்று மலைமேல் ஏற்றிய நந்தாமணி விளக்குப்போல், தனது பொங்கு பேரொளியை எங்கணும் வீசி, இவ்வுலகின் கண்ணிருந்த மாந்தரெல்லாருடைய அறிவுக்கண்ணையும் விளங்க விளக்கிற்று. மற்றுப் பிற்காலத்தே, அஃதாவது சென்ற அறுநூறு ஆண்டுகளாகத் தோன்றிய தமிழ்ப் புலவர்களோ பெரும்பாலும் தம் முன்னோர் சென்ற நெறியே தேர்ந்து செல்லாதவர்களாய், அவர் சென்ற மெய்ந்நெறி பிழைத்துப் பொய்நெறி ஏகித் தமதருமைச் செந்தமிழ் மொழியின் தூய்மையை ஓம்பாது, அதனைப் பிறமொழிச் சொற்களோடு கலந்து மாசுபடுத்தியதல்லாமலும், அதன்கண் மெய்யல்லாதனவும் முழுப்பொய்யும் மிடைந்த பாவும் நூலும் இயற்றி அதன் மெய் வழக்கினையும் பாழ்படுத்தி விட்டனர். அவ்விருதிறமும் பிரிந்து நனிவிளங்க விளக்கிக் காட்டினாலன்றி, இனித் தமிழ் கற்பார் தமிழ் மொழியினையும் அதனை வழங்கும் மக்களையும் பேணி வளம்படுத்தாரெனக் கருதியே இந்நூலை இயற்றலானேம். இதனைப் பயில்வார் பண்டைத்தமிழ் நல்லிசைப் புலவரின் அளக்கொணா மாட்சியும் மெய் வழக்கும் நன்கறிந்து, அவர் ஒழுகிய மெய்யொழுக்கத்தையே கடைபிடித்துத் தாம் மிக்குயர்வதொடு தமிழையுந் தமிழ் மக்களையும் மிக்குயரச் செய்வார்களாக! என இந்நூலின் சிறப்பையும் தேவையையும் முன்னுரையிலேயே விளக்குகின்றார் அடிகளார்.

## அமைப்பு முறை

இந்நூலுள், மக்கள் முக்காலவுணர்வு, தமிழ்மக்களின் பண்டை நாகரிகம், பணிகர் ஆரியர் அல்லர், தமிழரே, புலவர்களே நாகரிகத்திற்குத் தாயகம், பண்டைப்புலவர் தமிழ் ஓம்பினமை, பண்டைப் புலவர் முப்பால் ஒழுக்கம் ஓம்பினமை, பொருளறவொழுக்கம், அரசர்க்குரிய கடமை, குடிமக்கட்குரிய கடமை, புலவர்தம் இனிய இல்லற வாழ்க்கை, புலவர்தம் பரந்த தூய துறவுள்ளம், பின்றைத் தமிழ்ப் புலவர், தமிழாசிரியர் ஆரியத்தில் ஆக்கியவை, பிற்காலத் தமிழ்ப் புலவர் ஆகிய பதினான்கு தலைப்புகளில் அடிகள் தம் ஆய்வுரையை நிரல் படுத்தியமைத்துள்ளார்.

## ஒப்பீடு

முற்காலத்திருந்த தமிழ்ப்புலவர் நிலையினையும் பிற்காலத்துள்ள தமிழ்ப்புலவர் நிலையினையும் ஒப்பிட்டுப்

பார்த்தாலன்றி, இனிவருந் தமிழ்ப்புலவர் தமது நிலையினை மேன்மேல் உயரச் செய்தலும், இத்தமிழ்நாட்டின் கண் உள்ள கல்வியறிவில்லாத் தமிழ் மக்களைக் கல்வியறிவில் உயர்த்துதலும் ஏலா. ஆதலால், முன்பின் என்னுங் கால வேறுபாட்டால் நிலையும் வேறுபட்டுள்ள இருவேறு தமிழ்ப் புலவரின் தன்மைகளை ஆராய்ந்து பார்த்தல் புலவர்க்கே யன்றித் தமிழ் மொழிப் பயிற்சியினை வேண்டுவார் அனைவர்க்கும் இன்றியமையாததாய் இருக்கின்றது என்பதை முதலில் வலியுறுத்துகின்றார் அடிகள்.

## தமிழரும் ஆங்கிலரும்

பகுத்தறிவுத் திறன் பெற்ற மக்கள் விலங்குகளினின்றும் வேறுபட்டு வாழ்க்கை நடத்தினாலும் அவருள்ளும் முக்கால உணர்வு பெற்றவர்களே சிறந்த நாகரிக வாழ்க்கை வாய்ந்தவராவர். இவ்வகையில், தம்முன்னோரின் நிலைகளையுணர்ந்து, அவ்வுணர்ச்சி வலியால் தமது நிகழ்கால வாழ்க்கையைச் சீர்திருத்தி, வருங்காலத்தில் தமது வாழ்க்கையை மேன்மேற் சுடர்ந்தொளிரச் செய்ய வல்ல தகுதிவாய்ந்தவர் தமிழரும் ஆங்கிலருமாகவே யிருத்தல் பெரிதுங் கருத்திற் பதிக்கற்பாலதாகும் என்கின்றார்.

ஆயின், நந்தமிழ் மக்களிலோ ஆங்கிலர் போல் மேன்மேல் உயருந் தகுதி வாய்க்கப் பெற்றிருந்தும் அதனாற் பயன் பெறாதாரே மிகப் பலர் என்றும், பயன்பெறுகுநர் மிகச் சிலரே என்றும் குறிப்பிடுகின்றார்.

## மேனாட்டாசிரியர்

பண்டைத் தமிழ் முன்னோர்கள் மற்ற எல்லா நாகரிக மக்களை விட அறிவு முயற்சியிலுந் தொழின் முயற்சியிலுந் தலை சிறந்து விளங்கின பான்மை பழந்தமிழ் நூல்களால் நன்கு வெளிப்படுகின்றது. மேலும், திராவிட நாகரிகமே ஆரிய நாகரிகத்தினுஞ் சிறந்ததும் முற்பட்டதும் ஆகும் என நடுநின்று முடித்துக் கூறிய கால்ட்வெல் (Caldwell), மாக்ஸ் மூலர் (Max Muller), ராப்சன் (Rapson), ஸ்லேட்டர் (Slater) ஆகிய மேனாட்டாசிரியர் நால்வரின் முடிபுகளும் அனைவரின் சிந்தனைக்குரியன என்கின்றார் அடிகள்.

தமிழ் மொழியைப் பற்றி அறியாத வங்காள அறிஞர் அபிநாஸ் சந்திரதாஸ் திராவிட நாகரிகம் ஆரிய நாகரிகத்தினின்றே பிறந்ததெனா நடுவின்றியுங் கூறிய மொழிகள் ஒவ்வாதவை எனத் தக்க சான்றுகளுடன் அவற்றை மறுத்துரைக்கின்றார்.

## புலவர் பெருமை

ஒரு குறிப்பிட்ட நாகரிகம் மேம்படவும் அதுவே நின்று நிலைபெறவும் காரணமாயிருப்பவர்கள் அந்நாகரிக நாட்டிலுள்ள புலவர்களே என்பது அடிகளின் நம்பிக்கை. புலவர் என்பார் இங்கு அறிவின் மிக்காரே யாவர். அப்புலவர்தம் பெருமையை அவரே பின்வருமாறு உரைப்பர்.

## அறிவும் முயற்சியுமுடைய புலவோர்

"இனி, அறிவும் முயற்சியுமுடையார் தம்மில் ஒருங்கு கூடித் தாம் அறிந்தவைகளையுந் தாஞ் செய்பவைகளையும் தம்முள் ஒருவர்க்கொருவர் தெரிவித்து மேலும் மேலும் அறிவிலும் முயற்சியிலும் தாம் மேம்படுதற்கும், தம்போல் அறிவும் முயற்சியும் வாயாத ஏனைப் பொதுமக்கட்குத் தம் அறிவையும் முயற்சியையும் புலப்படுத்தி அவரை அவ்விரண்டிலும் மேம்படுத்துதற்கும் இன்றியமையாக் காரணமாயிருப்பது அவரெல்லாரும் வணங்குந் தமிழ் முதலான மொழிகளேயா மென்றும்; அம்மொழிகள் நாளுக்கொரு வகையாய் மாறி வழங்கி, இலக்கண இலக்கிய நூல்களின்றி இலக்கண இலக்கிய வரம்பின்றிச் சிதைந்து கொண்டே போகுமானால் முன்னோர் கருத்தைப் பின்னோரும் பின்னோர் கருத்தை இனி வருவோரும் ஒரு மக்கட் குழுவினர் கருத்தைப் பிறிதொரு மக்கட் குழுவினரும் உணர்தற்கு வாயில் இன்றி, ஒரு காலத்தில் நிலை பெற்ற ஒரு மொழி வழக்கின் பயனாய்ச் சிறிதுண்டான சிறு நாகரிகமும் அம்மொழியின் திரிபாலுஞ் சிதைவாலுந் தானுந் திரிந்து சிதையுமாகலின் நாகரிக வளர்ச்சிக்கும் நிலைபேற்றிற்கும் அடிக்காரணமாவது தமிழ் முதலான மொழிகள் தம்முள் திரிபெய்தாமலும் அயல்மொழிக் கலப்பால் தம்முடைய சொற்கள் இறந்து படாமலும் வழங்கப் பெறுதலேயாமென்றும்; இங்ஙனம் நாகரிக அடிக்காரணமான ஒரு மொழியின் நிலைபேறு அதனை நன்காய்ந்து பயின்று அதனை மேலும் வளப்படுத்தித் தம் கூட்டத்தார்க்குப் பயன்படுத்தும் புலவோரையே வேர்க்காரணமாய்க் கொண்டிருக்குமென்றும் நன்கு கருத்திற் பதித்தல் வேண்டும்.

## அவர்தம் நூல்கள்

இங்ஙனம் அறிவும் முயற்சியும் வாய்ந்த சிலரால், அவர் பிறந்த மக்கட் பகுதி உழவிலும் வாணிகத்திலுஞ் சிறந்தோங்க, அதற்கு முதற்பெருங் காரணமாய் நின்ற ஒரு மொழியானது அவர்தம்மால் நிலைபேறுற்று **நூல்வடிவில்** வழங்கப்படலான காலந்தொட்டே

அம்மக்களுட் சிறந்த புலவரைப் பற்றியும் அவரியற்றிய நூல்களைப் பற்றியும் பிற்பிற் காலங்களில் வந்தார் அறிய வேண்டுவனவெல்லாம் அறிந்து தாமும் அவர்போல் அறிவிலும் முயற்சியிலும் மேம்படுவாராயினர்" என்பர்.[1]

## தமிழருக்கு இணை தமிழரே

இங்ஙனமாக ஒரு மக்கட் குழுவின் விழுமிய நாகரிக வாழ்க்கைக்கு வேறாய் நிற்கும் நல்லிசைப் புலவர், மேனாடு கீழ் நாடுகளில் நாகரிகமெய்திய எல்லா மக்கட் பரப்பின் இடையேயுங் கிடந்து, நாகரிகத்தை வளம் பெற வளர்த்து, அவர்க்கு அறிவும் இன்பமுமாகிய பயன்களைத் தந்தது உண்மையே என்றாலும் எல்லா நாகரிக மாந்தர் அனைவர்க்கும் முன்னவர்களான தமிழ் மாந்தர்க்கு ஒப்பாக எவரையும் கூற இயலாது என்கிறார் அடிகள்.

பல்லாண்டுகளுக்கு முன்னமே நாகரிகத்தில் மிக்கோங்கிய எகுபதியர், சாலடியர், பாபிலோனியர், மெக்சிகர், ஆரியர், கிரேக்கர், உரோமர் ஆகியோரின் இருப்பிடங்கள் மறைந்தது பற்றியும், இவர்கள் வழங்கிய மொழிகளெல்லாம் நூல் வழக்கின்றி உலக வழக்கில்லாது இறந்தொழிந்தது பற்றியும் எடுத்துக் கூறும் அடிகளார், பன்னெடுங்காலமாக நாகரிகத்தில் சிறந்து விளங்கும் தமிழர்தம் பண்பாட்டுச் சின்னங்களும் தமிழ்மொழியும் பழுதுறாமல் நிலைத்திருக்கும் காரணத்தையும் ஆராய்கின்றார். அது முற்காலத்திருந்த தமிழ்ப்புலவர்தம் நுண்ணறிவின் திறத்தையும், அவர் அதனால் மடியாத ஆள்வினை மேற்கொண்டு தமது தமிழ் மொழியையுந் தந்தமிழ் மாந்தரையும் விழிப்பாய் ஓம்பிய வகையையும் நன்கு தெரிக்கின்றது என்கின்றார்.

## பண்டைப் புலவர் தமிழ் ஓம்பினமை

இற்றைக்கு ஆயிரத் தெண்ணூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த தமிழ்ப்புலவர் அனைவருந் தமது தமிழ் மொழி திரிபடைந்து மாறுதற்கும் அயன்மொழிச் சொற்கள் அதன்கட் புகுந்து விரவுதற்கும் இடங்கொடாமல், இலக்கண இலக்கிய வரம்புகோலித் தாமுந் தனித்தமிழிலேயே நூல்கள் இயற்றி, அதனை ஒருமுகமாய் நின்று கண்ணுங் கருத்துமாய் பாதுகாத்து வந்தனர். தமிழ்ச்சொற்கள் திரிபடையாமலும், அயன்மொழிச்சொற்கள் விரவுதலாற் தன்சொற்கள் இறந்து படாமலும் வழங்கி வருதலாலன்றோ

1. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக்.38-39.

இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகளுக்கு முன்னரே தமிழ் மொழியில் எழுதப்பட்ட நூல்களை நாம் இன்றைக்கும் எளிதிலே கற்றறியப் பெறுகின்றோம்? ஆசிரியர் திருவள்ளுவர் அருளிச்செய்த திருக்குறள் இற்றைக்கு இரண்டாயிர ஆண்டுகளுக்கு முற்பட்டதாயிருந்தும், அதன் பாக்களின் சொல்லும் பொருளும் இற்றைக்கும் நம்மால் எளிதில் அறியப்படுகின்றன வல்லவோ,[1] என வினவும் அடிகளார், கலப்பற்ற மொழியால் நீண்டகாலம் வாழ முடியும் என்பதை எடுத்துரைக்கின்றார்.

## மொழி திரிபடைதல்

பண்டு ஒருமொழி பேசிய ஒரு மக்கட் பெருங்கூட்டமாயிருந்த தமிழரே, இப்போது தமிழ், மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளுவம், குடகம், தோடம், கோடம், கோண்டம், கொண்டம், ஓரம், இராசமாலம் முதலான பன்மொழி பேசும் பல்வகை மக்கட் பிரிவினர் ஆயினர். இவரெல்லார்க்குந் தாயகமான தமிழ் மொழிக்கண் உள்ள சீரிய தொல்காப்பியம், திருக்குறள், திருவாசகம், திருக்கோவையார் முதலான அரும் பெறல் நூல்களையும் அவரெல்லாம் அறியமாட்டாதவராயினர். மேலும் ஒரு மொழி பலமொழியாவது அம்மொழிச் சொற்கள் திரிபடைதலினாலேயாம். பண்டைமொழிச் சொற்களைப் பலவாறு திரித்துப் பேசி அயன்மொழிச் சொற்களையும் எடுத்துச் சேர்த்து வழங்குதலினாலேயே இப்பிரிவுகள் தோன்றின என்ற அடிப்படையான கருத்தையும் அடிகளார் காட்டுகின்றார்.

“இவர் எல்லாருந் தமிழ்ாகிய தமது பண்டை மொழியையே வழங்கிப் பிளவுபடாதிருந்தாற், குமரிமுதல் இயமம் வரையில் இற்றைக்குந் தமிழுந் தமிழருமே பிறங்கி நிற்கும் பெரும்பேறு உளதாமன்றோ! இமயம் முதற் குமரி வரையிலுள்ளாரெல்லாரும் நம் பண்டைப் பேராசிரியர் இயற்றியருளிய தொல்காப்பியம், திருக்குறள், திருவாசகம் முதலான ஒப்புயர்வில்லாச் செந்தமிழ் நூல்களைச் செவ்விதிற் பயின்று இம்மை மறுமைப் பயன்களெல்லாம் ஒருங்கு எய்துவரல்லரோ?

ஆதலாற், பண்டைத் தமிழகத்திலிருந்து பிரிந்துபோய்த் தமக்குரிய இனிய செந்தமிழ் மொழியை ஓம்பாது அதனைப் பல வகையால் மாறுபடுத்தி அதனால் தாமும் பல்வேறினமாய் மாறித் தம் பிறவிப்பயனையும் இழந்த ஏனை மக்கள் போலாது, நம் பழைய

---

1. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், ப.43.

நல்லிசைப் புலவரது ஆணை வழி நின்று, அவர் வழிவந்த புலவருந் தமிழைத் தூயதாக ஓம்பி வளர்த்துத் தந்த பேருதவிக்கு எளியரேம் எங்ஙனங் கைம்மாறு செலுத்த வல்லேம்!

## நூல் பாதுகாப்பு

நம் பண்டையாசிரியர் இயற்றியருளிய நூல்களிற் செல்லுக்கும் ஆடிப் பெருக்கிற்கும் இரையாய்ப்போன எண்ணிறந்த நூல்கள் ஒழிய எச்சமாக இஞ்ஞான்று நாம் நம் கைகளில் ஏந்தி மகிழுந் தொல்காப்பியம், பரிபாடல், இறையனாரகப் பொருளுரை, அகநானூறு, புறநானூறு, கலித்தொகை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பத்துப்பாட்டு, திருக்குறள் முதலான அருந்தமிழ் நூல்களைச் சிறிதாயினும் உற்று நோக்குவமாயின், நம் பழைய பேராசிரியர் நம் ஆருயிர்த் தமிழன்னையை எவ்வளவு கருத்தாய், எவ்வளவு அன்பாய்ப் பாதுகாத்து நின்றனர் என்பது தெற்றென விளங்கா நிற்கும். இம் முன்னாசிரியர் நூல்களில் நூற்றுக்கு ஒன்று இரண்டு விழுக்காடு கூட வடசொற்களைக் காண்டலரிது"[1] என நம் முன்னோர் நூல் காத்த வரலாற்றைத் தெளிவு படுத்துகின்றார் அடிகள்.

## பொருளறவொழுக்கம்

பண்டைப்புலவர் முப்பால் ஒழுக்கம் ஓம்பினமை பற்றி விரிவாக விளக்கும் அடிகளார் அக்காலப் பொருளற வொழுக்கம் பற்றியும் கூறிப் பெருஞ்சித்திரனார் போன்ற புலவர்தம் வாழ்க்கைகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றார்.

இன்றை நாளிற்போல நூல் எழுதிப் பரப்புதற்குரிய கடிதம் அச்சுப்பொறி முதலிய கருவிகளும், போக்குவரவுக்கேற்ற புகை வண்டிகளுங் கடிதப் போக்குவரவுக்கு இடனான செய்தி நிலையங்களும், கல்வியறிவூட்டுங் கல்லூரிகளும் பண்டை நாளில் இல்லாமையிற், பழந்தமிழ்ப் புலவோரிற் பெரும்பாலார் தாங்கற்ற பெருங்கல்வியைப் பிறர்க்குப் பயன்படுத்தவும், அதனாற் தம் வாழ்க்கைக்கு வேண்டும் பொருள் பெற்று இனிது வாழவும் இயலாதவராய், ஈகையிற் சிறந்த அரசரையும் செல்வரையும் தேடிச்சென்று அவர் வழங்கிய பொருள் கொண்டு வாழ்க்கை நடத்த வேண்டிய இடர்ப்பாடான நிலையில் இருந்தனர் என முற்காலப் புலவரின் உண்மையான வாழ்க்கை நிலையை எடுத்துரைக்கின்றார்.

---

1. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக்.45-46.

## கற்றவர் பெற்ற உயர்வு

“இனிப் பண்டைக் காலத்துச் செந்தமிழ்ப்புலவர் தமது தமிழ்மொழியை ஆழ்ந்து கற்றது, அதுகொண்டு பொருள் ஈட்டுதற்கு மட்டும் அன்று; அரசியலில் உயர்ந்த நிலைமைகளைப் பெறுதற்கும் அன்று. உலக இயற்கை மக்களியற்கைகளில் ஆழ்ந்து மறைந்தும் மேன்மிதந்து விளங்கியும் உள்ள அரும் பொருள்கள் நுட்பங்கள் அழகுகளையெல்லாம் ஒருங்கினிதறிந்து, அவ்வாற்றால் தமது அறியாமை நீங்கி அறிவு விளங்கி மேன்மேற் பெருகும் இன்பத்திற் திளைத்தற்கேயாம். ஆகவே அக்காலத்தில் அரசர் முதல் ஏழை எளியவர் ஈறான எல்லாருந் தமிழறிவு நிரப்புதலிற் பெருவிழைவும் பெருமுயற்சியும் முனைந்தவராயிருந்தனர்; அக்காலத்தில் ஆண்பாலரேயன்றிப் பெண்பாலருந் தமிழ்ப் புலமையிற் தலைசிறந்து நின்றனர்; அக்காலத்தில் இன்ன சாதியார் கற்கலாம்; இன்ன சாதியார் கற்கலாகாது என்னும் வரையறை சிறிதுமே இருந்திலது; அக்காலத்திற் பிறப்புக்காவது குலத்திற்காவது குடிக்காவது செல்வத்திற்காவது நிலைக்காவது உயர்வு கொடாமற் கல்விக்குங் கற்றவர்க்குமே உயர்வு கொடுத்து வந்தனர்; அக்காலத்திற் கற்றவர்கள், அரசராயிருப்பினும் எளியராயிருப்பினும், உயர்குலத்தவராயினும் உயர்வில் குலத்தவராயினும், உயர்நிலையிலிருப்பினும் உயர்வில் நிலையிலிருப்பினும், அவை பற்றி உயர்த்தப்படுதலுந் தாழ்த்தப் படுதலும் இன்றி, ஏதொரு வேற்றுமையும் இன்றி எல்லாராலும் பாராட்டப்பட்டு வாழ்ந்தனர். இத்தன்மைத்தாகிய பழைய புலவர் நிலையினை, ஆரியப்படை கடந்த மன்னர் பெருமானாகிய பாண்டியன் நெடுஞ்செழியன் பாடிய,

> “உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
> பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே;
> பிறப்பு ஓரன்ன உடன்வயிற் றுள்ளுஞ்
> சிறப்பின் பாலால் தாயும் மனந்திரியும்;
> ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக என்னாது, அவருள்
> அறிவுடை யோன்ஆறு அரசுஞ் செல்லும்;
> வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளுங்
> கீழ்ப்பால் ஒருவன் கற்பின்
> மேற்பால் ஒருவனும் அவன்கட் படுமே.” (புறம்.183)

என்னும் அருந்தமிழ்ப் பாட்டினால் நன்கறிந்து கொண்மின்கள்.”

எனக் கூறும் அடிகளார் அக்கால மற்றும் இக்கால அரசியல் நிலைகளையும் ஒப்பிட்டுரைக்கின்றார்.[1]

## முற்காலப் பெண் கல்வியின் மேன்மை

ஔவையார், ஒக்கூர் மாசாத்தியார், காக்கை பாடினியார், நச்செள்ளையார், காவற்பெண்டு, குறமகள் இளவெயினி, நக்கண்ணையார், பேய்மகள் இளவெயினி, மாற்பித்தியார், மாறோக்கத்து நப்பசலையார், வெண்ணிக் குயத்தியார், வெறிபாடிய காமக் கண்ணியார் என்னும் மாதர்கள் செந்தமிழ்ப் புலமையில் மிகச் சிறந்து விளங்கினமை புறநானூற்றின்கண் அவர்கள் பாடிய பாட்டுக்களால் தெற்றெனை விளங்கா நிற்கின்றது.

குறச்சாதியிற் பிறந்த இளவெயினியர் இருவரும் குயச் சாதியிற் பிறந்த வெண்ணிக்குயத்தியாரும், மறச்சாதியிற் பிறந்த காவற்பெண்டும், பாணச் சாதியிற் பிறந்த ஔவையாரும் பிறரும் நிகரற்ற நல்லிசைப் புலவராய் வயங்கினமையும், அவரெல்லாரும் ஏனை நல்லிசைப் புலவராலும் அரசர்களாலும் ஏதொரு வேறுபாடு மின்றிப் பாராட்டப்பட்டமையும் ஒருங்காற், கீழ்ச்சாதியிற் தோன்றிய பெண்பாலருங் கூட அப்பண்டை நாளில் எவ்வளவு கல்வியிற் சிறந்தவராய், எவ்வளவு நாகரிகத்தின் மிக்கவராய் விளங்கினரென்பது புலனாகின்றது! இது கொண்டு, அஞ்ஞான்றைத் தமிழ்மக்கள் எவ்வளவு அறிவும் எவ்வளவு அன்பும் எவ்வளவு அருளும் எவ்வளவு அறமுங் கனிந்த பயன்மிக நாகரிக வாழ்க்கை வாய்ந்தவராய்ப் பொலிந்தன ரென்பதும் புலனாகின்றது!

கல்வியறிவிற் சிறந்த பெண்மக்கள் உறையும் நாடு கடவுளர் உறையும் வான்நாடு ஆகுமேயல்லால், அவ்வறிவில்லா மாக்கள் திரியும் மண்ணாடு ஆகாதென்று தெளிமின். பண்டை நாளில் ஆண் பாலாரேயன்றிப் பெண்பாலாருங் கல்விப் புலமையிற் சிறந்து இத்தமிழகத்தில் விளங்கினாற் போல வேறெந்த நாட்டகத்தும் விளங்கியதில்லை. அஞ்ஞான்று அங்ஙனந் தமிழ்ப் புலமையிற் சிறந்து திகழ்ந்த ஆண் பெண் பாலார் ஒருவர் இருவர் சிலர் அல்லர், எண்ணிறந்தோர் ஆவர்; இவ்வுண்மை, பழைய தமிழ் நூல்களைச் சிறிதாராய்வாரும் எளிதில் அறிவர் என இவ்வாறு முற்காலப் பெண் கல்வியின் மேன்மையை அடிகள் புலப்படுத்துகின்றார்.[2]

---

1. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக்.65-66.

2. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக்.67-68.

## வேந்தரும் புலவரும்

அக்காலத்திருந்த தமிழ் மன்னர்கள் அத்துணைப் பேருந் தமிழ்க் கல்வியறிவிற்சிறந்த புலவோராய் மிளிர்ந்தமையையும் அடிகள் எடுத்துரைக்கின்றார்.

அரசர்களும் புலவர்களாய்ப், புலவர்களும் அரசர்களாய், ஒரோவொருகாற் புலவர்கள் அரசர்களினும் மிக்க சிறப்புந் தலைமையும் வாய்ந்தவர்களாய், அவ்விருதிறத்தாருந் தம்மில் அளவளாய் வாழ்ந்த அப்பழங்கால நிலை இஞ்ஞான்றைத் தமிழ்நாட்டு நிலைக்கு எத்துணை வேறுபட்டதாய் இருக்கின்றது! அப் பழைய தமிழ்க் கால நிலையினை ஒப்பதொன்று இஞ்ஞான்று காணல் வேண்டுமாயின், அதனை இஞ்ஞான்றை மேல்நாட்டவரிடத்தேதான் காணலாம். மேல் நாட்டு அரசர்களெல்லாருங் கல்வியில் வல்ல புலவர்களாய், அங்குள்ள புலவர்களுஞ் செல்வத்தின் மிக்க அரசர்களாய்ச், சிற்சிலகால் அவர் அரசரினும் மிக்க சிறப்புந் தலைமையும் வாய்ந்து அவரையுந் தஞ்சொல் வழி நிறுத்தி அடக்கியாள்பவராய், அங்ஙனமாயினும் அவ்விருதிறத்தாருந் தம்முள் அளவளாவி வாழ்தலிற் குறை ஏதும் இலராய்ப் புகழ் மேம்பட்டு விளங்கல் எவரும் அறிந்த தொன்றன்றோ?... கல்விவல்ல புலவர்களை இல்லாத நாடும் அரசுங் கானகத்தையும் அதில் உலவுங் கோளரியையுமே ஒக்கும். ஆதலால், அறியாமை இருளை அகற்றி அறிவொளி பரப்பி அன்பையும் அறத்தையும் இன்பத்தையும் பெருகச் செய்யும் புலவர் குழுவினையுடைய நாடே விண்ணவர் உறையும் வான் நாட்டினை யொப்பதாகும்[1] என வேந்தரும் புலவரும் கல்வியில் மேம்பட்டிருத்தலின் தேவையை விரிவாக ஆராய்ந்துரைக்கின்றார் அடிகள்.

முற்காலப் புலவர்தம் இனிய இல்லற வாழ்க்கை மற்றும் அவர்தம் பரந்த தூய துறவுள்ளம் ஆகியவற்றைப் புறநானூறு போன்ற பாடல்களால் எடுத்துக்காட்டும் அடிகளார், அப்புலவர்கள் யார் மாட்டும் வேற்றுமை பாராட்டாது அன்பு பூண்டு ஒருமித்து வாழ்ந்து வந்தமையைத் தெளிவுறுத்துகின்றார்.

## பின்றைத் தமிழ்ப்புலவர்

திருக்குறள் நூற்கால எல்லைவரையிற் சென்ற காலமே பழந்தமிழ்க் காலமெனவும், அக்காலத்து நிலவிய தமிழ்வல்ல

1. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக்.90-91.

அறிஞர்களே முற்காலத் தமிழ்ப்புலவர் ஆவரெனவும் கூறுவர் அடிகளார்.

திருவள்ளுவர்க்குப் பின் ஒரு நூற்றாண்டு கழித்துத் தோன்றிய சிலப்பதிகார மணிமேகலை காலத்திருந்து, அவர்க்குப்பின் ஆயிரத்து முந்நூறியாண்டு கழித்துத் தோன்றிய சிவஞானபோதம் சிவஞான சித்தியார் காலம் வரையிற் தோன்றிய தமிழாசிரியர் சமயாசிரியர் சந்தானாசிரியர்களும் அவர் இயற்றிய தமிழிலக்கண இலக்கிய நூல்களும் தெய்வ அருணூல்களும், வடசொற்றொடர்கள் வடமொழி வழக்குகள் வரவர மிகுதியாய் எடுத்தாளக் காண்டுமாயினும், அவரும் அவரியற்றிய நூல்களும் பண்டைச் செந்தமிழ்ச் சான்றோர் சென்றநெறி வழாமல் அவர் தேற்றிய சொற்பொருள் வழக்கே கடைப்பிடித்துத் தமிழறிவு பெருக்கித் தமிழ்மக்களை அறிவிலும் அன்பிலும் விளங்கச் செய்தமை காண்டும்[1] எனப் பின்றைத் தமிழ்ப் புலவர்கள் நிலை பற்றியும் அடிகளார் கருத்துரைக்கின்றார்.

## பிற்காலத் தமிழ்ப்புலவர்

மேற்கூறிய நூல்களுக்குப் பின்னால் அறுநூறு ஆண்டுகளாகத் தோன்றிய தமிழ்ப்புலவர்களையே அடிகளார் பிற்காலத் தமிழ்ப் புலவர் எனக் குறிக்கின்றார். இவர்கள் தமிழுக்கு ஆக்கம் ஏதேனுஞ் செய்யவில்லையாயினும் சொல்வகையானும் பொருள்வகையானும் தமிழுக்கிழைத்த தீங்கு பெரிது என்பது அடிகளார் கருத்தாகும்.

“இவர் சொல்வகையாற் செய்ததீங்கு ‘தலைக்குத் தக முடியமைப்பேன்’ என்னாது, ‘முடிக்குத் தகத் தலையைச் சீவுவேன்’ என ஒரு பொற்கொல்லன் முடி வேண்டினார் தலையை ஒரு கூர்ங் கத்தியாற் சீவப் புகுந்தாற் போல, இவர் பொருளுக்குத்தகச் சொல்லமையாமற் சொல்லுக்குத் தகப் பொருள் புகுத்துவதிலேயே கருத்தீடுபட்டு நின்றார். இப்பிற்காலப் புலவர் ஆக்கிய அந்தாதிகள், கலம்பகங்கள், கோவைகள், உலாக்கள், பிள்ளைத்தமிழ்கள், பரணிகள், விடுகவிகள், சீட்டுக்கவிகள் போல்வனவெல்லாம் பெரும்பாலும் பொருள் சென்ற வழியே சொற் செல்லாமற், சொற் சென்ற வழியே பொருள் செலுத்தப்பட்டு, பொருட்பயன் தருவனவல்லவாய்ப் பொலிவிழந்து காணப்படுகின்றன.

---

1. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக்.122

நூல் பயில்வதெல்லாம் உணராத பொருளே உணர்ந்து அறிவு பெறுதற்கும், உணர்ந்த பொருளை மேலும் அழகுறக் கண்டு இன்புறுதற்குமேயாம். இவ்வாறு அரிய பொருளும் அழகிய பொருளும் நுவலப்படுங்கால் அவற்றின் இயல்புக்கிசைந்த சொற்கள், ஓர் இழையில் முழுமணிகள் கோக்கப்பட்டாற்போற், கவினுறப் போந்தமைய உருவானும் உள்ளுறை பொருளானும் அறிவும் இன்பமும் மேன்மேற் பெருகச் செய்வதே ஒரு விழுமிய நூலின் தன்மையாகும்.

மற்றுச், சொற்களைத் திரித்தும் புணர்த்தும் பலவாறு பிரிந்து பொருள்தர இயைத்தும் பெரிது அறிவுழன்று செய்த ஒரு நூலை, அங்ஙனமே அறிவுழன்று பலநாட் பயின்றுங் கடைசியாக அப்பயிற்சியாற் பெற்ற பயன் யாதென்று அறியலுறுவார்க்கு, அதனாற் போந்த பொருட்பயன் ஏதுமே இல்லையென முடியுமாயின், அஃது "உமிக்குற்றிக் கை சலித்த" பான்மையால் முடியுமன்றே?"[1] எனக் கூறும் அடிகளார், பின்னாளில் துறைமங்கலம் சிவப்பிரகாச முனிவரால் இயற்றப்பட்ட பழமலையந்தாதியிலுள்ள ஒரு பாடலையும், பழங்காலத்தில் மாணிக்க வாசகர் இயற்றிய திருவாசகச் செய்யுளையும் ஒப்பிட்டுக் காட்டி விளக்குகின்றார்.

## பொருள் விளக்கத் தெளிவு

பழந்தமிழ்ப் பாடல்களைப் படிப்போர் எவராயினும் அவருக்கு உடனே பொருள் விளக்கம் எளிதில் தோன்றும். ஆயின், பிற்காலப் புலவர்களின் பாடல்கள் அவ்வாறு எளிதில் விளங்குவதில்லை என்பது அடிகளாரின் கருத்தாகும்.

திருவாசகத்தைப் போலவே, பண்டைச் செந்தமிழ்ச் சான்றோர் இயற்றிய நூற்பாக்களும், இடைக்காலத்துப் பெரியார் இயற்றிய நூற்பாக்களும், பெரும்பாலும் இடர்ப்பாடின்றிப் பொருள் சென்ற வழியே சொற்சென்று தம்மையோதுவார்க்கும் பயில்வார்க்கும் அறிவும் இன்பமுமாகிய பெரும்பயன்தந்து விளங்கும். பிற்காலத்துப் புலவர்கள் இயற்றிய நூற்பாக்களோ சொற்செருகப்பட்ட புழை வழியே பொருள் துறுத்தப்பட்டுத் தம்மை யோதுவார்க்கும் பயில்வார்க்கும் பொருட்பயன் தருவனவல்லவாய் இருண்டு கிடத்தல் பகுத்தறிந்து கொள்ளற்பாற்று எனக்கூறும் அடிகளார் பண்டைச் செந்தமிழ்க் காலத்திலும் இடைக்காலத்திலும் இத்தகைய நூல்கள் பரவலாக இயற்றப்பெறவில்லை என்பதையும் சுட்டிக்காட்டுகின்றார்.

---

1. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக்.147-148.

மேலும், முற்காலத்துப் புலவர்கள் இயற்கைத் தோற்றங்களையேனும் மக்கள் இயல்புகளையேனும் பாடப்புகுந்தால், உண்மைக்கு மாறாகாமல் ஓவியம் வரைந்து காட்டினாற்போல் அவை தம்மை நம் அகக்கண்ணெதிரே விளங்கக் காட்டுவர். அவர் பாடிய தோற்றங்களையும் மாந்தர்தம் நிலைகளையும் நாம் நேரே சென்று காண்டல் கூடுமாயின், அவை அவர் பாடியவாறே யிருக்கக்கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் எய்துவம் என விளக்கும் அடிகளார் புறநானூற்றுப் பாடலையும் திருச்சிற்றம்பலக் கோவையார் பாடலையும் சான்றாக எடுத்துக் காட்டுகின்றார்.[1]

## தமிழ் நூல்களில் பொய்க்கதைகள் புகுந்தமை

பிற்காலத் தமிழ்நூல்களில் புனைந்துரைப் பொய்க் கதைகள் புகுந்தமையை அடிகளார் விரிவாக விளக்குகிறார்.

இடைக்காலத்தாசிரியர்களில் முதற் தோன்றியவர்களான இளங்கோவடிகளும் கூலவாணிகன் சாத்தனாரும் தங்காலத்து நிகழ்ந்த கோவலன் கண்ணகி வரலாறுகளும், மணிமேகலை உதயகுமரன் வரலாறுகளுமாகிய மெய்ந்நிகழ்ச்சிகளையே யமைத்துச் சிலப்பதிகாரம், மணிமேகலை என்னும் பெரும்பொருட்தொடர் நிலைகளை (காப்பியங்களை) இயற்றினார். வடநாட்டு ஆரிய மொழியின் வழியே புனைந்துரைப் பொய்க்கதைகள் இத்தமிழ் நாட்டுட் புகுந்து தமிழ் மக்களின் மனநிலையைச் சிதைத்தற்கு முன்னெல்லாந், தமிழாசிரியர் அனைவரும் மெய்ந்நிகழ்ச்சிகளைப் பாடுதலிலேயே கடைப்பிடியாய் நின்றனர்.

## பொய்ந்நூல்கள்

ஓரோவொருகாற் தமிழ்ப்புலவர் சிலர் ஆரியர் கொணர்ந்த பொய் வழக்கினைப் பருகி அறிவு மயங்கி அப்பொய்யினை மெய்யாகப் பிறழக்கொண்டு, பாரதம், சூளாமணி, கொங்குவேள் மாக்கதை, குண்டலகேசி, வளையாபதி, சீவகசிந்தாமணி, இராமாயணம் முதலான பொய்ந்நூல்களை ஆக்கினாராயினும், மெய்கூறுதலிலேயே பழகிப் போந்த பழைய தமிழ் மக்கள் உள்ளத்திற்கு அவை இன்பம் பயவாமையின், அவை பெரும்பாலும் வழங்காதே போயின; அன்றி ஆரியர் வயமான பேதை மாக்கள் குழுவிலே அருகி வழங்கின. இதனாலன்றோ, திருவள்ளுவர் காலத்தை யடுத்துத் தோன்றிய பெருந்தேவனார் என்னுந் தமிழ்ப்புலவர்

---

1. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக்.151-157.

வடமொழியிலிருந்து பாரதக்கதையைத் தமிழிலே மொழிபெயர்த்தியற்றியும், அந்நூல் இங்கு வழங்காமலே அழிந்து போயிற்று. இப்பாரதக் கதையினும் பொய்ம்மை நிறைந்ததாயிருத்தல் பற்றி வடமொழியிலுள்ள இராமாயணக் கதையைப் பண்டையாசிரியர், இடைக்காலத்தாசிரியர் எவரும் தமிழில் மொழி பெயர்த்துச் செய்திலர்.

இற்றைக்கு எழுநூறு ஆண்டுகளுக்கு முன்னிருந்த கம்பரென்னும் புலவராற் பாடப்பட்ட இராமாயணம், வடமொழியிலுள்ள வான்மீகி இராமாயணத்தைப் பார்த்துச் செய்யப்பட்டதாயினும், அதனினும் பார்க்கப் பொய்ம்மை நிறைந்ததாய்ப், பழைய தமிழாசிரியர் கைக்கொண்ட இயற்கை வழக்கொடு மாறுபட்டதாய்த் தோன்றினமையின், அக் கம்பர்க்குப் பிற்பட்டிருந்த சிறந்த உரையாசிரியர்களாலும் அஃது ஏற்றுக் கொள்ளப்படாததாயிற்று என்று பொய்ந்நூல்கள் தோற்றத்தையும் அவற்றை உரையாசிரியர்கள் ஏற்கா நிலைகளையும் ஆராய்கின்றார்.

## பெரியபுராணம் தோன்றிய காரணம்

இவ்வாறு இடைக்காலத்தில் சூளாமணி, சிந்தாமணி முதலான பொருட்தொடர் நிலைகள் பெரும்பாலும் பொய்க் கதைகளை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டமையால்தான் பண்டைத் தமிழாசிரியர் சென்ற மெய்ந்நெறியே செல்லுங்கடப்பாடுடையரான ஆசிரியர் சேக்கிழார் உண்மை நாயன்மாரின் அரிய அருள் வாழ்க்கை வரலாற்றுண்மைகளைப் பலவாற்றானுந் துருவி ஆராய்ந்து திருத்தொண்டர் புராணம் என்றும் பெரியபுராணம் என்றும் வழங்குஞ் செந்தமிழ்ச் செம்பொருட்தொடர் நிலையினை இயற்றியருளினார் என்றும் இப்பெரியபுராணம் முன் வேறு எந்த காப்பியமும் சிறப்பாகா என்றும் அடிகளார் விளக்குகின்றார்.[1]

## சிலம்பும் மேகலையும் பெரியபுராணமும்

இடைக்காலத் துவக்கத்திலெழுந்த சிலப்பதிகாரம் மணிமேகலை தவிர ஏனைப் பொருட்தொடர் நிலைகளுள் எதுவும், பிற்காலத்துத் தோன்றிய கம்பராமாயணம், கந்தபுராணம், வில்லிபுத்தூரர் பாரதம், நைடதம் முதலியனவும், பெரியபுராணம்

---

1. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக்.157-158.

என்னுஞ் சுடரொளி ஞாயிற்றின்முன் மின்மினித் துணையும் விளங்காவென்பது நடுநின்று உண்மையை உள்ளவாறு ஆராய்வாரெவர்க்குந் தெற்றென விளங்கற்பாலதேயாம் என்பர்.

மேலும், இடைக்காலத்தும் பிற்காலத்தும் தோன்றிய இந்நூல்கள் வர வர வடசொற்களை மிகுதியாய் எடுத்தாண்டு, பல்லாயிரந் தனிச் செந்தமிழ்ச்சொற்கள் வழக்கு வீழ்ந்தொழிதற்கும் இடஞ் செய்தன. இங்ஙனஞ் சொல் வகையாலும் பொருள் வகையாலுந் தமிழ்க்குந் தமிழ் மக்களது அறிவு விளக்கத்திற்கும் பேரிடர் பயப்பனவாயும் அவற்றைக் கவிந்த பொய்ந்நூல்களாயும் எழுந்த இருட்பெரும் பரவையினைக் கீழ்ந்த மெய்ந்நூல்கள் சிலப்பதிகாரம், மணிமேகலை, பெரிய புராணம் என்னுஞ் செம்பொருட் செந்நூல்களேயாம்; இவை தோற்றித் தஞ்செஞ்சுடர்க் கதிர்களை எங்கும் பரப்பியதில்லையாயின், இத் தமிழ்நாடு பொய்யும் அறியாமையுமாகிய திண்ணிருளாற் கவரப்பட்டுத் தன் பண்டை நாகரிகத்தினை ஒருங்கே இழந்து போயிருக்கும்! மற்று, அஃது அங்ஙனம் ஆகாமைப் பொருட்டு இம் மெய்ந்நூல்களை இதன்கண் இடையிடையே தோற்றுவித்த இறைவன்தன் அருட்திறம் பெரிது! பெரிது! என இம் மூன்று நூல்களின் பெருமையைப் பாராட்டி மகிழ்கின்றார் அடிகள்.[1]

## மெய்யறிவு நூல்களின் தேவை

வடமொழியிற் பண்டைத்தமிழாசிரியர் ஆக்கிவைத்த பழைய உபநிடதங்கள், சாங்கியம், யோகம், நையாயிகம், வைசேடிகம், வேதாந்தம் முதலான அறிவு நூல்களையும் பின்றைத் தமிழ்ப்புலவர் எவருந் தமிழில் மொழிபெயர்த்து வையாததும் பெரியதொரு குறைபாடு என்பதையும் அடிகளார் சுட்டியுள்ளார். இனியேனும், நம் செந்தமிழ்ப் புலவர்கள் பண்டை நந்தமிழாசிரியர் காட்டிய மெய்ந்நெறியே கடைப்பிடித்துத் தனித்தமிழில் மெய்யறிவு நூல்கள் மெய்யுணர்வு நூல்கள் இயற்றித் தமிழை வளம்படுத்தி நந்தமிழ் மக்களைச் சிறந்த துறைகளெல்லாவற்றிலும் முன்னேற்றி நலம் பெருக்க வேண்டும் என்ற தம் ஆவலையும் இந்நூலின் இறுதியில் எடுத்துரைக்கின்றார்.

## பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்

1905ஆம் ஆண்டில் மதுரைத் தமிழ்ச்சங்கத்தில் இத்தலைப்பில் அடிகள் சொற்பொழிவாற்றினார். ஞானசாகரம்

---

1. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர், ப.159.

இதழில் இது வெளியிடப்பட்டது. 1906ஆம் ஆண்டு இதுவே தனிநூலாக வெளிப்படுத்தப்பட்டது. வேர்ச்சொல் ஆய்வுகள் பல இதிலுள்ளன.

தொல்காப்பியர் காலம் பாணினியார் காலத்திற்கு நானூறு ஆண்டுகளுக்கு முன் என ஒருவகை முடிபை இந்நூலில் காட்டியுள்ளார். தமிழ் நூல்களின் தனி ஆய்வின்படி தொல்காப்பியர் நாலாயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன் என அகப்புறச் சான்றுகளுடன் நிறுவுகின்றார். பாணினியார் தமிழ்நாட்டு ஊர்கள் ஒன்றினையும் அறியார் என்பதால் அவர் வகுத்த இலக்கணத்துள் மற்றைய ஊர்களின் பெயர்க்கு முடிவு கூறியுள்ளார் என்றும் கூறுகின்றார்.

பாணினிக்கு உரை வகுத்த காத்தியாயனர் இற்றைக்கு இரண்டாயிரத்து முந்நூற்றைம்பது ஆண்டுகட்கு முன்னிருந்தவ ரெனக் காட்டுகின்றார்.

தொல்காப்பியம் போன்ற இலக்கணச் சிறப்பமைப்பு வடமொழிக்கு இல்லை எனவும், உலக மொழிகளில் சிறந்த வேறு எம்மொழிக்கும் இல்லை எனவும் நிறுவியுள்ளார்.

மக்கள் முதன்முதற் தோன்றிய இடம் குமரி நாடே என்பதனை மேனாட்டாசிரியர்கள் பலமுகமாய்ப் பரக்க ஆராய்ந்து முடிபு கட்டியிருப்பதை அடிகளார் இந்நூலினிறுதியில் குறிப்பாகச் சுட்டிக் காட்டித் தம் ஆய்வுரைகளுக்கு அரண் சேர்க்கின்றார்.

### மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்

மாணிக்கவாசகர்காலம் கி.பி. மூன்றாம் நூற்றாண்டே என இந்நூலில் அடிகளார் நிறுவுகின்றார். இதற்காகத் தமிழக-தமிழிலக்கிய ஒட்டு மொத்த ஆய்வையே அடிகளார் மேற்கொண்டுள்ளார். 1930ஆம் ஆண்டில் இந்நூல் முதலில் வெளிவந்தது.

திருவாசகம், திருக்கோவை நூல்களில் காணப்பெறும் குறிப்புகளையே வரலாற்றுச் சான்றுகளாகக் கொண்டு மூவருக்கும் முந்தியவர் மணிவாசகர் என்ற முடிவினை இப்பெருநூலில் அடிகளார் ஆராய்ந்து வெளியிட்டுள்ளார். மணிவாசகரின் இவ்விரு நூல்களும் பண்டைத் தமிழ் வழக்கின. செய்யுட்கள் சங்கச் செய்யுட்கள் போன்றன. திருவாசகத்திலுள்ள திருக்கோத்தும்பி, திருத்தோள் நோக்கம், திருச்சாழல், திருவுந்தி, திருப்பொற் சுண்ணம்,

திருப்பூவல்லி, திருப்பள்ளியெழுச்சி முதலியன பண்டை இசைத் தமிழ் நாடகத் தமிழ் நூல்களிலும் உள்ளவை என அடியார்க்கு நல்லார் காட்டியுள்ளதை எடுத்துக்கூறி மணிவாசகரின் காலத் தொன்மையைச் சுட்டுகின்றார் அடிகளார்.

இவ்வரும்பெரும் நூல் செந்தமிழ்க் களஞ்சியமாகவே திகழ்கிறது. ஆறாண்டுகளுக்கு மேலாக அடிகளார் இதனை ஆராய்ந்து உருவாக்கியுள்ளார். வரலாற்றை வழுவின்றி எழுதப்பயில்வார்க்கு இவ்வாராய்ச்சி நூல் ஒரு வழிகாட்டியாகும்.

### சாகுந்தல நாடகம்

அடிகளார், பிற்காலத் தமிழ்நூல்களில் காணப்படும் கட்டுக்கதைகளையும் வடமொழிக் கலப்பையும் விரும்பினாரில்லை. ஆயினும், வடநாட்டில் உச்சயினியில் 1500 ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த காளிதாசர் இயற்றிய சாகுந்தலம் போன்ற நூல்கள் இலக்கியச்சுவை மிகுந்து காணப்படுவதையும் உலக இயற்கைக்கும் மக்களியற்கைக்கும் மலைவாகாத முறையில் வைத்தே அவை தம்மைப் புனைந்து செல்லுதலால் அவற்றையெல்லாம் பாராட்டுகின்றார். அத்தகைய நூல்களைத் தமிழில் எவரும் மொழிபெயர்க்க வில்லையே என்ற உணர்வும் உடையவராதலால் இவரே சாகுந்தல நாடகத்தைத் தமிழாக்கம் செய்துள்ளார்.

அடிகளாரின் சாகுந்தல நாடகம் அறிவுக் கடலின் தொடக்கத்தில் தொடர்ச்சியாக வெளிவந்து, பின்னே 1907ஆம் ஆண்டு நூலாக்கம் பெற்றது. முதனூற் கருத்து மாறாமல் தூய தமிழ் நடையில் செய்யப்பட்டது. இடையிடையே செய்யுள்கள் வருமாறு அமைக்கப்பட்டது.

### சாகுந்தல நாடக ஆராய்ச்சி

சாகுந்தல நாடகத்தினை மொழிபெயர்த்த அடிகளார் அதனைப்பற்றி ஆராய்ந்து எழுதியது 1934ஆம் ஆண்டு நூலாக வெளிவந்தது.

பன்மொழிப் புலமை மிக்க அடிகளாரின் ஆராய்ச்சித் திறனைச் சாகுந்தல நாடக ஆராய்ச்சி நூல் முழுமையும் காணலாம். இந்நூலில், நாடக இயல்பு என்ற முதல் பகுதியில் அதுதோன்றிய வழியும், மக்களுக்கு அதனால் விளையும் பயனும் பற்றி விளக்குகிறார். நாடகம் எவ்வாறு அமையவேண்டும், கதை நூலுக்கும் நாடக நூலுக்கும் உள்ள வேறுபாடு யாது, கதை விரிந்திருப்பதற்கும் நாடகம்

சுருங்கியிருப்பதற்கும் காரணம் யாது என்ற வினாக்களுக்கு விளக்கமளிக்கின்றார்.

நாடக வரலாறு கூறும் இவர் நாடக அமைப்பையும் ஆராய்கின்றார். கதை எவ்வாறு அமைக்க வேண்டும், அதற்குத் தக்கவர்களாக யார் யாரைக் காட்டவேண்டும், அவர் பண்புகள் எவ்வாறமைந்திருக்க வேண்டும், முன்னோர் எங்ஙனம் நாடக நூல்களை வகுத்திருக்கின்றனர் போன்ற வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கின்றார்.

நாடக மாந்தர் இயற்கையை மிக விரிவாக ஆராய்கிறார். பின்பு, கதை நிகழும் இடமுங் காலமும், காளிதாசர் வரலாறு, காளிதாசர் காலம், காளிதாசரது நல்லிசைப்புலமை, காளிதாசர் காலத்துப் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை அலசி ஆராயும் அடிகள் இந்நாடக அமைப்பிலுள்ள சில குறைபாடுகளையும் சுட்டிக் காட்டுகின்றார்.

இளங்கோவடிகள், சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் போன்றோர் மொழிகளில் ஈடுபாடு மிகக்கொண்ட அடிகளார் முத்தமிழில் பழைய நாடகத்தமிழின் ஏற்றம் பற்றி மிகவும் பெருமையுடன் குறிக்கின்றார்.

அக்காலத்தில் தமிழில் வெளிவந்த தலைசிறந்த ஆராய்ச்சி நூலான இதில் அடிகளாரின் சிறந்த ஆங்கில முன்னுரை இடம்பெற்றுள்ளது. அதில்,

"Finally I am glad to say that, in tracing the origin and growth of the drama in India, I quite accidentally lighted on the discovery that this art took its rise not from among the alien Aryas but from the indigenous Tamils themselves. I believe I have in the following critique sufficiently explained all the facts that led me to this most important discovery" என அடிகள் தம் ஆங்கில முன்னுரையில் குறித்துள்ளமை சிந்திக்கத் தக்கதாகும்.

## அம்பிகாபதி அமராவதி

அடிகளார் நாடகமாக எழுதிய நூல்இது. 1949இல் அவர் இறுதியாக எழுதிய நூல் அவர் மறைவிற்குப் பின் 1954இல் அச்சில் வெளிவந்தது. இது ஒரு துன்பியல் நாடகமாகும். ஆங்கில நாடக உத்திகளையும் மேற்கொண்டு அடிகள் நாடகத்தை இயக்கி

அமைத்துள்ளார். அவல உணர்வை முழுவதுமாகக் காட்டும் வகையில் இது இயற்றப்பட்டுள்ளமை குறிக்கத்தக்கது.

அம்பிகாபதி அமராவதி நூலுக்கும் அடிகளார் ஆராய்ச்சியுரை எழுதக் கருதினார் என்றும் அது முடிவுற்றிலது என்றும் அறிகிறோம்.

இவ்வாறு நாடகம் இயற்றுவதில் புதுமை கண்ட அடிகளார் புதினங்கள் படைப்பதிலும் ஆர்வங் கொண்டிருந்தார் என அறிகிறோம். கோகிலாம்பாள் கடிதங்கள், குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி போன்ற படைப்புகள் அடிகளாரின் புதுமையுணர்வினை நன்கு புலப்படுத்துகின்றன. எதையும் தனித்தமிழ் உணர்வோடு படைக்கும் விருப்புடைய அடிகளார் இத்தகைய நூல்களையும் தம் புலமைச் சிறப்பால் திறம்பட யாத்துள்ளார்.

## கோகிலாம்பாள் கடிதங்கள்

கோகிலாம்பாள் என்னும் பார்ப்பனப்பெண் தன் காதற் கணவற்கு எழுதிய கடிதங்களே தன் கதையாக அமைந்த புனைகதை நூல் இது. அடிகளார் ஓர் உரை நடை மன்னர் என்பதற்கு இக்கதை நூல் எடுத்துக்காட்டாகும்.

இக்கதையின்கண் அடிகளார் தமிழ் மக்களுக்குக் கூற வேண்டிய ஒழுகலாறுகளையும், கடவுள் உண்மையினையும், சமயக் கொள்கைகளையும், தமிழ்மொழியின் தனிப்பெருஞ் சிறப்பினையும், சீர்திருத்தக் கொள்கைகளையும் மற்றும் அறிவுரைகளையும் நன்கெடுத்து விளக்குகின்றார்.

இந்நூல் முதன் முதல் அடிகளாரின் ஞான சாகரம் இதழில் தொடர்ந்து வெளிவந்தது. இடையிடையே அவர் பல ஊர்களுக்குச் சொற்பொழிவு செய்து வரச் சென்றதால் பத்து ஆண்டுகளுக்குப் பிறகே 1921இல் இந்நூல் வெளியிடப்பட்டதாக அவரே தம் முதற்பதிப்பின் முகவுரையில் குறிக்கின்றார்.

1931ஆம் ஆண்டில் இந்நூலின் இரண்டாம் பதிப்பை வெளியிட்டபோது, மிக நீண்ட முகவுரையை இதில் எழுதி அமைத்துள்ளார். இக்கதையில் வருவோர் பேசும் தமிழ்நடையைப் பற்றி விளக்கும் அடிகள், தமிழ்ச் சொற்களைச் சிதைத்துப் பேசும் வழக்கைப் பெரிதும் கண்டித்துரைக்கின்றார்.

இங்ஙனஞ் சொற்களையும் பொருள்களையுந் தூயவாக்கி வகுத்தலே நூல் யாக்குமுறை யென்பதனைச் சிறிதும் ஆய்ந்து பாராத

இஞ்ஞான்றைக் கதைநூற்காரர்கள், வடசொல்லும் ஆங்கிலச் சொல்லுங் கொச்சைத்தமிழ்ச் சொல்லும் விரவிய மிகச் சீர்கெட்ட நடையில் அவை தம்மை வரைந்து, நூன் மாட்சியினைப் பாழ்படுத்துகின்றனர். நாளேற நாளேற அறிவுஞ் செயலுஞ் சீர்திருந்தி வளர்தற்கு ஏற்ற உயர்ந்தமுறையில் எழுதப்படுங் கதை நூல்களையே பயிலல் வேண்டுமல்லால், இத்தகைய வழூஉக் கதைகளைப் பயிலல் நன்றாகாது என அடிகள் கூறும் கருத்துக்கள் இக்காலத்திற்கும் எக்காலத்திற்கும் பொருந்துவனவாம்.

## குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி

ஆங்கிலத்தில் 'இரெனால்டு' என்பார் எழுதிய புனைகதையின் மொழிபெயர்ப்பாக அடிகளால் எழுதப்பட்டது இந்நூல். 1911ஆம் ஆண்டில் வெளிவந்த இந்நூல் எளிய தூய தமிழ் நடையினது. பெயர், இடம் போன்றனவும் தமிழொடு இயைந்ததாகச் செய்யப்பட்டது. புதுக்கதைகள் அமைப்பார்க்கு இது ஒரு வழிகாட்டியாகும்.

இலக்கிய முறையில் மொழித்தூய்மையும், தனிமுதல் மாண்பும், மொழிமரபும், நடைச்சிறப்பும், நூல் வழக்கும், பொதுள அமைத்தல் வேண்டுமென்பதை வற்புறுத்துமாறு கொச்சை வழக்கொழித்து எளிய இனிய முறையில் பொதுமக்கள் எல்லாரும் புரிந்து கொள்ளத்தக்க வகையில் அடிகள் இந்நூலை அமைத்துள்ளார்கள்.

இரண்டு பாகங்களாக விளங்கும் இந்நூலின் இரண்டாம் பதிப்பை 1942ஆம் ஆண்டில் அடிகளே வெளியிட்டுள்ளார்கள். இதன் மூன்றாம் பாகம் வெளிவர வாய்ப்பில்லாமல் போனது எனவும் அறிகிறோம்.

இப்புதுக்கதை, மொழிபெயர்ப்பு போன்றவற்றைத் தம் இளமையிலேயே செய்யத் துணிந்த அடிகளார், தமிழராகப் பிறந்த ஒவ்வொருவரும் தமிழுக்காக ஏதாவது செய்தொழுகுதலைக் கடமையாகக் கொண்டு விழித்திருக்க வேண்டுமென்பதைக் கூறுவதில் பெருவிருப்புடையவராகின்றார். இதனை இவர்தம் ஆங்கில முன்னுரையில் தெளிவாக விளக்குகிறார்.

> "But fortunately for us, the study of English has once more opened our eyes to the real grandeur pertaining to the art of fiction; but once again has the unwholesome contact of Sanscrit begun stealthily to sapup the vitality of the Tamil language.

I need therefore, hardly say that it is obligatory on every son of the Tamil country to wake up from his long slumber of neglect and indifference and do his utmost to render his services in the cause of his own mother tongue Tamil which is, infact the only one of the few highly cultivated ancient languages of the world that has survived."

என இவ்வாறு அடிகள் குறிப்பிட்டிருப்பது தமிழ் மக்கள் அனைவருக்குமுரிய வேண்டுகோளாம்.

## தமிழ் மருத்துவத்தில் தனி ஈடுபாடு

மறைமலையடிகளார் பல மருத்துவர்களையும் தம் வாழ்நாளில் சந்தித்துள்ளார். 1921ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் அடிகளாருக்கு வயிற்றில் கழலை நோய் ஏற்பட்டபோது சித்தமருத்துவ நண்பர் பண்டிதர் ஆனந்தரவர்கள் தமிழ் மருத்துவம் செய்து காத்தார். அதன் பிறகு அடிகள் தமிழ் மருத்துவத்தின் தனிச் சிறப்பைப் பெரிதும் போற்றினார். 22-2-1922இல் மருத்துவர் ஆனந்தருக்கு எழுதிய நற்சான்றிதழில், செல்வருக்கும் ஏழைகட்கும் சாலச் சிறந்த பயன் நல்கும் தமிழ் மருத்துவமாகிய சித்தமருத்துவம் மிகவும் மேம்பாடுடையது என்றும் தமக்குத் தமிழ் மருத்துவத்திலேயே நம்பிக்கை இருப்பதாகவும் எழுதியுள்ளார்.

## மக்கள் நூறாண்டு உயிர் வாழ்க்கை

தமிழ், ஆங்கிலம், ஆரிய மொழிகளில் அடிகள் கண்ட அரிய மருத்துவக் குறிப்புகளையெல்லாம் திரட்டி வரைந்த பெருநூல் இது. தூய தமிழால் மருத்துவ நூல்களை எழுத முடியும் என்பதை நிலை நாட்டிய பெருநூல் இது. அடிகளின் அறிவுக்கடல் இதழில் தொடர்ந்து வெளிவந்த இந்நூல் 1933ஆம் ஆண்டில் தனிநூலாக வெளியிடப்பெற்றது.

மக்களின் குறுகிய வாழ்வைக் கண்ட இரக்கமே இந்நூலை எழுதி வெளியிடத் தூண்டியது என்று குறிக்கின்றார் இவர். இதில், 'நோயில்லா நீண்ட வாழ்க்கை' என்னும் பகுதி ஒரு தனி நூலாகவே விளங்குகிறது.

இவ்வரிய நூல் எழுதத்தொடங்கி இருபத்து நான்கு ஆண்டுகட்குப் பின்னரே வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது.

"இந்நூலை முடித்தற்கு இத்தனை காலஞ் சென்றதாயினும், இதிற் சொல்லப்பட்ட பொருள்களையும் முறைகளையும் பற்றி யாம்

ஓவாது ஆராய்ந்தபடியாகவே யிருந்தேம். நோய் வரா வகைகளையும் வந்தநோய் நீக்கு முறைகளையும் பற்றித் தமிழ் ஆங்கில வடமொழிகளிற் சான்றோர் எழுதிய உயர்ந்த நூல்கள் பற்பலவற்றை யாம் பயின்றறிந்தவளவில் நில்லாது, அவை தம்மை யெல்லாம் எம்மிடத்தே செய்து பார்த்தும், அவற்றுள் எவை மிகச் சிறந்தனவாய்த் தெளியப்பட்டனவோ அவைகளை இந்நூலின்கண் வரைந்திருக்கின்றேம்" என முதற் பதிப்பின் முகவுரையில் அடிகள் குறித்திருப்பது அவர் நூல் எழுதுவதில் கொண்ட கவனத்தையும் நம்பகத் தன்மையையும் காட்டுகின்றது.

தம் உடலைப்பற்றி அறிய விழையும் ஒவ்வொருவரும் தவறாமல் படித்துணர வேண்டிய அரிய தமிழ்நூல் இது.

## பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்

உலகிடைக்காணும் எல்லாச் சமயக் குருமாரும் கொலை புலை நீக்கமே சிறந்தனவென்றும் சைவ உணவே கொள்ளுதல் வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ள அறவுரைகளை அவரவர் நூலொடு காட்டி உணர்த்தும் வகையில் அடிகள் இந்நூலை இயற்றியுள்ளார். 1921இலும் 1929இலும் அடிகளே இரண்டுமுறை இதனைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். அழகிய ஆங்கில முன்னுரையுடன் இந்நூல் வெளிவந்துள்ளது.

பொருந்தும் உணவு இது என்பதைக் காட்டும் இந்நூலில் உடலியக்க முறையில் உணவின் பங்கை மிக விரிவாக ஆராய்ந்துரைக்கின்றார். பொருந்தா உணவு இவையிவை என உலக நோக்கில் விவரிக்கின்றார். சமயங்களும் கொல்லாமை புலால் உண்ணாமையும் என்னும் பகுதியில் யூதம், சைவம், பாரசிகம், சமணம், பௌத்தம், கிறித்துவம், கிரேக்கம், மகமதியம் ஆகிய சமய நூல்களும் ஊனுணவை முற்றும் விலக்கியமையை எடுத்துக் கூறுகின்றார்.

சைவ உணவுக்கு மாறான கொள்கைகளின் மறுப்பு கூறவந்தவிடத்து, கண்ணப்பர் புலாலுண்டதனை இறைவன் ஏற்றுக் கொள்ளாமை போன்ற செய்திகளையெல்லாம் மிக விரிவாக விளக்குகின்றார்.

## மறைபொருளியல்

மறைபொருளியலில் மிகுந்த ஈடுபாடுகொண்டவர் மறைமலையடிகள். இது தொடர்பான பல அரிய நூல்களைப் பயின்று மகிழ்ந்த இவர் தமிழிலும் இத்தகைய நூல்களைப்

படைக்கவேண்டும் என்ற ஆர்வங் கொண்டவர். மனித வசியம் அல்லது மனக்கவர்ச்சி, யோக நித்திரை அல்லது அறிதுயில், தொலைவில் உணர்தல், மரணத்தின்பின் மனிதர் நிலை அல்லது இறந்தபின் இருக்கும் நிலை போன்ற நூல்களைத் தூய தமிழில் இவர் இயற்றியளித்துள்ளார்.

## மனித வசியம் அல்லது மனக்கவர்ச்சி

அடிகளின் அறிவுக்கடல் இதழில் தொடர்ந்து எழுதப்பட்டு வந்த இந்நூல் 1927இல் தனி நூலாக வெளியிடப்பட்டது. மனவளக்கலையை விரித்துச் சொல்லும் நூல். அடிகளே இக்கலையில் செயன் முறைப்படுத்தி வெற்றிகண்டவர் என்பதால் இதனை நல்வழிக்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமென இதில் விளக்குகிறார். மனிதவசியம் தொடர்பான மேனாட்டாசிரியர்களின் கருத்துக்களை உள்ளடக்கியும் நம் முன்னோர்களின் அறிவுப் புலமையையும் இணைத்தே இந்நூலை இவர் உருவாக்கியுள்ளார்.

## யோக நித்திரை அல்லது அறிதுயில்

அறிதுயிலால் அடையப்பெறும் அரிய நிலைகளை விளக்கும் இந்நூல் 1922இல் வெளியிடப்பெற்றது. அடிகளார் பெற்ற சிவயோகப் பயிற்சியின் விளைவே இந்நூல்.

ஒவ்வொருவர் அறிவும் உணர்ச்சியும் அறிதுயிலில் சென்ற அளவிலே பேரொளியோடு விளங்கிக் கண்ணும் காதும் உணராத மறைபொருள்களை அறியும். இதனால் தீரா நோயரையும் மருந்தின்றி நலப்படுத்தலாம். தீயசெயல் உடையவரைத் திருத்தலாம். பின் வருவதை முன்னர் அறியலாம். இறைவன் திருவருளை இம்மையிலேயே பெறலாம் என இவற்றைத் தம் பயிற்சியால் அடிகளே செய்து காட்டியுள்ளார். இவற்றை அனைவருக்கும் விளக்குவதே இந்நூல்.

"இந்நூல் முற்றுப்பெறுதற்குப் பதினோராண்டுகள் ஆயினவென்று அறிதல் வேண்டும். இவ்வாறு இது மெல்ல மெல்ல எழுதப்பட்டதனால், சென்ற இருபஃதாண்டுகளாக இக்கலைத் திறத்தைப் பற்றிய பல நூலாராய்ச்சிகளிற் கண்ட முடிபுகளும், பல்லாண்டுகளாக இடையிடையே ஆழ நினைந்து பார்த்துத் தெளிந்த நுணுக்கங்களும், இதிற் சொல்லப்பட்ட முறைகளை நேரே செய்து பார்த்து அறிந்த மெய்ப்பயன்களும் இதன்கண் இயன்ற மட்டும் நன்கெடுத்துக்காட்டி விளக்க இடம் பெற்றேம்" என இந்நூலின் முதற்பதிப்பு முகவுரையில் அடிகள் குறிப்பிட்டுள்ளார்.

இதன்கண், இருவகைத்துயில் முதலாகச் சில எச்சரிப்புகள் ஈறாகப் பதினெட்டுத் தலைப்புகளில் இவர் விரித்து எழுதியுள்ளார். அறிதுயில் நிலை, நினைவுத்துயில், நினைவற்ற துயில், நடைத்துயில் என மூவகையில் விளக்கப்பட்டுள்ளது. மக்கள் ஒழுக வேண்டிய நல்லொழுக்க முறைகள் பல இதில் வலியுறுத்தப்பெறுகின்றன. எல்லாவற்றையும் மெய்ப்பிக்கும் சான்றாக உண்மையாக நிகழ்ந்த பல நிகழ்ச்சிகள் தரப்பட்டுள்ளன.

இதிலுள்ள பொருள்கள் பற்றித் தமிழில் இதற்கு முன் இவ்வளவு தெளிவாகவும் விரிவாகவும் யாரும் எழுதவில்லை என்பதே இதன் சிறப்பாகும். அடிகளார் பல ஆங்கில நூல்களை நன்கு பயின்று ஒப்பிட்டு இதனை உருவாக்கியுள்ளார். தமிழ் மக்கள் இத்தகைய பயிற்சிகளைப் பற்றி அறிந்திருக்க வேண்டுமென்பதும், இது பற்றிய தனித்தமிழ் நூல்கள் பெருக வேண்டுமென்பதும் அடிகளின் நோக்கம் என்பதையும் அறிகிறோம்.

## தொலைவில் உணர்தல்

ஐம்புலனுக்கும் எட்டாத் தொலைவிலுள்ள பொருள்களையும் உயிர்களையும் அவற்றின் நிகழ்ச்சிகளையும் நம் உள்ளத்தால் உணர்தலே தொலைவில் உணர்தல் ஆகும். நம்மிடமுள்ள அறியாமை இருள் நீங்கினால் இத்திறமையை அனைவரும் பெறலாம் என்பது அடிகளாரின் கருத்து.

அனைவரிடமும் புதைந்திருக்கும் இவ் உணர்வை வெளிக் கொணரும் முயற்சியால் இயற்றப்பட்டதே இந்நூல். மேலை நாட்டு அறிஞர்களின் நூற் சான்றுகள் பல இதில் எடுத்து விளக்கப்பட்டுள்ளன. 1911 முதல் 1935 வரை அறிவுக்கடலில் வெளி வந்த இந்நூல் 1935இல் முதற்பதிப்பாக வெளிவந்துள்ளது.

## மரணத்தின் பின் மனிதர் நிலை

அறிவுக்கடலில் வெளிவந்து பின் தனிநூலாக வெளிவந்தவற்றுள் இதுவும் ஒரு நூலாகும். 1911இல் அடிகள் இதன் முதற்பதிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்நூலில், இம்மை மறுமை, நுண்ணுடம்பின் காட்சி, அதன் உருவம், ஆவி வடிவில் நின்ற ஒரு மாதின் கடிதம், ஆவியான கிளாஸ்டன் துரையுடன் உரையாடல், ஆவி வடிவங்கள் தோன்றக் காரணம், பணப்பற்றுள்ள ஓர் ஆவியின் வரலாறு, ஹாம்லெட்டின் ஆவி வடிவம், கொலையைக் காட்டிய ஒருவனின் நுண்ணுடல்,

அறக்கடவுளின் ஒளியுடம்பு, ஒளி வானத்தின் இயல்பு, ஒளிவானின் உலகங்கள், நுண்ணொளியுலக வாழ்வு, வேறுபல உலகங்கள், கோளுலகங்கள், கடந்த பிறவியின் நினைவுகள், வரும்பிறவியின் நினைவுகள் போன்ற பகுதிகள் உள்ளன. இவை இந்நூலின் ஆழத்தையும் நுட்பத்தையும் விளக்குவனவாம்.

அடிகளார் இத்துறை நூல்களில் கொண்டிருந்த ஈடுபாடும், அதற்காக அவர் தேடிப்பயின்ற அயல்மொழிநூல்களின் பெருக்கமும் குறிப்பிடத்தக்கனவாம். இவற்றையெல்லாம் நல்ல தமிழில் நூலாக வெளியிட்டுத் தமிழர்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டுமென அவர் உழைத்தமையே பெரிதாம்.

மனிதரிடையே புதைந்துகிடக்கும் உணர்வுகள், நல்லொழுக்கங்கள், நல்வினை, தீவினைகள், போக்குகள் ஆகியவற்றை எண்ணிப்பார்த்தல் என்பதே அரிதாகும். இவற்றை நெறிப்படுத்தி உணர்ந்தால் இம்மையிலும் மறுமையிலும் நலம்பல பெறலாம் என்பதைக் கருதியே அடிகளார் இத்தகைய நூல்களைப் படைத்துள்ளார்.

## சமூகவியல்

சமூகவியல் உணர்வு கொண்டவர் அடிகளார். தமிழ் இன மாண்புகளைக் காக்க வேண்டுமென்பதில் மிகுந்த ஆர்வமுடையவர். இவர் இயற்றிய வேளாளர் நாகரிகம், தமிழர் மதம் போன்ற நூல்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கன.

## வேளாளர் நாகரிகம்

1922 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அடிகளார் 'தமிழர் நாகரிகம்' என்னும் தலைப்பில் உரையாற்றினார். அதுவே 1923இல் வேளாளர் நாகரிகம் என்னும் பெயரில் நூலாக வெளிவந்துள்ளது. வேளாளர் சூத்திரர் அல்லர் என்றும், ஆரியர் வருகைக்கு முன்னரே தமிழர் நாகரிக முதிர்வொடு விளங்கினர் என்றும், அத் தமிழரே தம்மைச் சார்ந்த ஆரியரைத் திருத்தினர் என்றும் இவர்தம் ஆய்வுரைகளாக இதில் எழுதியுள்ளார்.

''பழந்தமிழ் நூலாராய்ச்சியின்றி, வடநூற்பயிற்சி ஒன்றேயுடையார் ஆரியரை உயர்த்துத் தமிழரை இழித்துக் கூறுவன வெல்லாம் பொருந்தாமையும், தமிழரே எவ்வாற்றானும் உயர்ந்தோராதலும் இவை தம்மை ஆராயாதார்க்குப் புதுமையாய்த் தோன்றினும், யாம் ஆராய்ந்து சான்றுகளோடு உரைப்பனவற்றை

நடுநிலை வழாது நின்று காண்பார்க்கு எம் உரையின் மெய்ம்மை தானே விளங்குதல் திண்ணம்'' என அடிகள் இந்நூலின் முதற்பதிப்பின் முகவுரையில் குறிப்பிட்டுள்ளார்.

## பழைய வேதங்கள் என்பன தமிழ்மறைகளேயாம்

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகை யுறுதிப் பொருள்களைக் கூறிய பழைய தமிழ் நூல்களே நான்மறை எனத் தமிழ் மொழிக்கண் வழங்கப்பட்டன என்றும், தமிழ் மறைகள் கடல் கொண்டு மறைந்த பின்னரே, ஆரிய மொழிப் பாட்டுகள் வேதங்களெனப் பெயர் பெற்று ஆரியரது பெருமுயற்சியாற் பெரிது வழங்கலாயின என்றும் அடிகள் இந்நூலில் வலியுறுத்துகின்றார். இதற்குச் சான்றாக, பண்டைநாளிலேயே தமிழ்மொழி எழுத்துவடிவில் எழுதப்பட்டு வந்ததையும், தொல்காப்பியர் காலத்திற்கு முற்தொட்டே தமிழ் நூல்கள் வரி வடிவில் எழுதப்பட்டு வந்ததையும் குறிப்பிடுகின்றார்.

ஆகவே, ஏட்டுச் சுவடிகளாயிருந்த தமிழ் மறைகளும் ஏனை எண்ணிறந்த தமிழ் நூல்களுங் கடல்வாய்ப் புக்கமையே உண்மை நிகழ்ச்சியாதற்கு ஏற்புடைத்து என்றும், மற்று ஆரிய வேத காலத்தில் ஆரியர் தமது மொழியை எழுத்து வடிவில் எழுதத் தெரிந்தார் அல்லர் என்றும், அதனால் அவர் வேதப்பாட்டுகளையும் பிறவற்றையுங் கிடை கூட்டி நெட்டுருப் பண்ணியே பாதுகாத்து வந்தனர் என்றும், அவர்களுடைய ஆரிய நூல்கள் ஏட்டுச்சுவடிகளாயிருந்ததேயில்லை என்றும் கூறும் அடிகள், தொல்காப்பியம், திருக்குறள் போன்ற பழந்தமிழ் நூல்கள் வழிவழியே காப்பாற்றப்பட்டு வந்த வரலாறுகளையும் மிக விரிவாக இந்நூலில் ஆராய்ந்துரைக்கின்றார்.

## தமிழர் மதம்

சென்னைப் பச்சையப்பன் கல்லூரியில் 1940ஆம் ஆண்டு கூடிய அனைத்திந்தியத் தமிழர் மத மாநாட்டில் தலைமை தாங்கி அடிகள் பேசிய பேச்சே 'தமிழர்மதம்' என்னும் நூலானது. தொல்காப்பியம் முதலான பழந்தமிழ் நூல்களிலிருந்தும், இருக்கு வேதம் முதலிய வடநூல்களிலிருந்தும், பல ஆங்கில நூல்களிலிருந்தும் காணப்பெறும் அரிய கருத்துக்களைக் கொண்டது இந்நூல்.

தமிழர் இன்னாரென்பது, ஆரியர் இன்னாரென்பது, தமிழரின் உருவ அமைப்பு, திராவிட ஆரியர், மநு ஒரு திராவிட மன்னன், திராவிட ஆரிய வகுப்பு, ஆரியருட் சாதி வகுப்பு இல்லை,

திராவிட ஆரியரில் நாற்சாதி, தென்னாடு போந்த திராவிட ஆரியர், மதம் இன்னதென்பது, தமிழர் கொள்கை, கொல்லா அறம், காதலன்பு, பன்மனைவியர் மணம், பின்முறை மணம், புதல்வர்ப்பேறு, மறுமை வாழ்க்கை, கடவுளே தாய் தந்தை, ஒளி வடிவே கடவுள் வடிவு, ஒளி வடிவு சிவமும் உமையும், சைவ வைணவம், தமிழர்தந் திருக்கோயில்கள், திருக்கோயிற் தெய்வங்கள், திருவிழாக்கள், கார்த்திகை விளக்கு விழா, தீபாவலி, திருவாதிரைத் திருநாள், திருமணச்சடங்கு, திருமணச் சடங்கை நடத்தும் முறை, திருமண வேள்விச் சடங்கு, பிணச் சடங்கு, ஊழ்வினை, தவவொழுக்கம், தவப் பயிற்சி, சீர்திருத்தக் குறிப்புகள் என முப்பத்தைந்து தலைப்புகளில் பல செய்திகளை அடிகள் இந்நூலில் விவரிக்கின்றார்.

"இந்நூல், தமிழையுந் தமிழர்தம் மதத்தையும் பற்றி யாம் நாற்பத்தைந்தாண்டுகளுக்கு மேலாக ஆராய்ந்த ஆராய்ச்சியின் முடிவுகளை மிகச் சுருங்காமலும் மிக விரியாமலும் நன்கு விளக்க வேண்டுமளவுக்கு விளக்கிச் சொல்வதாகும். இதன்கட் காணப்படும் பொருள்களிற் பெரும்பாலன பலர்க்குப் புதுமையாகக் காணப்படலாம். அதற்குக் காரணம், நந்தமிழ் மக்களிற் பெரும்பாலார் கல்வியறிவு வாயாதவர்களாயுங், கல்வியறிவு வாய்த்த சிறுபாலாரும் பழந்தமிழ் நூல்களை ஆராய்ச்சிக் கண்கொண்டு ஆழ்ந்து நுணுகிப் பாராதவராய் வடநூற் பொய்வழக்குகளைத் தழீஇய பொய்க்கொள்கைகளில் மனம் அழுந்தப் பதிந்தவராயும் இருப்பதே யாகும்.

தமிழ்ப் பழ மக்களின் கொள்கைகளில் யாம் எடுத்து விளக்குதற்குப் புகுந்த ஒவ்வொன்றிற்கும், தொல்காப்பியம் முதலான மிகப்பழைய தமிழ் நூல்களிலிருந்தும், அங்ஙனமே மிகப்பழைய இருக்கு வேதம் முதலான வடநூல்களிலிருந்தும், பண்டைத் தமிழர்தங் கொள்கைகளின் உண்மையை உரம்பெற நாட்டும் இஞ்ஞான்றை ஆங்கில அரும்பெறல் நூல்களிலிருந்தும் வலிய சான்றுகள் எடுத்துக்காட்டியிருக்கின்றே மாதலால், யாம் இதன்கண் விளக்கியிருக்கும் பொருள்கள் அத்தனையும் மிகப்பழைய உண்மைப் பொருள்களேயல்லால், முன் இல்லாது புதியவாய் முளைத்த பொருள்கள் அல்லவென்றுணர்தல் வேண்டும்.

பிறவியிலேயே கண் குருடாகிப் பகலவன் ஒளியைக் காணாத ஒருவன், சதுமென இறைவனருளாற் குருடு நீங்கிப் பகலவனது பேரொளி விளக்கத்தைக் கண்டு புதிய இக்காட்சி மெய்யோ பொய்யோ வெனக்கருதி மருளுமாப் போலவே, பழந்தமிழ்ச்

சான்றோரின் மெய்க்கொள்கைகளாகிய பெருஞ்சுடரொளி விளக்கத்தைக் காண மாட்டாமல் அகக்கண் குருடுபட்ட இஞ்ஞான்றைத் தமிழர் பெரும்பாலார் இந்நூலால் அக்குருடு நீங்கி அம்மாப்பெருங் காட்சியைக் காணுங்கால் இது மெய்யோ பொய்யோ என மருளுதல் இயல்பன்றோ? ஆயினும், அவர் இந்நூலை ஒரு காலன்றிப் பலகாலும் உற்று நோக்கிப் பயில்வராயின், அம் மருட்சி நீங்கி ஈறில் இன்பம் எய்துவரென்பது திண்ணம்"[1] என இவ்வாறு இந்நூலின் தனித்தன்மையையும் அருமையையும் அடிகளே தம் முகவுரையில் குறிக்கக் காணலாம்.

## சீர்திருத்தக் குறிப்புகள்

தமிழர் மதம் என்னும் இந்நூலின் முடிவுரையாக, இக்காலத்திற்கின்றியமையாது வேண்டப்படும் சீர்திருத்தக் குறிப்புகளை அடிகளார் சுருக்கி வரைந்துள்ளார். அவற்றுள் சில வருமாறு:

1. தமிழர் தம் பழம்பெருமைகளை அறிந்தொழுகல் வேண்டும்.
2. தமிழர் தமிழ்மொழியைப் பிறமொழிக் கலப்பின்றித் தூய்தாய் வளனுற வளர்த்து வருதல் வேண்டும்.
3. தமிழ்ப் பெயர்களையே வழங்கல் வேண்டும்.
4. கொல்லாமை, புலாலுண்ணாமை என்னும் தமிழரின் தலையாய அறங்கள் இரண்டையும் தமிழர் எவ்விடத்தும் மறவாமல் நினைவு கூர்ந்து நடத்தல் வேண்டும்.
5. காதல் மணத்திற்குத் தமிழர் முதன்மை தரல் வேண்டும்.
6. தமிழர் தாம்பெற்ற புதல்வர்க்குக் கல்வியறிவைப் புகட்டி, அதன் வழி அவரே பொருள்தேடிக் கொள்ளுமாறு செய்விக்கவேண்டும். புதல்வர்க்குச் செல்வப் பொருளைத்தேடித் தொகுத்து வைத்து தீமை விளைவிக்கக் கூடாது.
7. தமிழர்தம் குடும்பச் செலவுக்கு மேற்பட்ட பொருளைத் தனித்தமிழ்க் கல்லூரி வைத்துத் தனித்தமிழும், பயன் மிகுதியும் உடைய ஆங்கிலமும் அதனையொத்த சில மொழிகளும் கற்பித்தற்கு உதவியாகக் கொடுத்தல் வேண்டும்.

---

1. தமிழர் மதம், முகவுரை, பக்.7-8.

8. இக்காலத்திற்கு வரைதுறையின்றி உணவளிக்கும் அறம் பயன் தராமையுடன், அறச்சோறு தின்பார் பல தீய செயல்கள் புரியுமாறும் அவரை ஏவுகின்றது. உறுப்பறைகட்கும், பிணிப்பட்ட ஏழைகட்குங், கல்விபயிலும் எளிய மாணவர்க்கும், நூல் ஓதுவிக்கும் வறிய ஆசிரியர்க்கும், புதியன பழையன ஆராய்ந்து பலதுறைகளிற் பயன்படும் நூல்கள் இயற்றும் நூலாசிரியர்கட்கும், சொற்பொழிவு நிகழ்த்தும் நாவலர்க்கும், தவவொழுக்கத்தில் நிற்குந் துறவிகட்கும் உணவும் பொருளும் வேண்டு மட்டும் உவந்து நல்குதலே உண்மையான அறமாகும்.

9. முழுமுதற் கடவுள் ஒன்றே யன்றிப் பல இல்லை என உறுதியுடன் வணங்கி வாழ வேண்டும்.

10. சிறு தேவதை வணக்கம், உயிர்க்கொலை, ஊனுணவை அறவே ஒழித்துவிடல் வேண்டும். இதனினுஞ் சிறந்த அறமும் சிறந்த தெய்வக் கொள்கையும் வேறில்லை.

11. தமிழ்நாட்டுத் திருக்கோயில்களில் பழைய முறைப்படி தமிழில் வழிபாடுகளை முறைப்படுத்தல் வேண்டும்.

12. திருக்கோயில்கள் திருமடங்களின் திரண்ட செல்வத்தில் ஒரு பெரும் பகுதியைத் தமிழ்க்கல்வி மேம்பாட்டிற்கும், மொழி ஆராய்ச்சி மற்றும் சமய நூலாக்கத்திற்கும் செலவிட முனைய வேண்டும்.

என இவ்வாறு பல சீர்திருத்தக் கருத்துக்களை அடிகளார் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார்.

## அறிவுரைக் கொத்து

பல ஆண்டுகளாக துண்டு அறிக்கைகளாகவும் சிறு நூல்களாகவும் வெளியிடப்பட்ட கட்டுரைத் தொகுப்பே இந்நூலாகும். முதல் பதிப்பு 1921இலும், இரண்டாம் பதிப்பு 1931இலும் மூன்றாம் பதிப்பு 1935இலும் வெளிவந்துள்ளன.

இந்நூலிலுள்ள சைவ சமயப் பாதுகாப்பு, திருக்கோயில் வழிபாடு, சிறு தேவதைகட்கு உயிர்ப்பலியிடலாமா, சீவகாருணியம், தமிழ்த்தாய், அறிவுநூற் கல்வி, உடன்பிறந்தார் ஒற்றுமை, கூட்டு வாணிகம், பெண் மக்கள் கடமை போன்ற கட்டுரைகள் முன்பே பல்லாயிரக் கணக்கான துண்டுத் தாள்களில் அச்சிடப்பட்டுத் தமிழ் வழங்கும் நாடுகள் எல்லாவற்றிலும் விலையின்றி வழங்கப்பட்டனவாம்.

அடிகள் தம் ஞானசாகரம் இதழில் அவ்வப்போது எழுதி வெளியிட்ட சில கட்டுரைகளும் இத்தொகுப்பிலுள்ளன. அவை, கடவுளுக்கு அருளுருவம் உண்டு, கல்வியே அழியாச் செல்வம், தமிழிற் பிறமொழிக் கலப்பு, பெற்றோள் கடமை என்பனவாம். இவற்றுள் கல்வியே அழியாச் செல்வம் என்பதும் பெற்றோள் கடமை என்பதும் அடிகளின் அருமைத் திருமகள் நீலாம்பிகை அவைக்களத்தில் விரிவுரை நிகழ்த்தும் பொருட்டு எழுதப்பட்டனவாகும் என இவ்விவரங்களை அடிகள் தம் முதற்பதிப்பின் முகவுரையில் குறித்துள்ளார்.

முதற்பதிப்பில் இல்லாத ஐந்து நீண்ட கட்டுரைகளை இரண்டாம் பதிப்பில் அடிகள் எழுதிச் சேர்த்துள்ளார். அவை, கடவுள் நிலை, கல்வியுங் கைத்தொழிலும், பகுத்துணர்வும் மாதரும், தனித்தமிழ் மாட்சி, தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும் என்பனவாம்.

## சிறுவர்க்கான செந்தமிழ்

சிறுவர்களுக்கு அறிவு புகட்டும் கதைகளும் கட்டுரைகளும் கொண்ட இந்நூல் 1934இல் வெளியிடப்பட்டது. சிறுவர்களுக்கான இந்நூலின் நடை எளிமையானது. அரிய சொல்லாய்வுகளை மிக எளிமையாக அடிகளார் இதில் விளக்கியுள்ளார்.

## சிந்தனைக் கட்டுரைகள்

ஜோசப் அடிசன் என்பார் ஆங்கிலத்தில் வரைந்த கட்டுரைகளைத் தழுவி அடிகளார் எழுதிய இந்நூல் 1908இல் வெளிவந்தது. அடிசன் வரலாறும், அடிகளின் இளமை வரலாறும் கொண்டது. 'முருகவேள்' என்னும் புனைபெயரால் அடிகள் எழுதிய முருகவேள் கண்ட காட்சி, படைப்பின் வியத்தகு தோற்றங்கள், கனவிற் கண்ட துன்ப மலை, முருகவேள் கனவிற் கண்ட ஓவியச் சாலை, மராடன் கண்ட காட்சி, பேய்களும் ஆவிகளும் என்னும் ஆறு கட்டுரைகளைக் கொண்டது இந்நூல்.

அடிகளாரின் மொழிபெயர்ப்புத் திறனுக்கு இந்நூல் ஓர் எடுத்துக்காட்டாகும்.

"ஆங்கிலத்தில் இவ்வுரைகளைப் பயின்றார்க்கன்றி ஏனையோர்க்கு, இவற்றை எழுதுதற்கண் யான் எடுத்த உழைப்பும் பிறவுஞ் சிறிதும்விளங்கா. தமிழ் ஒன்றே வல்லார்க்கு இது மொழிபெயர்ப்பு நூலென்பது சிறிதும் புலனாகாது. ஆங்கிலம்

பயிலுந் தமிழ் மாணவர் தமிழினும் புலமை எய்த வேண்டுவராயின், அவர்க்கு இக்கட்டுரைகள் மிகவும் பயன்படுமென்பது இதனை ஒரு சிறிது நோக்கினுந் தெற்றெனெ விளங்கும். ஆங்கிலப் பயிற்சியின்றித் தமிழில் வல்லராக விரும்புநர்க்கும் இது சொன்னயம் பொருணயங்களைத் தெளிவுபெறக் காட்டுமென்னுந் துணிபுடையேன்" என அடிகளாரே முதற்பதிப்பின் முகவுரையில் இதன் சிறப்பை எடுத்துரைத்துள்ளார்.

## வாழ்வும் வழிபாடும்

திங்களைத் தொழுதல், பகலவன் வணக்கம், திருவள்ளுவர் வாழ்க்கை, அறஞ்செய்கை, நிலையாமை, பழம்பிறவி நினைவு, அறிவும் உழைப்பும் விடாமுயற்சியும், மக்கள் வாழ்க்கை, காலதியன் கிரிசெலாள் கதை என்னும் தலைப்புகளில் பல்வேறு செய்திகளை உள்ளடக்கியது இந்நூல்.

## வழிபாடு

திங்களைத் தொழுதல் என்னும் தலைப்பில், இளங்கோவடிகள் பாடும் 'திங்களைப் போற்றுதும்' பாடல் தொடங்கி பல எடுத்துக்காட்டுகள் தந்து திங்கள் வழிபாட்டைப் போற்றுகின்றார் அடிகளார். அடுத்து, பகலவன் வணக்கம் பற்றிக் குறிப்பிடுமிடத்து, கடவுளின் தோற்றத்தையே ஒத்திருக்கின்ற ஞாயிற்றின் ஒளி வடிவைத் தொழுகிறார்.

## வாழ்வியல்

திருவள்ளுவர் வாழ்க்கை பற்றி விளக்கும் அடிகள் அன்பால் பிணைப்புண்ட கணவன் மனைவியின் பொறுப்பு மிக்க வாழ்வியலைப் புகலுகின்றார். திருவள்ளுவர் தம் வாழ்க்கையில் உழவுத் தொழிலும் வாணிகமும் செய்யாமல் ஏன் ஆடைநெய்து விற்று வந்தார் என்பதற்கும் காரணம் கூறுகின்றார். திருவள்ளுவரின் நூலாராய்ச்சிப் பணிக்குத் தடையாக அவருடைய தொழில் அமைந்துவிடக் கூடாது என்பதில் அவர் எவ்வளவு விழிப்பாக இருந்தார் என்பதையும் சுட்டுகின்றார்.

## மனம் ஒத்து நடக்க வல்ல மாதரார் மாண்பு

திருவள்ளுவர் தம் மனைவியார் மிகவும் மனம் ஒத்து நடந்தவராகல் வேண்டும்; இல்லையானால், அவர் தாம் கண்ட அறநெறியில் செல்லுதல் இயலாது என்கின்றார் அடிகள். இதற்கு,

அவர் காலத்து மாதர்கள் சிலரின் பண்புநலன்களையும் கோடிட்டுக் காட்டுகின்றார்.

"பார்மின்! இஞ்ஞான்றை மாதரார் பொற்சரிகை மிடைந்த பட்டாடை உடுப்பதிலும், கதிரொளி மிளிரும் மணிக்கலன் பூண்பதிலும், அறுசுவை மிக்க நொறுவைகள் உண்பதிலும், நறுமலர் புழுகு நாளும் அணிதலிலும், நாடகக்காட்சியும் நகைச்சுவைப் பாட்டும் நாடொறுங் கண்டு கேட்டுக் களிப்பதிலும் அடங்கா வேட்கை யுடையராய்த் தங் கணவரின் வருவாய்க் குறையினைச் சிறிதுங் கருதிப் பாராது, அவரைப் பெரும்பொருள் கொணரும்படி ஓவாது வருத்தி வருகின்றனர்! அதனால், ஆடவரிற் பலர், தீதும் பழியும் பாராது, தமது தகுதிக்கும் நிலைக்கும் ஏற்ப வருவாய்ப் பொருளளவில் அமைதி பெறாது, வரம்பு கடந்து சென்று, பிறரை ஏழை எளிய ரென்றும் நினையாது பல வகையால் நெருக்கி, அவரிடமிருந்து பிழிந்தெடுப்பது போல் எடுத்துப் பெற்ற தொகை கொண்டு தம் மனைவியர் வேண்டுமாறெல்லாம் நடந்து அவரை உவப்பிக்கின்றனர்!

இவ்வாறு தொடர்பாகத் தீநெறியிற் பொருள் தொகுக்கும் இவர்கள், தமக்கு மேலுள்ள தலைவர்களால் தமது குற்றங்கண்டு பிடிக்கப்பட்டுச் சிறையிடப்படுதலும் உண்டு; அதற்குத் தப்பினார் தம்மாற் பெரிதுந் துன்புறுத்தப்படுங் குடி மக்களிற் தீயராற் கொலை செய்யப்படுதலும் உண்டு; அதற்குந் தப்பினால் அச்சத்தாலும் கவலையாலும் ஓயா முயற்சியாலும் உள்ளம் வெந்து, என்புருக்கி நோய் முதலியன கொண்டு, ஆற்றொணாத் துன்புழந்து காலம் முதிரா முன்னரே மாய்தலும் உண்டு. எவ்வாறேனும் பிறன் கைப்பொருளை வெஃகி அறனல்ல செய்பவர் கெட்டொழிதல் திண்ணம்; அவரேயன்றி அவரது குடி முழுதும் மாயுமென்பதனையும் நாயனாரே,

**"நடுவின்றி நன்பொருள் வெஃகிற் குடிபொன்றிக்**
**குற்றமும் ஆங்கே தரும்"**

என்று அருளிச் செய்திருக்கின்றார். இங்ஙனமாக, ஆடவர் தந் தீவினைக்கு அவர்தம் மனைவியரின் அடங்காப் பேரவாவே காரணமாயிருத்தலால், அவர்தம் நல்வினைக்கும் அவர்தம் அவாவின்மையே காரணமாயிருக்கின்றது. இவ்வுண்மையினை,

**"மனத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்**
**வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"**

என்றும்,

**"மனைமாட்சி இல்லாள்கண் இல்லாயின் வாழ்க்கை**
**எனை மாட்சித் தாயினும் இல்."**

என்றும்,

**"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை."**

என்றும் நன்கு விளக்கியிருத்தல் காண்க. இங்கே கூறியது கொண்டு மகளிரெல்லாரும், திருவள்ளுவரின் மனைவியரைப் போல், மிக்க எளிய நிலையிலேயே காலங் கழிக்க வேண்டு மென்பது எமது கருத்தாகக் கொள்ளற்க. மகளிராவார் தங் கணவரின் வருவாய்க்குத் தக்கபடியாகவுந், தங்குடும்பத்தின் செல்வநிலைக்குத் தக்கபடியாகவும், உயர்ந்த முறையிலோ, அன்றி நடுவான முறையிலோ, அன்றி எளிய நிலையிலோ மனப்புழுக்கமின்றித் தங்கொழுநரோடு ஒத்து வாழ்க்கை செலுத்தல் வேண்டுமென்பதே எமது கருத்தாவதாம்" என்று அடிகளார் தம் எண்ணத்தையும் தெளிவாக்குகின்றார்.[1]

மேற்சொல்லியவாறு நாயனாரின் மனைவியார் தமது மிகச்சிறிய வருவாய்க்குத் தக்கபடி தங்கணவரோடு உளம் ஒருமித்துத் தமது வாழ்க்கையை எல்லா வகையிலும் இனியதாக நடத்தி வந்தாரென்பது,

**"அடிசிற் கினியாளை அன்புடை யாளைப்**
**படுசொற் பழிநாணு வாளை- அடிவருடிப்**
**பின்றுஞ்சி முன்னுணரும் பேதையை யான்பிரிந்தால்**
**என்றுஞ்சும் என்கண் எனக்கு."[2]**

என்று நாயனார் அவர் இறந்துபட்ட ஞான்று நெஞ்சம் நெக்கு நெக்குருகிப் பாடிய செய்யுளால் நன்கறியப்படும்" என இவ்வாறு மனம் ஒத்து நடக்க வல்ல மாதரார் மாண்பினை விளக்குகிறார் அடிகள்.

## அடிசிற்கினியாளும் அறிவுப் பெருக்கமும்

உடம்பினை நோய் அணுகாமற் பாதுகாத்து அறிவும் முயற்சியும் மிகுவதற்குத் துணையாவது செவ்விய உணவே என்பது அடிகளார் கண்ட முடிபாகும்.

---

1. வாழ்வும் வழிபாடும், பக். 33-35.
2. தொல். பொருள். கற்.12. இளம்.உரை எடுத்துக்காட்டுச்செய்யுள்.

"சுவையுடைய நறும் பண்டங்களைக் கூர்ந்து பார்த்து அமைதியாய் உட்கொள்பவர் எவராயினும் அவர்க்கு நுண்ணறிவு மிகும். அவர்க்கு நோய் வராது, அவர் நன்முயற்சி வாய்ந்தவராயிருப்பர். உணவுக்கும் அறிவுக்கும் நெருங்கிய தொடர்பு உளது. அறிவு மிக்காரெல்லாம் இன்சுவை கனிந்த உணவினையே சிறிதாய் அமைதியாய் அயின்று உள்ளம் மகிழ் பூத்திருப்பர். இதனாலன்றோ நாயனார் தமக்கு நறுஞ்சுவையுணவு அமைத்த தம் மனைவியாரின் அன்பையும் அறிவையும் அருந்திறனையும் முதன்முதல் வியந்தெடுத்துக் கூறினார். தங்கணவர்பாற் காதலன்புடைய மனைவியர் ஒரு சிலரே, தங்கணவரின் உடலோம்பவும் அவர் உள்ளம் உவக்கும் வகையானெல்லாம் இனிது ஒழுகவும் நன்காராய்ந்து உணவு அமைப்பதும், இல்வாழ்க்கை நடாத்துவதுஞ் செய்வர். அத்தகைய பேரன்பு வாயாத மகளிரோ அங்ஙனஞ் செய்ய மாட்டுவார் அல்லர். இதனை நாயனாரே,

**"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
**இல்லவள் மாணாக் கடை."**

என நன்கெடுத்து வற்புறுத்தினார். ஆகவே, மகளிர் உணவு சமைத்து தரும் முறையிலிருந்து அவர்தங் கணவர்பால் எவ்வளவு அன்பு வைத்துள்ளாரென்பது தெள்ளிதின் அறியப்படும்" என்கிறார்.[1] மேலும், மகளிருக்கான இல்லற நல்லொழுக்கங்களையும் நிரல்பட எடுத்துரைக்கின்றார்.

## மனத்துக்கண் மாசிலனாதல்

'அறஞ்செய்கை' என்னும் தலைப்பில் அறம் பற்றியும் அறம் செய் வகை பற்றியும் அடிகள் விளக்குகிறார்.

'அறம்' என்பது தமிழ்ச்சொல். இதனை வடநூலார் 'தர்மம்' என்பர். அறம் என்னுஞ் சொல் அறு என்னும் முதலிலிருந்து உண்டாயது; ஆகவே, ஒருவனுடைய நினைவு சொற் செயல்களின் தீமையை அறுப்பதே அறம் என்னுஞ் சொல்லுக்குப் பொருளாதல் பெறப்படும். ஒருவன் சொல்வனவுஞ் செய்வனவும் எல்லாம் அவன் எண்ணும் எண்ணத்தின் வழியாகவன்றி வேறு வகையில் நடைபெறுதல் இயலாது. தச்சன் ஒரு மரப்பாவை செய்யும் போதும், ஓவியன் ஓர் ஓவியம் வரையும்போதும், ஒரு சிறுவன் ஒரு நூல் ஓதும் போதும், ஒரு பாவலன் ஒரு செய்யுள் இயற்றும் போதும் அவர்கள்

---

1. வாழ்வும் வழிபாடும், ப. 38.

ஒவ்வொருவருந் தாந்தாஞ் செய்யுஞ் செயல்களில் தமது நினைவைப் பதிய வைத்தாலன்றி, அவர்கள் அவைகளைச் செய்து முடிக்க மாட்டாதவர் ஆவர். ஆகவே, தாம் ஒவ்வொருவரும் ஒன்றைச் சொல்லத் துவங்குவதற்கு முன்னும், ஒன்றைச் செய்யத் துவங்குவதற்கு முன்னும் அவைகளை முதலில் மனத்தின்கண் எண்ணியே சொல்லவுஞ் செய்யவுந் தொடங்குகின்றோம் என்பதனை நினைவு கூர்தல் வேண்டும். ஒருவன் சொல்லுஞ் சொல் தீயதாகக் காணப்படுமானால் அதனை எண்ணிச் சொன்ன அவனது எண்ணமும் தீயதாகவே யிருத்தல் வேண்டும்; ஒருவன் செய்யுஞ் செயல் தீயதாக இருக்குமாயின் அதனை எண்ணிச் செய்த அவனது எண்ணமுந் தீயதாகவே யிருத்தல் வேண்டும் என மிகவும் அறுதியிட்டு உரைக்கின்றார்.

எனவே, அறம் எனப்படுவது, ஒருவனுடைய சொற்செயல்களின் உள்ளே சினத்துக் கிளம்பிய பொல்லாங்கினை அறுத்து அகற்றுதற்குமுன், அவற்றிற்கு முதலான நினைவின்கட் சினைக் கொண்ட தீய வெண்ணத்தை அறுத்துக் களைவதாகும் என்னும் உண்மை நன்கு புலனாகின்றதன்றோ? இவ்வுண்மை கண்டன்றோ நந்தெய்வத் திருவள்ளுவர்,

**"மனத்துக்கண் மாசிலனாதல் அனைத்தறன்**
**ஆகுல நீர பிற."**

என்று அருளிச் செய்தார். எல்லா எண்ணங்களும் தோன்றுதற்கு நிலைக்களனான ஒருவனது மனங் குற்றமின்றித் தூயதாக இருக்குமாறு ஒருவன் செய்து கொள்வதே அவனுக்கு அறமாகும்; மற்று மனத்தூய்மை யின்றி அவன்தன் சொல்லாலும் செயலாலும் அறம்போற் செய்வனவெல்லாம் வெற்று ஆரவாரமே யாகுமல்லால் அவை அறமாதல் சிறிதுமில்லை என்பதே நாயனார் கருத்தாதல் தெற்றென விளங்கா நிற்கின்றது[1] என அறத்தை வலியுறுத்தும் அடிகளாரின் ஆழ்ந்த உரை விளக்கங்கள் உலக வாழ்வியலுக்கு மிக மிகத் தேவையானவைகளாகும்.

## யாக்கை நிலையாமை

மக்கள் வாழ்க்கையின் நிலையாமையை எடுத்துக்கூறும் அடிகளார், நில நடுக்கம், நீர்ப்பெருக்கு, எரிமலைப் பிழம்பு, கொள்ளை நோய்கள் போன்ற இயற்கைச் சீற்றங்களால் இந்திய

---

1. வாழ்வும் வழிபாடும், பக். 51, 54.

நாட்டிலும் பிறநாடுகளிலும் 1896ஆம் ஆண்டிலிருந்து ஏற்பட்ட உயிர் இழப்புகளையெல்லாம் மிக மிகத் துல்லியமாகக் கணக்கிட்டுரைக்கின்றார். ஆங்கில நூலாசிரியர் குறிப்பிடும் பல்வேறு நிகழ்ச்சிகளையெல்லாம் பட்டியலிடுகின்றார்.

நிலையாமையைப் பற்றி எண்ணிப் பார்ப்பது தேவையா என ஐயுறுவோருக்கு அடிகள் விரிவான விளக்கம் தருகின்றார்.

### எண்ணிப்பாராதவர்

நிலையாமையை எப்போது நாம் எண்ணிப்பார்த்தல் வேண்டும். எப்போது நாம் அதனை எண்ணிப்பார்த்தலாகாது என்று ஒவ்வொருவரும் பகுத்துணர்ந்து ஒழுகல் வேண்டும். நிலையாமையை எப்போதுமே எண்ணிப் பாராதவர்கள், செங்குத்தான உயர்ந்ததொரு மலையுச்சியின் ஓரத்தில் நிற்குங் கண்ணில்லாக் குருடன் ஒருவனையே ஒப்பராதலால், அவர் தமது வாழ்க்கையின் இடையிடையே வரும் அல்லல்களுக்கு ஈடுகட்டமாட்டாதவர்களாய் அறிவும் அன்பும் அறமும் இன்பமும் இன்றிப், புகழும் புண்ணியமுங் கடவுள் நேயமும் இன்றிச் சடுதியில் மாண்டுபோவர்; அங்ஙனஞ் சடுதியின் மாளாமல் நீண்டநாளிருப்பினும் அவரது இருப்புப் பயனற்ற முள் மரத்தின் இருப்புக்கே ஒப்பாகும். ஆசிரியர் திருவள்ளுவநாயனார்,

> **“அன்பகத் தில்லா உயிர்வாழ்க்கை வன்பாற்கண்**
> **வற்றன் மரந்தளிர்த் தற்று.”**

என்றருளிச் செய்தது உண்மையன்றோ?

### எண்ணிப் பார்ப்பவர்

இனி, நிலையாமையினையே எந்நேரமும் எண்ணிப் பார்ப்பவர்கள், செங்குத்தான அவ்வுயர்ந்த மலைமுகட்டின் மேலிருந்து கீழுள்ள பெரும்பள்ளத்தாக்கை நோக்கி உள்ளந்திகில் கொண்டு அதனை விட்டு அப்புறம் அகலாமல் அதன் கீழ்த் தன்வயமின்றியே விழுந்தொழியப் போகுங் கண்ணுடையா னொருவனையே ஒப்பராதலால் அவரும் அறிவும் அன்பும் இல்லாமல், அறமும் புண்ணியமுஞ் செய்யாமற் புகழுங் கடவுள் நேயமும் வாயாமற் சடுதியிலே மாய்ந்து போவர்; அன்றி அங்ஙனம் மாயாது நெடுநாள் இருப்பினும், அவரது இருப்பு

> **“ஏவவுஞ் செய்கலான் தான்தேறான் அவ்வுயிர்**
> **போஒம் அளவும்ஓர் நோய்.”**

என்று தெய்வத் திருக்குறள் கூறுமாறு இம்மாநிலத்துளதாம் ஒரு நோயின் இருப்புக்கே ஒப்பாகும்.

## இடையிடையே நினைக்க

ஆகவே, நிலையாமையை எண்ணிப் பாராதிருத்தலும் ஆகாது, எந்நேரமும் எண்ணிப் பார்த்திருத்தலும் ஆகாது. அற்றேல், அதனை எண்ணிப் பார்க்க வேண்டுவதெப்போதெனின்; அறிவுங் கல்வியுஞ் செல்வமும் வாய்த்தவர்கள் தாம் பெற்ற அவ்வரிய பேறுகளைப் பயன்படுத்துதலிற் சிறிதுங் காலந் தாழாமைப் பொருட்டு, வாழ்க்கை நிலையாமையினை இடையிடையே தமது நினைவுக்குக் கொணர்தல் வேண்டும்[1] என இவ்வாறு மக்கள் மனதில் உள்ள தடுமாற்றங்களுக்கும் தெளிவான வழிகாட்டுகின்றார் அடிகளார்.

## அறிவும் கல்வியும் செல்வமும்

ஒருவன் மிகச்சிறந்த அறிவுங் கல்வியுஞ் செல்வமும் பெறுவது, தன்னிலும் அறிவிற் குறைந்தார்க்கும், கல்லார்க்கும், பொருளின்றி வறுமைப்பட்டார்க்கும் அவற்றைக் கொண்டு உதவி செய்வதற்காகவே என்பார் அடிகள்.

ஒருவன் தான்பெற்ற அறிவைப் பிறர்க்குப் பயன்படுத்தாக்கால் அது அவன் தனக்கும் பயன்படாமலே போகின்றது. பிறர்க்குப் பயன்படுத்துகின்ற காலங்களில் மேன்மேல் விளக்கமுடையதாகிப் பல நுண்ணிய அரும்பொருள்களை அறிந்து பெருகும் அறிவு, அங்ஙனம் பயன்படுத்தப்படாத காலங்களில் தன்னுடைய விளக்கமும் வலிவும் இழந்து போகின்றன. அங்ஙனமே ஒருவன் தான் கற்ற கல்வியும் பிறர்க்குப் பயன்படுத்துந் தோறும் ஆழ்ந்து விரிந்த பெரும் பரப்புடையதாகும்.

இனிச், செல்வமுந் தீயவல்லா வழிகளில் அளவறிந்து செலவு செய்யப்படுமாயின், அது முதலிற் குறைவது போற் தோன்றினும், பின்னர் ஒன்று, பத்து, நூறு, ஆயிரமாய்ப் பெருகா நிற்கும்; எங்ஙன மென்றாற், பலர்க்கும் பயன்படும் நல்வழிகளில் அளவறிந்து அறிவாய்ப் பொருட்செலவு செய்கின்றவனையும், பிறர் துயர் பொறாமல் உளம் இரங்கி அற்றார்க்கும் அலந்தார்க்கும் அறஞ் செய்கின்றவனையுங், கல்விக்குங் கற்றார்க்கும் ஏராளமாகப்

1. வாழ்வும் வழிபாடும், பக். 73, 74.

பொருளுதவி புரிந்து கலையொளி எங்கும் பரவுமாறு செய்கின்றவனையும் நச்சி வந்து எல்லாரும் அவன் வேண்டுமாறெல்லாம் இசைந்து நடப்பராதலால், அவன் முதலிற் செய்யுஞ் செலவு பின்னர் அவற்குப் பெரும் பொருட்திரளை நல்குவது திண்ணமேயாம்.

ஆகவே, அறிவுங் கல்வியுஞ் செல்வமும் பிறர்க்குப் பயன்படுதலால் மட்டுமே தம்மை யுடையானுக்கும் பெரிது பயன்பட்டு என்றும் அழியாது நிலையாய் விளங்கும்; அவை பிறர்க்குப் பயன்படுதல் இல்லாக்கால் தம்மையுடையானுக்கும் பயன்படுதல் இலவாய் நிலையின்றி அழியும்.

எத்தனையோ பெரிய அறிவாளிகளும் கல்வியில் மிக்காரும் செல்வத்திற் சிறந்தாரும் பண்டைக் காலந் துவங்கி இன்றுகாறுங் கணக்கின்றி வந்தபடியாய்த்தான் இருக்கின்றனர். ஆனால், அவருள் தம் அறிவையுங் கல்வியையுஞ் செல்வத்தையும் பிறர்க்குப் பயன்படுமாறு செய்து வாழ்ந்தவர்களின் பெயரும் புகழுமே ஆங்காங்குக் குன்றின் மேலிட்ட விளக்குப்போல் எங்கும் மங்காமற் துலங்குகின்றன. மற்றுப் பயன்படாமல் அவற்றைத் தம்மோடு தாம் வைத்து மாய்ந்த எண்ணிறந்தாரையோ வெறும் பெயரளவாய்க் கூட எவருமே அறியார்.

ஆகவே, பிறர்க்குப் பயன்படாத அறிவு கல்வி செல்வங்கள் நிலையில்லனவாய் மாய்ந்து போதலையும், அவற்றையுடையவரும் அவை தம்மாற் தாமும் நலம் பெறாமல் நீர்மேற் குமிழிபோல் நிலையின்றி மறைந்து போதலையும் இடையிடையே நினைந்து பார்த்துப் பயன்பட ஒழுகுதற்கும் அறஞ் செய்தற்கும் முன்நிற்றல் வேண்டும்.

இவ்வாறு நிலையாமையினை எண்ணிப்பார்ப்பது அறஞ்செய்தற் பொருட்டாகவேயல்லாமல் வேறு எதற்கும் அன்றென்பது நன்கு தெளியப்படும். இது குறித்தன்றோ நாலடியாரிற்,

> **“புன்னுனிமேல் நீர் போல் நிலையாமை என்றெண்ணி**
> **இன்னினியே செய்க அறவினை-இன்னினியே**
> **நின்றான் இருந்தான் கிடந்தான்தன் கேள் அலறச்**
> **சென்றான் எனப்படுத லான்.”**

என்னும் அறவுரையும் எழுந்தது![1] என இவ்வாறு அடிகள் உரைப்பர்.

1. வாழ்வும் வழிபாடும், பக். 74, 75.

இவ்வாறு மக்கள் வாழ்வியலுக்குரிய பல எண்ணங்களையெல்லாம் பழந்தமிழ் நூல்களிலிருந்து எடுத்துக் காட்டி விளக்குவதில் தலைசிறந்து விளங்குகிறார் அடிகள்.

## பழம்பிறவி நினைவு

கடார (பர்மா) தேயத்துப் பௌத்தமத மக்களுடன் நெருங்கிப் பழகி, அவர்தங் கோட்பாடுகளையும் பழக்க வழக்கங்களையும் நன்காராய்ந்து அறிந்த H. Fielding Hall என்ற ஆங்கில ஆசிரியர் 'The Soul of a People' என்ற நூலில், ஒரு பௌத்த முனிவர் தமது முற்பிறவியினை நினைவு கூர்ந்து நடந்த உண்மை நிகழ்ச்சியினையும், அது போன்றே வேறு சில உண்மை நிகழ்ச்சியினையும், அது போன்றே அடிகள் தமிழில் மொழிபெயர்த்துரைக்கின்றார்.

## அறிவும் உழைப்பும் விடாமுயற்சியும்

பண்டை மக்கள் தமதறிவை மேலுக்கு மேற் பயன்படுத்தி உழைப்பும் விடாமுயற்சியும் உடையராய் நடந்ததாலேயே மனித இனம் தழைத்தோங்கி வளர்ந்து வருகின்றதென்பதை அடிகளார் அறிவியல் அடிப்படைகளோடு இக்கட்டுரையில் விளக்குகின்றார். மரபு போற்றலுக்கும் இவை மூன்றும் மிகமிகத் தேவை என வலியுறுத்துகின்றார்.

இவ்வாறு அடிகளாரின் நூல்கள் முழுமையும் அவர்தம் புலமைச் சிறப்பு மேலோங்கியே காணப்பெறும். அடிகளின் ஆராய்ச்சித்திறன் இக்கால ஆராய்ச்சிகளுக்கெல்லாம் முன்னோடியே எனலாம்.

புலமைக் களஞ்சிமாகத் திகழ்ந்த மறைமலையடிகள் பற்றி அறிஞர் பலர் தம் பாராட்டுதல்களைத் தெரிவித்துள்ளனர். ஆயினும், மொழிஞாயிறு பாவாணர்அவர்களின் 'மறைமலையடிகள் பல்துறையாற்றற் பதிகம்'[1] இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

**1. பேராசிரியர்**

**நூலும் நுவல்வும் நுணங்குரையும் நன்பதிப்பும்**
**சாலும் இதழும் சமமாக-மேலுயர்வுப்**
**பேரா சிரியர் பெரும்பேர் மறைமலையார்**
**நேரா ருளரிந் நிலத்து.**

---

1. மறைமலையடிகள் நூற்றாண்டு விழாமலர், பாமாலை, 1-2.

2. பெரும்புலவர்

தொல்காப் பியமுதலாந் தொன்னூலும் பின்னூலும்
பல்காற் தனிப்பாடல் பட்டயமும் - ஒல்காப்
பெரும்புலவ ருள்ளும் பெரியார் தனியே
அரும்பொன் மறைமலை யார்.

3. பாவலர்

உரைநடையும் பாவும் ஒருங்கே சிறந்த
விரைவுடையார் சில்லோர் வியன்பார்-மறைமலையார்
செம்மைப் பொருளணிசேர் செய்யுள் திருவொற்றி
மும்மணிக் கோவை முறை.

4. ஆராய்ச்சியாளர்

நுண்மதி கல்வி நுடங்காத் தறுகண்மை
நண்ணிலை மன்னலம் நல்வாய்மை-திண்முயற்சி
சாலுமா ராய்ச்சிச் சதுரர் மறைமலையார்
பாலையும் முல்லையும் பார்.

5. மும்மொழிப்புலவர்

மொழியும் இலக்கியமும் முத்தமி ழும்பேச்
சழியும் வடமாங் கிலமும்-கழிபுலமை
கொண்ட மறைமலையார் கோன்மை தமிழ்நிலமுன்
கண்டதும் கேட்டது மில்.

6. மொழிபெயர்ப்பாளர்

வேற்று மொழியின் விரகன் விழுப்பனுவல்
ஆற்று மரபும் அரும்பொருளும்-தேற்றி
அடிகள் மொழிபெயர்க்கும் ஆற்றற்குச் சான்று
முடிகொள்ளுஞ் சாகுந் தலம்.

7. சொற்பொழிவாளர்

இன்குரலும் இன்சொல்லும் இன்னிசையும் இன்கதையும்
நன்பொருளும் ஏதுவுடன் நற்காட்டும்-தென்பாய்ப்
பகைவரு முண்ணாது பன்னாளும் வேட்கும்
வகையடிகள் சொற்பொழிவு வாய்ப்பு.

8. எழுத்தாளர்

கடிதமும் கட்டுரையும் கண்டனமும் கற்கும்
படியெழுதும் பாடமும் பன்னூல் - நடிகதையும்
மற்றோர் உரைமறுப்பும் மன்னும் பதினவரை
வற்றார் மறைமலை யார்.

9. பல்கலைச் செல்வர்

தோற்றும் தொலையுணர்வு தூய மனவசியம்
ஆற்றும் அறிதுயில் ஆர்வாழ்வு-மாற்றும்
மறுமை மறைமலையார் மாணுங் கலைகள்
பொறுமை யுடன்கற்ற போக்கு.

10. தனித்தமிழ் தந்தையர்

மூவா யிரமாண்டு மோதும் வடமொழியாற்
சாவாந் தகைநின்ற தண்டமிழை-மேவாக்
குமரித் தனிநிலைக்குக் கொண்டுவந்த அப்பர்
அமரர் மறைமலை யார்.

என இவ்வாறு பாவாணர் புகழ்ந்துரைப்பது போன்றே, மறைமலையடிகள் ஒரு பெரும் அறிவுச் சுடராய், அறிஞருக்கறிஞராய்த் திகழ்ந்தார். மேலும் "தேனும் பாலும் போன்ற தூய தீந்தமிழ்ச் சொற்களால் உரைநடையும் செய்யுளுமாகிய இரு வடிவிலும் பல்துறை தழுவி ஐம்பதிற்கு மேற்பட்ட அருநூலியற்றி முதலிரு கழக நிலைக்குத் தமிழைப் புதுக்கி அதற்குப் புத்துயிர் அளித்தவர் மாநிலத்தில் மக்கள் உள்ளவரை மறையாப் புகழ்பெற்ற மறைமலையடிகளே"[1] என மொழிஞாயிறு மொழிவதும் இவண் எண்ணி மகிழத்தக்கதாம்.

1. பாவாணர், வடமொழி வரலாறு, முன்னுரை.

# சிவநெறிச் செல்வர்

இறைவனுக்கும் மனிதனுக்கும் உள்ள இடைவெளியை நீக்கி மனிதனைப் பக்குவம் பெறச் சமைப்பது சமயம். இறைவனை ஒளிவடிவாகவும் அன்பு வடிவாகவும் உணர்ந்து தொழுவது சைவ சமயம். ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ் சோதியாக விளங்கும் சிவபரம்பொருளை முதன்மையாகக் கொண்டு விளங்குவது சைவ சமயம். பிற சமயங்களைக் குறை கூறாமலும், தன்னிகரில்லாது விளங்குவது சைவ சமயம். சாதி, இனம், மொழி கடந்தும் நிறை குடம் போன்றது சைவ சமயம். எல்லாரிடத்தும் அன்பு பேணுதலும், பிறர் துன்பத்தைத் தன் துன்பமாக ஏற்று இரங்கி உதவுதலும், பொறுமையும், கருணை உள்ளமும் கொண்டவரே சைவர் ஆவர். சங்க காலத்திற்கு முன்னும் பின்னும் தழைத்தோங்கியிருக்கும் ஒப்பற்ற இத் திருநெறியே சிவநெறி ஆகும்.

இயற்கையிலேயே சிவனியச் சார்புடைய குடியிற் பிறந்த வேதாசலம் என்னும் மறைமலையடிகள் தம் வாழ்நாள் முழுமையும் சிறநெறிச் செல்வராகவே வாழ்ந்தவர் ஆவார்.

## இளந்தைப் பருவத்தில் சிவனியப் பற்றுமை

அடிகளாரின் இளந்தைப் பருவ வழிகாட்டிகளுள் ஒருவர் மதுரை நாயகம். இவர் சிவனியப்பற்றில் தலைப்பட்டவர். இவர் வழியே சோம சுந்தர நாயகரின் தொடர்பை அடிகள் பெற்றார். அவரையே தம் குருவராகக் கொண்டார்.

“இளமைக்காலத்தில், அதாவது பதினேழாண்டு வரையில் மாயாவாத நூற்பயிற்சியிலே உழன்று, சைவ சித்தாந்த வுண்மை சிறிதும் அறியாதிருந்த எளியேமும், நாயகரவர்கள் ‘நாகை நீலலோசனி’ ‘திருச்செங்கோட்டு விவேதிவாகரன்’ என்னும் கிழமைத்தாள்களில் அஞ்ஞான்று எழுதி வெளியிடுவித்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைக் கற்றும், அவர்கள் அஞ்ஞான்று நாகபட்டினத்தில் அடுத்தடுத்துப் போந்து தேன்மாரியெனப் பொழிந்த விரிவுரைகளைக் கேட்டும் மாயா வாதம் முதலான மதப்பொய்ம்மையுஞ் சைவ சித்தாந்த மெய்ம்மையும் பகுத்துணர்ந்து தெளிந்து, சைவ சித்தாந்தம் புகுந்து, எல்லாம் வல்ல தனிப்பெருந் தெய்வமான சிவபிரான் திருவடிக்குத்

தொண்டு செய்யும் பேறு பெற்றேம்"[1] என அடிகளாரே தம் சிவனியச் சார்பினை விளக்குவர்.

அடிகளாரின் இருபத்திரண்டாம் அகவையில் கொடிய நோய் ஒன்று வருத்தியது. அதனைத் தீர்த்தருளுமாறு "திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை" இயற்றினார். இவர்தம் பழந்தமிழ்ப் புலமையும் சமயத்திறமும் விளங்க அமைந்த நூல் இது. அடிகளாரின் இதழாகிய ஞானசாகரம் (அறிவுக்கடல்) முதல் இதழிலேயே சைவம், சைவநிலை என்னும் கட்டுரைகளை வெளியிட்டார். அடிகள் அன்று தோற்றுவித்த "சைவ சித்தாந்த மகாசமாசம்" என்ற அமைப்பே இன்று சைவசித்தாந்தப் பெருமன்றமாகத் திகழ்கிறது. நாடெங்கும் சென்று அடிகள் செய்த பொழிவுகளுள் பெரும்பாலன சிவனியச் சார்பின. அவை நூல்களாகவும் வெளிவந்துள்ளன. அவற்றுள் சில இவண் குறிக்கத்தக்கன.

## திருக்கோயில் வழிபாடு

"ஆலயந் தொழுவது சாலவும் நன்று" என ஔவையார் கூறியதன் விளக்கத்தை இக்கட்டுரையில் விளக்குகிறார் அடிகள். உலக வாழ்வெனுந் துன்பத்திற் கிடந்து உழன்று கொண்டு கடவுளை நினைதற்கு இடமின்றி வருந்தும் மக்களுக்கு இடையிடையே நம் ஐயனைப் பற்றிய எண்ணத்தை எழுப்பும் பொருட்டாகவே ஓர் ஊரிற் பல இடங்களிலும் கோயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. கோயில்களே இல்லாத நாடு நகரங்களில் இருப்பவர்களுக்குக் கடவுளைப் பற்றிய நினைவு சிறிதுந் தோன்றாதாகையால் அவர்கள் விலங்குகளினுங் கடைப்பட்டவராவார்கள்; உயர்ந்த நினைவில்லா அவர்கள் தங்கியிருக்கும் அவ்விடங்கள் விலங்குகள் குடிகொண்ட காடுகளையே ஒப்பனவாகும் என்று கூறுவர் அடிகள்.

திருக்கோயிலிலுள்ள திருவுருவங்கள் இறைவனை யறிதற்கு வைத்த குறிகளே யல்லாமல் வேறல்ல என்ற உண்மையை விளக்குகிறார் அடிகள். பகலவன் ஒளியில் எங்கும் உள்ள நெருப்பானது காந்தக் கண்ணாடியில் விளங்கித் தோன்றினாற்போல, எங்குமுள்ள இறைவன் அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி இத் திருக்கோயில் திருவுருவத்தின் கண்ணும் விளங்கித் தோன்றினான் என்று உண்மையாக எண்ணி வழிபடுவார்க்கு அவன் அங்குமுனைந்து தோன்றி அருள் புரிதல் திண்ணம் என்கிறார் அடிகள்.

---

1. சோமசுந்தர நாயகர் வரலாறு, பக். 13,14.

## சைவ சமயப் பாதுகாப்பு

சைவ சமயம் என்பது 'சிவத்தை ஆராய்ந்து அறிந்த பொழுது அல்லது கொள்கை' என்ற பொருள்படும்; இந்தக் கொள்கையைப் பாதுகாத்துக் கொள்ளுதலே சைவ சமயப் பாதுகாப்பு ஆகும் என இக்கட்டுரையைத் தொடங்கும் அடிகளார் பல சமயச் சிந்தனைகளை விளக்குகின்றார். உயர்ந்த சைவ சமயத்தைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிகள் பலவற்றையும் பின்வருமாறு கூறுகின்றார்.

சைவ சமயத்திற் பிறக்கும் பெருந்தவம் பெற்றவர்கள் முதலில் தம்மால் வணங்கப்பட்டுவரும் முழுமுதற் கடவுளான சிவத்தின் இயல்புகளை அறிந்தோரிடத்தும் நூல்களிடத்துங் கேட்டும் பயின்றும் நன்கு அறிந்து கொள்ளுதல் வேண்டும்.

பெண்பாலாரே பிள்ளைகளின் நல்லறிவு வளர்ச்சிக்கும் நல்லொழுக்கத்திற்குங் காரணராக இருத்தலாற், பெண்மக்களுக்குச் சைவசமய நூல்களையும் நல்லொழுக்கங்களையும் அறிந்தோர் வாயிலாகக் கற்பித்து வருதல் வேண்டும்.

ஆண்பிள்ளைகள் மற்றக் கல்வியொடு சைவ சமய உணர்ச்சியும் பெற்றுவரும்படி கல்விச்சாலைகள் ஆங்காங்குத் திறப்பித்து, அதனைச் செவ்வையாகப் புகட்டி வருதல் வேண்டும்.

தேவார திருவாசகங்களுக்குப் பொருள் தெரிந்து கொள்வதோடு, இனிய குரலில் அவற்றை இசையுடன் ஓதுதற்கும் ஒவ்வொருவரும் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

ஓர் உயிரைக் கொலை செய்யாமையுங், கொன்று அதன் ஊனைத் தின்னாமையுஞ் சைவ சமயத்திற்குச் சிறந்த அறமாயிருத்தலால், எல்லாருஞ் சீவகாருணிய வொழுக்கத்தைக் கைப்பற்றியொழுகும்படி எவ்வெவ் வகையில் முயற்சி செய்தல் வேண்டுமோ அவ்வவ் வகையாலெல்லாஞ் செய்து அதனை எங்கும் பரவச் செய்தல் வேண்டும்.

தமிழ் மொழியின் அமைப்பும் அதன் இயற்கையுஞ் சைவ சமய உண்மையோடு மிகவும் ஒன்றுபட்டிருத்தலால், அதனை எல்லாரும் நன்றாகக் கற்று வேறு மொழிக்கலப்பில்லாமற் செவ்வையாகப் பேசவும் எழுதவும் அதிற் புதிய புதிய நூல்கள் இயற்றவும் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

தமிழ் இன்பவடிவாய் விளங்குஞ் சிவத்தோடு ஒத்த இன்பம் வாய்ந்த தெய்வ மொழியாம். என்றுஞ் சைவ சமயிகள்

இவ்வுண்மையைக் கருத்திற் பதியவைத்து அதனை வளரச் செய்தற்கான எல்லா முயற்சிகளையுங் குறைவறச் செய்தல் வேண்டும்.

சைவ சமயிகளான அறிஞரும் அறிவுநெறியிற் தமது கருத்தை மிகுதியாய்ச் செல்லவிடுதல் வேண்டுமேயல்லாமல், வெறுந் தொழில்நெறியிற் புகுந்து ஒப்பனைகளின் பொருட்டுந் திருவிழாக்களின் பொருட்டும் ஆயிரக்கணக்காகவும் நூறாயிரக் கணக்காகவும் போட்டி போட்டுக்கொண்டு பொருள்களைச் செலவழித்துச் செருக்கடையலாகாது.

எல்லா உலகங்களையும் எல்லாப் பொருள்களையும் உடைய பெருஞ்செல்வரான நம் ஆண்டவனுக்கு, ஏழை மக்கள் நல்ல அல்லா வழிகளில் ஈட்டிய பொருளைத் திரள் திரளாகக் கொடுத்தாலும், அவன் அதனைக் கண்டு ஏமாறித் தனது அருளைக் கொடுத்து விடுவன் அல்லன். நம் ஐயனுக்கு வேண்டுவன அன்பும் அன்பொழுக்கமுமேயாகும். அதுபற்றியன்றே திருநாவுக்கரசு நாயனாரும்,

**"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே**
**புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்**
**பொக்கர் மிக்கவர் பூவும் நீருங்கண்டு**
**நக்கு நிற்பர் அவர்தம்மை நாணியே."**

என்று அருளிச் செய்தனர்.

ஆதலால், திருக்கோயில்களுக்குச் செய்யும் செலவை இயன்றமட்டுஞ் சிறுகவே செய்து, மிச்சப் பெரும்பொருளைச் சிவவறிவு வளர்ச்சிக்குஞ், சிவனடியார்கட்கும், பழுதுபட்டகோயில்கள் சாவடிகள் குளங்கள் சோலைகள் பாட்டைகள் முதலியவற்றின் திருப்பணிகட்குஞ் செலவு செய்து சைவர்கள் எல்லாருஞ் சிவபெருமான் திருவருளைப் பெறுவார்களாக, என இவ்வாறு சைவ சமயப் பாதுகாப்புப் பற்றி அடிகள் கூறியுள்ள அறிவுரைகள் அனைத்தும் மிகவும் வெளிப்படையான எண்ணங்களாகும். இவ்வாறே அடிகளாரின் பிற சமய எண்ணங்களையும் அறிகிறோம்.

## கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா

மெய்யல்லாத கோட்பாடுகளைச் சைவ சமயமாகப் பிறழ உணர்ந்து அவற்றையே சைவ சமயமென நம்மனோர் மயங்கிக் கிடத்தலானும், பொய்யை மெய்யாக மயங்கிக் கிடக்கும் வரையில் அம் மயக்க உணர்ச்சிக்கு ஏதுவான அறியாமை நம்மை விட்டு

நீங்காமையின் நாம் எல்லாம் வல்ல சிவத்தின் நிலையை உணர்ந்து இப்பிறவித் துன்பத்தை நீக்குதலாகாமையானும், அடிகளார் 'கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா' என்பதனைப் பொருளாகக் கொண்டு திருச்சி சைவ சித்தாந்த சபை ஆண்டு விழாவில் 15-10-1927இல் சொற்பொழிவு நிகழ்த்தினார். அதுவே 1929இல் நூலாக வெளிவந்தது.

## பிறவி எடுத்ததன் நோக்கம்

முதலில், பிறவி எடுத்ததன் நோக்கம் பற்றிப் பேசுகின்றார். இவ்வுலக வாழ்க்கையானது நமக்கு ஒரு பள்ளிக்கூடமாயிருக்கின்றது. பள்ளிக்கூடத்திற் கல்வி பயிலும் மாணவர்கள் ஆசிரியன் உதவி கொண்டு மெய்ந்நூல்கள் பலவற்றைப் பயின்றும், தம்மொடு பயிலும் மாணாக்கர்களுடன் கல்வித் துறைகளை உசாவி ஐயந் தீரப்பெற்றும் அறிவு விளங்கி வருதல் போல, நாமும் இவ்வுலக வாழ்க்கைத் துறைகள் ஒவ்வொன்றிலும் பேரறிஞர் பற்பலரின் உதவியால் உண்மைகள் பற்பலவற்றை உணர்ந்தும், நம்மோடொத்த மக்கள் ஓவாது செய்யும் பலதிற முயற்சிகளாற் பலதிற வாழ்க்கை நலங்களைப் பெற்றும் நாளுக்குநாள் அறிவிலும் இன்பத்திலும் மேன்மேற் சிறந்து வருகின்றனம்.

இவ்வாற்றால் நம்மைப் பழைமை தொட்டுப் பற்றிக் கொண்டு வரும் அறியாமையும் அதன் வாயிலாக வருந்துன்பமும் படிப்படியே நீங்கப்பெற்று வருகின்றோம். இங்ஙனமாக அறியாமை நீக்கமும் அறிவுப் பேறும் அடைதலே இப்பிறவி எடுத்ததன் நோக்கமாய்க் காணப்படுதலின், அவ் அறியாமையைக் களைந்து அறிவுபெறுதற்குரிய உண்மைக் கோட்பாடுகளையே நாம் ஆராய்ந்து கைக்கொள்ளல் வேண்டும் என்கிறார் அடிகள்.

## கடவுள் நிலை

அடுத்து, 'கடவுள் எல்லாவற்றையும் கடந்து நிற்கும் நிலை' பற்றிக் கூறுமிடத்து, கடவுள் நிலை யாதெனவும், அந்நிலைக்கு மாறான கொள்கைகள் யாவையெனவும், அம்மாறான கொள்கைகள் சைவமாகாதவாறு யாங்ஙனமெனவும் விரிவாக ஆராய்கின்றார்.

இவ்வுலகம், மண்ணுந் தண்ணீரும் தீயுங் காற்றும் வானுமென்னும் ஐம்பெரு முதற்பொருள்களால் ஆக்கப்பட்டிருக்கும் உண்மையை இற்றைக்கு ஐயாயிரத்து ஐந்நூறு ஆண்டுகட்கு முன்னமே இருந்த நம் பழந்தமிழாசிரியரான தொல்காப்பியனார்,

**"நிலந்தீ நீர்வளி விசும்பொடு ஐந்துங்**
**கலந்த மயக்கம் உலக மாதலின்"**

என்றும், இவர் காலத்துக்கு ஐந்நூறு ஆண்டு பிற்பட்டு வந்த தலைச்சங்கத்து நல்லிசைப் புலவரான முரஞ்சியூர் முடிநாகராயர்,

**"மண் திணிந்த நிலனும்**
**நிலனேந்திய விசும்பும்**
**விசும்புதைவரு வளியும்**
**வளித்தலைஇய தீயுந்**
**தீமுரணிய நீருமென்றாங்கு**
**ஐம்பெரும் பூதத்து இயற்கைபோல"**

என்றும் கூறியிருப்பது அவர்தம் பேரறிவுப் பெற்றியைக் காட்டுகின்றது என அடிகள் உணர்ந்து பாராட்டுகின்றார்.

இத்தகைய உலகத்தையும் இவ்வுலகத்தில் வாழும் உயிர்களையுங் கடந்து நிற்பவரே கடவுள் என்ற கோட்பாட்டையும் வலியுறுத்துகின்றார்.

**"வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்"**

எனத் தொல்காப்பியனார் கூறுவதையும்,

**"முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே**
**பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே."**

என மணிவாசகப் பெருமான் கூறுவதையும்,

**"பிறவா யாக்கைப் பெரியோன்"**

என இளங்கோவடிகள் கூறுவதையும் விளக்குகின்றார்.

மேலும், கடவுளின் பொது இலக்கணத்தையும் எடுத்துரைக்கின்றார்.

## கடவுளின் பொது இலக்கணம்

**"கேட்டாரு மறியாதான் கேடொன் றில்லான்**
**கிளையிலான் கேளாதே எல்லாங் கேட்டான்**
**நாட்டார்கள் விழித்திருக்க ஞாலத் துள்ளே**
**நாயினுக்குத் தவிசிட்டு நாயி னேற்கே**
**காட்டா தனவெல்லாங் காட்டிப் பின்னுங்**
**கேளா தனவெலாங் கேட்பித் தென்னை**

**மீட்டேயும் பிறவாமற் காத்தாட் கொண்டான்**
**எம்பெருமான் செய்திட்ட விச்சை தானே."**

என மாணிக்கவாசகப் பெருமான் அருளிய செய்யுளின் சொற்பொருளை ஒவ்வொன்றாக ஆராய்ந்து விரித்துரைக்கின்றார் அடிகள். இவற்றை விளக்குமிடத்து, அமெரிக்க நூலாசிரியர் வில்லியம் ஜேம்ஸ் (Professor William James, The varieties of Religious Experience, pp.445-447), திருவள்ளுவர், திருமூலர், தாயுமானவர் போன்றோரின் நூல்களையும் ஒப்பிட்டுரைக்கின்றார்.

பௌத்த சமண ஒழுக்க முறைகள் உண்மையில் உலகத்தவரைத் திருத்தமாட்டாமை குறித்தும் விவரிக்கின்றார். ஆயின், சைவ சமயம் நல்லொழுக்கத்தை வலியுறுத்துவது பற்றியும், நல்லொழுக்கத்துக்குக் கடவுள் உணர்ச்சி முதன்மை என்பதைச் சுட்டுவது பற்றியும் அடிகள் நன்கு விளக்குகின்றார்.

## கடவுளிடத்து அன்பும் அச்சமும்

மக்களாகிய நாம் கடவுளுணர்ச்சியுடையராய் அக்கடவுளிடத்து அன்பும் அச்சமும் உடையராய் ஒழுகினாலன்றி, நாம் நல்லொழுக்கத்தில் பிறழாது நிற்றல் இயலாதென்பதையும் எடுத்துக் காட்டுகளால் விளக்குகின்றார் அடிகள்.

இவ்வாறு மக்களியற்கையை நன்கு ஆராய்ந்துணர்ந்த நம் தொல்லாசிரியர்கள் நல்லொழுக்கத்தை எடுத்து வற்புறுத்துங்கால்,

**"தன்நெஞ்சு அறிவது பொய்யற்க பொய்த்தபின்**
**தன்நெஞ்சே தன்னைச் சுடும்."**

என்றும்,

**"வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்கள்**
**ஐந்தும் அகத்தே நகும்."**

என்றும்,

**"வஞ்சித் தொழுகும் மதியிலிகாள் யாவரையும்**
**வஞ்சித்தோ மென்று மகிழன்மின்-வஞ்சித்த**
**எங்கு முளனொருவன் காணுங்கொல் லென்றஞ்சி**
**அங்கங் குலைவ தறிவு."**

என்றும், தம் உள்ளத்து உள்ளுணர்வாய் மறைக்கப்படாமல் விளங்கி நின்று நல்லது தீயது பகுத்துக் காட்டும் இறைவனொருவன் உளன்

என்பதை நினைந்து அஞ்சி ஒழுகுக என்று அருளிச் செய்வாராயினர் என்பதையும் அடிகளார் நயம்பட எடுத்துரைக்கின்றார்.

கடவுளிடத்து அன்பும் அச்சமும் உடையோரெல்லாம் நல்லராய் ஒழுகுவதையும் சுட்டுகின்றார்.

## கடவுள் நிலைக்கு மாறான சில புராண நூல்கள்

சில பழம்புராணங்கள் கடவுள் உண்மையை நுண்ணறிவில்லார்க்கு விளங்கச் செய்தற்பொருட்டு அறிவுடை மேன் மக்களாற் கட்டப்பட்ட நல்ல கதைகளை உள்ளடக்கியனவாகவும் இருக்கின்றன. இச்சிறந்த பழம்புராணங்கள் சிலவற்றின் நல்ல கதைகளையும், பின்வந்த தீய அறிவினர் தத்தம் தீய கருத்துக்கு வேண்டியபடியெல்லாந் திரித்து, அவற்றின் உயர்ந்த நோக்கங்களையும் பாழ்படுத்திவிட்டனர். இப்போது வழங்கும் புராணங்களெல்லாம் பழைய சில புராணங்களின் உயர்ந்த கருத்துக்களைத் திரிவு செய்தவைகளும், அவற்றுக்கு மாறாய் எழுந்தவைகளும், அவற்றின் உண்மை நோக்கத்தைப் பாழ்படுத்த முனைந்தவைகளுமேயாகும் என்பது அடிகளாரின் கருத்தாகும். இவ்வகையில், கொள்ளத்தகும் பழங்கதைகள் இவை என்பதையும், தள்ளத்தகும் பிறகதைகள் இவை என்பதையும் தனித் தனியே இனம் பிரித்துக் காட்டுகின்றார்.

## அறிவுடையோர் கடவுள் பற்றி அமைத்த கதைகள்

கற்றவர் முதற் கல்லாதவர் ஈறான எத்திறத்தவர்க்கும் கதைகள் கேட்பதில் ஆர்வம் மிகுதியுண்டு. இதை உணர்ந்தே பழைய அறிஞர்களுங் கடவுளைப் பற்றிய உயர்ந்த உண்மைகளை உணர மாட்டாத பொதுமக்களுக்கு அவர்கள் எளிதிலே உணரத்தக்க இனிய நல்ல கதைகளிலே அவ்வுண்மைகளைப் பொதிந்து வைத்து அமைத்துப் புகட்டுவாராயினர். இவ்வகையிலேயே சைவசமயச் சான்றோர்களும் கடவுள் பற்றிய பழைய கதைகளை எடுத்துச்சொல்லி மக்களை நல்வழிப்படுத்தினர் என்பதை அடிகள் விளக்குகின்றார்.

எல்லாத் தேயத்தின்கண் உள்ள எல்லா மக்களும் பண்டைக் காலந் தொட்டுக் கதைகளைக் கேட்டு மகிழ்வதிலும் அக்கதைகளைத் தொடர்ந்த செய்யுள் வடிவில் எழுதிப் பயின்று மகிழ்வதிலும் மிகுந்த கருத்துடையவர்களாய் இருந்து வருகின்றனர். கிரேக்க தேயத்தில் இவ்வாறு எழுதப்பட்டு வழங்கும் இலியட் (Illiad), ஒடிசி (Odyssey) என்னும் இருபெருஞ் சிறந்த காவியங்களும், உரோம தேயத்தில்

வழங்கும் ஈனிட் (Eneid) டிவைன் காமடி (Divine Comedy) என்னும் இருபெரு விழுமிய காவியங்களும், ஐஸ்லாந்து தேயத்தில் வழங்கும் சாகாக்கள் (Sagas) என்னுங் காவியங்களும், ஆங்கில தேயத்தில் ஷேக்ஸ்பியர் (Shakespeare) எழுதிய நாடகக் காவியங்களும், மில்டன் எழுதிய 'துறக்க நீக்கம்', 'துறக்கப் பேறு' (Paradise Lost and Paradise Regained) என்னும் இருபெரும் தீஞ்சுவைக் காவியங்களும், ஆரிய நாட்டில் வழங்கும் பாரதம், இராமாயணம், பதினெண்புராணங்களும் செந்தமிழ்நாட்டில் வழங்கும் சிலப்பதிகாரம், மணிமேகலை, சூளாமணி, சிந்தாமணி, பெரியபுராணம் முதலிய அருந் தமிழ்க் காவியங்களும், இஞ்ஞான்று எல்லாத் தேயங்களிலும் எல்லா மொழிகளிலுங் கணக்கில்லாமல் உரைநடையில் எழுதப்பட்டு வெளிவந்து வழங்கும் நாவல்களென்னும் புதுக்கதைகளும், ஆகிய இவையெல்லாங் கதைகள் கேட்பதிலுங், கதைகள் படிப்பதிலும் மக்கள் மட்டுக்கடங்கா ஆர்வமுடையராயிருத்தலை இனிது புலப்படுத்துகின்றன.

இவ்வாறு கதைகள் கற்பதில் ஆர்வம் மிகுதியும் உடையராயிருக்கும் மக்களின் மன இயற்கையை நன்கு உணர்ந்து பார்த்தே பௌத்த சமயத்தைப் பரப்பிய ஆசிரியர்கள் 'ஜாதக காதைகள்' என்னுங் கதைத் தொகுதியினையும் உண்டாக்கினார்கள். கிறித்துவ மதத்தை நாட்டிய ஏசுகிறித்து என்னும் ஆசிரியரும் தாம் அறிவுறுத்துதற்கெடுத்துக் கொண்ட அரிய பெரிய உண்மைகளைச் சிறு சிறு கதைகளிலமைத்து அவை தம்மை மக்களுக்கு மொழிந்திட்டார். இங்ஙனமே ஒவ்வொரு சமய ஆசிரியருந் தாந்தாம் அறிவுறுத்தும் உண்மைகளில் மக்கள் உள்ளமானது பதிந்து நிற்றற் பொருட்டு, அவை தம்மை எல்லாரும் எளிதில் உணரத்தக்க இனிய கதைகளில் அமைத்து அறிவுறுத்தி வந்திருக்கின்றனர்.

ஆகவே, மக்களின் இம்மனவியற்கையினை நன்கு ஆராய்ந்துணர்ந்தவர்களான சைவசமயச் சான்றோர்களுந் தாம் அறிவுறுத்துதற் கெடுத்துக்கொண்ட இறைவனருள் நிகழ்ச்சிகளையும் அரும்பேருண்மைகளையும் உயர்ந்த பல கதைகளின் வாயிலாகவே அமைத்து வைத்து மக்களுக்குணர்த்துவாராயினர்.

இவ்வாறு பண்டைக்காலந்தொட்டு இன்றுகாறும் அறிவுடையோரெல்லாருங் கதைகளின் வாயிலாக்வே தாம் ஆராய்ந்து கண்ட அரும்பேருண்மைகளை அறிவுறுத்தி வந்திருக்கின்றனர்கள் ஆதலால், மக்களுள்ளத்தில் இம்மை மறுமை வாழ்க்கையின் உண்மைகளை எளிதிலே பதியவைத்தற்குக் கதைகள் பெரிதும்

பயன்படுவன என்பது பிறர்நலங் கருதும் அறிஞர்கள் கருத்தில் பதித்தல் வேண்டும் என இவ்வாறு அடிகளார் தம் விருப்பங்களை உரைக்கின்றார்.

## புராணங்கள் முற்றும் பொய்யல்ல

புராண கதைகள் முற்றும் பொய் என்று கூறி, அவற்றை ஒருங்கே நெருப்பிலிட்டுக் கொளுத்திவிடலாம் என்னும் சீர்திருத்தக்காரர் சிலரின் கூற்றும் பொருந்தாமை பற்றி அடிகளார் தெளிவாக விளக்குகின்றார். அவர்தந் துணிவுரைகள் மக்கள் மனப்பான்மையினைச் சிறிதாயினும் உணர்ந்து பாராக் குறைபாடு உடையனவாதலால், அவை மக்களுக்குப் பெருந்தீங்கு பயப்பனவாகும் என்கிறார்.

இனிக், கதைகள் எல்லாம் பொய்யும் புளுகுமே நிறைந்தன என்று சொல்லும் அவர் கூற்று உண்மையன்று. ஏனென்றாற், கதைகளின் அமைப்புப் பலதிறப்பட்டதாகும். சில கதைகள் உண்மையாக நிகழ்ந்த நிகழ்ச்சிகளையே திறம்பட அமைத்து, அவற்றின் வாயிலாக அரிய உண்மைகளை உணர்த்துவனவாகும்; இவ்வகையிற் சேர்ந்த காவியங்கள்; சிலப்பதிகாரம், பெரியபுராணமாகும்.

வேறு சில கதைகள் உண்மையாக நிகழ்ந்த சில நிகழ்ச்சிகளை வைத்து மற்றுஞ் சில புனைவுகள் கூட்டி உயர்ந்த உண்மைகளை உணர்த்துவனவாகும். இவ்வகையிற் சேர்ந்தவை, மணிமேகலையும் ஓமர் எழுதிய கிரேக்க காவியங்களுமாகும். ஒரு காலத்தில் இக் கிரேக்க காவியங்களிற் சொல்லப்பட்டவை முற்றும் பொய்யென நினைந்த ஆசிரியர்கள், பின்னர் நிலத்தின் கீழ்ப் புதைந்து கிடந்த பண்டைக்கால அரண்மனைகளைக் கிளறிக்கண்ட ஆராய்ச்சியிலிருந்து அக்காவியங்களின் முதன்மையான பகுதி உண்மையே யென்றும், அதனொடு பிற்சேர்க்கையாய் வந்தவைகளே புனைவுகளென்றும் அறிந்து மகிழ்வாராயினர்.

இன்னுஞ் சில கதைகள் முற்றும் நடவாத நிகழ்ச்சிகளை நடந்தனபோல் வைத்துப் பலவாறு அவை தம்மைப் புனைந்து உரைப்பனவாகும்; இவ்வகையிற் சேர்ந்தவை; சூளாமணி, சிந்தாமணி முதலிய செந்தமிழ்க் காப்பியங்களும், வடமொழியிற் பிற்காலத் தெழுந்த சைவ வைணவ புராணங்களும், தலபுராணங்களுமாகும்.

இனி, மற்றுஞ் சில கதைகள் கடவுள்நிலை, உயிர்நிலை, மலங்களின் நிலை என்னும் மெய்ம்மைகளை உருவக வகையாற் பலபடப்புனைந்து உரைப்பனவாகும்; இவ்வகையிற் சேர்ந்தன மிகப் பழைய சைவ புராணங்களும், பிரபுலிங்கலீலை, பிரபோத சந்திரோதய நாடகம் முதலியனவும் ஆகும்.

இங்ஙனம் இந்நால்வகையில் அமைக்கப்படுங் கதைகளின் கூறுபாடுகளை நம் ஆசிரியர்கள் முன்னரே நன்கறிந்திருக்கின்றனர். இது, சிலப்பதிகார அரங்கேற்றுக் காதையின் உரையில், உரையாசிரியர் அடியார்க்கு நல்லார் இந்நால்வகைக் கதையமைப்புகளையும் "உள்ளோன் தலைவனாக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனாக உள்ளதோர் பொருண்மேற் செய்தலும், உள்ளோன் தலைவனாக இல்லதோர் பொருண்மேற் செய்தலும், இல்லோன் தலைவனாக இல்லதோர் பொருண்மேற் செய்தலும்" என நால்வகைப்படுத்து அடக்கினமை கொண்டு நன்கு உணரப்படும்.

## மெய்யும் பொய்யும்

இவ்வாற்றால் நம் முன்னாசிரியர்கள் எல்லாக் கதைகளையும், மெய்யெனவாவது பொய்யெனவாவது கொள்ளாமல், மெய்யை மெய்யென்றும் பொய்யைப் பொய்யென்றும் பகுத்தறிந்து ஒழுகினார்களென்பது இனிது புலனாகின்றதன்றோ?

மற்று இக்காலத்தவரோ ஆழ்ந்த கல்வியும் உண்மை ஆராயும் அறிவும் உடையரல்லாமையால் எல்லாக் கதைகளையும் மெய்யென்று குருட்டுத்தனமாய் நம்பிக்கைக் கொள்வாரும், அல்லது அங்ஙனமே குருட்டுத்தனமாய் எல்லாக் கதைகளையும் பொய்யென்று இகழ்ந்து ஒதுக்குவாருமாய்ப் பிளவுபட்டு நிற்கின்றனர், என இவற்றை விரிவாக விளக்குகிறார் அடிகள்.

எனவே, புராண கதைகள் எல்லாவற்றையும் ஒருங்கே மெய்யென நம்புதலும் அல்லாது அவற்றை ஒருங்கே பொய்யென இகழ்தலும் உண்மையறிவு பெறவேண்டுவார்க்கு ஒரு சிறிதும் இசையாமையால், இப்போது வழங்குங் கதைகள் பலவற்றுள் உண்மையான சிலவற்றையும் பொய்ம்மையான சிலவற்றையும் எடுத்துக்காட்டுகின்றார்.

தக்கன் வேள்வி அழித்த கதையின் உண்மையும் பொய்ம்மையும், விநாயகக் கடவுளைப்பற்றிய கதைகளின் பொய்மை,

கந்தன் பிறப்பினைக் கூறும் கதைகளின் பொய்மை போன்றவற்றை மிகவும் துணிவுடன் எடுத்துரைக்கின்றார் அடிகள். மேலும், முருகப்பிரான், சிவபெருமான், விநாயகர் ஆகிய கடவுளர் வழிபாட்டின் உண்மைத் தன்மைகளையும் விளக்கியுள்ளார். மெய்ம்மையும் பொய்ம்மையும் பகுத்துக்காட்டி மக்களை நல்வழிப்படுத்தல் தம்கடன் என்பதை யுணர்ந்த அடிகள், தொல்காப்பியம், செங்கோன் தரைச்செலவு, சங்க நூல்கள், திருமுறை, சித்தாந்தம் முதலிய தெய்வப் பனுவல்கள், வேதாகமங்கள், இதிகாச புராணங்கள், ஆங்கில நூல்கள் எனப் பல நூல்களிலிருந்தும் சான்றுகளை எடுத்துக்காட்டித் தம் எண்ணங்களை நிறுவுகின்றார்.

## முருகப்பிரானும் ஞாயிறும்

இயற்கையோடு இயைந்த பழந்தமிழர் வாழ்வில் முருகப்பிரான் போன்ற திருவுருவ வழிபாடுகளும் இயற்கையை அடிப்படையாகக் கொண்டதே என்கின்றார் அடிகள்.

விடியற்காலையிற் கீழ்பாற் தோன்றும் ஞாயிற்றின் எதிரே கீழ் நிற்கும் பசுங்கடலானது ஒரு மயிலினுருவத்தை ஒத்திருத்தலும், அதன்மேற் தோன்றும் சிவந்த இளவளஞாயிறு அம்மயில்மேல் அமர்ந்திருக்கும் ஒரு தெய்வ இளைஞனை ஒத்திருத்தலுங் கண்டன்றோ, **ஆசிரியர் நக்கீரனார்** தாம் அருளிச் செய்த **திருமுருகாற்றுப்படை** முதலில் முருகப்பிரான் மயில்மேல் அமர்ந்திருக்குந் தோற்றத்திற்குக் காலை ஞாயிறு கடல்மேற் தோன்றுங் காட்சியினையே உவமையாக எடுத்து,

> **"உலகம் உவப்ப வலன்ஏர்பு திரிதரு**
> **பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு**
> **ஓவற இமைக்குஞ் சேண்விளங்கு அவிரொளி"**

என்று ஓதுவாராயினர், என்பதை விளக்கி, உலகத்தைப் படைத்த முதல்வன் அவ்வுலகத்தின் வேறாகவே நில்லாது, அவ்வுலகத்தோடு உடனுமாய் நிற்பன் என்னும் சைவ சித்தாந்த முடிபையும் இணைத்துக் கூறி விளக்குகின்றார்.

இவ்வாறே பிற திருவுருவ வழிபாட்டு உண்மைகளையும் அடிகளார் விரிவாக இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.

## சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்

மக்கள் அனைவரும் கற்க வேண்டிய மிக உயரிய மக்கள் ஒழுகலாற்று ஒண்மை நூல் இது. இதன்கண் தொல்காப்பியம்,

திருக்குறள், திருமுறைகள் ஆகியவற்றில் சாதி வேற்றுமை தினைத்தனையும் கிடையாதென்பதும், அதற்கு மாறாக அதனை அகற்ற வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளன என்பதும் அடிகளாரால் நன்கு விளக்கப்பட்டுள்ளன. இதுபோலவே பழைய வேதங்களிலும், உபநிடதங்களிலும், சைவவைணவ நூல்களிலும், பிறநூல்களிலும் சாதி வேற்றுமை இல்லை என்பதை தக்க சான்றுகளோடு விளக்குகின்றார் அடிகள்.

1923இலும் 1927இலும் அடிகளே வெளியிட்ட பதிப்புகளில் அவருடைய ஆங்கில முன்னுரைகள் இடம்பெற்றுள்ளன.

சாதி வேற்றுமைகளை ஒழிக்கும் வழிகள் பலவற்றை அடிகளார் மிக விரிவாக இந்நூலில் பட்டியலிட்டுள்ளார். சமயத்தை விடாப்பிடியாகப் பற்றியிருக்கும் பலருக்கு அவ்வச் சமய நூல்களில் ஈடுபாடு இன்மையே சாதிச்சச்சரவுகளுக்கு அடிப்படை என்பதை மிகவும் கண்டிப்புடன் எடுத்துரைக்கின்றார். சாதிகளை ஒதுக்கவும் ஒழிக்கவும் இந்நூல் ஒன்றே போதுமானதாகும்.

## பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்

திருப்பாதிரிப்புலியூரில் 1929ஆம் ஆண்டு நடைபெற்ற சைவ மாநாட்டிற்குத் தலைமையேற்று அடிகள் ஆற்றிய உரையே 1930ஆம் ஆண்டில் நூலாக வெளிவந்துள்ளது. இந்நூற் கருத்தை மறுத்தார் ஒருவரை மறுத்தும் தம்முரை செவ்விய உரையே என்பதை நிலை நாட்டியது இந்நூலின் இரண்டாம் பகுதியாயிற்று.

சைவக்கொள்கைகளான இறை, உயிர், தளை என்பன தொல்காப்பியர் நாள் தொட்டே வழக்கில் உள்ளமையும், இன்பம், பொருள், அறம் என்னும் முப்பொருள் கொள்கைச் சிறப்பும், சீர்திருத்தமென நாம் விரும்புவனவெல்லாம் பண்டைக்காலத்தே கொண்டிருந்த உண்மைகளையும் அடிகள் இந்நூலில் உணர்த்துகின்றார். இதில், அடிகள் காட்டும் சில பழைய செய்யுட்களுக்கான புதிய உரை விளக்கங்கள் ஆராய்ச்சிப் போக்கினைக் கொண்டன.

இந்நூலில், பண்டை நாகரிக மக்கள் முதல் கடவுளுண்மை ஈறாக இருபத்து மூன்று தலைப்புக்களும், தலைமைப் பேருரையின் மேல் நிகழ்ந்த சில தடைகளுக்கு விடையாக அமைந்த பகுதிக்கண் முகவுரை முதலாகப் பின்னுரை ஈறாகப் பத்தொன்பது

தலைப்புக்களும் ஆக மொத்தம் 42 தலைப்புக்களில் கருத்தாய்வுகள் நிகழ்த்தப்பட்டுள்ளன.

தமிழகமும் நாடும் சாதிப் பிணக்கின்றி வாழ வழிகாட்டும் நூலாக இவ்வாராய்ச்சி நூல் திகழ்கின்றது.

## முனிமொழிப் பிரகாசிகை

இந்நூல் 1899ஆம் ஆண்டில் அடிகளால் இயற்றிப் பதிப்பித்து வெளியிடப்பட்டதாகும்.

**"தேவர் குறளும் திருநான் மறைமுடிபும்**
**மூவர் தமிழும் முனிமொழியும்-கோவைத்**
**திருவா சகமும் திருமூலர் சொல்லும்**
**ஒருவா சகமென் றுணர்."**

என்னும் ஔவையார் வெண்பாவில் வரும் 'முனிமொழி' என்பதற்கு 'வியாசர் எழுதிய வேதாந்த சூத்திரம்' என்று முன்னோர் உரை கூறி வந்தனர். அதற்குத் திராவிடப் பிரகாசிகை ஆசிரியர் சபாபதி நாவலர், 'முனிமொழியும் கோவை திருவாசகமும்' என இணைத்து, அம்முனிவராவார் மாணிக்கவாசகரே என்று ஒரு கட்டுரை எழுதினார். முன்னவர்கள் கண்ட உரையே சரியானது என்று கொண்ட மறைமலையடிகளின் ஆசிரியர் வைதிக சைவ சித்தாந்த சண்ட மாருதம் சோமசுந்தரநாயகர் தூண்டலால் அறிவுக்கடலில் எழுதிய மறுப்புக்கட்டுரையே இந்நூலாக வெளிவந்தது.

இந்நூல் நடையை நோய்ப்படுக்கையில் இருந்த சபாபதி நாவலர் படித்து, "எமக்குப் பின்னர்ச் சிறந்த உரைநடை எழுதுவார் இவரே" என்று பாராட்டினார் என்பர்.[1]

## திருவாசக விரிவுரை

திருவாசகத்தில் சிவபுராணம், கீர்த்தித்திருவகவல், திருவண்டப்பகுதி, போற்றித்திருவகவல் ஆகிய திருப்பாட்டு நான்கினுக்கும் தெளிந்த நடையமைந்த சீரிய உரையுடன் கூடிய இந்நூல் 1940ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

---

1. இரா. இளங்குமரன், மறைமலையடிகள், ப.109.

இவ்வுரையின்கண் அடிகள் எடுத்தாண்டிருக்கின்ற தென்மொழி, வடமொழி, ஆங்கில முதலியவற்றிலுள்ள அறிவியல், வரலாறு, ஒழுகலாறு, தெய்வம் முதலிய தேற்றும் செழும்பொருள் நூல்கள் அளப்பில. இவ்வுரையே திருவாசகம் முழுமைக்கும் பொதுவுரை காணும் விழுமிய வழியாகும்.

## சைவ சித்தாந்த ஞானபோதம்

1906ஆம் ஆண்டு முதல் அடிகள் ஆங்காங்குச் சென்று சொற்பொழிவாற்றிய சைவ சித்தாந்தக் கருத்துக்கள் அடங்கிய தொகுப்பே இந்நூல். அறிவுக்கடல் வழியாகவே இதுவும் நூலுருப்பெற்றது. சைவ சித்தாந்த நுண்பொருள்களை மிக எளிய உரைநடையில் அனைவரும் அறிந்துணரத் தக்க வகையில் இந்நூல் இயற்றப்பட்டுள்ளது.

இந்நூலகத்து, சைவசமயமாட்சி, இந்து சமய உண்மைகள், கடவுளுக்கு அருளுருவம் உண்டு, சீவகாருணியம், இரு சைவ விளக்கங்கள், திருவுருவ வழிபாடு, சிவலிங்க உண்மை, அம்பல வாணர் திருக் கூத்துண்மை முதலிய தலைப்புகளில் சைவ சித்தாந்தக் கருத்துக்களை அடிகளார் விளக்கி வரைந்துள்ளார். சீரிய செந்தமிழ் நூற்சான்றுகள் மட்டுமன்றி, ஆரிய வேதாகம உபநிடதம் முதலியவற்றினின்றும், ஆங்கில நூல்களினின்றும் பலப்பல மேற்கோட் சான்றுகளையும் செலத்தகு முறையில் காட்டியுள்ளார்கள்.

## சோமசுந்தர நாயகர் வரலாறு

மறைமலையடிகளின் ஆசிரியராக விளங்கியவர் சோம சுந்தர நாயகர். இவர், நற்றமிழ்க் கொள்கையாகிய சித்தாந்த சைவத்தை நாடெங்கும் பரப்பிய பெருநாவலர்; பாவலர்; நூலாசிரியர்; கட்டுரையாசிரியர், போதகாசிரியர் முதலிய பலதுறையாசிரியர். இவருடைய வரலாற்றை விளக்கு முகமாக இயற்றப்பட்ட இந்நூலில் தமிழகச் சித்தாந்த சைவ மாண்புகளை விளக்குகிறார் அடிகள். இவ்வொரு நூலைக் கொண்டே சைவ சித்தாந்த நுண்மைகளைத் தெரிந்து கொள்ளலாம் என்பது அறிஞர் கருத்து.

இவ் வரலாற்று நூலில், நாயகரவர்கள் சைவ சித்தாந்தம் அறிந்தமை, அவர்தம் இல்வாழ்க்கை, சைவத்தொண்டு, பாசுபத

பாஞ்சராத்திர மதங்கள், வேத ஆகம விளக்கம், திருமங்கை யாழ்வார் திருஞானசம்பந்தர் காலத்தவர் அல்லர் என்பது, வைணவர் கட்டிய சில பொய்க்கதைகள், சிவபிரானே முழுமுதற்கடவுள் என்பது, சைவ ஆசிரியரால் தோல்வியுற்ற வைணவர்கள், சிவன் சிவனடியார் பால் திருமால் அருள் பெற்றமை, யாகபதி சிவபிரானே யாவன் என்பது, சிவநின்மாலியம், கண்ணன் பிறவி எனப் பல்வேறு ஆய்வுரைகளையும் மறுப்புரைகளையும் பல்வேறு சான்றுகளுடன் தொகுத்தளிக்கின்றார் அடிகள்.

இவ்வரலாற்றின் எண்பது பக்கம் வரை அடிகள் அச்சிட்டு வைத்திருந்தனர். மேலுள்ளவற்றைக் கைப்படியாக வைத்திருந்தனர். மேலும், நூலாராய்ச்சியுடன் இதனை விரிவாக வெளிப்படுத்த வேண்டுமென எண்ணியிருந்ததாகவும் தெரிகின்றது. அவை நிறைவேற வில்லை. 1957இல், அடிகள் மறைவிற்குப் பின்னர், கழகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

## தமிழில் சைவ சமய நூல்களின் பெருமை

பழந்தமிழ் இலக்கியங்களில் மிகுந்த பற்றுமை கொண்ட அடிகளார் திருவாசகம், திருச்சிற்றம்பலக் கோவையார் போன்ற சைவ சமய நூல்களிலும் பயிற்சி மிகக் கொண்டிருந்தார். இவற்றை இவர் எழுதிய நூல்கள் அனைத்திலும் காணலாம்.

காட்டாக, திருச்சிற்றம்பலக் கோவையார் பற்றி அடிகளின் கருத்துரைகள் இவண் குறிப்பிடத்தக்கன.

“திருச்சிற்றம்பலக் கோவையாரிலுள்ள ஒவ்வொரு செய்யுட்களும் சொல்வளம் பொருள்வளந் துறுமி மிளிர்கின்றன; இவ்வருமைத் திருக்கோவையாரை யொக்கும் நூல்கள் தொல்காப்பியம், திருக்குறள் என்னுமிரண்டுமே யன்றிப் பிற எந்நூலும் எக்காப்பியமும் இதற்கொப்பாகா. இம்மூன்று நூல்களும் ஒப்புயர்வில்லா உவரா அமிழ்தங்களாம். இத் திருக்கோவையாரின் சிறப்புணர்ந்தே ஆன்றோர்,

> **“ஆரணங் காணென்ப ரந்தணர் யோகிய ராகமத்தின்**
> **காரணங் காணென்பர் காமுகர் காமநன் னூலிதென்பர்**
> **ஏரணங் காணென்ப ரெண்ண ரெழுத்தென்ப ரின்புலவோர்**
> **சீரணங் காயசிற் றம்பலக் கோவையைச் செப்பிடினே.”**

என்று அருளிச் செய்தார்.

இற்றை ஞான்று ஆங்கில நன்மக்கள் செய்து போதரும் உளநூல் ஆராய்ச்சிகளெல்லாம் (Psychological researches) இற்றைக்கு ஆயிரத்தெழுநூறு ஆண்டுகட்கு முற்பட்ட நம்பெருமான் திருப்பாட்டிலமைந்து கிடத்தல் பற்றி நம்முள்ளம் இறுமாப் பெய்துகின்றது.' என்னும் மறைமலையடிகளின் உணர்ச்சிப் பெருக்குகள் மிகவும் போற்றத்தக்கதாகும்.

## சைவ சமயப்பற்று

மறைமலையடிகளார் தம்மிளமைக் காலம் முதல் புலமைப்பணி தொடங்கிய நாள் முதல் சிவ நெறி வளர்த்தலில் சிறந்த ஆர்வங் கொண்டார் என்பது குறிக்கத்தக்கது. அடிகளின் சொல்லும் செயலும், பேச்சும் மூச்சும், எழுத்தும் வழுத்தும், அறிவும் ஆற்றலும், உருவுந்திருவும், உடையும் நடையும் சைவ சமய வழியிலேயே இயங்கின. பல காலம் பல சமய உண்மைகளோடு சைவசித்தாந்த உண்மைகளையும் ஒத்து நோக்கி ஆராய்ந்த அடிகள் 'Saiva Sidhantha as a philosophy of practical knowledge' (சைவ சித்தாந்தமே அறிவிற்குப் பொருந்தியது) என்ற ஆங்கில நூலை எழுதியுள்ளனர். இந்நூலை நுணுகிக்கற்பார் அடிகட்குச் சிவநெறியில் உள்ள ஆழ்ந்த ஆர்வத்தை நன்கு உணர்வர்.

# தனிச்செந்தமிழ் நெஞ்சர்

"தனித்தியங்கும் தன்மை தமிழினுக் குண்டு!
தமிழே ஞாலத்தில் தாய்மொழி பண்டு!
கனிச்சாறு போற்பல நூலெலாம் கண்டு
காத்ததும் அளித்ததும் தமிழ்செய்த தொண்டு!
தமிழனே இது கேளாய்!-உன்பால்
சாற்ற நினைத்தேன் பல நாளாய்
கமழும் உன் தமிழினை உயிரென ஓம்பு!"[1]

என்பார் பாவேந்தர் பாரதிதாசனார். இத்தகைய தனிச்சொந்தமிழ் நெஞ்சம் படைத்தவர் மறைமலையடிகளார். மேலும், அவர் தனி ஒருவர் அல்லர்! ஓர் இயக்கம் அவர் என்பதைத் தனித்தமிழ் இயக்க வரலாறு காட்டும்.

## தனித்தமிழ்

தமிழ்மொழி மட்டுமே வழங்கிய தொல்பழங் காலத்தில் இருந்த தமிழையே தனித்தமிழ் என்பர். மொழிக்கலப்பு உண்டாகிய காலத்தில் தனித்தமிழ், கலப்புத்தமிழ் என்னும் பகுப்பு தோன்றியது.

தமிழுக்கு வாய்த்த அடைமொழிகளுள் முதற்கண் வாய்த்தது 'செம்மை' என்பதாகும். தமிழின் வரம்பு, தன்மை ஆகியவை கருதிய அடையே இது. தொல்காப்பியத்திலும் அதன் பாயிரத்திலுமாக மூவிடங்களில் 'செந்தமிழ்' என்ற சொல் இடம்பெற்றுள்ளது. இளங்கோவடிகளார், வண்டமிழ், தென்தமிழ், முத்தமிழ் எனத் தமிழுக்கு நல்லடைகள் பலபல வழங்குவது போலவே 'அருந்தமிழ்' என்றும் வழங்குகிறார். தமிழ் ஞானசம்பந்தர், 'ஆரா அருந்தமிழ்', 'விடையுடை அருந்தமிழ்' என அருமைக்கும் வளமார்ந்த புது அடைகளை அமைத்து மகிழ்கின்றார்.

இத்தகைய அருந்தமிழில் கலப்பு எற்பட்டதற்கான காரணங்கள் பல. ஆட்சிகள் மாற்றமும், அயற்சமய வரவுகளும், அயல்

---

1. பாரதிதாசன், தமிழ் உணர்ச்சி, 16. எழுச்சி.

மொழியினரின் தாக்கமும் தமிழின் தனித்தன்மையைக் குலைத்தன. செய்யுளிலும், உரையிலும், இசையிலும், வழிபாட்டிலும் பிறமொழிக் கலப்பு மிகுதியாயிற்று. இது, பல நூறு ஆண்டுகளாகத் தொடர்ந்தது.

## கண் திறக்க வந்த கால்டுவெல்

திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூலை இயற்றிய கால்டுவெல் (1814-1891) அவர்களே தமிழர்களின் கண் திறக்க வைத்த பெருமகனார் ஆவார். வடமொழி வழிப்பட்டதன்று தமிழ்மொழி, அது தனிமொழி; அதன் இன மொழிகளாக இயல்வனவே தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு முதலியன என்ற அடிப்படைக் கருத்தைத் தக்க சான்றுகளுடனும் துணிவுடனும் முதன்முதல் உலகுக்கு எடுத்துக் காட்டியவர் கால்டுவெலாரே ஆவார். இவர்தம் நூலில், இவர் தரும் விளக்கங்களை விரிவாக அறியலாம்.

"இன்றைய நிலையை நோக்கின், வடமொழியை அறவே நீக்குவதென்பது தெலுங்கு மொழிக்கு அரிதாகும்; கன்னட மொழிக்கோ மிகவும் அரிது; மலையாள மொழிக்கோ அரிதினுமரிது. இம்மொழிகள் கணக்கு வழக்கில்லாமல் வடசொற்களை எடுத்தாண்டு வந்துள்ளமையாலும், அச்சொற்களின் உதவியை நாடுவதே வழக்கமாகக் கொண்டுள்ளமையாலும் தத்தம் சிறப்புப் பண்புகளை யிழந்து, தனித்து நின்றியங்கும் ஆற்றலையும் இழந்து நிற்கின்றன. ஆனால், திராவிட மொழிகள் அனைத்தினும் மிகவும் திருந்திய பண்பட்ட நிலையிலுள்ள தமிழ்மொழியோ, வேண்டுமென்றால், வடசொற்களை அறவே அகற்றித் தனித்தியங்கும் ஆற்றல் வாய்ந்திருப்பதோடன்றி, அவற்றின் உதவியில்லாமல் மிகவும் மேம்பட்டு, வளமுற்று மிளிரும் ஆற்றலும் வாய்ந்ததாகும்.

பண்டைத் தூய தமிழ்மொழிக்குச் **செந்தமிழ்** என்று பெயர். இச்செந்தமிழிலேயே தமிழ்மொழியிற் காணப்படும் பண்டை இலக்கியங்களில் பெரும்பாலன இயன்றுள்ளன. ஆனால், அவற்றுள் காணப்படும் வடசொற்களோ மிகமிகக்குறைவு. இன்றைய பேச்சுத் தமிழுடனும், உரைநடைத் தமிழுடனும் இந்நிலை மாறுபட்ட தொன்றாகக் காணப்படும். எதனால் அவ்வாறெனிலோ, கண்ணுங் கருத்துமாய் இருந்து வடசொற்களையும், வடமொழி யெழுத்துகளையும் விலக்கி, தூய தமிழ்ச்சொற்கள், மரபுமொழிகள், அமைப்புகள் ஆகியவற்றையே கையாண்டு வந்துள்ளமை யினாலேதான்.

தமிழ் மக்களிடையே இச் செந்தமிழ்மொழிப் பாதுகாப்பு எவ்வளவுக்குப் பரவியிருந்ததென்பது, எழுதப்பட்ட ஒரு தமிழ்நூலில் எவ்வளவுக்கெவ்வளவு வடசொற்கள் அருகிக் காணப்படுகின்றனவோ, அவ்வளவுக்கு அவ்வளவு அது சிறந்ததொரு நூலென்றும், எவ்வளவுக் கெவ்வளவு வடசொற்கள் மிகுதியாகக் காணப்படுகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அது தாழ்ந்ததொரு நூலென்றும் கருதி மதிப்பிடும் பழக்கம் பண்டு தொட்டுப் பயின்று வருகின்றமையினாலேயே இனிது தெளியப்படும்.

பிறமொழி நூல்கள் சிலவற்றில் எவ்வளவுக் கெவ்வளவு வடமொழிச் சொற்கள் பயின்று வருகின்றனவோ அவ்வளவுக் கவ்வளவு அந்நூல்கள் அவ்வம் மொழியினராற் சிறப்புடன் போற்றப்படும்; தமிழிலோ எவ்வளவுக் கெவ்வளவு தமிழ்நூல்கள் வடமொழியின் உதவியை நாடாமல் தனித்தியங்குகின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு சிறப்புடன் போற்றப்படும்.

உண்ணாட்டுச் சிற்றூர்களிலும் நாட்டுப்புறங்களிலும் வாழ்ந்து வரும் தாழ்ந்த மக்களிடையே வடமொழிச் சொற்களைப் பேச்சு வழக்கிலும் கையாளாமல் ஒதுக்கும் தூய பழக்கம் காணப்படுகிறது. ஒரு மொழியின் தொன்மைச் சிறப்பு நிலை அம்மொழியிலியலும் செய்யுள்களிலும் தாழ்ந்த குடிமக்களின் பேச்சுக்களிலுமிருந்தே ஆராய்ந்து காணப்படும் என்பது ஒரு பொது உண்மையாகும்.

பிற்காலத்தில் மிகவும் வலிந்து முயன்று எழுதப்பட்ட தமிழ் உரைநடை நூல்களிலும், பார்ப்பனர்கள் பேசும் தமிழிலும், மிகவும் கற்றவர்களாகக் கருதப்படும் தமிழர்களின் பேச்சிலுமே வடமொழி மிகைபடப் பரவி வழங்குகின்றது."[1] என இவ்வாறு தனித்தியங்க வல்ல தமிழின் சிறப்பை விரிவாக விளக்கும் ஐரோப்பியரான கால்டுவெல் இயற்றிய ஒப்பிலக்கண நூலின் முதற்பதிப்பு 1856இலும், இரண்டாம் பதிப்பு 1875இலும் வெளிவந்தன.

இக்கால கட்டத்தில் வாழ்ந்திருந்த பேராசிரியர் பெ.சுந்தரம்பிள்ளை அவர்களையும் (1855-1897)இவண் எண்ண வேண்டியுள்ளோம்.

---

1. கால்டுவெல் ஒப்பிலக்கணம், பக், 60,61.

## தமிழின் சீரிளமைத்திறம் வியந்து பாராட்டும் சுந்தரனார்

காலடுவெலார் இயற்றிய ஒப்பிலக்கணநூற் கருத்துக்களை ஒருங்கே திரட்டியுணர்ந்த சுந்தரனார் தம் மனோன்மணீயத் தமிழ்த்தாய் வாழ்த்தில் இதனைத் தெளிவாகச் சுட்டுகின்றார்.

> **"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்**
> **எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்**
> **கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமும்துளுவும்**
> **உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல வாயிடினும்**
> **ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்**
> **சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே."**

என அனைத்துலக மக்களுக்கும் இதை நிலைமொழியாக்கினார் அவர்.

இம் மனோன்மணீயம் இயற்றப்பட்டு இதன் முதற்பதிப்பு சுந்தரனாரால் 1891இல் வெளியிடப்பட்டது இவண் குறிப்பிடத்தக்கது.

## கால்டுவெல் அறியாக் கணக்கற்ற தமிழ்நூல்கள்

மேற்கூறிய வகையில், மிக மிகத் தெளிவுடனும் தேர்ச்சியுடனும் எழுதும் கால்டுவெலாரின் ஒப்பியல் இலக்கணப் பதிப்பு வெளிவரும் வரை (1856) மிகுபழந்தமிழ் இலக்கணங்களோ இலக்கியங்களோ அச்சிடப் பெறவில்லை என்பது எண்ணத்தக்கதாம். அச்சிடப்பட்டிருந்தவை திருக்குறள், நாலடியார், தொல்காப்பிய எழுத்ததிகாரம் (நச்.), திருமுருகாற்றுப்படை என்பனவும், நீதிநெறி விளக்கம், தஞ்சை வாணன் கோவை, தாயுமானவர் பாடல், திவாகரம், சூடாமணி, உரிச்சொல் ஆகிய நிகண்டுகளும், திருவிளையாடல், நளவெண்பா, திருக்கோவையார், நைடதம், திருவாசகம், நன்னூல், யாப்பருங்கலக் காரிகை, கணக்கதிகாரம் முதலிய பின்னூல்களுமேயாம். தொல்காப்பியம் முழுமையும், பாட்டு தொகைகளும் கால்டுவெலார் காணவும் கற்கவும் வாய்த்திருக்குமெனின் அவ்வொப்பியல் இலக்கணம் இன்னும் பலபடி ஓங்கிய சிறப்புடையதாக அமைந்திருக்கும் என ஆய்வாளர் சுட்டுவர்.[1]

## பரிதிமாற் கலைஞர் காட்டும் உயர்தனிச் செம்மொழி

கால்டுவெலார் மொழிந்த தமிழின் தனித்தன்மையை முதற்கண் தெளிவுறுத்தி வரைந்தவர் பரிதிமாற் கலைஞர் (வி.கோ.சூரிய நாராயண சாத்திரியார்- 1870-1903) ஆவார். மதுரைத் தமிழ்ச் சங்கம்

---

1. இரா. இளங்குமரன், தனித்தமிழ் இயக்கம், ப. 78.

வெளியிட்ட செந்தமிழ் முதல் இதழில் (1903) 'உயர்தனிச்செம்மொழி' என்னும் கட்டுரையை வரைந்தார் இவர்.

உயர்தனிச் செம்மொழி என்பதற்குப் பரிதிமாற் கலைஞர் தரும் விளக்கம் இவண் குறிப்பிடத்தக்கது.

## உயர்மொழி

"தான் வழங்கும் நாட்டின்கணுள்ள பலமொழிகட்கும் தலைமையும் அவை யாவற்றினும் மிக்க மேதகவுடைமையுமுள்ள மொழியே உயர்மொழி என்பது. இவ் விலக்கணத்தால் ஆராய்ந்த வழி நம் தமிழ்மொழி தென்னாட்டில் வழங்கும் தெலுங்கு கன்னட மலையாள துளுவங்களுக்கெல்லாம் தலைமையும் அவையிற்றினும் மிக்க மேதகவுடைமையால் தானும் உயர்மொழியே என்க.

## தனிமொழி

தான் வழங்கும் நாட்டிற் பயிலும் ஏனைய மொழிகளின் உதவியின்றித் தனித்தியங்க வல்ல ஆற்றல் சான்றதே தனிமொழி எனப்படும். தான் பிறமொழிகட்குச் செய்யும் உதவிமிக்கும் அவை தனக்குச் செய்யும் உதவி குறைந்தும் இருத்தவே வழக்காறு. தமிழ் மொழியின் உதவி களையப்படின் தெலுங்கு கன்னடம் மலையாளம் முதலியன இயங்குதல் ஒல்லா. மற்று அவையற்றின் உதவி களையப்படினும் தமிழ்மொழி சிறிதும் இடர்ப்படுதல் இன்றித் தனித்து இனிமையின் இயங்க வல்லது. இஃது இந்திய மொழிநூற் புலவர்கள் பலர்க்கும் ஒப்ப முடிந்தது. ஆதலின் நம் தமிழ்மொழி தனிமொழியே என்க.

## செம்மொழி

திருந்திய பண்பும் சீர்த்த நாகரிகமும் பொருந்திய தூய்மொழி புகல் செம்மொழியாம் என்பது இலக்கணம். இம்மொழியியல் இலக்கணம் நம்முடைய தமிழ் மொழியின் கண்ணும் அமைந்திருத்தல் தேற்றம். என்னை? இடர்ப்பட்ட சொல்முடிவுகளும் பொருள் முடிவுகளும் இன்றிச் சொற்றான் கருதிய பொருளைக் கேட்டான் தெள்ளிதின் உணரவற்றாய்ப் பழையன கழிந்து புதியன புகுந்து திருத்தமெய்தி நிற்றலே திருந்திய பண்பெனப்படுவது. இது தமிழ் மொழியின்கண் முற்றும் அமைந்திருத்தல் காண்க.

நாட்டின் நாகரிக முதிர்ச்சிக் கேற்பச் சொற்களும் ஏற்பட்டுப் பாஷைக்கும் நாகரிக நலம் விளைத்தல் வேண்டும். அவ்வாறு சொற்கள் ஏற்படுமிடத்துப் பிறபாஷைச் சொற்கள் அன்றித் தன்

சொற்களே மேற்கோடல் வேண்டும். இவையும் நம் உயர்தனிச் செம்மொழிக்கும் பொருந்துவனவாம். ஆகவே, தமிழ் தூய் மொழியுமாம். எனவே, தமிழ் செம்மொழி என்பது ஒருதலை. இது பற்றியன்றே தொன்று தொட்டு நம் தமிழ்மொழி 'செந்தமிழ்' என நல்லிசைப் புலவரால் நவின்றோதப் பெறுவதாயிற்று. ஆகவே, தென்னாட்டின்கண் சிறந்தொளிரா நின்ற நம் அமிழ்தினுமினிய தமிழ்மொழி எவ்வாற்றான் ஆராய்ந்த வழியும் உயர்தனிச் செம்மொழியேயாம் என்பது திண்ணம்"[1] என்பர் பரிதிமாற்கலைஞர்.

## பன்னூலாசிரியர்தம் பங்கு

இவ்வாறு, தமிழ் தனித்தியங்க வல்லதென்பதை எடுத்துக்காட்டுவதில் பலரும் அக்காலத்தில் முனைந்தனர். திருமணம் செல்வக் கேசவராயர் (1864-1921), விருதை சிவஞான யோகிகள் (1908), மாகறல் கார்த்திகேயர் (1857-1916), தேசியப்பாவலர் பாரதியார் (1882-1921), சுப்பிரமணிய சிவா (1884-1925) போன்ற அறிஞர்கள் இவ்வகையில் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இத்தகையோர் வாழ்ந்த காலகட்டத்தில் வாழ்ந்த மறைமலையடிகளார் தம் இருபத்தோராம் அகவையிலேயே (1898) தனித்தமிழ்க் கடைப்பிடி தோன்றி விட்டமையைத் தெளிவாக்குகின்றார்.

## அடிகளாரின் தனித்தமிழ்ப்பற்று

அடிகளார் தம் பதினைந்தாம் அகவைமுதல் (1891), இருபத்தோராவது அகவை வரை (1898) தனியே இருந்து தமிழ் கற்றார். அந்நிலையிலேயே விழுமிய தமிழ்ப் பழநூல்களில் கருத்து ஈர்ப்புண்டு நின்று பயின்ற பயிற்சியினால் செய்யுளும் உரையும் தனிச்செந்தமிழ் எழுதும் திறமும் பேசும் திறமும் இளமையிலேயே வாய்க்கப் பெற்றார்.

அடிகளின் ஆசிரியர் நாராயணசாமி அவர்களின் மேனாள் மாணவர்களுள் ஒருவரான மனோன்மணீயம் சுந்தரனாரின் நட்பு 1895இல் அடிகளாருக்குக் கிட்டியதாலும் அவர்தம் மொழியியற் கொள்கையால் ஈர்ப்புண்டார்.

அடிகளாரின் சமயநூல் ஆசிரியராக விளங்கிய சோமசுந்தர நாயகரும் அடிகளாரின் தனித்தமிழ் உணர்வைப் போற்றியதுடன்

---

1. தமிழ் வியாசங்கள், பக்.62-63.

அதையே விடாமல் கடைபிடிக்குமாறு வற்புறுத்தியமையையும் அறிகிறோம்.

1898இல் கிறித்தவக் கல்லூரியில் அடிகளார் ஆசிரியப்பணியை ஏற்றபோது தலைமைப் பொறுப்பிலிருந்த பரிதிமாற் கலைஞரின் இறுதிவரை (1903) அவருடன் இருந்த ஐந்தாண்டு நெருக்கமும், அக்காலத்தில் அடிகளார் செய்த முல்லைப்பாட்டாராய்ச்சியும், பட்டினப்பாலை ஆராய்ச்சியும் பிறவும் அடிகளாரின் தனித்தமிழ் உணர்வுக்கு உரமூட்டின எனலாம்.

1916இல் அடிகளாரும் அவர்தம் மகளார் நீலாம்பிகையாரும் இணைந்து தனித்தமிழிலேயே பேசுதற்கும் எழுதுதற்கும் உறுதி கொண்டதற்கு முன்பாகவே இவ்வுணர்வு மேலோங்கி யிருந்ததற்கு மேற்கூறியவை சான்றுகளாம்.

## அடிகளார் ஆசிரியர் காலமும் தனித்தமிழ் நிலையும்

அடிகளாரின் ஆசிரியர் சோம சுந்தர நாயகர் 1901இல் மறைந்தார். அதற்கு முன்பு அவர் அடிகளாரிடம் உரையாடியவற்றை அடிகளார் பின்னாளில் பேசியும் எழுதியும் வைத்துள்ளார். நாயகரின் தமிழ் நடையில் வடமொழிக் கலப்பு மிகுந்திருந்தமை பற்றி அடிகளார் 15-5-1949இல் சைதாப்பேட்டை சிவநெறிக்கழகச் சார்பில் 'சங்க காலத் தமிழகம்' என்னும் சொற்பொழிவில் குறிப்பிட்டுள்ளார்.

“என்னுடைய ஆசிரியர் அறுபது நூல்கள் வரை எழுதியிருக்கிறார். அவர்கள் நூலை எல்லோரும் படித்துவிட முடியாது. அவர்கள் நூலில் நூற்றுக்கு எண்பது வடசொற்கள் கலந்திருக்கும். மிகுதியாக வடசொற்கள் கலந்திருக்கும். ஆசிரியரை நோக்கி 'ஏன் மிகுதியாக வடசொற்களைச் சேர்த்து எழுதுகிறீர்கள்?' என்று கேட்டதற்கு, 'என்னால் வடசொற்களின்றி எழுத இயலாது, நீ வடசொல் கலவாது தனித்தமிழிலே எழுது' என்று சொன்னார். நச்சினார்க்கினியர் சிவஞான முனிவர் முதலிய உரையாசிரியர்கள் எழுத்திலே நான் சொக்கித் தனித்தமிழிலே எழுதத் துவங்கினேன். ஆசிரியர் யான் தனித்தமிழிலேயே எழுதும் கட்டுரைகளைப் பார்த்து, 'நீ தனித்தமிழிலேயே எழுது. உனக்குத் தனித் தமிழிலே எழுதும் ஆற்றலை இறைவன் ஆக்கியுள்ளான். உன் தனித் தமிழைப் படிக்கப் படிக்க என் காதுகளுக்கு இன்ப மாயிருக்கிறது' என்றார். 'தனித்தமிழில் எழுதுவதை விடாதே; நீ தனித்தமிழிலே எழுதுவது எனக்கு

விழிப்பையும் கிளர்ச்சியையும் உண்டுபண்ணுகிறது' என்றும் கூறினார்"[1] என்பர் மறைமலையடிகள்.

## பழந்தமிழ்நூற் பயிற்சியின்மை

ஆசிரியர் நாயகருக்குத் தனித்தமிழ் ஆற்றல் இன்மைக்குரிய காரணம் அக்காலத்தில் பழந்தமிழ்நூற் பயிற்சியின்மையே என்பதை அடிகளார் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். சோமசுந்தர நாயகர் வரலாற்றில் பின்வருமாறு இதை விளக்குகின்றார்.

"இவர்களது இளமைக் காலத்தில் தனித்தமிழ்ப் பேரிலக்கணமான **தொல்காப்பியமும்** தனிச்செந்தமிழ்ப் பேரிலக்கிய நூல்களான **பத்துப்பாட்டு, புறநானூறு, கலித்தொகை** முதலானவைகளும் அச்சிற் பதிக்கப்பட்டு வெளிவந்தில. இவர்கட்கு 39ஆம் ஆண்டு நடைபெறும் போதுதான் அதாவது கி.பி. 1885ஆம் ஆண்டில்தான் தமிழ்த்திருவாளர் சி.வை. தாமோதரம்பிள்ளை அவர்களால் முதன்முதல் '**தொல்காப்பியப் பொருளதிகாரம்**' அரிது முயன்று அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது.

கி.பி. 1887ஆம் ஆண்டில் திருவாளர் சி.வை. தாமோதரம் பிள்ளையவர்கள் தனிச்செந்தமிழ்ப் பேரிலக்கிய நூலான **கலித்தொகையையும்**, திருவாளர் உ.வே. சாமிநாதையரவர்கள் ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்றாகிய **சீவகசிந்தாமணி**யையும் வெளிப்படுத்திய ஞான்று நாயகரவர்கட்கு அகவை 41.

1889ஆம் ஆண்டில் ஐயவரர்கள் **பத்துப்பாட்டு** என்னும் தன்னிகரில்லாத் தனிச்செந்தமிழ்ப் பெருநூலை வெளிப்படுத்திய போது நாயகரவர்கட்கு அகவை 43.

1892இல் அவர்கள் தமிழ் முதற் பெருங்காப்பியமான **சிலப்பதிகாரத்தை** வெளியிட்டபோது நாயகரவர்கட்கு அகவை 46.

1893இல் அவர்கள் **புறநானூறு** என்னும் அரும்பெருந் தமிழ்ப் பழநாகரிக மாட்சி தெரிக்கும் விழுமிய நூலை வெளிப்படுத்தியபோது நாயகர் அவர்கட்கு அகவை 47. இங்ஙனமாக இவ்வரும்பெருந் தமிழ் நூல்களெல்லாம் நாயகரவர்கட்கு முப்பத்தெட்டாண்டு அகவை சென்ற பின்னர் வெளிப்பட்டமையால் அவர்கள் தமது இளமைக் காலத்திலேயே இவைகளைப் பயின்று

---

1. மறைமலையடிகளார் கடிதங்கள், ப.54.

தனிச்செந்தமிழ் வளனும் விழுப்பமும் உணர்ந்து இன்புறுதற்கு இடமில்லாமலே போயிற்று" என்பர் மறைமலையடிகள்.[1]

## இருபதுக்கு முன் பயிலத்தக்கவை

'நாற்பதாண்டு நிறைந்த நாள் தொட்டேனும் வெளிப்போந்த நூலைப் பயிலாமை என்னை?' என வினாவிக் கொண்டு அடிகளே மறுமொழி பகர்கின்றார்.

"தொடர்பாக இவர்கள் பரந்தாழ்ந்த சமயநூல் ஆராய்ச்சியிலேயே முனைந்து நின்றமையால், தமது முப்பத்தொன்பதாம் ஆண்டிலிருந்து வெளிப்போந்த தொல்காப்பியம் கலித்தொகை புறநானூறு முதலான பண்டைத் தனிச் செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயிறலில் கருத்தூன்ற மாட்டாதவர் ஆனார்கள். இவ்வரும்பெரும் கருவி நூல்களெல்லாம் ஒருவர் தமக்கு இருபதாண்டு நிரம்புமுன்னரே பயின்று தெளியற்பாலனவாம். இருபதாண்டிற்குப்பின் அறிவு நூல்களே ஆராயற்பாலன.

நாயகரவர்கள் தமக்கு இருபதாண்டு நிரம்பு முன்னரே கிடைத்த நன்னூல் முதலான பிற்காலச் சிற்றிலக்கணங்களையும் திருக்குறள் நாலடியார் பெரியபுராணம் முதலான இலக்கியங்களையும் நன்கு ஓதி உணர்ந்தமையால் இருபதாண்டுக்குமேல் அறிவுநூற் பயிற்சியிலேயே தமது கருத்தைத் தோய்விப்பாராயினர். அறிவுநூற்பயிற்சியில் கருத்து ஈர்ப்புண்ட பின் அதனை மறித்தும் கருவிநூற் பயிற்சியில் செலுத்துதல் இயலாது. தேமாங்கனியின் சுவை கண்டவர்க்கு அதனிற் குறைந்த சுவையுடைய கனிகளில் மனம் செல்லாமை இயற்கையன்றே. ஆகவே, நாயகரவர்கள் பண்டைத் தனிச் செந்தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயிலாத காரணம் இதுவாதல் கண்டு கொள்க"[2] என இவ்வாறு அடிகள் கூறுகின்றமை சிந்திக்கத்தக்கது.

## தமிழுக்கு நேர்ந்த இழப்பு

இவ்வாறு நாயகரவர்கள் பண்டைத் தனிச் செந்தமிழ் நூல்களைத் தமதிளமைப் பருவத்திலேயே பயின்று புலமை நிரப்புதற்கு இடம் வாயாமையால், தமிழுக்குந் தமிழ்நாட்டார்க்கும் நேர்ந்த இழப்புச் சிறிதன்று. நாயகரவர்களின் அரிய பெரிய

---

1. சோமசுந்தர நாயகர் வரலாறு, ப.10.
2. சோமசுந்தர நாயகர் வரலாறு, பக். 11-12.

ஆராய்ச்சியுரைகள் தனிச் செந்தமிழ் உரைநடையில் எழுதப்பட்டிருக்குமாயின், அவை தமிழுக்குப் பெரியதோர் அறிவுக் களஞ்சியமாய் இருந்திருக்கும். ஆனால் அவை வடசொற் கலப்பு மிகுதியும் உடைய உரைநடையில் அமைந்ததே தமிழ்மொழிக்கு ஒருபேர் இழப்பாயிற்று என இவ்வாறு தமிழுக்கு நேர்ந்த இழப்புக்கான காரணத்தையும் சுட்டுகின்றார் அடிகளார்.

## தனிச் செந்தமிழ் மாறிவந்த நிலை

தம் ஆசிரியர் நாயகரவர்கள் முனைந்தால் உரையும் பாட்டும் தனித்தமிழிற் சுவைபெருக எழுதவல்லவர் என்பர் அடிகள். இருப்பினும் அவர் பெரும்பாலும் வடசொற்கள் கலந்து எழுதியதற்குக் காரணம், அவர்களது காலத்தில் தனித்தமிழ் எழுதும் பழக்கம் பெரும்பாலும் மாறிப்போனதே என்றும் கூறுகின்றார்.

"இற்றைக்கு அறுநூறு ஆண்டுகட்கு முன்னேயிருந்த உமாபதிசிவனார் என்னுஞ் சைவசித்தாந்த குரவரில் நாலாமவர் காலம் வரையில் தமிழ்மொழி தூயதாகவே வழங்கப்பட்டுவந்தது. அஃது அக்காலம் வரையில் இயற்றப்பட்டு வழங்கிய தமிழ்நூற் பாக்களையும் உரைகளையும் உற்றுநோக்குவார்க்கு நன்குபுலனாகும்.

இற்றைக்கு எழுநூறு ஆண்டுகட்கு முன்னிருந்த செய்யுள் நூல்களே யன்றி, அந்நூல் உரைகளுங்கூட எத்துணை இனிய தனிச் செந்தமிழ் நடையில் ஆக்கப்பட்டுள்ளன வென்பதை, நச்சினார்க்கினியர், பரிமேலழகர், அடியார்க்குநல்லார், சேனாவரையர், இளம்பூரணர், நக்கீரனார் முதலான உரையாசிரியன்மார் உரைகளைச் சிறிது பயில்வாரும் எளிதில் அறிவர். இடைக்காலத்துச் செய்யுள் நூல்களை விட அக்காலத்தெழுந்த மேற்குறித்த உரையாசிரியரின் உரைகளே தனிச் செந்தமிழ்வளன் நிரம்பித்துளும்புகின்றன.

மற்று, உமாபதி சிவனார் காலத்திற்குப் பின் வந்த தமிழ்நூல்கள் பலவுமோ, வடமொழிக்கண் உள்ள புராணங்கள் காவியங்களினின்று மொழிபெயர்த்துச் செய்யப்பட்டனவாய் முடிந்தமையால், அந்நூல்களை ஆக்கியோர் வடமொழிச் சொற்பொருள் வழக்கையே மிகுதியுந் தழீஇப் பாட்டும் உரையும் இயற்றலாயினர்.

வில்லிபுத்தூரர் பாரதச் செய்யுட்களில் வடசொற்கள் மிகுதியாய்க் கலந்திருக்கின்றன. பரஞ்சோதியாரின் திருவிளையாடற் புராணம், கச்சியப்பரின் திருத்தணிகைப் புராணம் முதலியவற்றிலும்

அங்ஙனமே. வைணவ ஆழ்வார்கள் பாடிய நாலாயிரப் பிரபந்தச் செய்யுட்கள் பெரும்பாலுஞ் செந்தமிழ்ச் சொற்களாற் தொடுக்கப்பட்டிருந்தும், அவை தமக்குப் பிற்காலத்தார் வகுத்த உரைகள் முக்காற்பங்கு வடசொல்லுங் காற்பங்கே தமிழ்ச்சொல்லும் வாய்ந்தனவாய் இருக்கின்றன. சிவஞானசித்தியார்க்குச் சிவாக்கிரயோகிகளும் ஞானப்பிரகாசரும் வகுத்த உரைகளிலும் அங்ஙனமே முக்காற் பங்குக்குமேல் வடசொற்கள் விரவியிருக்கின்றன.

## தனித்தமிழ்ப் பேராசிரியர் சிவஞானமுனிவரர்

செந்தமிழ்ச் சொற்பொருள்வளந் துறுமத் தொல்காப்பியப் பாயிரவிருத்தி சூத்திரவிருத்தியுரைகளுஞ் சிவஞானபோதச் சிற்றுரை பேருரைகளுஞ் சிவஞான சித்தியுரையும் வகுத்த ஆசிரியர் சிவஞான முனிவருங்கூடச், சிவ சமவாத வுரை மறுப்பாக வரைந்த வழக்குரை நூல்களில் வடசொற்களை நிரம்ப இயைத்திருக்கின்றார். என்றாலும், சென்ற ஐந்நூறாண்டுகளிற் தொடர்பாய்த் தோன்றிச், சைவ வைணவ நூல்கட்கு உரைகள் வரைந்துவிட்ட உரைகாரரால் இறந்து போம் நிலைக்கு வந்த நந்தமிழன்னைக்குப் புத்துயிர் கொடுத்து, அவள் பண்டுபோல் எல்லா நலங்களுந் துலங்கி வீறி உலவச்செய்த தனித்தமிழ்ப் பேராசிரியர் சிவஞான முனிவரரே என்பது உணரற்பாற்று. சிவ சம வாத மறுப்பாக இவர் வரைந்த இரண்டொரு சிற்றுரை நூல் தவிர, இவர் தம் ஏனை யுரைநூல்க ளெல்லாந் தனித்தமிழ் மணங் கமழுந் திறத்தனவா யிருக்கின்றன. அஃதொன்றோ! இவருடைய உரைநூல்களிற் பொதிந்து கிடக்கும் அரிய நுண் பொருள்களும் உண்மைப் பொருள்களும் அவைதம்மைப் பயில்வாருள்ளத்தை அறிவொளி கொளீஇத் திகழச் செய்யும் பெறற்கரும் பயன் தருவனவாயும் மிளிர்கின்றன. இருந்தவாற்றால், நஞ் செந்தமிழ் தன் பண்டை நலன் எய்தி விளங்கச் செய்த பெரியார் ஆசிரியர் சிவஞான முனிவரரே யாவர். அஃதுணர்ந்து, உண்மைத் தமிழ் மக்களனைவரும் அவரை நெஞ்சார வாழ்த்தி வழிபட்டு வருதலே செயற்பாலார்.

## கொச்சைக்கலப்புத்தமிழ்

இங்ஙனந் தனித்தமிழ்ச் சுடரைத் தூண்டி ஒளிர்வித்த ஆசிரியர் சிவஞான முனிவரரின் திருவடிச் சுவடு பற்றிப், பின்வந்த தமிழறிஞர் எல்லாரும் பாட்டும் உரையும் இயற்றி யிருந்தனராயின், நஞ் செந்தமிழ் மொழி தன் பண்டைமாட்சி குன்றாப் புத்தெழில் நலங்கனிந்து திகழ்ந்திடா நிற்கும். ஆனால் அதற்குப் பேரிடையூறாக மாயாவாத மதத்தினரும் வைணவ மதத்தினருந் தோன்றி, முக்காற்

கூறுக்குமேல் வடசொற்கலந்த போலித் தமிழுரை நூல்களே இயற்றி எங்கும் பரப்பி வரலாயினர். அவரை எதிர்ப்பான் புக்க சைவ சமய அறிஞர்களும், மற்று அச் சமயத்தவரைப் போலவே தாமும் வடசொற் கலந்த உரைநூல் எழுதுதலையே தமக்குப் பெருமை தரும் ஒரு பேரொழுகலாறா மேற்கொண்டு வரலானார். தம்மையே வட மொழிக் குரியவராகப் பிழைபட கருதி, வடமொழிப் பயிற்சியை உயர்வாகவுந், தமிழ்மொழிப் பயிற்சியை இழிவாகவுந் நினைந்தும் பேசியும் எழுதியும் வருவாரான பார்ப்பனர்களில் ஒரு பாதியார் மாயா வாதிகளாகவும் பாதியார் வைணவர்களாகவும் இருத்தலால், அவர்பால் வடசொற் கலந்த கொச்சைக் கலப்புத் தமிழை யன்றித், தூய தனித்தமிழ் வழக்கைக் காண்டல் இயலுமோ? இயலாதன்றே" என்பர் அடிகள்.[1]

## தனித்தமிழ்ச் சொற்பெருக்குகள்

"நாயகரவர்கள் எழுதுங்கால் வடசொற்களை மிகக்கலந் தெழுதினாலும், அவைகளிற் பேசுங்காற் பெரும்பாலுஞ் செந்தமிழ் நடையிலேயே பேசி வந்தார்கள். அதனால், அவர்கள் நிகழ்த்திய ஆயிரக்கணக்கான சொற்பொழிவுகள் பலர்க்கும் பெரிது பயன்பட்டு உண்மையறிவை விளக்குவவாயின. அவர்கள் இயற்றிய நூல்களாற் பயன் பெற்றவர் தொகையினும், அவர்கள் ஆற்றிய சொற்பெருக்குகளாற் பயன்பெற்றவர் தொகையே மிகப்பெரிது. சொற்பெருக்குகள் நிகழ்த்துங்காற் தாம்பேசிய செந்தமிழ் உரைநடையைப்போல், நாயகரவர்கள் தம்முடைய அரிய பெரிய நூல்களைச் செந்தமிழ் நடையில் ஆக்கியிருந்தால், அவை தமிழ்ப் பேழையிற் பொதிந்துவைத்த விலையிடுதற்கரிய மாணிக்கங்களாய்த் திகழ்ந்திருக்கும். ஆனால், அத்தகைய பேறு தமிழ் மக்கட்கு வாயாது போயிற்று" என்கிறார் அடிகள்.[2]

அக்காலத்தில், சொற்பெருக்காற்றும் அறிஞர்கள் தனித்தமிழிலேயே பேசிவந்தாலும், அவர்கள் எழுதும் போது வடசொற்கள் மிகுதியும் கலந்து எழுதி வந்தனர் என்பதற்கு இதுவும் ஒரு சான்றாகும். அக்காலத்திருந்த மாயாவாத வைணவ நூலுரைகளைப் பயின்று வந்ததன் பயனாகத் தாமும் அவ்வாறே வடசொற் கலப்பு நடையினைத் தழுவி எழுதி வந்தனர். மேலும், பழைய தனிச்செந்தமிழ் இலக்கண இலக்கிய நூல்கள் அச்சாகி

1. சோமசுந்தர நாயகர் வரலாறு, பக். 19-21.
2. மேலது, ப.24.

வெளிவராததாலும் அவர்கள் வடசொல் மிகுதியாய் விரவிய உரைநடை நூல்கள் இயற்றுதற்குக் காரணங்களாயின என்பதை அடிகள் விரிவாக விளக்குகிறார்.

## திருவருள் தடுத்த கலப்புநடை

ஆசிரியர் நாயகரைப் போலவே கலப்பு நடையில் எழுத அடிகளாரும் அந்நாளில் விரும்பினார் என்றும், ஆனால் அதை அவர் ஆசிரியரே தடுத்தார் என்றும் கூறுகின்றார்.

"யாம் நாயகரவர்களின் நூல்களைப் பயின்று அவர்களை அடுத்த இளமைக் காலத்தில் நாயகரவர்களின் உரைநடையைப் போல் வடசொற்கலப்பு மிகுதியும் உடைய ஓர் உரைநடை எழுத எமக்கு ஒரு விருப்பம் உண்டாயிற்று. என்றாலும் நக்கீரர் சேனாவரையர் சிவஞானமுனிவர் முதலான உரையாசிரியன்மார் வரைந்த தனித்தமிழ் தீஞ்சுவையுரை நடையிற் பெரிதும் பழகிய எமதுளத்தை வடசொற் கலந்த நடைக்குத் திருப்புவது எளிதில் இயலவில்லை.

1898ஆம் ஆண்டு மூன்றாந்திங்கள் ஒன்பதாம் நாளில் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழாசிரியராய் அமர்ந்த காலந் தொட்டு நாயகரவர்கட்கு அணுக்கராய் ஒழுகி வருகையில் வடசொல் மிகக் கலந்த அவர்களது உரைநடையைப்போல் யானும் எழுதுவது நல்லதாமா? என்பதை அவர்கள்பால் வினவ, அவர்கள், "வடசொற் கலவா உனது உரை நடையே இனிதாயும் எவர்க்கும் எளிதில் பொருள் விளங்கத்தக்கதாகவும் இருத்தலால் உனது நடைப்படியே எழுது; எனது உரை நடையைப் பின்பற்றாதே!" என்று ஆணை தந்தார்கள். அவர்களின் அக்கருத்தை அறிந்த பின் முன்னமே தொல்லாசிரியர் தம் தீந்தமிழ் உரைநடையிற் பழகி அதன் சுவை கண்ட எமதுளத்திற்கு அவர்கள் இட்ட கட்டளை மிகவும் பொருத்தமுடையதாகவே காணப்பட்டது. அது முதல் தீந்தமிழ் உரைநடை எழுதுவதில் எமது உள்ளம் உறைந்து நிற்கலாயிற்று.

அவர்கள் தம்மைப் போலவே வடசொல் மிகக் கலந்து நடை எழுதுதலை எமக்குச் சற்று அழுத்திச் சொல்லியிருந்தாலும் யாமும் அங்ஙனமே எழுதித் தமிழுரை வனப்பைச் சிதைத்திருப்போம். ஆனால் அங்ஙனம் ஆகாமல் இறைவன் திருவருளே அவர்களிடை நின்று தடுத்துத் தமிழ் நலனை ஓம்பியது!"[1] என்பர் அடிகள்.

---

1. சோமசுந்தர நாயகர் வரலாறு, பக். 10-24.

இவ்வாறு, தாம் இளமையில் கற்ற பழந்தமிழ் நூற் பயிற்சியாலும், பழைய உரையாசிரியர் நூல் தோய்வாலும், ஆசிரியர் நாயகரின் அன்புக்கட்டளையாலும் தம் இருபத்தோராம் அகவை அளவிலேயே தனித்தமிழில் உரையாற்றவும் எழுதவும் முற்பட்டதை நினைந்து எழுதுகின்றார் அடிகள்.

## ஆராய்ச்சி உரையிற் கண்ட அருந்தமிழ்ச் சொற்கள்

1905ஆம் ஆண்டுக்கு முன்பே அடிகள் எழுதி வெளிவந்த நூல்கள் முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரையும், பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையும் ஆகும். இவ் ஆய்வு நூல்களில், பழந்தமிழ் நூல்களில் வடசொற் கலப்புப் பற்றி விளக்குகிறார் அடிகள்.

முல்லைப்பாட்டினுள் உள்ள ஐந்நூறு சொற்களுள் 11 மட்டுமே பிறமொழிச் சொற்கள்; அவை, நேமி, கோவலர், படிவம், கண்டம், படம், கணம், சிந்தித்து, விசயம், அஞ்சனம் என்னும் வடசொற்கள் 9, யவனர், மிலேச்சர் என்னும் திசைச்சொற்கள் 2. ஆக, இப்பாட்டினுள் நூற்றுக்கு இரண்டு விழுக்காடு பிற சொற்கள் புகுந்தன. ஏனையவெல்லாம் தனிச்செந்தமிழ்ச் சொற்களாகும் என்கிறார்.

இவ்வாறே, பட்டினப்பாலையில் சிறிதேறக்குறைய 1369 சொற்கள் உள்ளன. அவற்றுள் 11 சொற்கள் வடசொற்கள். அவை, மகம், அங்கி, ஆவுதி, பூதம், மது, பலி, பதாகை, அமரர், கங்கை, புண்ணியம், சமம் என்பனவாம். ஞமலி என்னும் ஒரு சொல் பூழி நாட்டிற்குரிய திசைச்சொல்லாகும். ஆகவே இப்பாட்டில் நூற்றுக்கு ஒன்று விழுக்காடு பிறமொழிச் சொற்கள் கலந்துள்ளன என்றும் கூறுகின்றார். இந்நூலாசிரியர் காலத்தில் தமிழ் மிகவும் தூயதாக வழங்கப்பட்டு வந்தது என்பதை அடிகள் ஆராய்ந்துரைக்கின்றார்.

## 1901 முதலாக அரும்பிய முயற்சிகள்

தனித்தமிழ் காக்கும் முயற்சியில் 1901 ஆம் ஆண்டு முதலாகவே அடிகளார் ஈடுபட்டு வந்தமையை அவருடைய நாட்குறிப்புகளும், கடிதங்களும், பதிப்பு முன்னுரைகளும் பிறவும் நன்கு புலப்படுத்துகின்றன.

## நாட்குறிப்புகள்

எங்கள் கல்லூரியின் திராவிட மொழிச் சங்கக் கூட்டத்தில் தலைமையேற்று 'தமிழின் தனித்தியங்கும் தன்மை' என்னும் பொருள் பற்றி உரையாற்றினேன் (18-3-1901).

தமிழின் தோற்றம் பற்றி ஒரு கட்டுரை வரைந்தேன் (12,17-12-1901). எம் மாணவர் திரு.வையாபுரிப்பிள்ளை பல சுவடிகளுடன் ஒப்பு நோக்கித் தம் கலித்தொகை நூலிற் செய்த திருத்தங்களை எம் படியிலும் குறித்துக் கொண்டேன் (21-11-1917).

அரசாங்கத்துக்கு இலங்கையரின் விண்ணப்பத்தை மொழிபெயர்த்து முடித்தேன். எளிய அழகிய தூய்மையான தமிழில் அதனை அமைக்கப் பெருமுயற்சி எடுத்துள்ளேன். இனிய மிகத் தூய்மையான தமிழில் எழுதுவது எனக்கும் பெரும் இன்பத்தை அளிக்கிறது (10-1-1918).

தமிழைச் செம்மொழியாக (Classical Language) ஏற்றுக்கொள்ளல் வேண்டும் என்று அரசாங்கத்துக்கு விண்ணப்பம் விடுப்பதற்கெனப் பச்சையப்பன் கல்லூரியில் 15ஆம் நாள் நடக்கவிருக்கும் கூட்டத்தில் உரையாற்றுமாறு திரு.கா.சுப்பிரமணிய பிள்ளை, எம்.ஏ., எம்.எல்., வேண்டினார் (12-3-1918).

பிற்பகலில் திரு.சேதுப்பிள்ளை என்னைக் காண வந்தார். இணைய முடியாத வகையில் சிறுசிறு குழுக்களாகப் பிரிந்திருக்கும் தமிழ் மக்களுக்குப் புத்துயிர் அளிப்பது எங்ஙனம் என்பது பற்றி உரையாடினோம் (20-4-1918).

தமிழில் பிறமொழிக் கலப்பு என்னும் கட்டுரை எழுதத் தொடங்கினேன் (19-3-1919).

நேற்றையக் கூட்டத்தில் நான் தூய தமிழில் பேசினேன். பின்னர் மாணிக்க நாயகரவர்களுடன் நெடுநேரம் உரையாடினேன். என் ஒத்துழைப்புக் கிடைக்குமாயின் அறிவுலகத்தைத் தன் வயப்படுத்தி விட முடியும் என்று அவர் கூறினார் (17-1-1920).

என்னுடைய 'மனித வசியம்' நூலில் உள்ள வடமொழிச் சொற்களை நீக்கித் தூய சொற்களைப் பெய்தேன் (12-1-1923) என வரும் அடிகளின் நாட்குறிப்புகளால்,[1] அவர் காலந்தோறும் தனித்தமிழுக்காக முயன்று வந்தமையை அறிகிறோம்.

## மறு பதிப்புகளில் சீர்திருத்தம்

அடிகளாரின் முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை 1903இல் வெளிவந்தது. அடுத்த பதிப்புகள் முறையே 1910இலும், 1919இலும்

1. மறைமலையடிகளார் நாட்குறிப்புகள், பக்.16-54.

வெளிவந்தன. மூன்றாம் பதிப்பின் முன்னுரையில், அடிகளார் தாம் செய்த சீர்திருத்தங்களைக் குறிப்பிடுகின்றார்.

"இவ்வாராய்ச்சி யுரையின்கண் மற்றொரு முதன்மையான சீர்திருத்தமும் செய்திருக்கின்றோம். தொன்று தொட்ட சிறப்பும் இலக்கண இலக்கிய வரம்பும் தனக்கெனப் பன்னூறாயிரம் சொற்களும் வாய்ந்து இன்றுகாறும் வழக்கு வீழாது உயிரோடு உலாவிப் பன்னூறாயிரம் மக்கட்குப் பெரிதும் பயன்பட்டு வரும் நமது இனிய செந்தமிழ் மொழியை அயன்மொழிச் சொற்கள் விரவாமற் பாதுகாத்துத் தூயதாய் வழங்கி அதனை வளம் பெறச் செய்வது தமிழராயினார் ஒவ்வொருவர்க்கும் இன்றியமையாத கடமையாம்.

சில நூற்றாண்டுகளாய்த் தோன்றி இலக்கண இலக்கிய வரம்பில்லாது தமக்கெனச் சில சொற்களேயுடைய மொழிகளையும், உலக வழக்கிற்குச் சிறிதும் பயன்படாமல் இறந்துபட்ட மொழிகளையும் அவற்றிற்குரியாரும் அவற்றிற்குரியார்போற் தம்மை எண்ணிக் கொள்வாரும் அவற்றைத் தூயவாய் வழங்கவும் அவற்றை உயிர்ப்பிக்கவும் ஓவாது முயன்று வர, எல்லா நலங்களும் ஒருங்குடைய நமதருமைச் செந்தமிழ் மொழியை நம்மனோர் பயிலாதும் பாதுகாவாதும் கைவிட்டிருத்தல் நிரம்பவும் இரங்கற் பால தொன்றாம்.

இனியேனும் அவர் அங்ஙனம் மடிந்திராமைப் பொருட்டு, நம்மனோரிற் கற்றவராயிருப்போர் ஆரியம் ஆங்கிலம் முதலான பிறமொழிச் சொற்களைக் கலவாமற் தனித்தமிழிற் பேசவும் எழுதவும் கடைப்பிடியாய்ப் பழகி வரல் வேண்டும். இதனை முன் நடந்து காட்டும் பொருட்டு இதற்கு முன் யாம் எழுதிய நூல்களிற் புகுந்த சிற்சில அயன்மொழிச் சொற்களையும் அந்நூல்களைத் திரும்பப் பதிப்பிட்டு வரும் இப்போது முழுதுங் களைந்து விட்டு, அவை நின்ற இடத்தில் தூய தமிழ்ச் சொற்களையே நிரப்பி வருகின்றோம்.

இம் முல்லைப்பாட்டாராய்ச்சி யுரையின்கண்ணும் முதற்பதிப்புகளில் இருந்த அயன்மொழிச் சொற்களை நீக்கி அவற்றிற்கீடான செந்தமிழ்ச் சொற்களையே இப்பதிப்பின்கட் பெய்து வைத்திருக்கின்றேம். என்றாலும், கால நிலைக்கும் நாகரிக வளர்ச்சிக்கும் இசையச் சில அயன்மொழிச் சொற்களையும் சில சொற்றொடர்களையும் குறியீடுகளையும் ஒரோவிடங்களில் மிகச் சிறுக எடுத்தாளுதல் வழுவன்றென்பதூஉம் அறிஞர்க்கு உடன்பாடாம் என்க.

இத்தன்மையவான ஆராய்ச்சியுரைகள் எழுதுவதற்கு நல்வழி காட்டின ஆங்கிலமொழி நல்லிசைப் புலவர்க்கு யாம் எழுமையும் நன்றி பாராட்டும் கடமையுடையேம்'' எனக்கூறும் இவர் 'மறைமலையடிகள்' எனத் தம் பெயரையும் தனித்தமிழிலேயே கையொப்பமிட்டிருப்பதை இப்பதிப்பு (1919) முதலாகக் காண்கிறோம்.

முல்லைப்பாட்டின் முன்னுரையில் கூறிய சீர்திருத்தத்தைப் பட்டினப்பாலை முன்னுரையிலேயும் வலியுறுத்திக் கூறியுள்ளார். அதில், "தமிழிற் பயன்படும் நூல்கள் எழுதும் அறிஞர் எல்லாரும் அயல்மொழிச் சொற்களைத் தம்மால் இயன்றமட்டும் விலக்கித் தூய தமிழிலேயே எழுதப் பழகுவராயின் அதனால் நம் செந்தமிழ்மொழி வளம் மிகப் பல்கித் துலங்குவதோடு அதனைத் துலங்கும் அவர்க்கும் அழியாப்புகழும் அறமும் உண்டாமென்க" என்று தமிழறிஞர் உலகுக்கு ஒரு வேண்டுகையும் விடுத்துள்ளார்.

## கொண்ட கொள்கையில் உறுதி

தனித்தமிழ்க் கொள்கையை ஏற்ற பின்னர் அடிகளார் அதில் மிகமிக உறுதியாக விளங்கினார். பேரறிஞர்கள், பெரியோர்கள், நண்பர்கள் என யாராயினும் அவரிடம் மிக மிகக் கண்டிப்பாக இருந்ததையும் அறிகின்றோம்.

23, 24-12-1933இல் தமிழன்பர் மாநாடு சென்னைப் பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. மாநிலக் கல்வி அமைச்சர் திவான்பகதூர் குமாரசாமி ரெட்டியார் தலைமையில் மாநாடு நடைபெற்றது. வரவேற்புக் குழுத்தலைவர் பெயரில் வந்த அறிக்கையுடன், அம்மாநாட்டில் கலந்துகொள்ள வேண்டும் என்று கடிதமும் இணைத்து அடிகளார்க்கு அனுப்பினர். தொலைவரிச் செய்தியும் தந்தனர்.

அவ்வறிக்கையில் வரவேற்புச்சபை, காரியதரிசியும் கஜான்ஜியும், அங்கத்தினர்கள், தமிழ்ப்பாஷை, புராதனம், மேதாவிகள், ஜனங்கள், அபிப்பிராயங்கள், சக்தி, ஆலோசிப்பது, மகாநாடு, புஸ்தகாலயம், பிரசாரசங்கம், வகிக்க, தமிழபிமானம், அனுபவம், விஜயம், காரியாலயம், ராஜதானி, சம்பந்தம் இன்னவாறான பிற சொற்கள் இருப்பதைக் கண்ட அடிகளார், தலைவர்க்குத் தொலைவரியாக மறுமொழி தந்தார். அதுவருமாறு:

Reply Dt. 22-12-1933

"While thanking you and Dr. V.Saminatha Iyar for all the letters, invitations and telegram, I very much regret to say that I am not inclined

to attend any Tamil meeting which is not willing to maintain and advance pure Tamil. Of all the cultivated ancient languages, Tamil is the only one which is still living in all its pristine glory. I am strongly convinced that any mixture of foreign words in it, will tend to vitiate its healthy life and hamper its vigorous growth. Please, therefore, excuse me for not attending your conference which does not seem to meet my ideal.

- Maraimalaiyadigal.

கடிதங்கள் அழைப்புகள் தொலைவரி ஆகிய வற்றிற்கெல்லாம் உங்களுக்கும் டாக்டர் வே.சாமிநாதையரவர்கட்கும் நன்றி தெரிவிப்பதோடு, தூய தமிழை வளர்க்க விரும்பாத எந்தத் தமிழ்க் கூட்டத்திலும் கலந்து கொள்வதற்கு எமது மனம் இடந்தரவில்லை என்பதை மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கின்றேம். பண்பட்ட பழைய மொழிகள் எல்லாவற்றிலும் தமிழ்மொழி ஒன்றுதான் இன்றும் தன் பண்டை நலஞ்சார்ந்த புகழோடு வாழ்கின்றது. பிற மொழிக் கலப்பு அதன் தூய தன்மையினைக் கெடுக்குமென்றும் அதன் வளர்ச்சியினைக் குன்றச் செய்யுமென்றும் யாம் உறுதியாக நம்புகின்றேம். ஆதலால் எமது தனித்தமிழ்க் கொள்கையினைக் கடைப்பிடிக்காத உங்களுடைய மாநாட்டிலே கலந்துகொள்ள முடியாமையினைப் பொறுத்துக் கொள்வீர்களாக.

- மறைமலையடிகள்

என இவ்வாறு அடிகள் மிகவும் உறுதியாக மறுமொழிதந்துள்ளார்.

இம்மாநாட்டுக் காரிய நிர்வாக சபைத்தலைவர்: கே.வி. கிருஷ்ணசாமிஐயர், வரவேற்பு சபைத்தலைவர்: டாக்டர் உ.வே.சாமிநாதையர், காரியதரிசியும் கஜான்ஜியும்: பெ.நா. அப்புசாமி, துணைத்தலைவர்கள்: திவான்பகதூர் சி.அருணாசல முதலியார், இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார், கா.ரா. நமச்சிவாய முதலியார், குமார ராசா எம்.ஏ. முத்தையா செட்டியார், பெருந்தகு பி.டி. இராசனார், துணைவேந்தர் ஆ. இலக்குமணசாமி முதலியார், உறுப்பினர்கள்: கல்கி இரா. கிருட்டிணமூர்த்தி, திரு. வ.ரா. திரு.அனவரத விநாயகம் பிள்ளை, திரு ச. வையாபுரிப்பிள்ளை, திரு வி.க. திரு எம்.பக்தவத்சலம் போன்றோர் இதில் இடம் பெற்றிருந்தனர். எனினும் மறைமலையடிகளார் அஞ்சாநெஞ்சமுடன் தம் உணர்வை வெளிப்படுத்தியமை இவண் குறிப்பிடத்தக்கதாகும்.

## நூன்முகவுரை மறுப்பு

தூய தமிழில் இல்லாத நூல்களுக்கு முகவுரை அளிப்பதில்லை என்ற கொள்கையிலும் அடிகளார் அக்காலத்தில் மிக உறுதியாக இருந்துள்ளார் என அறிகிறோம்.

## தமிழன்பர்களுக்கு அழைப்பு

கரந்தைத் தமிழ்ச்சங்கத்தில் 23,24-7-1927இல் நடைபெற்ற ஆண்டு விழாவில், தனித்தமிழ் குறித்துப் பெரும்புலவர் பண்டிதமணி கதிரேசனாரின் வினாக்களுக்கெல்லாம் அடிகள் மறுமொழி தந்தமையையும் அவர்தம் வரலாற்றில் காண்கிறோம். அதில், தமிழன்பர்களுக்கு அடிகள் விடுத்த செய்தியும் இவண் எண்ணத்தக்கது.

"அன்பர்களே, நாம் தமிழை உயிரோடு வைக்கப்பாடுபடவேண்டும். ஐயகோ! தமிழைக் கொல்ல மடிகட்டி நிற்கலாமா? நூற்றுக்கு எண்பது வடசொல்லும் இருபது தமிழ்ச்சொல்லுமாக எழுதினால் பேசினால் தமிழ் எப்படிப் பிழைத்தல் கூடும்?

வடமொழி பயிலவேண்டாம் என்று யான் கூறவில்லை. மகிழ்வுடன் பயிலுங்கள். நானும் பயில்கின்றேன். ஆனால் அன்பர்களே தமிழ்த்தாயைக் கொல்லாதீர்கள். தமிழ் நன்மங்கையின் அழகிய நன்மேனியில் அம்மைத் தழும்புபோல் வடசொற்களைப் புகுத்தாதீர்கள். அடியனேன் உங்களைப் பெரிதும் கெஞ்சுகிறேன். ஆண்டவர்களே தமிழைக் கெடுக்காதீர்கள். தனித்தமிழுக்குப் பாடுபடுங்கள்.

பண்டைப் புலவராயினும் இக்காலத்தவராயினும் மற்று எவராயினும் தமிழுக்குக் கேடு விளைத்தோரை விளைப்போரை ஒரு பொருளாகக் கருத மாட்டேன். பழம்பெரும் புலவர் ஒருவர் ஒரு வடசொல் வழங்கியிருந்தால், பிற்காலத்தவர் நூறுசொல் வழங்குகிறார். நாம் நூறாயிரம் சொற்களை வழங்குகின்றோம். பெருங்கடனாளி யாகின்றோம்.

சங்கத்தமிழ் வழக்கை இடைக்காலத்தவர் பின்பற்றியிருந்தால் அவர்களுக்குப் புகழ் உண்டு. இடையில் வந்து தமிழைக் கெடுத்தவர்களை நான் ஒரு நாளும் பொருட்படுத்தேன். தமிழிற் பிறமொழிக் கலப்பை வெறுத்துத் தள்ளுங்கள். தமிழின் சுவையை மாற்றாதீர்கள். வல்லோசைகளைப் பெருக்காதீர்கள்.

தமிழர் ஆரியத்திற்கு அடிமைப்பட்டு அச்சொற்களைத் தமிழிற் கலத்தல் தீங்கே. இவ்வடிமைத் தனத்தினின்றும் முதலில் விடுபடுங்கள். இது முதலில் பெறவேண்டிய "சுயராஜ்யம்".

தமிழ் பெயரளவிலேயே விளங்குகிறது. எங்கும் ஆரிய மொழி கூத்தாடுகின்றது. உண்மைத் தமிழராயின் உங்களுக்கு உறுதிப்பாடு வேண்டும். தமிழைத் தமிழாகவே வழங்கவேண்டும். தாய்க்குத்தகுந்த பிள்ளைகள் தோன்றல் வேண்டும். தமிழில் அயற்சொற்களைக் கலக்க விரும்புவோரை எவ்வளவு கற்றவராயினும் அவரை யான் மதியேன் மதியேன்" என்கிறார் அடிகள்.[1]

மறைமலையடிகளார் காலத்திய தமிழின் நிலை, அவர் விரும்பிய விழிப்புணர்வு ஆகியவை இவற்றால் விளங்கும். அவ்வாறே, இக்காலத்திய தமிழின் நிலை மற்றும் இனிநாம் செய்ய வேண்டுவன பற்றியும் சிந்திக்க வேண்டியுள்ளோம்.

## தனித்தமிழ் விளக்கம்

தனித்தமிழ் மாட்சி, தமிழிற் பிறமொழிக்கலப்பு, தனித்தமிழும் கலப்புத்தமிழும் ஆகிய கட்டுரைகளில் அடிகளார் விரிவான விளக்கங்களை எழுதியுள்ளார்.

## கொடுமையிலும் கொடுமை

"பண்டைக் காலந் தொட்டு இன்றுகாறும் நடைபெறும் மொழி தமிழ் ஒன்றே ஆகும். பண்படுத்தப்பட்ட பழைய மொழிகளில் தன்னைத் தவிர மற்றையவெல்லாம் இறந்து போகவுந், தான் மட்டும் இறவாமல் நடைபெற்றுப், பன்னூறாயிரம் மக்களுக்கும் பெரிதும் பயன்பட்டு வரும் பெருஞ்சிறப்பு வாய்ந்த தமிழ் மொழியைக் கல்லாதவர் எல்லாந் தூயதாய் வழங்கி வர, அதனைக்கற்று அதனாற் பேரும் புகழும் பொருளும் அடைந்துவருஞ் சிற்சிலர் மட்டுந் தமக்கு எல்லா நலங்களையும் தந்து தாயினுந் தம்மைப் பாதுகாத்து வரும் அதனை நிலைகுலைத்து அழித்தற்குக் கங்கணங் கட்டி நிற்கின்றார்கள். இவர்களின் இக்கொடுஞ் செயல் தன்னைப் பெற்ற தாயைக் கொல்லுங் கொடுஞ்செயலினுங் கொடியதாக இருக்கின்றது"[2] என மிக மிக வருத்தத்துடன் குறிப்பிடுகின்றார் அடிகள்.

---

1. மறைமலையடிகள் வரலாறு, பக்.527,528.
2. தனித்தமிழ் மாட்சி, ப.17.

## கலப்பும் மாறுதலும்

தமிழிற் பிறமொழிச் சொற்கள் கலப்பதும், மொழிமாறுதல் ஏற்படுவதும் இயல்பு என்பாரின் கூற்றுகளையும் அடிகளார் மறுத்துரைக்கின்றார்.

“இனி, நமது செந்தமிழ்மொழியில் ஆரியம் ஆங்கிலம் முதலான பிறமொழிச் சொற்களைக் கலவாமல், நம்மாற் கூடிய வரையில் முயன்று அதனைத் தூயதாக வழங்கல் வேண்டும். ஆனால், ஒரு சாரார், உலகத்தில் உள்ள எல்லாப் பொருள்களும் மாறுந் தன்மையவாகலின், அவற்றுள் ஒன்றாகிய மொழியும் மாறுதல் அடைதல் இயற்கையேயாம் என்றும், அதனால் தமிழும் பல்வேறு மொழிக்கலப்புற்று மாறுதல் அடைதல் நன்றேயாமென்றும் வரைந்திருக்கின்றார். இனி, ‘மாறுதல்’ என்னுஞ் சொல்லால் உணர்த்தப்படும் பொருள் என்னை? ஒன்று தன் தன்மை திரிந்து மற்றொன்று ஆதலா? அல்லது அது தன் இயல்புக்கு ஏலாதவற்றொடு கலக்கப்பெற்றுத் தன்நிலை குலைதலா;அல்லது தன்னிலைக்கு ஏற்றவாறு பிறவற்றின் உதவியால் தானே வரவர வளர்ந்து திரிபுறுதலா? எனின்; இம்மூன்றும் அம்மாறுதல் என்னுஞ் சொல்லுக்குப் பொருளேயாம்.

## உயிர்கள் ஏற்கும் இயற்கை மாறுதல்

இம் மூவகைப்பட்ட மாறுதல்களில் எத்தகைய மாறுதலை எல்லா உயிர்களும் விரும்புகின்றனவென்று உற்று நோக்கின், தம் இயல்புக்கு ஒத்தவற்றின் சேர்க்கையால் தமது தன்மை கெடாமல் வரவரப் பெருக்கமுற்று மாறிமாறி வளர்ந்து வருதலையே அவையெல்லாம் அல்லும் பகலும் விழைந்து வருகின்ற வென்பது எல்லார்க்கும் புலனாம்.

தமக்கு ஏலாத பொருள்களோடு கலந்து தமது நிலைகுலைந்து மாறி மாய்தலை எவ்வகைப்பட்ட உயிரும் விரும்புவதில்லை; தமக்கு இடர்தரும் இடத்தையேனும் பொருளையேனுங் கண்டால் அவற்றை அகன்று போய்ப் பிழைக்கும் முயற்சியைப் புழு முதல் மக்கள் ஈறான எல்லா உயிர்களும் மிகவும் பரபரப்பொடு நிரம்பக் கருத்தாய்ச் செய்தல் எவரும் உணர்ந்ததேயாம். இடம் விட்டுப் பெயராத புல்மரம் முதலியனவும் கூடத் தத்தமக்கேற்ற இடங்களிற் செழுமையாய் முளைத்தெழுந்து தமக்கேற்ற உணவுகளை உட்கொள்ளும் வரையில் உயிரோடிருத்தலும், அங்ஙனம் அமையாக்கால் அவை பட்டுப் போதலும் எல்லாரும் அறிவர்.

ஆகவே, உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் எல்லா உயிர்களும் மாறுதல் அடைதலாகிய பொது நிகழ்ச்சியைப் பார்த்து, அப்பொது வகையான மாறுதலுள் எத்தகைய மாறுதல் மக்களால் வேண்டப்படுவது என்பதனை உணர்ந்து பாராமல், தம் நிலை குலைந்து மாறுதலாகிய வேண்டாததொன்றைக் கடைப்பிடியாய்ப் பிடித்துக் கொண்டு, அதன்படி நமது அருமைச் செந்தமிழ் மொழியுந் தனது தூயநிலை குலைந்து மாறுதல் அடைய வேண்டு மென்று உரைப்பது அறிவுடையோரால் ஏற்றுக்கோடற்பாலதாமோ?

## காப்பது நம் கடமை

எல்லாப் பொருளும் எல்லா உலகமும் ஒரு காலத்து மாறி மாய்தல் உண்மையே யாயினும், அம் மாறுதலும் அதனால் வரும் அறிவும் இப்போதே வந்துவிடல் வேண்டுமென்று எவரேனும் விரும்புவரா? ஆண்டு நிரம்ப முதிர்ந்து இறத்தல் உண்மையேயாயினும், ஆண்டு முதிரா நல்லிளமைப்பொழுதிலேயே நோய் கொண்டும் ஆகாப் பொருள்களோடு கலந்தும் மாய்ந்துபோக எவரேனும் விரும்புவரா? அங்ஙனம் எவரேனும் விரும்புவராயின் அவரை அறிவு திரிபெய்திய வெறியர் என்றே உலகங் கொள்ளு மல்லது, மற்று அவரை அஃது உயர்த்துக் கூறுமோ?

ஆண்டில் முதிர்ந்தவர்களுங்கூடத் தமது உடம்பின் நலம் பழுதுபடாதவாறு அறிவான முறைகளைக் கையாண்டு மேலும் மேலும் அதனை நலமுற வைத்து வாழ்நாளைப் பெருக்குதற்கன்றோ முயல்கின்றனர்? நலமுடனிருந்து வாழ்நாளை பெருகச் செய்பவர்களுக்கு அறிவு வளர்ச்சியும் அதனாற் பேரின்ப பேறும் வாய்த்தலால், உடம்பை விரைவில் நிலைகுலையச் செய்பவர்களுக்கு அறிவும் இன்பமும் வாயா.

இதுபோலவே, நமது செந்தமிழ் மொழியாகிய ஒலியுடம்பும் பழுதுபடாமற் செவ்வையாகப் பாதுகாக்கப்படுமானால், அஃது இன்னும் பல நூறாயிரம் ஆண்டு உயிரோடு உலாவித்தன்னைப் போற்றி வழங்கும் மக்களுக்கு அரிய பல நலங்களையும் நன்கு பயக்கும்.

சிலருடம்பு தமக்கு இயற்கையிலேயுள்ள குறைபாட்டானுந், தம்மையுடையவர்களால் நன்கு பேணப்படாமையானும் விரைவில் அழிந்து போதல் போலச், சமஸ்கிருதம், இலத்தீன், கிரீக், ஈபுரு முதலான பழைய மொழிகளுந் தமக்கு இயல்பாகவுள்ள குறைபாட்டானுந் தம்மை வழங்கியோர் நாகரிகம் அற்றவராய் இருந்தமையானும் இப்போது மக்களாற் பேசப்படாமல் வழங்குதல்

அற்றன. நமது செந்தமிழ் மொழியோ தனக்கு இயற்கையிலேயுள்ள வளப்பத்தானுந், தன்னை வழங்கிவரும் நாகரிக நன்மக்களின் அறிவு முயற்சியாற் பெரிது போற்றப்பட்டு வருதலானுந் தனது இளமைத் தன்மை குன்றாது இன்னும் உலவி வருகின்றது.

சிலர் இளமையிலேயே மூத்துப் போதலையும், வேறு சிலர் முதுமையிலும் அது தோன்றாமல் புத்திளமையோடுங் கட்டழகோடும் விளங்குதலையும் நீங்கள் பார்த்ததில்லையா? பாதுகாப்பினால் இளமையும் வாழ்நாளும் இவ்வாறு நீண்டுவருதல் போலவே, நமது தனித்தமிழையுந் தூயதாக வைத்துப் பாதுகாப்போமாயின் அது மக்கள் உள்ளளவும் இறவாது நடைபெறுதல் திண்ணமன்றோ? எனவே, தமிழ் மொழியின் வளவிய வளர்ச்சிக்கு ஏதுவாகிய மாறுதலே எல்லாரும் விரும்பத்தக்கதாமன்றி, அது குன்றி மாய்தற்கு ஏதுவான மாறுதல் அறிவுடையார் எவரானும் எக்காலத்தும் விரும்பற்பாலதன்று"[1] என்னும் இக்கருத்துக்கள் அடிகளாரின் பெருநோக்கினைப் புலப்படுத்துகின்றன. தமிழ் வளர்ச்சியில் ஈடுபட்டுள்ளோர் அனைவரும் இவற்றை ஏற்று நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

## தனித்தமிழில் பழந்தமிழ் நூல்கள்

மக்கள் இம்மை மறுமையைப் பற்றி அறிய வேண்டுவனவெல்லாம் முற்றும் எடுத்துக்கூறும் **தொல்காப்பியம் திருக்குறள்** என்னும் இரண்டு நூல்களும் தூய தனித்தமிழ்ச் சொற்களால் ஆக்கப்பட்டிருத்தலைச் சுட்டிக்காட்டும் அடிகளார், எல்லா நிறைவும் உடைய தமிழ்மொழிக்குப் பிறமொழிச் சொற்களின் உதவி சிறிதும் வேண்டப்படுவதில்லை என்பதை மிக உறுதியாகக் கூறுகின்றார்.

தன் இயற்கைச் சொற்களால் அமைந்ததாகிய தமிழிற் பிறமொழிச் சொற்களைப் புகுத்துதல் என்பது, எல்லா வுறுப்புக்களும் அமைந்த அழகியதோர் உடம்பில் உள்ள உறுப்புகளை வெட்டி எறிந்துவிட்டு, வேறு மண்ணாலும், மரத்தாலுஞ் செயற்கையாக அவ்வுறுப்புகள்போற் செய்து அவற்றை அதன்கண் ஒட்ட வைத்துப் பார்த்தலுக்கே ஒப்பாயிருக்கின்றது என்கின்றார் அடிகள்.

---

1. தனித்தமிழ் மாட்சி, பக்.18-21.

## கற்றவர் மொழிகாக்கும் விதம்

தமிழையும் பிறமொழியையுங் கற்கக்கற்கத் தமிழ்மொழிச் சொற்கள் இவை அயல்மொழிச் சொற்கள் இவையென்று நன்குணர்ந்து தமிழில் ஏனையவற்றைக் கலவாமற் பேசுதலும், எழுதுதலும், தமிழில் முன்னமே வழக்கு வீழ்ந்த சொற்களையுந் திரும்ப எடுத்து வழங்கவிடுதலுமே கற்றவர் அம்மொழியைப் பாதுகாத்து வளர்த்தற்குச் செய்யும் நன்முறையாகும் என்பது அடிகளாரின் கருத்து.

ஆங்கிலத்தில் வல்ல நல்லிசைப் புலவர்களான ஷேக்ஸ்பியர், மில்டன், ஷெல்லி, டெனிசன் முதலியோர் தம்மால் ஆனமட்டும் முயன்று அயல்மொழிச் சொற்கள் விரவாத தூய ஆங்கில நடையிற் பல்லாயிரம் இனிய பாக்கள் பாடியிருப்பதற்காக அவர்களை ஆங்கில நன்மக்கள் புகழ்ந்து பேசுகின்றார்கள்; பிற்காலத்திருந்த டெனிசன் தமது காலத்தில் வழங்காது மறைந்த தூய ஆங்கிலச் சொற்களையும் மீண்டும் எடுத்து வழங்கி அவற்றை வழங்க விட்டமைக்காக, அவர் கற்றறிவுடைய ஆங்கில நன்மக்களால் பாராட்டப்படுகின்றார்கள்; ஜான்சன், கிப்பன் என்னும் உரைநூற் புலவர்கள் மற்றைத் துறைகளிற் சிறந்தவர்களாயிருந்தும், அவர்கள் இலத்தீன், கிரீக் முதலான அயன்மொழிச் சொற்களை மிகுதியாய் எடுத்துத் தம் உரை நூல்களில் விரவ வைத்தெழுதினமைக்காக அவர்களை அந்நன்மக்கள் குறைத்தே பேசுகின்றார்கள் என ஆங்கில நூலுரை வரலாற்றையும் எடுத்துரைக்கின்றார் அடிகள்.

ஆங்கில மொழியில் இலக்கண நூற் புலவராய் விளங்கிய மிக்கிள் ஜான் (Prof. J.M.D. Meikle John) தமது நூலில் (The Art of writing English), பிறமொழிச் சொற்கள் கலவாமல் ஆங்கில மொழியைத் தூயதாய் வழங்குதலின் மேன்மையை வற்புறுத்திக் கூறியுள்ளதை யெல்லாம் அடிகள் விளக்கி வரைந்துள்ளார்.

## ஆங்கிலமும் தமிழும்

ஐரோப்பாவின் வடமேற்குமூலையிற் தோன்றிய சூடர் முதன்முதல் ஆங்கில மொழியைப் பிரித்தானிய தீவினுட் கொண்டு வந்த காலத்து, அதன்கண் இரண்டாயிரஞ் சொற்களுக்கு மேல் இல்லையென்று அம்மொழிவல்ல இலக்கண ஆசிரியர்கள் வரைந்திருக்கின்றனர். இங்ஙனம் முதலில் மிகக் குறைந்த நிலையிலிருந்து பின்னர்க் காலந்தோறும் பலமொழிக் கலப்பினாற்

பெருகிய ஆங்கிலமொழி, அப்பிறமொழிச் சொற்களின் உதவியின்றி முற்றும் நடைபெறுதல் இயலாது என்பதனை ஆங்கிலம் நன்கு உணர்ந்தார் எவரும் விளக்கமாய் அறிந்திருப்பர்.

இவ்வாறு முற்றுந் தனித்து இயங்கமாட்டாக் குறைபாடுடைய ஆங்கில மொழியையே இயன்றட்டுந் தூயதாய் வழங்குதலிற் கண்ணுங் கருத்தும் வைக்கவேண்டுமென்று அம்மொழிக்குரிய ஆங்கில நன்மக்கள் ஓயாது வற்புறுத்துவராயிற், பண்டைக்காலந் தொட்டே நாகரிக வாழ்க்கையிற் சிறந்தாராய்த், தாம் ஒருவர்கீழ் அடங்கி வாழாது, பிறமொழி பேசுவாரையுந் தங்கீழ் அடக்கி வைத்துத், தமது செந்தமிழ் மொழியையே நீண்டகாலம் வரையில் தூய்தாய் வழங்கி வளர்த்து வாழ்ந்து வந்த தமிழ் மக்களின் கால் வழியில் வந்தோரான நாம் நமது அருமைச் செந்தமிழ் மொழியைத் தூய்தாய் வழங்குதலில் எவ்வளவு கண்ணுங் கருத்தும் வைக்க வேண்டும்! அதற்காக நாம் எவ்வளவு முயற்சியெடுக்கவேண்டும்! என்பதைத் தமிழர் அனைவருக்கும் நினைவூட்டுகின்றார் அடிகள்.[1]

## தமிழில் பிறமொழிக்கலப்பு

உயிரொடு சுருசுருப்பாய் உலவிவருந் தமிழ்மொழி தான் வழங்கிய பண்டைநாளில் வழங்கி யிறந்த ஆரியம் இலத்தீன் முதலான மொழிகளின் சில சொற்களையும், இஞ்ஞான்று தன்னொடு சேந்துலாவும் ஆங்கிலம், துலுக்கு முதலான மொழிகளின் சில சொற்களையுந் தான் எடுத்துப் பயன்படுத்தி வருகின்றதை விளக்க வந்த அடிகள், உயர்ந்த மலை முகட்டில் என்றும் நீர் ஊறும் ஒரு சுனையிலிருந்து இடையறாது ஓடி வரும் ஓர் அருவி நீருக்குத் தமிழ்மொழியை ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

பன்னெடுங் காலமாக வறளாது ஓடிவருந் தமிழருவியானது தான் வரும் வழியிலுள்ள ஆரியம் முதலான பழைய குளங் கூவல்களிற் சென்று அவற்றின் சொற்களாகிய நீரையுந் தன்னொடு கலப்பித்துப் புதியவாக்கிப் பின்னும் இடையிடையே தன் கண் வந்து கலக்கும் பின்றைக்காலத்துச் சொற்களாகிய சிறு கால்களின் நீரையுந் தன்னுருவாக்கித் தன்னை வழங்கும் மக்கட்குப் பெரிதும் பயன்பட்டு வருகின்றமையையும் எடுத்துரைக்கின்றார் அடிகள்.[2]

---

1. தனித்தமிழ் மாட்சி, ப.28.
2. மேலது, ப.31.

இத்தகைய பிறமொழிக்கலப்பு இயற்கையே என்கின்றார் இவர். நாகரிக முதிர்ச்சி பெற்றவர்கள் பேசும் மொழியில் மற்ற மொழிச் சொற்கள் புகுந்து கலப்பது இயற்கை என்பதை எடுத்துக்கூறுகின்றார். அங்ஙனமாயிற், பழைய காலத்திற் தமிழ் மக்கள் அயல்நாட்டவரொடு சென்று அளவளாவும் நாகரிக முதிர்ச்சி உடையராய் இருந்தார் என்பதற்குச் சான்று என்னை எனக் கேட்பாருக்குத் தொல்காப்பிய நூலை முன் வைக்கின்றார்.

"இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகட்கு முன்னரே எழுதப்பட்ட **தொல்காப்பியம்** என்னும் நூல் ஒன்றுமே ஒரு பெருஞ்சான்றா மென்க. அருமை பெருமையிற் சிறந்த இவ்வொரு நூலை ஒரு சிறிது உற்று நோக்குவார்க்கும்; இந்நூல் எவ்வளவு பழமை யுடையதாய் இருக்க வேண்டுமென்பதும், மிகப் பழைய நாளிலே இவ்வுயர்ந்த நூலை எழுதிய ஆசிரியரோடு ஒருங்கிருந்த தமிழ் முதுமக்கள் எத்துணைச் சிறந்த அறிவும் நாகரிகமும் வாய்ந்தவரா யிருந்திருக்க வேண்டுமென்பதும் அவர் உள்ளத்திற் பதியாமற் போகா. இந்நூலின் கண் உள்ள "முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை" என்னுஞ் சூத்திரத்தாற் பண்டைத் தமிழ் மக்கள் பொருள் ஈட்டும் பொருட்டுத் தம் மனைவி மக்களையும் நாட்டையும் விட்டுக் கடல் வழியே மரக்கலன்களில் ஏறித் தொலைவான நாடுநகரங்களிற் சென்று சேர்வரென்பது பெறப்படுகின்றது" என இதை விளக்குகிறார்.[1]

தமிழர்கள் கடல்தாண்டிச் சென்று வேற்று நாடுகளிற் பொருள் முயற்சி செய்தது போலவே, வேற்று நாட்டவரும் தமிழ்நாட்டிற் போந்து பல முயற்சிகளை நடத்தினாரென்பதற்கு ஈபுரு மொழியில் எழுதப்பட்ட பழைய விவிலிய நூலை சான்று காட்டுகின்றார்.

இவ்வாறே, மிகப்பழங்காலத்தே பிறநாட்டு மக்கள் தமிழகத்திற்கு வந்து சென்றமையைச் சுட்டும் பழந்தமிழ் நூல்களான **பட்டினப்பாலை, சிலப்பதிகாரம்** போன்றவற்றையும் அடிகள் குறிப்பிடுகின்றார். மேலும், நெடுங்காலம் உயிரோடிருந்து திகழும் மொழியின்கண் மட்டுமே பிற சொற்கள் கலக்கமுடியும் என்றும் வலியுறுத்துகின்றார். ஆரிய மொழியிற் பிறமொழிச் சொற்கள் மிகுதியாகச் சேர்ந்து காணப்படாமையும் இதனாலேயே என்கின்றார்.

---

1. *தனித்தமிழ் மாட்சி*, ப.32.

## தமிழின் இயற்கையழகு

தமிழின் இயற்கையழகைப் பிறமொழிக் கலப்பால் சிதைத்து விடக் கூடாது என்பது அடிகளாரின் கொள்கை. இதை இரண்டு எடுத்துக்காட்டுகளோடு விளக்குகிறார்.

"வயிற்றிற்கு இடப்பட்ட உணவுப் பொருள்கள் தமது உருவு திரிந்து உடம்பிற்கு வேண்டும் பாலாக மாறாமல், அவை அங்ஙனமே வயிற்றினுட் கிடந்தால் அவை அவ்வுடம்பிற்குச் சிறிதும் பயன்படாமையோடு அவ்வுடம்பினையும் பழுது படுத்துமன்றோ? அதுபோலவே, தமிழின் தன்மைக்கு ஏற்ப உருவு திரியாமல் எழுதப்படும் வடசொற்கள் முதலியனவும், பயன்படாது போதலொடு தமிழின் அழகையுஞ் சிதைவுபடுத்தா நிற்கின்றன.

மேலும், இயற்கை யழகாற் சிறந்த ஒரு நங்கைக்கு அவளது இயற்கையழகு ஒன்றுமே அமையும்; அன்றி அவட்கு வேறு ஆடையணிகலன்கள் அணிந்து பார்க்க வேண்டினும், அவளது அழகிற்குப் பொருத்தமான சிலவற்றைத் தெரிந்தெடுத்து அவளை ஒப்பனை செய்வதே வாய்ப்புடைத்தாம்; அங்ஙனமின்றி அவளது நலத்திற்குப் பொருந்தாதவற்றையும், பொருந்துமெனும் அளவிற்கு மேற்பட்ட ஆடையணிகலத் தொகுதிகளையும் அவள் மேல் இடுதல் அவளது ஒப்புயர்வற்ற அழகைக் குறைப்பதொடு காண்பார்க்கும் நகையினைத் தரும்; இங்ஙனமே, இயற்கை நலம் நிரம்பிய தமிழுக்கு அதன் நலம் ஒன்றுமே அமையும்; அன்றி இன்றியமையாது வேற்றுமொழிச் சொற்களைச் சேர்க்க வேண்டி வந்தக்கால், அதன் இயல்புக்குப் பொருந்தினவற்றையே சேர்த்தல் அழகுடைத்தாம், அவ்வாறன்றி அதன் இயற்கைக்கு மாறானவற்றையும் மாறாகாவிடினும் அளவுக்கு மிஞ்சிய அயல்மொழிச் சொற்களையும் அதன்கண் வலிந்து புகுத்தல், அதன் நலத்தைக் குழைப்பதொடு தமிழறிவு மிக்க சான்றோர்க்கு நகையினையும் விளைக்கும். ஆதலால், அயல்மொழிச் சொற்களை உருவு திரியாமற் சேர்த்தலும், உருவு திரிந்தவற்றையும் அளவுக்கு மிஞ்சிச் சேர்த்தலும் ஒரு சிறிதும் பொருந்தாவென்று கடைப்பிடித்துணர்க"[1] என மிக அழகாக இதனை விளக்கியுரைக்கின்றார்.

## தமிழால் நீண்டநாள் வாழலாம்

நமது தமிழ்மொழிப் பயிற்சி நம் நீண்ட உயிர்வாழ்க்கைக்கு இன்றியமையாத அருமருந்தாகும் என்பர் அடிகள்.

---

1. தனித்தமிழ் மாட்சி, ப.45.

தமிழ் முதலான மொழிகளுள் ஒன்றையேனும் அல்லது இரண்டு மூன்றையேனுந் தமது குழந்தைப் பருவந்தொட்டுப் பேசி வருபவர், தாம் பேசும் அவ் இயற்கை மொழிகளையே மேலும் மேலும் கற்றுத் தமது அறிவை வளம்படுத்தாமல் அவற்றைக் கைவிட்டு முற்றும் புதியவான ஆங்கிலம் ஆரியம் முதலான மொழிகளையே பழகி வருவராயின் அவர் நீண்டநாள் உயிர் வாழார். இதனாலன்றோ, தமிழைக் கைவிட்டு ஆங்கிலம் ஆரியம் முதலியவற்றையே கற்றுப் பழகும் நம் நாட்டவர் பலர் முப்பது அல்லது நாற்பது ஆண்டுக்குட் பலவகை நோய்களாற் பிடிக்கப்பட்டு மாய்ந்து போகின்றனர் என்றும் கூறுகின்றார்.

மேலும், தாய்ப்பால் நிரம்பவுண்டு வளர்ந்த பிள்ளை ஆண்டு முதிர முதிர அரிய பெரிய முயற்சிகளையெல்லாம் எளிதிற் செய்து நீண்டநாள் உயிர்வாழ்தல் போலத் தமிழ்ப்பால் உண்டு வளர்ந்தவர் எத்தகைய மொழிகளையும் வருத்தமின்றிக் கற்று நெடுநாள் உயிர் வாழ்ந்திருப்பர். தமிழொடு மற்ற மொழிகளையுங் கற்றவர் நீண்டகாலம் உயிர் பிழைத்திருத்தலும் தமிழை விட்டு அயல்மொழிகளை மட்டும் பயிலுகின்றவர் விரைவில் உயிர் மாளுதலும் இயற்கையாய் நிகழ்தலைக் காண்பவர்களுக்கு நாம் கூறும் இவ்வுண்மை நன்கு விளங்கும்[1] என இவ்வாறு தமிழால் நீண்டநாள் வாழலாம் என்ற கருத்தையும் விளக்குகிறார்.

இவ்வாறே, அறிவிற் சிறந்தவரான ஆங்கில நன்மக்கள் தமக்கு இயற்கையில் உரிய ஆங்கில மொழியை நன்றாகக் கற்ற பிறகுதான் வேறுமொழியைக் கற்கின்றார்கள். தமது மொழியைக் கல்லாமல் வேறு மொழிகளைச் சிறிதுங் கற்கவே மாட்டார்கள். இப்படிப்பட்ட உயர்ந்த பழக்கம் அவர்களிடத்திலே இருப்பதனாலேதான் அவர்கள் தமது மொழியில் நிகரற்ற புலமையுடையராய் இருப்பதொடு, தாம் கற்கும் வேறு மொழிகளிலும் வல்லவராய்ச் சிறந்து விளங்கி நீண்ட நாள் உயிர் வாழ்ந்து உலகத்திற்கு அளவிறந்த நன்மைகளை யெல்லாம் விளைவித்து வருகின்றார்கள் என ஆங்கில மக்களின் பண்பு நலன்களைப் பாராட்டும் அடிகளார் தமிழ்மக்களும் அவ்வாறே இயங்க வேண்டுமென்பதை வலியுறுத்துகின்றார்.

## இந்திமொழித் திணிப்பை எதிர்த்தல்

மறைமலையடிகளார் மொழி ஆர்வலர். அவர் எம்மொழியையும் எதிர்த்தவரல்லர். அவரே வடமொழியும்

1. தனித்தமிழ் மாட்சி, ப.46.

ஆங்கிலமும் முழுமையாகக் கற்றவர். ஆயின், தமிழ்மொழியின் தொன்மையையும், பெருவளத்தையும், தனித்தன்மையையும் உணர்ந்த அடிகள் பிறமொழிக் கலப்பு ஏற்படுவதையே கண்டிக்கின்றார். வடமொழிக் கலப்பு மிகுந்த இந்தி மொழியை இந்தியப் பொதுமொழியாக்குவது என்ற நிலை எழுந்தபொழுது அதனை வன்மையாகக் கண்டிக்கின்றார். இந்திமொழித் திணிப்பால் தமிழுக்கும் தமிழருக்கும் எந்தப் பயனுமில்லை என்பதை மிகத் தெளிவாக எடுத்துரைத்தும் சிறு நூல்களை ஆயிரக்கணக்கில் இலவசமாக வெளியிட்டும் தம் எதிர்ப்புணர்வைப் புலப்படுத்தியுள்ளார்.

## இந்தி பொதுமொழியா?

'ஹிந்தி' பொதுமொழியா? Is Hindi A common Language? -இது, பல்லாவரம் பொது நிலைக்கழக ஆசிரியர் மறைத்திருவாளர் சுவாமி வேதாசலம் என்னும் மறைமலையடிகளால் இயற்றப்பட்டது. இதனைத் தமிழ் மக்கட்கு இலவசமாக வழங்குதற் பொருட்டுக் கருவூர் அறிவுதயக் கழக ஆசிரியர் திரு. ஈழத்துச் சிவாநந்த அடிகள் B.A., அவர்களால் கருவூர் சந்திரா அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது. 25th September 1937. 15,000 படிகள் - என இவ்வாறு இந்நூலின் மேலட்டையில் அச்சிடப்பட்டுள்ளது. பின் அட்டையில் திரு. ஈழத்துச் சிவாநந்த அடிகள் வேண்டுகோளுரையும் படமும் அச்சிடப் பெற்றுள்ளன.

இருபத்தைந்து பக்கங்கள் கொண்ட இந்நூல் முழுமையும் தமிழின் பழமைச் சிறப்பை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது. இவற்றைத் தமிழர்கள் படித்துப் பயன்பெற வேண்டுமென்பதற்காகவே ஆயிரக்கணக்கில் அச்சடித்து இலவசமாக அக்காலத்தில் அளித்துள்ளனர்.

இந்தியைப் பொது மொழியாக வழங்க வேண்டுமென்பாரின் கூற்றுகளையெல்லாம் அடிகள் இந்நூலில் மறுத்துரைக்கின்றார்.

## பழைய நாகரிக மொழிகள்

மக்கள் ஒருவர் தமது கருத்தைப் பிறர் ஒருவர்க்கு இடர்ப்படாது தெரிவித்துக் கொள்வதற்குரிய கருவியே மொழி. உலகிலுள்ள சுமார் ஆயிரம் மொழிகளிற், சிற்சிலவே பேசவும் எழுதவும் படுவன; அவற்றுள்ளும் ஒரு சிலவே இலக்கண இலக்கிய நூல்கள் உடையன; அவற்றுள்ளும் மிகச்சிலவே மிகப் பழைய மொழிகளாய் உள்ளன. இம் மூவகை நலங்களும் வாய்ந்தவை தமிழ்,

எகுபதியம், சாலடியம், ஈபுரு, சீனம், மெகுசிகம், ஆரியம், கிரேக்கம், இலத்தீன், அராபி முதலிய சிற்சில மொழிகளேயாகும். இவற்றுள் தமிழ் ஒன்றைத் தவிர, மற்றையவெல்லாம் இஞ்ஞான்றுள், எந்த மக்கட் குழுவினராலும் பேசப்படாமல் இறந்தே போய்விட்டன. ஆகவே, இறந்த அப்பண்டை மொழிகளைப் பயில்வது, அவற்றின்கட் பண்டை ஆசிரியர்கள் இயற்றி வைத்த அரிய நூல்களைக் கற்றுப் பல பழம்பொருள்களையும் பல நுண்பொருள்களையும் அறிந்து அறிவு பெறுதற்குதவி செய்யுமேயல்லாமல், இஞ்ஞான்றுள்ள எந்த மக்கட்கூட்டத்துடனுங் கலந்து பேசி உறவாடி வாழ்க்கை செலுத்துதற்கு அது சிறிதும் உதவி செய்யாது என்பதை முதற்கண் எடுத்துரைக்கின்றார் அடிகள்.[1]

## தமிழும் புதுமொழிகளும்

நமதருமைச் செந்தமிழ் மொழியோ மிகப் பழைய காலத்தேயிருந்து இன்று காறும் இனிவருங்காலத்தும் பலகோடி மக்களால் இந்தியா, இலங்கை, பர்மா, மலாய்நாடு, தென்னாப்பிரிக்கா முதலான பற்பல நாடுகளிலும் பேசவும் எழுதவும் பட்டு வழங்கிவருந் தனிப்பெரும் பண்டை உயிருடைமொழி ஒன்றேயாய் விளங்கி நிலவுவது; இலக்கண நூல்கள், ஒழுக்க நூல்கள், அறநூல்கள், பொருள்நூல்கள், காவிய நூல்கள், கதை நூல்கள், கணக்கு நூல்கள், வான்நூல்கள், மருத்துவநூல்கள், உரைநூல்கள், அறிவு நூல்கள், கடவுள் நூல்கள் முதலான மக்களின் இம்மை மறுமை வாழ்க்கைத் துறைகள் எல்லாவற்றையும் நன்கு விளக்கும் எல்லா வகையான நூல்களும் முன்னும் பின்னும் இருந்த சான்றோரால் நிரம்ப எழுதப்பெற்ற பெருவளம் வாய்ந்ததாயும் இன்னும் வருங்காலத்தில் அவ்வளம் மேன்மேற் பெருகப்பெறுவதாயுந் துலங்குவது. இப்போது உலகம் எங்கணும் வழங்கப் பெறும் மற்றை எல்லா மொழிகளுமோ தமிழுக்கு மிகமிகப் பிற்பட்ட காலத்தே அதாவது இற்றைக்கு ஐந்நூறு அல்லது அறுநூறு ஆண்டுகளுக்குள்ளாகவே தோன்றி, அவற்றுள்ளுஞ் சிலவே இருநூறு முந்நூறு ஆண்டுகளாக் இயற்றப்பட்டு வரும் இலக்கண இலக்கியக்கலை நூல்களை உடையனவாய் உலவுகின்றன. அதனால் இப்புது மொழிகளின் புதுச் சிறப்புத் தமிழ்மொழியின் பழஞ்சிறப்புக்கு எட்டுணையும் ஒவ்வாததாயிருக்கிறது எனக்கூறும் அடிகளின் கருத்துத்தெளிவு அனைவரும் அறியத்தக்கதாகும்.

---

1. இந்தி பொதுமொழியா, பக்.1,2.

## தாய்மொழி கல்லாத தமிழர்

தமிழர்கள் தமிழிலேயே பேசித் தமிழிலேயே வாழ்க்கை செலுத்துகின்றவர்களாய் இருந்தாலும், தமிழைப் பிழையின்றி எழுதவோ, தமிழிலுள்ள அளவற்ற நூல்களில் சிலவற்றையாவது கற்றுத் தெளியவோ தெரியாதவர்களாய் இருக்கின்றதை அடிகள் சுட்டிக் காட்டுகின்றார். கோடிக்கணக்கான இத்தமிழ் மக்களுள் ஆயிரவரில் ஒருவர்க்குக்கூடத் தமது பெயரை எழுதிக் கையெழுத்துச் செய்யத் தெரியாத இழிநிலைகளும், பிழைப்புக்காக ஆங்கிலம் பயில்வதும், அத்துடன் சிறிதே கற்பிக்கப்படும் தமிழ் முதலான மொழிகளைத் தப்புந் தவறுமாய்ப்பேச எழுதத் தெரிந்தவராயும் உள்ள நிலைகளும் பொருகி வருவதை உணராமல், அயல் மொழியான இந்திமொழிப் பயிற்சியை நுழைத்தால் அதனால் என்ன பயன் விளையும் என்பதை அறிஞர்கள் ஆழ்ந்தாராய்ந்து பார்த்தல் வேண்டுமென்கிறார் அடிகள்.

## இந்தி பொதுமொழியன்று

இந்தி மொழியானது வடநாட்டவரெல்லாராலும் பொதுமொழியாக வைத்துப் பேசப்படுகின்றதென்பது உண்மையாகாது என்பதை அடிகள் சான்றுகளுடன் உறுதி செய்கின்றார். ஏனென்றால், இந்தி வடக்கே பற்பல நாடுகளிற் பற்பல மாறுதல்களொடு பேசப்படுகின்றதே யல்லாமல், அஃதெங்கும் ஒரே வகையாகப் பேசப்படவில்லை என்பதையும், அங்கே ஒரு நாட்டவர் பேசும் இந்தியை, அதற்கடுத்த நாட்டிலுள்ளார் தெரிந்து கொள்ள மாட்டாதவராயிருக்கின்றனர் என்பதையும் விளக்குகின்றார். இந்தியில், மேல்நாட்டு இந்தி (பாங்காரு, பிரஜ்பாஷா, கனோஜ், பந்தேலி, உருது), கீழ்நாட்டு இந்தி (அவதி, பகேலி, சத்தீஸ்கரி), பிகாரி (மைதிலி, போஜ்புரி, மககி) என்னும் மூன்று பிரிவுகளையும் அவற்றின் உட்பிரிவுகளையும் விரிவாக எடுத்துக்கூறி, வடநாட்டவரிலேயே இந்திமொழியை அறியாமற் பல திறப்பட்ட பன்மொழிகளை வழங்கும் மக்கட்கூட்டம் பலவாயிருக்க, இத்தென்னாட்டவர் மட்டும் இந்திமொழியைக் கற்றுப் பேசுதலால் பயன் ஏதுமில்லை என்று அறுதியிட்டு உரைக்கின்றார் அடிகள்.

## தமிழின் தொன்மையும் சீரிளமைத் தன்மையும்

வடஇந்திய மொழிகளைப் போலில்லாமல் இத்தென்னாடு முழுதும், இலங்கை, பர்மா, மலாய்நாடு, தென்னாப்பிரிக்கா முதலான அயல்நாடுகளிலும் பெருந்தொகையினராய் இருக்குந் தமிழ்மக்கள்

எல்லாரும் பேசுந் தமிழ்மொழி ஒரே தன்மையினதாய், இந்நாட்டவரெல்லாரும் ஒருவரோடொருவர் உரையாடி அளவளாவுதற் கிசைந்த ஒரே நிலையினதாய் வழங்கி நிற்பதற்கான காரணங்களையும் அடிகள் தெளிவாக்குகின்றார்.

"தமிழ்மொழிபேசுந் தமிழ்மக்கள் விந்திய மலைக்குத் தெற்கேயுள்ள இத்தென்னாட்டிலும், இதற்குந் தெற்கேயிருந்து பல்லாயிர ஆண்டுகளுக்கு முன்னே கடலுள் அமிழ்ந்திப் போன குமரிநாட்டிலும் நாகரிகத்திற் சிறந்தோங்கிய வாழ்க்கையில் இருந்தவர்கள். இற்றைக்கு ஐயாயிர ஆண்டுகளுக்கு முன்னே தொட்டுத் தமிழ்மொழியை நன்குகற்ற ஆசிரியர்கள் முதுகுருகு, முதுநாரை, களரியாவிரை, பெரும்பரிபாடல், தொல்காப்பியம், பெருங்கலித்தொகை, குருகு, வெண்டாளி, வியாழமாலை, முத்தொள்ளாயிரம், நற்றிணை, நெடுந்தொகை, அகநானூறு, புறநானூறு, ஐங்குறுநூறு, குறுந்தொகை, சிற்றிசை, பேரிசை, பதிற்றுப்பத்து, எழுபது பரிபாடல், குறுங்கலி, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், திருக்கோவையார், சீவகசிந்தாமணி, திருத்தொண்டர் புராணம், சிவஞான போதம் முதலான அரும்பெருந்தமிழ் இலக்கண இலக்கிய வீட்டு நூல்களும், அவை தமக்குச் சொற்பொருள் நுட்பமும் சுவையும் மலிந்த சிற்றுரை பேருரைகளும் இயற்றித், தமிழை மாறா நாகரிக இளமை வளத்தில் இன்றுகாறும் இனிது வழங்கச் செய்து வருதலால், அதனை வழங்குந் தமிழ் மக்களெல்லாரும் ஒருவர் ஒருவர்க்கு நெடுந்தொலைவில் இருப்பினும் அதனாற்பேசியும் எழுதியும் அளவளாவி ஓரிடத்திலுள்ள ஒரே மக்களினம்போல் உயிர்வாழ்ந்து வருகின்றனர்"[1] என விளக்குகிறார் அடிகள்.

## இந்திமொழி வரலாறு

வடநாட்டு மொழிகளான இந்தி, உருது முதலான மொழிகள் தமிழைப்போற் பழமையானவைகள் அல்ல. அதிலும் இந்தி ஒரு கலவைப் புதுமொழி என்கின்றார் அடிகள்.

கி.பி. 1340ஆம் ஆண்டில் துலுக்க அரசு தில்லி நகரில் நிலைபெற்ற பின்னர், அவர் கொணர்ந்த அராபி மொழி பாரசிக மொழிச் சொற்கள், முன்பு வழக்கிலிருந்த பிராகிருதச் சிதைவான ஒரு மொழியின்கண் ஏராளமாகக் கலக்கப்பெற்று, அவரால் அஃது 'உருது' எனவும் பெயர் பெறலாயிற்று. உருது என்னுஞ் சொல்லுக்குப்

1. இந்தி பொதுமொழியா, ப.7.

பொருள் பாசறை, பாடி அல்லது படைவீடு என்பதேயாகும். துலுக்க மன்னரது படைவீட்டு மொழியே உருது மொழியானது என்பர்.

இஞ்ஞான்று வழங்கும் இந்திமொழியானது 'லல்லுஜிலால்' என்பவரால் உருது மொழியினின்றும் பிரித்துச் சீர்திருத்தஞ் செய்யப்பட்ட ஒரு மொழியாகும். இதற்குமுன் உள்ளதான பிராகிருதஞ் சிதைவு மொழியிற் கலந்த பாரசிக அராபிச் சொற்களை அறவே யொழித்துச் சமஸ்கிருத மொழிச் சொற்களை மிகுதியாய் எடுத்துச் சேர்த்து அவர் இந்திமொழியைப் புதிதாய் உண்டாக்கினார்.

கி.பி.1400 முதல் 1470 வரையில் வாழ்ந்திருந்த இராமானந்தர் எனப் பெயரிய துறவி இராமன் மேற் பாடிய பாடல்கள் தாம் முதன் முதல் இந்தி மொழியில் உண்டானவை. அவருக்குப்பின் அவருடைய மாணாக்கர் கபீர்தாசர், இந்திமொழியின் ஒரு பிரிவான 'அவதி' மொழியில் பல பாடல்களைப் பாடியுள்ளார். இந்தியின் மற்றொரு பிரிவான 'மைதிலி' மொழியைக் கற்பவர்கள் 'அவதி' மொழியில் இருக்குங் கபீர்தாசரின் பாடல்களை எளிதிலே அறிந்து கொள்ள இயலாது. கபீர்தாசருக்குப்பின், அவர்தம் மாணக்கரான 'நானாக்' என்பவர் சீக்கிய மதத்தை உண்டாக்கினார். இவருடைய பாடல்கள், பஞ்சாபியும் இந்தியுங் கலந்த ஒரு கலப்பு மொழியிற் பாடப்பட்டிருத்தலால், இந்தியைப் பயிலும் நம் நாட்டவர் இவருடைய பாடல்களையும் எளிதிலே அறிந்து கொள்ள இயலாது. இவ்வாறு இந்தி மொழியானது வடநாட்டின் பல பகுதிகளிலும் பலவாறு திரித்துப் பேசப்பட்டு, ஒரு பாலார் பேசும்மொழி மற்றொரு பாலார்க்குத் தெரியாத வண்ணம் வழங்கினமையால், அஃது இஞ்ஞான்றுங் கூடப் பற்பல மொழிகளாகவே பிரிந்து வழங்குகின்றது. எனவே, இந்தி வடநாட்டவர் எல்லார்க்கும் பொது மொழி என்று கூறுவதும் மெய்யாகா. தென்னாட்டவர் இந்தியைப் பயிலுதலால் மட்டும் வடநாட்டவரெல்லாரோடும் உரையாடி உறவாட இயலா தென்பதும் தெளிவு என இந்திமொழி வரலாற்றையும் விளக்குகிறார் அடிகள்.[1]

## இந்திப் பாடல்கள் இனிக்குமா

கபீர்தாசர் முதலான புலவர்கள் பாடியிருக்கும் பாடல்களைப் படித்து இன்புறுதற்காவது, இந்திமொழிப் பயிற்சி உதவி செய்யுமன்றே வெனின்; தமிழ் மொழியிலுள்ள பழைய இலக்கியங்களைப் பயின்றறியாதார்க்கு, இந்தி மொழிப் புலவர்கள்

---

1. இந்தி பொதுமொழியா, பக்.9-11.

பாடிய பாட்டுகள் இனிக்குமேனுங், **கலித்தொகை, திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, திருவாசகம், திருக்கோவையார், தேவாரம், பெரியபுராணம், சிவஞானபோதம்** முதலிய ஒப்புயர்வில்லா நூல்களைப் பயின்று அவற்றின் அமிழ்தன்ன சுவையில் ஊறப்பெற்ற மெய்யறிவினார்க்கு, அவ்விந்திமொழிப் பாட்டுகள் இனியா என்கிறார் அடிகள்.[1]

## தமிழருக்குண்டாகும் பயன்

"அதுவல்லாமலும், இந்திமுதலான வடநாட்டு மொழிகள், தமிழைப்போற் பழையன அல்லாமையாலும்; அவற்றை வழங்கும் மக்கள், பழமை தொட்டு நாகரிக வாழ்க்கையில் வாழ்ந்த தமிழ் மக்களைப் போல், நாகரிக வாழ்வு வாயாதவர்களாகையாலும்; சென்ற 400 அல்லது 500 ஆண்டுகளாகத் தோன்றி வடநாட்டுப் புலவர்கள் பலரும், **பண்டுதொட்டுத் தனித்த பேரறிவு வாய்ந்த தமிழ்ப் பெரும் புலவர் போலாது**, சமஸ்கிருதப் புராணப் பொய்க் கதைகளை நம்பி அவற்றின் வழிச்சென்ற மயக்க அறிவினராகையாலும்; உயிர்க்கொலை, ஊன் உணவு, கட்குடி, பலசிறு தெய்வ வணக்கம், பலசாதி வேற்றுமை முதலான பொல்லா ஒழுக்கங்களை அகத்தடக்கிய ஆரிய நூல் நெறிகளைத் தழுவிய வடவர் அவற்றை விலக்கி அருளொழுக்கத்தையும் ஒரே முழுமுதற் கடவுள் வணக்கத்தையும் வற்புறுத்தும் **அருந்தமிழ் நூல்** நெறிகளைத் தழுவாமையாலும்; அவருடைய மொழிகளையும் அவற்றின்கட் புதிது தோன்றிய நூல்களையும் நந்தமிழ்மக்கள் பயிலுதலால், இவர்கள் ஏதொரு நலனும் எய்தார் என்பது திண்ணம்"[2] என அடிகள் உறுதிபட மொழிகின்றார்.

பெருந்தொகையான மக்கள்பேசும்மொழி எனக் கொண்டாலும் தமிழே முதன்மை பெறும். எனவே, தமிழையே பொதுமொழியாக்கலாம் என்கிறார் அடிகள்.

## தமிழைப் பொதுமொழியாக்குதலின் நன்மை

"இனி, இவ்விந்திய நாட்டுக்கு மிகப்பழைய மொழிகளாய், அதாவது இற்றைக்கு 5000 ஆண்டுகளுக்கு முன்னே தொட்டுப் பயிலப்படுஞ் சிறந்த நாகரிக மொழிகளாய்த் திகழ்வன தமிழுஞ் சமஸ்கிருதமும் என்னும் இரண்டேயாம். இவை யிரண்டனுட்,

---

1. இந்தி பொதுமொழியா, ப.11.
2. மேலது, பக்.11-12.

சமஸ்கிருதம் பொதுமக்களாற் பேசப்படாமற் பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே இறந்துபோயிற்று. மற்றுத் தமிழ்மொழியோ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னே தொட்டு இயல் இசை நாடக இலக்கணங்களும் மக்கள் வாழ்க்கையின் பல துறைகளிலும் அறிவை விளக்கி இன்பத்தை ஊட்டும் அரிய பெரிய பல இயற்றமிழ் இலக்கிய நூல்களும் ஆயிரக் கணக்காக உடையதாய், இன்றுகாறும் பலகோடி மக்களாற் பேசவும் எழுதவும் பயிற்சி செய்யவும்படும் உயிருடை நன்மொழியாய் உலவி வருகின்றது. தமிழிலுள்ள பழைய நூல்களெல்லாம் அருளொழுக்கத்தையும் ஒரே முழுமுதற் கடவுள் வணக்கத்தையும் அறிவுறுத்தி, உயிர்க்கொலை, ஊனுணவு, கட்குடி, பல சிறுதெய்வ வணக்கம், பலசாதி வேற்றுமை முதலான தீயவொழுக்கங்களைக் கடிந்து விளங்குகின்றன. இத்தீய வினைகளைச் செய்யுமாறு ஏவிப் பொய்யும் புளுகும் புகலும் ஆரிய நூல்களைப் போல்வன பழந்தமிழில் ஒன்றுதானும் இல்லை; பிறந்து துன்புற்று இறந்தொழிந்த மக்களை யெல்லாங் கடவுளாக்கி, அவர் செய்யாதவற்றைச் செய்தனவாகப் புனைந்துகட்டிப் பொய்யாய் உரைக்கும் வடமொழிப் புராணகதைகளைப் போல்வன பழந்தமிழில் ஒன்றுதானும் இல்லை.

பழந்தமிழிலுள்ள நூல்களெல்லாம் உள்ளவற்றை உள்ளவாறே நுவல்வன; மக்கள் தம் மனமொழி மெய்களால் நினைப்பனவுஞ் சொல்வனவுஞ் செய்வனவுமெல்லாந் தூயனவாய் இருக்க வேண்டுமென்று வற்புறுத்துவன; மக்கள் வாழ்க்கையானது அன்பையும் அறத்தையும் இரண்டு கண்களாகக்கொண்டு, ஒரு தெய்வ வழிபாடாகிய உயிருடன் கூடி உலவ வேண்டுமென உயர்த்துக் கூறுவன. பிற்காலத்தில் வடசொற் கலப்பும் வடநூற் பொய்க்கொள்கைகளுங் கதைகளும் விரவிய மொழிபெயர்ப்பு நூல்கள் தமிழில் அளவின்றிப் பெருகித் தமிழ் மக்களை அறியாமையிலும் பொய்யிலும் பல தீவினையிலும் படுப்பித் திருந்தாலும், விழுமிய பண்டைத் தமிழ்நூற் பயிற்சியுஞ் சைவசித்தாந்த மெய்யுணர்வுந் திரும்பப் பரவத்துவங்கியபின், ஆரியப் பொய்ந்நூல் வலி தேய்ந்து வருகின்றது. அதனுடன் மேல்நாட்டு வெள்ளைக்கார மெய்யறிவினரின் அரிய பெரிய ஆராய்ச்சிகளும் ஆங்கிலமொழிப் பயிற்சியின் வாயிலாக இவ்விந்திய நாடெங்கும் பரவி வருவதும், ஆரியநூற் பொய்மை விரைந்து தேய்தற்குப் பெரிதுந் துணை செய்து வருகின்றது.

இவைகளையெல்லாம் நடுநின்று நோக்கவல்ல உண்மைத் தேயத் தொண்டர்கள் உளராயின், இவ்விந்திய நாட்டுக்கு மிகப்பழைய

மொழியாய் இருப்பதுடன், இன்றுகாறும் பலகோடி மக்களாற் பேசப்பட்டு வரும் உயிருடை மொழியாயும், இவ்விந்திய மக்களை எல்லாத் துறைகளிலும் மேலேற்றத்தக்க பல சீரிய நூல்களை உடையதாயும் உள்ள தமிழ்மொழியையே இவ்விந்திய தேயம் முழுமைக்கும் பொது மொழியாக்க அவர் முன்வந்து முயலல் வேண்டும்" என்று கூறுகின்றார் அடிகள்.[1] தமிழின் பழமைக்கும் தெளிவுக்கும் பழைய சீரிய நூல்களே சான்று என்றும், அவற்றின் பொருட்டு இம்மொழியைப் பொதுமொழியாக்கலாம் என்னும் இவர் எண்ணங்கள் அனைத்தும் ஏற்புடையனவாம்.

## தமிழ் அல்லாத மொழிகள் வறியன புதியன

இந்தி போன்ற மிகவும் பிற்காலத்து மொழிகளில் இலக்கண இலக்கிய நூல்கள் மிகுதியும் கிடையா என்பதையும் அடிகள் விவரிக்கின்றார். திராவிடமொழிகள் எல்லாவற்றுள்ளும் நந்தமிழ் ஒன்றே சிறிதேறக்குறைய பத்தாயிர ஆண்டுகளாகச் சீர்திருத்த முற்று, நுண்ணறிவு மிக்க சான்றோர்களால் இயற்றப்பட்ட இயல் இசை நாடக இலக்கணங்களும் ஆயிரக்கணக்கான பல்வேறு இலக்கியங்களும் உடையதாய் நூல் வழக்கும் உலக வழக்கும் வாய்ந்து நடைபெறுவன என்பதை எடுத்துரைப்பதுடன், ஏனைத் திராவிட மொழிகளுள் பழமையான கன்னடம், தெலுங்கு, மலையாளம் ஆகியவற்றிலெல்லாம் வடமொழி மிகுதியாகக் கலந்துள்ளமையையும் விளக்குகிறார்.

"இப்போது இவ்விந்தியதேயத்தின் வடக்கே வழங்கும் உருது, இந்தி, வங்காளி முதலான மொழிகளிலும், மேற்கே வழங்கும் மராட்டி, குஜராத்தி முதலான மொழிகளிலுங், கிழக்கே தெற்கே நடுவே வழங்குந் தெலுங்கு, தமிழ், கன்னடம், மலையாளம் முதலான மொழிகளிலுந், தமிழைத்தவிர, மற்றையவெல்லாம் பழையன அல்லவாய், ஆயிர அண்டுகளுக்குள்ளாகவே தோன்றித், தமக்கெனச் சிறந்த இலக்கண இலக்கிய நூல்கள் இல்லாமற், சமஸ்கிருதத்திலுள்ள மாபாரதம் இராமாயணம் பாகவதம் முதலான கட்டுக்கதை நூல்களை மொழிபெயர்த்துரைப்பனவாய்த் தாமே தனித்தியங்க மாட்டாமல் வடமொழிச் சொற்கள் சொற்றொடர்களின் உதவியையே பெரிதுவேண்டி நிற்பனவாய் உள்ள சிறுமையும் வறுமையும் வாய்ந்தனவாகும்.

---

1. இந்தி பொதுமொழியா, பக்.12-13.

மற்றுத், தமிழ்மொழியோ, மேற்காட்டிய மொழிகள் எல்லாந் தோன்றுதற்குப் பத்தாயிர ஆண்டுகளுக்கு முன்னமே வழங்கிய முதுமொழி யாதலொடு தன்னோடொத்த பழமையுடைய ஆரியம், செண்டு, ஈபுரு, கிரேக்கம், இலத்தீன் முதலான மொழிகளெல்லாம் உலக வழக்கில் இன்றி இறந்தொழியவுந், தான் இன்றுகாறும் பரவி வழங்குந் தனிப் பெருஞ் சிறப்பு உடையதாயுந் திகழா நிற்கின்றது.

சென்ற அறுநூறு எழுநூறு ஆண்டுகளுக்குள்ளாக வடமொழியிலிருந்து மொழிபெயர்த்து இயற்றப்பட்ட கம்பராமாயணம், நளவெண்பா, நைடதம், வில்லிபுத்தூரர் பாரதம், காசி காண்டம், கூர்ம புராணம், வாயு புராணம், தலபுராணங்கள் முதலியன தவிர, எழுநூறாண்டுகளுக்கு முன்னிருந்த செந்நாப்புலவர்களால் ஆக்கப்பட்ட அரும்பெருந் தமிழ் நூல்களெல்லாமுந் தமிழ்மொழிக்கே உரிய சிறப்புடையனவாகும்; இன்னும் இற்றைக்கு ஆயிரத் தெழுநூறு ஆண்டுகட்குமுன் இயற்றப்பட்ட செந்தமிழ் நூல்களோ வடசொற்களும் வடநூற்பொய்களுஞ் சிறிதும் விரவாத தனிப்பெருஞ் சிறப்புடையனவாகும். மேலும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்த், தமிழ்மொழி யொன்றே இவ்விந்திய தேயம் எங்கும் பேசப்பட்டு வந்த பொதுமொழியாகும்”[1] எனக் கூறும் அடிகளார் இதற்குச் சான்றாகக் கால்டுவெல் முதலான மேல்நாட்டாசிரியர்களின் ஆய்வுரைகளையும் காட்டுகின்றார்.

## தமிழ் பொதுமொழியாகாத காரணம்

இவ்வளவு சிறப்பு மிக்க தமிழ்மொழி பொது மொழியாகாததற்கான காரணத்தையும் அடிகள் ஆராய்கின்றார். தமிழ்மொழி பேசுவார் தொகை பத்தாயிர ஆண்டுகளாக வரவரச் சுருங்கி வருதலையும், ஆங்கில மொழி பேசுவார் தொகை இருநூறு ஆண்டுகளுக்குள்ளாக உலகம் எங்கணும் அளவின்றிப் பெருகிவருதலையும் சுட்டிக் காட்டுகின்றார்.

தமிழ்மொழி சுருங்குதற்குக் காரணந் தமிழரிற் கல்வியறிவுடையவருங் கல்வி முயற்சியுடையவரும் வரவரக் குறைந்து போதலும், ஆங்கிலமொழி பெருகுதற்குக் காரணம் ஆங்கிலரிற் கல்வி யறிவுடையவரும் கல்வி முயற்சியுடையவரும் நாளுக்குநாள் மிகுந்து ஓங்குதலுமே யென்பதையும் ஒப்பிடுகின்றார்.

---

1. இந்தி பொதுமொழியா, பக்.18-19.

மேலும் தமிழரிற் செல்வம் உடையவர்களெல்லாரும் இஞ்ஞான்று தமிழ்க் கல்வியறிவில்லாதவர்களாய் விட்டார்கள். அதனால் அவர் தந்தாய்மொழியாகிய தமிழின் அரும்பெருஞ் சிறப்பும், அதனைக் கற்பதினால் மக்கள் அடையும் இம்மை மறுமைப் பெரும்பயன்களும் ஒரு சிறிதும் உணராதவராய் இருக்கின்றனர் என்கின்றார்.

## ஆங்கிலரின் நன்முயற்சியும் தமிழரின் முயற்சியின்மையும்

தமிழ்ப் பயிற்சியை மேம்படுத்தாத தமிழரின் முயற்சியின்மையை அடிகள் கடிந்துரைக்கின்றார். ஆங்கிலரின் நன்முயற்சியால் ஆங்கிலக்கல்வி மேன்மேலும் ஓங்கி வளர்ந்து வருவதைச் சுட்டுகின்றார்.

"நந்தமிழ் நாட்டில் தமிழ் கற்பித்தற்கென்று இரண்டு மூன்று உயர்ந்த பள்ளிக் கூடங்களைக் காண்பது தானும் அரிதாயிருக்க, ஆங்கிலங் கற்பித்தற்கோ எத்தனை ஆயிரக்கணக்கான பள்ளிக்கூடங்களும், உயர்ந்த கல்லூரிகளும், இவை தம்மை அகத்தடக்கிப் பல்கலைக்கழகங்களும் இருக்கின்றன. இவைகட்கெல்லாம் எத்தனை கோடிக்கணக்கான பொருள் ஆங்கில அரசினராலுங் கிறித்து சமயக் குருமார்களாலும் அளவின்றிச் செலவு செய்யப்பட்டு வருகின்றன!

இவ்வாறு இத்தமிழ்நாட்டிலும், இவ்விந்திய தேயத்தின் பிறநாடுகளிலும் ஆங்கில மொழிப் பயிற்சிக்கென்று ஆங்கிலராற் சென்ற ஒரு நூற்றாண்டாகச் செலவு செய்யப்பட்டு வருந்தொகையைக் கணக்கெடுக்கப் புகுந்தால் அது கணக்கில் அடங்குவதாயில்லை. இங்ஙனமெல்லாம் ஆங்கிலர் தமது மொழிப்பயிற்சியினை இவ்விந்திய தேயமெங்கும் பரவவைத்து வருதலைப் பார்த்தாயினும், இங்குள்ள செல்வர்களுக்குத் தமிழ்ப்பயிற்சியை பரவ வைக்க வேண்டுமென்னும் உணர்ச்சியும் முயற்சியும் உண்டாகின்றனவா? சிறிதும் இல்லையே. எங்கோ ஒருசெல்வர், எங்கோ ஒரு குறுநில மன்னர், எங்கோ ஒரு மடத்தலைவர் பள்ளிக்கூடம் வைத்து நடத்த எண்ணங்கொண்டால், அவரும் ஆங்கிலப் பள்ளிக்கூடம் வைத்து நடத்துகின்றாரே யன்றித், தனிப்படத் தமிழுக் கென்றொரு பள்ளிக்கூடம் வைத்து அவர் நடத்துதலை யாண்டுங் கண்டிலேம்!

ஆங்கிலர் நடாத்தும் பள்ளிக்கூடங்களிலாவது தமிழாசிரியர்க்குத் தக்க சம்பளங் கிடைக்கின்றது, நன்கு மதிப்பிருக்கின்றது. தமிழ்ச்செல்வர்கள் எங்கோ அருமையாய் வைத்து

நடத்தும் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களிலோ தமிழாசிரியர்க்கு மிகக்குறைந்த சம்பளந்தான் கிடைக்கின்றது! அதுவல்லாமலும், அப்பள்ளிகளில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்க்கு நன்கு மதிப்புமில்லை. அதனால், ஆங்கிலக் கல்விக்கழகங்களிற் பயிலும் மாணவர் தமிழை ஊன்றித் திருத்தமாகப் பயின்று புலமை யடைவது மில்லை; தாம் பயிலும் ஆங்கிலத்தையே கருத்தாய்ப் பயின்று, அதிற்பட்டம் பெறுதற்கு ஒரு சிறு துணையாகவே தமிழைத் தப்புந்தவறுமாய்ச் சேர்த்துப்பயின்று தொலைத்து விடுகின்றார்கள்.

இங்ஙனமாக இத்தமிழ் நாட்டிலும் பிறநாடுகளிலும் ஆங்கிலர் தம்முடைய பெருமுயற்சியானும் பெரும்பொருட் செலவானும் நடாத்திவரும் பல்லாயிரக்கணக்கான ஆங்கிலக் கல்லூரிகளிற் பயின்று பட்டம் பெற்று வரும் பல்லாயிரக்கணக்கான நம் இந்துதேய மாணவர்கள் ஆங்கில மொழியிற்றான் வல்லவர்களேயல்லாமல், தமிழ் முதலான தாய் மொழிகளிற் சிறிதும் வல்லவர்களல்லர். இத்தேயமெங்கும் இவ்வாறு ஆங்கில மொழிக்கல்வி சிறந்து பரவி வருதற்குந், தமிழ் முதலான தாய்மொழிக் கல்வி சிறந்து பரவாமைக்கும், ஆங்கிலரின் நன்முயற்சியும், இந்நாட்டவரின் முயற்சியின்மையுமே முறையே காரணமாதல் தெற்றென விளங்க நிற்கும்"[1] என்பர் அடிகள்.

இவை, மறைமலையடிகளார் காலத்தியநிலை. அந்நிலையை யுணர்ந்த அவர் நந்தமிழ் மக்களின் முயற்சியின்மையை எடுத்துரைத்துள்ளார். ஆயின், இன்றைய நிலையில் தமிழ் மற்றும் தமிழ்க் கல்வியின் நிலை பற்றியும் நாம் ஒப்பிட்டுணர வேண்டியுள்ளோம்.

## தமிழ் நாட்டவர்க்குத் தமிழ்க்கல்வி

அறிவிலும் நாகரிகத்திலும் சிறந்து விளங்கும் தமிழ் நாட்டவர்க்குத் தமிழ்க்கல்வியின் தேவையை வலியுறுத்தும் அடிகளின் சிந்தனைகள் இவண் எண்ணத்தக்கன.

நம் தமிழ்மக்கள் உண்மையாகவே முன்னேற்ற வேண்டுமென்னும் எண்ணம் உடையவர்கள், அவர்களுக்குரிய தமிழ்க்கல்வியின் வாயிலாகவே அதனைச் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். மற்ற மொழிகளில் நாடோறும்

---

1. இந்தி பொதுமொழியா, பக்.22,23.

புதியனவாய் வெளிவரும் அரும்பொருள் நூல்களையெல்லாந் தமிழில் மொழிபெயர்ப்பித்துக் கற்பிக்கத் தலைப்பட்டால், இப்போது பதினைந்து ஆண்டுகளுக்கு மேல் ஆங்கில மொழியை மிக வருந்திக் கற்று ஒருவர் தெரிந்து கொள்ளும் பொருள்களெல்லாம், நமது செந்தமிழ் மொழியில் ஏழெட்டு ஆண்டுகளில் இன்னுஞ் செவ்வையாகக் கற்றுத் தேறலாம். ஆங்கிலம் ஆரியம் முதலிய மொழிகளில் அவர் எவ்வளவுதான் கற்றுத் தேறினாலும், தாம் அம்மொழிகளில் அறிந்த பொருள்களைத் தமிழ் மக்கள் எல்லார்க்கும் புலப்படும்படி எடுத்துச் சொல்லிப் பயன்படுத்தல் இயலாது; தமிழ் கற்றவரோ தாம் அறிந்தவைகளைத் தமிழ் மக்களெவர்க்கும் நன்கு விளங்கும்படி எடுத்துச் சொல்லிப் பெரிதும் பயன்படுவர். இதனால் தமிழ் நாட்டவர் தமிழ் கற்பதொன்றே தமக்கும் பிறர்க்கும் பயன்படுவதற்கு ஏதுவாம் என்க'' என்று தமிழ்க்கல்வியின் தனிப்பயனை விவரிக்கின்றார் அடிகள்.[1]

இவ்வாறு, மறைமலையடிகளார் தம் நூல்களெங்கும் தனித்தமிழ் பற்றியும், தமிழ்க்கல்வியின் தேவை பற்றியும் பல சிந்தனைகளை எழுதி அமைத்துள்ளார். இவை அனைத்தும் காலந்தோறும் எண்ணி ஏற்கத்தக்கனவாம்.

## கொள்கை பரவலாக்கல்

தனித்தமிழ்க் கொள்கையைப் பரவலாக்க அடிகளார் தம் இல்லத்திலேயே அதை முதலில் செயற்படுத்தத் துவங்கினார். தம் பெயரையும் குழந்தைகளின் பெயர்களையும் தூய தமிழாக்கினார். அவர்களையெல்லாம் தூயதமிழ் பேசவும் எழுதவும் பழக்கினார். மகள் நீலாம்பிகையார் இதில் முன்னணியில் திகழ்ந்தார். அடிகள் தம் பதிப்புகளும் மாதிகைகளும் தனித்தமிழ் ஏற்றம் பெற்றன.

அடிகளிடம் பயின்ற மாணாக்கர் பலர் தனித்தமிழ் ஈடுபாடு கொண்டு வளர்ந்தனர். இளவழகனார், தண்டபாணியார், மணி திருநாவுக்கரசர், ச.சோ. பாரதியார், பா.வே. மாணிக்கர், சேலம் இராம சாமியார், மு.சி. பூரணலிங்கனார், காழி. சிவ. கண்ணுசாமி, வேலூர் க.ப.மகிழ்நனார், நெல்லை ச.பால்வண்ணனார், வெ.ப. சுப்பிரமணியனார், காசு.சுப்பிரமணியனார், மா.வே. நெல்லையப்பர், சாத்தூர் து.சு. கந்த சாமியார், ஆ. கார்மேகனார், இலங்கை செ. சின்னதம்பி, த.வே. உமா மகேசுவரனார், மொழி

---

1. தனித்தமிழ்மாட்சி, பக்.47-48.

ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், பாவேந்தர் பாரதிதாசனார், கா. அப்பாதுரையார், சி. இலக்குவனார், வ.சுப. மாணிக்கனார் ஆகிய பெரும் அறிஞர் படையே உருவாக அடிநிலை அமைத்தவர் மறைமலையடிகளார் ஆவர்.

இன்றைய நிலையில் தனித்தமிழ் இயக்கம் பரவலாகத் தழைத்தோங்கி வளர்ந்து வருவதற்கும் அடிகளாரின் பெருமுயற்சியே அடிப்படை என்பதைக் கருதியே அவரைத் 'தனித்தமிழ்த் தந்தை' எனச் சிறப்பிப்பர்.

"மறைமலையடிகளின் தனித்தமிழ் இயக்கம் தமிழ்த்தாயின் நெஞ்சு புரையோடாதும், தமிழர் அறை போகாதும் காத்தது. தமிழின் வயிற்றில் இருந்து முன்பு பல திராவிட மொழிகள் கிளைத்து அதன் பரப்பைச் சுருக்கியது போல, மீண்டும் தமிழகத்துள் ஒரு புதிய திராவிட மொழி பிறந்து தமிழை இன்னும் குன்றிக் குலையாதவாறு தடுத்தது. இன்று பாடநூல்கள் பெரும்பாலும் தமிழ் வடிவாக வருகின்றன. ஒருசார் இளைஞர் கூட்டம் எழுத்தாளர் கூட்டம் குடிநீரைத் தூயநீராகக் காத்தல் போலத் தமிழைத் தூயதாகக் காத்து வருகின்றன. கலப்பு மிகுதியிருந்தாலும் பல செய்தித்தாள்கள் தமிழ்த் தூய்மையையும் முடிந்த அளவில் பேணி வருகின்றன. வாழ்த்துக்கள் வரவேற்புகள் அழைப்பிதழ்கள் எல்லாம் நல்ல தமிழ்ப் பைங்கூழ் வளரும் பைந்நிலங்களாக மிளிர்கின்றன. இந்நன் மாற்றங்களையெல்லாம் மறைமலையடிகளைப் பெற்றமையால் தமிழ்த்தாய் பெற்றாள். அத்தவமகள் அடிச்சுவட்டை அன்புச்சுவடாகப் போற்றிப் பாலின் தூய்மை போலத் தமிழின் தூய்மையைக் கடைப்பிடித்து வாழும் இளைய மறைமலையடிகள் இன்று பல்கி வருப. ஆதலின், தமிழ்த் தனித்தடத்தில் செல்லும் புகைவண்டி போலப் பழைய புதிய தன் சொற்களைக் கொண்டே விரைந்து இயங்கி முன்னேறும் என்று உறுதி கொள்வோம்"[1] என்கிறார் அறிஞர் வ.சுப. மாணிக்கனார் அவர்கள்.

தனிச்செந்தமிழ் நெஞ்சம் கொண்ட அடிகளின் தூய உணர்வால், பழந்தமிழ் நூல்கள் காக்கப்பெறவேண்டும் என்ற எண்ணமும், செயல்பாடும் இன்று பலரிடையே மிளிர்ந்து வரக்காண்கிறோம்.

---

1. மறைமலையடிகள் நூற்றாண்டு விழா மலர்.

# அருந்தமிழ்நூற் காவலர்

செந்தமிழ்த் தலைமையும் சிவநெறிப் பெருக்கமும் தமிழர்க்கே சிறப்பாவனவாம். என்றும் இத் தமிழர்நெறி தழைத்தோங்கிச் சிறப்புற்று விளங்கத் தேனினுமினிய தனித்தமிழ் நூல்கள் பலவற்றை அருளிய மறைமலையடிகளின் மாட்சி அளவிடற்கரியதாம். சிறப்புவகையில் இவர் உலகிற்கு உணர்த்திய உண்மைகள் தமிழர் நாகரிகச் சிறப்பும், சைவ சமய மாட்சியும், சைவ வைணவ ஒற்றுமையும், புலான் மறுத்தலும் ஆகும். அருந்தமிழ் நூல்களைக் காத்தலே அடிகளின் வாழ்நாட் பணியாயிற்று. அடிகள்தம் எண்ணத்திலும், படிப்பிலும், பேச்சிலும், எழுத்திலும், உருவாக்கத்திலும், எங்கும், தமிழும் தமிழ் நூல்களுமே தவழ்ந்தன.

## தமிழ்த்தென்றலும் மறைமலையும்

தமிழ்த் தென்றல் திரு.வி.க. வும் மறைமலையடிகளாரும் வாழ்ந்திருந்த காலம் தமிழ்நாட்டின் சிறப்பான காலமாகும். இவ்விரு புலவர்களும் தமிழ்ப்பணியில் திளைத்திருந்தமையும், நல்லநூல்களை உருவாக்கிய காலமும் தமிழுக்குப் புத்துயிர் ஊட்டிய காலமாகும்.

“அற்றே நக்கீரனாரும் பிற்றைச் சிவஞான முனிவரும் ஒருருக் கொண்டு வேதாசலனாராகப் போந்து, இற்றைத் தமிழ் வளர்க்கிறார் என்று யான் அவரைச் சொல்லாலும் எழுத்தாலும் போற்றுவதுண்டு. வேதாசலனார் தமிழ் செந்தமிழ்-சங்கத்தமிழ். என்னை அவ்வாறு சொல்லவும் எழுதவும் செய்தது. இந்நாளில் சங்க நூல்களின் சுவையைத் தமிழ் நாட்டுக்கு ஊட்டிய பெருமை வேதாசலனார்க்கு உண்டு என்று அறுதியிட்டுக் கூறுவேன்”[1] என்பர் திரு.வி.க. மேலும், “தென்னாடு பன்னெடுங்காலம் தன்னை மறந்து உறங்கியது. அவ்வுறக்கம் போக்கிய பெருமை மறைமலையடிகட்கு உண்டு. அவர் தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும் ஆராய்ச்சியும் பேச்சும் எழுத்தும் தொண்டும் தென்னாட்டை விழிக்கச்செய்தன. தென்னாடு அடிகளால் விழிப்புற்றது என்று மண்ணும் முழங்கும் மரமும்

---

*1. திரு.வி.க. வாழ்க்கைக் குறிப்பு, ப.163.*

முழங்கும். அடிகள் பேச்சு பல பேச்சாளரைப் படைத்தது. எழுத்து பல எழுத்தாளரை ஈன்றது. நூல் பல நூலாசிரியன்மாரை அளித்தது. அடிகளே தென்னாடு, தென்னாடே அடிகள் என்று கூறல் மிகையாகாது"[1] என்றும் அவரே குறிப்பர்.

## வரலாறு படைத்தவர்

பள்ளிப் படிப்புத் தடையுற்றாரும் பன்மொழிப் புலமையும், பலதுறையறிவும் பெற்றுத் திகழ முடியும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர்கள் மறைமலையடிகள்.

காலமெல்லாம் கற்றலும், கற்ற கருத்துகளில் உள்ள மாசு மறு நீக்கி மணியான நூல்களாகவும், மேடைப்பொழிவுகளாகவும் வழங்கலும், நோன்பு எனக் கொண்டவர் மறைமலையடிகளார். அவ்வகையில் வரும் இழப்பு, எதிரீடு இவற்றைப் பொருளாக எண்ணாமல் துணிந்து நின்றவரும் அவர். தமிழ்ப்பற்றிலும், சைவ சமயப் பற்றிலும் தலைநின்ற அடிகள், இந்திய ஒருமை, உலக ஒருமை, உயிர் ஒருமை, பிறப்பு ஒப்பு, சமயச் சால்பு என்பவற்றிலும் தலைநின்றவராகவே திழ்ந்தார்.

அடிகளார் வரலாறு அவரவர் மொழித் தூய்மைக்கும் மொழித் தொண்டுக்கும், மாந்தநேய உணர்வுக்கும், உயிரிரக்க மெய்யுணர்வுக்கும் வழிகாட்டும் என்பது உறுதியாம் என்பர் அறிஞர்.[2]

## எழுத்தெண்ணிப் படித்த பெருமகனார்

மறைமலையடிகளார் தலைசிறந்த நூற்களை எழுத்தெண்ணிப் படித்தவர். 'திருவாசகத்தில் 2810 சொற்களே உள. ஏழு அல்லது எட்டுச் சதவீதமே வடசொற்கள் உள' என்றும், 'சிவஞான போதத்தில் பன்னிரண்டு நூற்பாக்களில் நாற்பத்து நான்கு வரிகளும், இருநூற்றுப் பதினாறு சொற்களும், அறுநூற்று இருபத்து நான்கு எழுத்துக்களும் உள்ளன' என்றும் அடிகளார் அங்கங்கே குறிப்பதை நோக்க இவை விளங்கும். இவ்வாறே இவர் நூல்களை ஆய்ந்து எழுதி வெளியிடவும் பல ஆண்டுகளைச் செலவிட்டதையும் அறிகிறோம்.

---

1. திரு.வி.க., மறைமலையடிகள் மாண்பு, முன்னுரை.
2. இரா. இளங்குமரன், மறைமலையடிகள், ப.5.

## ஓலைச்சுவடி நூல்கள்

'மக்கள் வாழ்க்கை' என்னும் தலைப்பில், ஆதி மனிதன் முதலாகத் தொடர்ந்து நடைபெற்று வரும் மனிதனின் வளர்ச்சி நிலைகளையெல்லாம் முறையாக எடுத்துரைக்கும் அடிகளார் தமிழ்நாட்டில் ஓலைச்சுவடி நூல்களின் தோற்றத்தையும் குறிப்பிடுகின்றார்.

"வாழ்க்கை வளம்பெற்று மனவமைதியோடிருக்கலானபின், இயற்கையே அறிவு விளங்கப் பெற்ற சிலர் தாம் வழங்கும் மொழியை எழுத்திலிட்டு எழுதி அண்மையிலிருப்பார்க்குத் தம் கருத்துக்களை எளிதில் அறிவிப்பது போற், சேய்மையிலிருப்பார்க்கும் அறிவிக்க வழி கண்டனர். அது முதல் தங்கருத்துக்களை ஒரு கோவைப்படுத்திப் பனையோலைகளிலும் மரப்பட்டைகளிலும் எழுதி வைக்கத் தலைப்பட்டனர். இன்றுங்கூடக் காகிதங் கிடைப்பதில்லாத பட்டிக்காட்டிலிருப்பவர்கள் கணக்கெழுதவும், திருமணம் முதலான சடங்குகளைத் தஞ்சுற்றத்தார்க்குத் தெரிவிக்கவும், பள்ளிக்கூடச் சிறார்க்குக் கல்வி கற்பிக்கவும், மற்றும் பல முயற்சிகள் செய்தற்கும் பனையோலைகளையே பயன்படுத்தி வருகின்றனர். இஞ்ஞான்று நமக்குக் கிடைக்கும் பழங்காலத்து நூல்களெல்லாம் ஓலைச்சுவடிகளாகவே யிருத்தலைக் கண்காட்சிச் சாலைகளில் நேரே சென்று இன்றுங் காணலாம்"[1] என அடிகள் பழந்தமிழ் நூல்கள் வழங்கி வந்த முறைகளைச் சுட்டுகின்றார்.

## எத்தொழில் செய்பவரும் கற்க

எத்தொழில் செய்பவராயினும் தமக்குக் கிடைக்கும் நேரத்தில் உரிய நூல்களைப் பயிலுதல் வேண்டும் என்பது அடிகளின் கருத்தாகும்.

"கடுமையானதோர் உழைப்பிற் புகுந்திருக்கும் போதும் அதனை மேன்மேல் அறிவுடன் செய்து பயன்படுத்துவதோடு, அது செய்த நேரம் போக மிச்சமான நேரத்தை உயர்ந்த அறிவுடையோர் செய்த நூல்களைப் பயில்வதிலும் பயன்படுத்தல் வேண்டும். ஏனெனில், அறிவை மேன்மேற் பெருக்குவதற்கு ஏற்ற வழி, அறிவின் மிக்கார் இயற்றிய நூல்களை இடையறாது பயில்வதேயாகும். மணற்கேணியினைத் தோண்டத் தோண்ட நீர் ஊறுதல் போல

---

1. வாழ்வும் வழிபாடும், ப.108.

ஆன்றோர் நூல்களைக் கற்கக் கற்க அறிவு எல்லையின்றி வளரா நிற்கும்.

> **"தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்**
> **கற்றனைத் தூறும் அறிவு".**

என்றார் திருவள்ளுவரும். அங்ஙனமே வாழ்க்கைக்கு இன்றியமையாது வேண்டிய செல்வப் பொருளை ஈட்டுதற்குப் பலதுறைகளிற் புகுந்த பல்வகை முயற்சிகள் செய்வோரும், அம்முயற்சியளவில் தமதறிவைக் கரைகோலி மட்டுப் படுத்தி விடாமல், அம்முயற்சி யவிந்த நேரங்களில் விழுமிய அறிவு நூல்களைத் தொடர்பாகக் கற்று அறிவை விரிவு செய்தல் வேண்டும். அங்ஙனஞ் செய்யாக்கால், தமக்கு இரை வேண்டுங்காலத்துங் குஞ்சு பொரிக்குங் காலத்தும் மிக்க சுருசுருப்புடன் முயன்று, பின்னர் முயற்சியற்று வாளா இருந்து கழியும் பறவைகள் முதலான சிற்றுயிர்களுக்கும் மக்கட்கும் வேற்றுமை இல்லையாய்விடும்"[1] என இதை விளக்குவர்.

## நூல்கள் வாங்குவதில் பேரார்வம்

நுண்ணறிவு பலவும் பெற நூல்கள் பல கற்க வேண்டும் என்பதில் தணியாத தாகம் கொண்டவர் அடிகள். மாக்மில்லன், லாங்மன்ஸ், ஆக்ஸ்பர்ட், எகின்பாதம் போன்ற பெரிய ஆங்கிலப் புத்தகக் கடைகளில் நூல்களை விடாமல் வாங்கி மகிழ்வது அடிகளாரின் வழக்கமாக இருந்துள்ளது. மேனாட்டார் நூல்களின் தரத்தினைப் போன்று நம்முடைய தமிழ்நூல்களும் அச்சிடப்பெற வேண்டுமென்பதில் அடிகளுக்கு மிகுந்த ஆர்வம் இருந்துள்ளதையும் அறிகின்றோம்.

1915 முதல் 1940 வரையில் இவ்வாறு தரமான நூல்களை வாங்கிச் சேர்த்துப்படிப்பதை அடிகளார் தம் நாட்கடமையாகவே செய்து வந்துள்ளார்.

## நூலகங்களுக்குச் செல்லல்

கன்னிமரா நூலகத்திற்கும், சென்னைப் பல்கலைக்கழக நூலகத்துக்கும் அடிக்கடி சென்று ஆராய்ச்சிக் குறிப்புகளைத் திரட்டுவதிலும் அடிகளுக்கு ஆர்வம் மிகுதி என அறிகிறோம்.

---

1. வாழ்வும் வழிபாடும், பக்.91,92.

## நூல்கள் தொகுப்பு

அடிகளார் தொகுத்து வைத்த நூல்கள் ஏறத்தாழ நாலாயிரம் ஆகும். அவற்றுள் மூவாயிரம் நூல்கள் பல்வேறு துறைப்பட்ட ஆங்கில நூல்கள். எஞ்சியவை மிக அரியவையான தமிழ் நூல்களும் வடமொழி நூல்களுமாம். வெளிநாட்டுப் பதிப்புகள் பலவற்றை இவர் முயன்று தொகுத்துள்ளார்.

'ஓதா நாளெல்லாம் ஒழிந்த நாள்' எனக்கற்றவர் அடிகளார். பொதுவாக, 'மன அமைதி இன்மையைப் புத்தகங்களைப் படிப்பதால் போக்கிக் கொள்வேன்' என்றே இவர்தம் நாட்குறிப்பில் எழுதியிருக்கக் காணலாம்.

## எடுத்தலும் முடித்தலும்

ஒரு நூல் படிக்க இன்னநாளில் எடுக்கப்பட்டது என்றும், இன்ன நாளில் முடிக்கப்பட்டது என்றும், நாட்குறிப்பிலோ நூல்களிலோ குறிப்பது அடிகளார் வழக்கமாக இருந்துள்ளது.

தாம் படிக்கும் நூலில், நினைவு கொள்ளத்தக்க சொல்லோ சொற்றொடரோ காணப்பட்டால் அவற்றைக் குறித்தல், ஒப்புமை சுட்டல், வரலாறு சுட்டல், காலம்காட்டல், நலம் பாராட்டல், இலக்கணம் இயம்பல், சொல்லாய்வு, பிழை திருத்தம் ஆகியவற்றையும் குறித்தல் அடிகளின் பழக்கமாகும்.

## அடிகள் நூல் தொகுப்பின் அருமை

அவர் நூல்களையெல்லாம் முற்கால ஊழிகளின் காலங்கடந்த மதிப்புடைய கருத்துகளின் திருவுருக்கள் என்றே கருதினார். அவற்றை அந்நிலையிலேயே பயன்படுத்துவதற்கு அவர் விதிர்விதிர்ப்புக் கொண்டார். தாம் பயன்படுத்திய பின், அவர் இதனைச் சேர்த்துத் தொகுத்து வைத்த முறை சுவையுடைய கிழங்குகளைத் திரட்டி வைத்த சபரியின் செயலையே நினைவூட்டுவதாகும். சீராமன் இலக்குமணன் ஆகியவர்கள் சேவையில் ஈடுபட்டு அவர்களுக்கு அளிப்பதற்காகவே சபரி அவற்றைத் தொகுத்து வைத்தாள். மறைமலையடிகள் இத் தொகுப்பைத் திரட்டியதும் இது போலப் பொதுமக்கள் சேவையை உளத்தில் கொண்டேதான் என்பது குறிப்பிடத்தக்கது.

அடிகள் ஏடுகளைத் திரட்டிச் சேர்த்தவகை கடவுளின் திருவுணவுக்காகக் கண்ணப்பர் உணவு தேர்ந்தெடுத்துச் சேர்த்த

முறையை ஒப்பதாகும். முதலில் தாம் தின்று சுவை பார்த்துக் கடவுளுக்கு ஏற்றதென்று கருதாத எதனையும் கண்ணப்பர் கடவுளுக்குப் படைக்க முன்வந்தது இல்லை. மறைமலையடிகள் செயலும் இது போன்றதே. தொகுதியிலுள்ள நூல்களில் அவர் முற்ற முழுக்க வாசிக்காதது, வாசித்து, இது மக்களுக்கு அளிக்கும் தகுதியுடையது என்று அவர் தேர்ந்தெடுக்காதது ஒன்றுகூடக் கிடையாது.

“ஏடுகள் ஒவ்வொன்றும் அவர் தனித்தனியாக அட்டை உறையிட்டுத் தூசிபடாமல் உன்னிப்பாகக் காத்து வைத்த முறையையும், ஏடுகள் ஒவ்வொன்றையும் வரிவரியாக முழுதும் வாசித்துப் பயன்படுத்திய பின்னும் புத்தம் புதியனபோல் அவற்றைப் பேணிய வகையையும் காண்போர் வியப்படையாமல் இருக்க முடியாது. ஏடுகளை அவர் வருங்காலப் பொதுமக்கள் பயனீடு நோக்கிலேயே பேணி வைத்திருந்தார் என்பதற்குச் சான்றுகள் தேவைப்படுமேயானால், அதற்கு இஃது ஒன்றே போதியது ஆகும். புத்தகங்கள் ‘பயனீட்டுக்கே உரியவை’ என்ற எனது நூலகத்துறையின் முதல் ஒழுங்கை அடிகள் தம் நோக்கிலேயே அன்றே கொண்டிருந்தார் என்பது தெளிவு” என்று மறைமலையடிகள் நூல்நிலையத் திறப்பு விழாவின்போது நூலக நுண்கலைச் செல்வர் முனைவர் தாமரைத்திரு எஸ்.ஆர். அரங்கநாதன் அடிகளாார் நூற்றொகுதியின் அருமை குறித்துக் கூறியுள்ள உரைமணிகள் உன்னுதோறும் உயர்வற உயர்ந்து செல்வதாம் என்பர் புலவர் இரா.இளங்குமரன் அவர்கள்.[1]

## மணிமொழி நூல் நிலையம்

2-2-1931 அன்று அடிகளாரின் பொதுநிலைக் கழக இருபதாம் ஆண்டு விழாவும், அம்பலவாணர் திருக்கோயிற் குடமுழுக்கும், மணிமொழி நூல் நிலையத் திறப்பும் நடைபெற்றன.

மணிமொழி நூல் நிலையம் அடிகளாரால் தொகுக்கப் பெற்ற நூல்களையுடையது. தமிழ், ஆங்கிலம், வடமொழியெனும் மும்மொழிகளிலும் சிறந்த நூல்களெல்லாம் இங்குள்ளன. நூல்களின் எண்ணிக்கை நாலாயிரத்துக்கு மேற்பட்டவை. தாம் எழுதி வெளியிடும் நூல்களை விற்பதனாலும், சொற்பொழிவினாலும், அறிஞர்களின் நன்கொடையினால் கிடைப்பதனாலும் வரும் வருவாய்களிலிருந்தே இவை வாங்கப் பெற்றன. இவை யாவும் ஒரே

---

1. கழக ஆட்சியர் வ.சு. வரலாறு, பக்.176,177.

முறையில் வாங்கப் பெற்றவை யல்ல. தம் இளமையிலிருந்தே தாமே கற்பதற்காக அப்போதைக்கப்போது வெளியாகும் புதிய நூல்களாக ஏறக்குறைய ஐம்பதாண்டுகளாகத் தொகுக்கப் பெற்றவை. அவையெல்லாம் அடிகள்ால் நன்றாகப் படிக்கப் பெற்று, ஆங்காங்கே குறிப்புக்களெழுதப் பெற்றவை. எல்லா நூல்களும் கிழிவுறாமலும் புதிய உறைகளிடப் பெற்றும் பல நிலைப்பேழைகளில் ஒழுங்காக இடைவெளியின்றி அடுக்கப் பெற்றவை.

மணிமொழி நூல் நிலையத்தில் ஆங்கில நூல்களே மிகுந்திருக்கின்றன. நிரலெண்கள் கொடுக்கப் பெற்ற அவற்றை மறைமலை அடிகளே எடுத்தல் வழக்கம். எடுக்கும்போது மிகவும் எச்சரிக்கையாக மேலுள்ள நூல்களை எடுத்துவிட்டே எடுப்பார். பல நூல்கள்ின் இடையிலிருந்து இழுக்கமாட்டார். ஒவ்வொரு நூலும் சிறுகச் சிறுக எடுத்துத் தூசு படாமல் தட்டி வைப்பார். ஆங்கு வருவோர்க்குத் தாம் நூல் நிலையத்தை ஒழுங்குற வைத்திருப்பதைக் காட்டுவார். அடிகள் நூல் நிலையத்தை வைத்திருக்கும் முறை மிகவும் பாராட்டத்தக்கதும், மற்றோர் பின்பற்றக் கூடியதும் ஆகும். மற்றும், நூல்நிலையத்திலுள்ள நூல்களின் கருத்துக்களெல்லாம் அடிகளின் கருத்திலே பதிந்திருக்கும். வாழ்நாளெல்லாம் மாணவ நிலையிலேயே படித்துக் கொண்டேயிருந்தார் என்பது நம் வியப்புக்குரியதாகும் என்பர் புலவர் அரசு அவர்கள்.[1]

நூல்களோடும் நூலகத்தோடும் தம்மை இணைத்துக் கொண்ட மறைமலையடிகள், அந்நூல்கள் பிறர்க்கும் பயன்படவேண்டுமெனக் காத்தளித்தமை, அதிலும் வளமிக்க தொகுதியைச் சேர்த்தளித்தமை பெருஞ்செயலாம்.

## நூல்நிலையம்

மறைமலையடிகளாரின் மறைவின்போது பலரும் அவர் விட்டுச் சென்ற நூல்களைப் பற்றியே நினைந்து போற்றினர். அவருடைய விருப்பத்தின்படியே ஒரு நூலகத்தை உருவாக்க வேண்டுமென அனைவரும் விழைந்தனர். தமிழறிஞர்கள் பலர் இதழ்களிலும் தம் கருத்தை வெளியிட்டு வந்தனர். காட்டாக ஒன்றினை இவண் காண்போம்.

"எப்பொழுதும் படிப்பதில் இணையற்ற ஆர்வமுடையவர் மறைமலையடிகள். மிக அரிய நூல்களை வாங்கித் தொகுத்து

1. மறைமலையடிகள், பக்.62, 63.

வைத்திருந்தார். அவற்றை வாங்குவதில் இவர்தாம் ஈட்டிய பெரும் பகுதியைச் செலவிட்டார். அறுபதினாயிரம் ரூபாய்க்குமேல் மதிப்புள்ள நூல்கள் இவரிடம் இருந்தன. மறைமலையடிகள் மறைந்தது தமிழ் நாட்டுக்கு நட்டம். இவருடைய ஆராய்ச்சிக் குறிப்புக்களைத் தொகுத்துத் தக்க வகையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தமிழாராய்ச்சி செய்பவர்களுக்குப் பயன்படும் வகையில் எந்த நூல் நிலையமும் சென்னையில் இல்லை. அவரவர்கள் பல காலந் தேடித் தொகுத்து வைத்திருப்பவற்றை யன்றித் திடீரென்று ஒருவருக்கு ஒரு பழைய நூல் வேண்டுமானால் கிடைப்பதில்லை. பல அரிய தமிழ் இலக்கிய இலக்கணங்கள் இரண்டாம் முறை பதிப்பாகாமலே மறைந்து விட்டன.

ஆகவே மறைமலையடிகளுடைய நூல் நிலையத்தை ஆதாரமாக வைத்துக்கொண்டு இன்னும் வேண்டிய நூல்களைத் தொகுத்து அடிகளுடைய பெயராலேயே ஒரு சிறந்த நூல் நிலையத்தை அமைக்கலாம். அது மறைமலையடிகளின் நினைவை நிறுத்த உதவுவதோடன்றித் தமிழ் அறிஞர்களுக்கும் பேருபகாரமாக இருக்கும்."[1] என முற்றிலும் பொருத்தமானதொரு கருத்தினைக் கலைமகள் ஆசிரியர் திரு கி.வா. ஜகந்நாதன் அவர்கள் அன்றே வெளியிட்டனர். இத்தகையோரின் பெருவிருப்பால் மறைமலையடிகளார் நூலகமும் தனியே தொடங்கப்பெற்று, இன்றும் தமிழ் ஆய்வாளர்களுக்கும் அறிஞர்களுக்கும் பொதுமக்களுக்கும் பெரிதும் பயன்பட்டுவருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

### சிந்தனைச்செல்வர்

ஆழ்ந்த படிப்பு அளவற்ற சிந்தனையைப்பெருக்கும். ஒன்றிய உள்ளங்கொண்ட அடிகளாரின் தமிழ்த்தவ வாழ்வு அவரைச் சிந்தனைச் செல்வராக்கியது. தமிழ்மொழி, தமிழர்வாழ்வு, தமிழர் வழிபாடு, தமிழர் நாகரிகம், தமிழ் நூல்கள் எனப் பன்முக நோக்கில் தமிழ்ச் சிந்தனைகள் கொண்டவர் அடிகளார். இருபதாம் நூற்றாண்டில் தமிழர் வாழ்வில் மக்கள் சிந்தனையைத் தம் நூல்களால் வளப்படுத்திய பெருமையும் இவருக்குண்டு.

### அடிகளார் உருவாக்கிய நூல்கள்

அடிகளார் இயற்றிய நூல்கள் ஐம்பத்துநான்கு. அவை வருமாறு:

---

1. கலைமகள், திங்கள் இதழ், அக்டோபர், 1950.

| | | |
|---|---|---|
| 1. | முதற்குறள் வாத நிராகரணம் | 1898 |
| 2. | சித்தாந்த ஞானபோதம்- சதமணிக்கோவை - குறிப்புரை | 1898 |
| 3. | துகளறு போதம் - உரை | 1898 |
| 4. | முனிமொழிப் பிரகாசிகை | 1899 |
| 5. | வேதாந்த மதவிசாரம் | 1899 |
| 6. | வேத சிவாகமப் பிராமண்யம் | 1900 |
| 7. | திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை | 1900 |
| 8. | சோம சுந்தரக் காஞ்சியாக்கம் | 1901 |
| 9. | ஞான சாகரம் | 1902 |
| 10. | முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை | 1903 |
| 11. | பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை | 1906 |
| 12. | சைவ சித்தாந்த ஞானபோதம் | 1906 |
| 13. | பண்டைத் தமிழரும் ஆரியரும் | 1906 |
| 14. | சாகுந்தல நாடகம் | 1907 |
| 15. | Oriental Mystic Myna | 1908 |
| 16. | சிந்தனைக் கட்டுரைகள் | 1908 |
| 17. | மரணத்தின்பின் மனிதர் நிலை | 1911 |
| 18. | குமுதவல்லி : நாகநாட்டரசி | 1911 |
| 19. | சாதிவேற்றுமையும் போலிச் சைவரும் | 1913 |
| 20. | கோகிலாம்பாள் கடிதங்கள் | 1921 |
| 21. | பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் | 1921 |
| 22. | அறிவுரைக் கொத்து | 1921 |
| 23. | யோக நித்திரை : அறிதுயில் | 1922 |
| 24. | வேளாளர் நாகரிகம் | 1923 |
| 25. | மனித வசியம் : மனக்கவர்ச்சி | 1927 |
| 26. | மாணிக்கவாசகர் வரலாறும் காலமும் | 1930 |
| 27. | மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை | 1933 |
| 28. | சாகுந்தல ஆராய்ச்சி | 1934 |
| 29. | சிறுவர்க்கான செந்தமிழ் | 1934 |

30. தொலைவில் உணர்தல் 1935
31. மாணிக்கவாசகர் மாட்சி 1935
32. Ocean of Wisdom 1935
33. முற்காலப் பிற்காலத் தமிழ்ப் புலவோர் 1936
34. தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும் 1936
35. Tamilian and Aryan form of Marriage 1936
36. Ancient and Modern Tamil Poets 1937
37. இந்தி பொது மொழியா? 1937
38. பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் 1938
39. Saiva Siddhanta as a philosophy of practical knowledge 1940
40. திருவாசக விரிவுரை 1940
41. தமிழர் மதம் 1941
42. கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா 1948

இந்நாற்பத்திரண்டு நூல்களும் அடிகளால் வெளிப்படுத்தப்பட்டவை. அவர் காலத்தில் அவர் எழுதி நூலுருப் பெறாதனவும், கட்டுரை வடிவில் வந்தனவும், கைப்படியாய் இருந்தனவும் கொண்டு அவர் காலத்திற்குப் பின்னர் வெளிவந்த நூல்கள் 12 அவை:

43. திருக்குறள் ஆராய்ச்சி 1951
44. மாணிக்கவாசகர் வரலாறு 1952
45. அம்பிகாபதி அமராவதி 1954
46. இளைஞர்க்கான இன்றமிழ் 1957
47. சோமசுந்தர நாயகர் வரலாறு 1957
48. மறைமலையடிகளார் கடிதங்கள் 1957
49. சிவஞானபோத ஆராய்ச்சி 1958
50. Can Hindi be a Lingua Franca of India 1969
51. அறிவுரைக் கோவை 1971
52. உரைமணிக்கோவை 1972
53. கருத்தோவியம் 1976
54. பாமணிக்கோவை 1977

என்பன. இவற்றை, மருத்துவம், மறைபொருளியல், இலக்கியம், இதழ்கள், சங்க இலக்கிய ஆய்வு, பாடல், நாடகம், புதினம், கடிதம், கட்டுரை, சமயம், தத்துவம், வரலாறு, சமூக இயல் எனப் பதினான்கு வகைகளில் பிரித்துள்ளனர். இவ்வடைவு நூலகத்துறை இயக்குநர் திரு அரங்கநாதன் அவர்களும், மறைமலையடிகள் நூலக நூலகர் திரு முத்துக்குமாரசாமி அவர்களும் இணைந்து அமைத்த அடைவாகும்.[1]

அடிகளார் 1898 முதல் 1950 வரை ஆங்கிலத்தில் எழுதியிருந்த நாட்குறிப்புகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறிப்புகளைத் தமிழாக்கி 'மறைமலையடிகளார் நாட்குறிப்புகள்' என்னும் பெயரில் 1988 ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது.

மறைமலையடிகளார் தம் கைத்திறத்தால் அறிவுத் திறனால், தமிழ் ஊற்றத்தால், சைவ உணர்வால் உருவாக்கிய நூல்கள் 64 என்பர் கவிஞர் கோ.கோவை இளஞ்சேரனார் அவர்கள். அவர், இந்நூல்களை நூலுருவாக்க நிலையில் 1. சொற்பொழிவு நூலுரு 2. கட்டுரை-தொகுப்பு நூலுரு 3. நூலாக்க நூலுரு 4. மொழிபெயர்ப்பு நூலுரு என்று நான்காகக் கொள்வர். இவ்வொவ்வொன்றிலும் உள்ள நூல்களைக் கருத்தளவில் இயல்களாக வகைசெய்து 1. கோட்பாட்டியல் 2. உரையியல் 3. பாடலியல் 4. அளவையியல் 5. சமயவியல் 6. ஆய்வியல் 7. நாடகவியல் 8. உளவியல் 9. குமுகாயவியல் 10. புதினவியல் 11. வாழ்வியல் 12. மொழியியல் 13. அரசியல் 14. வரலாற்றியல் 15. பொதுவியல் 16. வரைவியல் என 16 இயல்களில் அவ்வவ் நூல்கள் பதிப்பான கால வரிசையில் அமைத்து நோக்கலாம் என்பர்.[2]

இவ்வாறு, அடிகளின் நூல்களைக் கற்பார் மனவுணர்வுக் கேற்ப அந்நூல்களின் வகைமை நனிசிறக்கும்.

## தமிழ் முழுதுங் கற்ற பயன்

மறைமலையடிகளார் தாம் இயற்றிய நூல்கள் பற்றித் தாமே பெருமை கொள்கிறார். அதை அவரே வெளிப்படையாகவும் கூறியுள்ளார்.

"யான் ஐம்பது ஆண்டுகட்கு மேலாக ஏராளமான நூல்களை ஆராய்ந்து கண்ட முடிவுகளை நூல்களாக எழுதியிருக்கின்றேன்;

---

1. மறைமலையடிகள், பக்.102-105.
2. கவிஞர். கோ. கோவை இளஞ்சேரனார், பட்டினப்பாலை ஆராய்ச்சிஉரை பக்.11,12.

பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுத்தது போல, உண்மை காணும் உணர்ச்சியினால் நடுநின்று ஆராய்ந்திருக்கின்றேன். ஒருவர் தம் வாழ்நாள் முழுவதும் கற்றாலும் அறிய முடியாத உண்மைகளை எல்லாம் எளிதாக எழுதி வைத்திருக்கின்றேன். எல்லாரும் தமிழிலக்கியங்கள் யாவற்றையும் கற்கும் தொல்லையை மேற்கொள்ள வேண்டியதில்லை. அது முடியவும் முடியாது. தேவையும் இல்லை. எல்லா நூல்களிலும் உள்ள சிறந்த உண்மைகளையெல்லாம் பிழிசாறாக யான் வடித்துள்ளேன். என் நூல்களைப் படித்தாற் போதும். அதனால் தமிழ் முழுதுங் கற்ற பயனை அடையலாம்"[1] என அவரே கூறுகின்றார்.

## பதிப்புப் பணியில் தூய்மை

நூலாசிரியர், உரையாசிரியர், பதிப்பாசிரியர், எனப் பல்வேறு நிலைகளில் சிறந்திருந்த அடிகளார், நூல் உருவாக்கத்தின் ஒவ்வொரு நிலையிலும் தாமே முன்னிருந்து பணிகளைச் செய்து வந்தது மிகவும் அரிய செயலாகும்.

தாம் நிறுவிய திருமுருகன் அச்சுக்கூடத்தில் தாமே அச்சுப்பொறியை இயக்கித் தம் நூல்களின் பன்னூறு பக்கங்களை அச்சிட்டுள்ளார். எழுத்துக் கோத்தல், எழுத்துக்கட்டல், மைதடவல், மை உருளைகள் பழுது பார்த்தல், நூற்கட்டு செய்தல் என எல்லா அச்சகப் பணிகளையும் மேற்கொள்வதில் வல்லவர் அடிகள். தாமும் தம் மூன்று பிள்ளைகளும் சேர்ந்து மூன்றாண்டுகள் அச்சகப் பணியைச் செய்து வந்தமையையும் அறிகின்றோம்.

பொதுவாக, பிழை திருத்தும் பணியை அவர் யாரிடமும் அளிப்பதில்லை. அதனால் அவருக்கு ஏற்பட்ட காலவிரையமே மிகுதி. அதை அவர் பொருட்படுத்துவதில்லை என்பர். இவ்வாறு பதிப்பில் தம்மால் முடிவதனைத் தாமாற்றினார். பதிப்பு வரலாற்றில் அடிகளாரின் இத்தகைய பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

## இலக்கியத் திருட்டு

அடிகளாருடைய ஆராய்ச்சியுரைகளை எடுத்தாண்ட பிறர் தம்முடைய நூல்களில் அவற்றைப் பற்றிக் குறிப்பிடாமல் அவர்களே எழுதியது போன்று எழுதிச் சேர்த்திருப்பதையும் அடிகளார் கண்டித்துள்ளார்.

---

1. மறைமலையடிகள் வரலாறு, பக்.827.

"ஆங்கிலத்தில் நூல் எழுதும் ஆங்கில அறிஞர் தாம் பிறர் முறைகளைப் பின்பற்றி எழுதினாலும், பிறர் நூல்களில் உள்ள சொற்களையுஞ் சொற்றொடர்களையும் தாமெடுத்து ஆண்டாலும் தாம் ஏனையாசிரியர்க்குக் கடமைப்பட்டிருக்கும் இடங்களை ஆங்காங்குக் குறித்துப் போவர். அத்தகைய நேர்மை நந்தமிழ்ப் புலவரிடத்துப் பெரும்பாலும் இன்மையின், தாம் எடுத்தாண்டவர்க்குத் தமது கடமையினைப் புலப்படுத்தாது எல்லாந்தாமே கண்டு அறிந்தெழுதினாற்போல் வாளாது போவர். 'தமிழ் மொழி வரலாறு' எழுதினவர் யாம் ஞானசாகர முதற்பதுமத்தும், முதற் குறள்வாத நிராகரணத்தும் எழுதினவற்றை யெடுத்துத் தமது புத்தகத்தில் பாதியை நிரப்பிக் கொண்டும் எமக்குத் தாங்கடமைப்பட்டிருத்தலைச் சிறிதுமே கூறாது போயினர்.

கரிகாற் சோழனைப் பற்றி எழுதிய மற்றொருவர் எம்முடைய திருக்குறளாராய்ச்சியினின்றும் இப்பட்டினப்பாலை ஆராய்ச்சியினின்றும் தாம் பல குறிப்புக்கள் எடுத்தெழுதிக்கொண்டும் தமது கடமைப்பாட்டினைத் தெரிவியாமலே போயினர்.

இங்ஙனமே, 'கார் நாற்பதிற்கு' ஒரு புதிய உரை வரைந்து சின்னாட்கு முன் வெளியிட்ட வேறொருவர் அதற்கு உரை எம்பால் ஒரு திங்களிருந்து நேரே கேட்டும், எமதாராய்ச்சியுரைகளையே முழுதும் பின்பற்றி எழுதியும் தமது கடமைப்பாட்டினைக் கிளவாது போயினர்.

இங்ஙனமே, நூலெழுதுவாரும் அவைகளில் விரிவுரை நிகழ்த்துவாரும் எம்முடைய ஞானசாகரத்திலிருந்தும் பிற நூல்களிலிருந்தும் ஏராளமான குறிப்புக்களை எடுத்துப் பயன்படுத்திக் கொள்வாராயினும், தாம் எமக்குக் கடமைப்பட்டிருத்தலை மட்டும் தெரிவிப்பாரல்லர்.

நம் தமிழறிஞர்க்கு இந்நேர்மை இல்லாதொழியினும், யாம் எழுதுவன பலர்க்கும் உதவியால் நின்று மேன்மேல் உண்மை நுண்பொருள் ஆராய்தற்கு வழி திறந்து காட்டிப் பயன்படுதல் பற்றியும், அவற்றால் நம் செந்தமிழ் மொழியின் அருமை பெருமைகள் தமிழ் வழங்கும் நாடெங்கும் பரவுதல் பற்றியும் யாம் பெரிதும் உளம் மகிழ்ந்து எல்லாம் வல்ல இறைவற்கு நன்றி செலுத்துகின்றேம்"[1] என

1. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, இரண்டாம் பதிப்பு முகவுரை, பக்.16-17.

இவ்வாறு அடிகளார் கூறும் அறிவுரைகள் இன்றைய ஆய்வாளர்களுக்கும் நூல் இயற்றுவார்க்கும் மிகமிகத் தேவையாகும்.

## பண்டைக்கால நூற்பயிற்சி

அடிகளார் இயற்றிய நூல்களை அக்கால மக்கள் விரும்பிப் படித்து வந்ததை அவர் மகிழ்ந்து பாராட்டுகின்றார்.

அடிகள்தம் பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையின் மூன்றாம் பதிப்பில் பல புதிய திருத்தங்கள் செய்யப்பட்டிருப்பதுடன், விளக்க உரைக் குறிப்புக்களிலும் பல புதியனவற்றைச் சேர்த்துப் பதிப்பித்துள்ளார். முதற்பதிப்பு 1906ஆம் ஆண்டு வெளிவந்தது முதல் 36 ஆண்டுகளில் மூன்று பதிப்புகள் மொத்தம் 1750 படிகள் விற்றமை கொண்டு தமிழரின் வளர்ச்சியை மதிப்பிட்டுரைக்கின்றார் அடிகள்.

"இப்பட்டினப்பாலை ஆராய்ச்சியுரையின் முதற் பதிப்பு முதன்முதற் கி.பி. 1906 ஆம் ஆண்டு வெளிவந்தது. அப்போது அதில் 250 படிகளே பதிப்பிடப்பட்டன. அவ்விருநூற்றைம்பது படிகளுஞ் செலவாகப் பதின்மூன்றாண்டுகள் சென்றன. அவை செலவானபின் அதன் இரண்டாம் பதிப்பு 500 படிகளாக 1919ஆம் ஆண்டு பதிப்பிடப்பட்டது. அவ்வைந்நூறும் இப்போது (1941) பதினோராண்டுகளிற் செலவழிந்திருத்தலை உற்று நோக்குங்கால், நம் தமிழ் மக்களின் கல்வியுணர்வு முன்னிருந்ததை விட இப்போது சிறந்து வருதல் புலனாகின்றது. மிகப் பழைய தனித் தமிழ்ச் செய்யுட் சிறப்புணர்ந்து அதனைப் பயிலும் அவா நம் மக்கட்கு மிகுந்து வருதல், அவர்கள் பல துறைகளிலும் முன்னேற்றம் அடைந்து வருதற்கு ஓர் அறிகுறியாக அறியற்பாற்று.

ஏனென்றாற், பழைய செந்தமிழ்ப்பாக்கள் எல்லாந் தனித்தமிழ் வளம் நிரம்பி, உள்ளதை உள்ளவாறு கிளக்கும் உண்மை மாட்சியுடையன வாகும். பின்றைக் காலத்து, அஃதாவது, 'கம்பராமாயண' காலம் முதற்கொண்டு இன்றை வரையிற் தோன்றிய செய்யுள் நூல்களிற் பெரும்பாலன பொய்யும் புளுகும் நிறைந்து, தம்மைப் பயில்வாருணர்வினைப் பழுதுபடுத்தி, அவரைப்பொய்யிலும் அறியாமையிலும் படிப்பித்து, அவர்க்குப் பிறவித் துன்பத்தை மேன்மேற் பெருக்குந் தன்மையவாகும். ஆதலாற், பின்றைக் காலச் செய்யுள் நூற்பயிற்சி எவ்வளவுக்குக் குறைந்து, பண்டைக்கால நூற்பயிற்சி எவ்வளவுக்கு மிகுந்து வருமோ அவ்வளவுக்கும் நந்தமிழ் மக்கள் மெய்யுணர்வுடையராய்ப், பிறவித் துன்பக் கடலை மீண்டு இன்பக் கரை ஏறுவர்.

இப்'பட்டினப்பாலை' போன்ற பண்டைத் தமிழ் மெய்ந்நூற் பயிற்சியில் இஞ்ஞான்றுள்ள நம்மனோர்க்குக் கருத்துச் செல்லுதலைக் கண்டு மிக மகிழ்ந்து இம் மூன்றாம் பதிப்பில் ஆயிரம் படிகள் பதிப்பிடலாயினேம்"[1] என அடிகள் வெளியிட்ட மூன்றாம் பதிப்பின் ஆயிரம் படிகளும் விற்றுத் தீர்ந்த நிலையில் பின்னாளில் கழகம் பல பதிப்புகளை வெளியிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## நாற்பத்தைந்தாண்டு நூற்பணி

நூலாக்கப்பணியிலும் நூல் வெளியிடும் பணியிலுமுள்ள இன்னல்களை இப்பணியிலுள்ளோர் நன்கு அறிவர். நாடு விடுதலை பெறுவதற்கு முன்னர் இருந்த தமிழாசிரியரின் நிலை, பொருளாதார நிலை, மக்கள் நூல்களை வாங்கிப் படிக்கும் திறன், நூலாக்கச் செலவு போன்றவை ஒரு நூலாசிரியருக்கு எத்தகைய இன்னல்களைத் தோற்றுவிக்கும் என்பதற்கும் அடிகளாரின் வாழ்க்கையே ஓர் எடுத்துக்காட்டாகும்.

தமிழர் மதம் (The Tamilian Creed) என்னும் நூலினை அடிகள் தம் திருமுருகன் அச்சுக் கூடத்தில் (T.M. Press) 1941 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் பதிப்பித்து வெளியிட்டுள்ளார். முந்நூறு பக்கங்களுக்கு மேலுள்ள இந்நூல் தோன்றிய வழி, அச்சாக்கம், அதில் ஏற்பட்ட இழப்பு போன்றவற்றையெல்லாம் தம் முகவுரையில் அவர் மிகத் தெளிவாக எழுதியுள்ளார். அவற்றில் சில வருமாறு:

"சென்னை மாநகரில் அனைத்திந்திய தமிழர் மதமாநாடு கூட்டுதற்கு முனைந்த அதன் அமைச்சர், யாமே அதற்கு அவைத் தலைவராய் அமர்ந்து அதனை நடத்துதல் வேண்டுமென எம்மை வற்புறுத்து வேண்டிக் கொண்டதுடன், அதனை நடத்தும் எமதுழைப்பிற்காக இருநூறு ரூபாயும் எமக்கு நன்கொடையாக அன்பு விடுவித்துதவினர். அதனை ஏற்று, அவரது வேண்டுகோளுக்கும் இணங்க அதனை நடத்த ஒப்புக்கொண்டோம்.

பின்னர்ச் சில நாளில், அம்மாநாட்டில் யாம் நிகழ்த்துந் தலைமையுரையினை முழுதும் எழுதி அச்சிட்டு வெளியிட்டால் தமிழ் மக்கட்கும் பிறர்க்கும் அது பெரிது பயன்படும் எனத் தெரிவித்து அதனை எழுதுமாறு வற்புறுத்தி அவர் எம்மை மிகவும் வேண்டினர். அதன்மேல், அதனை எழுதுதற்கு இசைந்து, எழுதி முடிந்தபின் அதனை அச்சிடுஞ் செலவுக்கு என் செய்வதென்று அவரை

1. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, முகவுரை, பக்.21-22.

வினவினேம். அதற்கவர், அச்சுச் செலவைத் தாமே கொடுப்பதாகவும், அச்செலவுத் தொகையை அச்சிட்டபின் புத்தகப் படிகளாகத் தாம் பெற்றுக் கொள்வதாகவுங் கூறினர். அவரது சொல்லை நம்பி, எம்முடைய நூல்களில் அரைகுறையாய் அச்சிட்டு முடிக்கப்படாமலிருக்கும் நூல்களின் வேலையையும் நிறுத்தி வைத்துத், 'தமிழர் மதம்' என்னும் இந்நூலை விரைந்தெழுதி முடிக்கும் முயற்சியிலேயே இறங்கிவிட்டேம். இறங்கி இதனை பாதிக்குமேல் எழுதி விட்டபின், இந்நூலை அச்சிடுஞ் செலவுக்கு வேண்டுந்தொகை திரட்ட முடியாமையால், இதன் அச்சுச் செலவுத் தொகையைத் தாம் தர இயலாதென்று அமைச்சர் தெரிவித்து விட்டார்.

இதனால் முதலில் எமதுள்ளஞ் சிறிது கலங்கினாலும், இது காறும் எம்முடைய தமிழ்த்தொண்டு சிவத்தொண்டுக்குப் பொருளுதவி செய்து வரும் எல்லாம் வல்ல சிவபெருமான் இதற்கும் உதவி செய்து எப்படியும் இதனை வெளியிடுவிப்பான் என்னும் எண்ணம் எமதுள்ளத்தில் முனைந்தெழவே, இதனை எங்ஙனமாயினும் எழுதி முடித்து அச்சிட்டு வெளிப்படுத்தல் வேண்டுமென உறுதிகொண்டு திருவள்ளுவர் ஆண்டு 1969, சித்திரைத் திங்கள், 24ஆம் நாள் எழுதத் துவங்கி இந்நூலைத், திருவள்ளுவர் ஆண்டு 1970, ஆனித் திங்கள், 26ஆம் நாள் எழுதி முடித்தேம். ஆகவே, இதனை எழுதிமுடிப்பதற்கு ஓராண்டும் இரண்டு திங்களும் இரண்டு நாளும் ஆயின.

இந்நூலை எழுதி வெளியிடுவதற்கு எமக்குண்டான வாழ்க்கைச் செலவு ரூ.1500 ஆகும்; இந்நூலின் அச்சுச்செலவு, காகிதச்செலவு கட்டிடச் செலவெல்லாம் ரூ.750 ஆகும்; ஆக இந்நூற்செலவு மொத்தம் இரண்டாயிரத்து இருநூற்றைம்பது ரூபாயாகும். இந்த ரூ.2250 உம் முன் பணமாகச் செலவழித்தால் அல்லாமல் இந்நூல் வெளிவருவதற்கு வேறு வழியில்லை. இப்பெருந்தொகையை முன்னதாகச் செலவழித்தலால் முதலும் வட்டியுங் கரைந்து விடுகின்றன; பிறகு இத்தொகையைக் காண்டலும் இயலாது. இந்நூலின் ஆயிரம்படிகளில் தொளாயிரம்படிகளே விற்பனையாகும்; எஞ்சிய நூறும் பல வழிகளில் வீண் செலவாய்ப்போம்; இத் தொளாயிரம் படிகளும் விற்கச் சிறிதேறக் குறையப் பன்னிரண்டு ஆண்டுகளாகும். இதன் படிகளை அவ்வப்போது விற்றெடுக்குஞ் சிறு சிறு தொகைகளோ உடனுக்குடன் செலவாய்ப் போதலால் இதற்கென்று முன் பணமாகச் செலவழித்த தொகையையும் வட்டியையுந் திரும்பப் பெறுதலும் இயலாது.

இங்ஙனமே, எம்முடைய நூல்களை வெளியிடுதற்குச் செலவழிந்த தொகை சிறிதேறக் குறைய ஐம்பதினாயிர ரூபாயாகும். இத்தொகை முழுமையாய்க் கையில் இப்போதிருந்தால், எமக்குத் திங்கள் தோறும் இருநூறு ரூபாய்க்குக் குறையாமல் வருமானங்கிடைக்கும். ஆனால், தமிழுலகம் அதனால் யாது பயன் பெறும்? அதனை நினைந்தே எமக்குண்டாம் பெரும் பொருட் செலவையும் பேருழைப்பையும் ஒரு சிறிதுங் கருதாமல் எமது தொண்டினை நாற்பத்தைந்தாண்டுகளுக்கு மேலாகச் சிவபிரான் திருவருளுதவி ஒன்றே கொண்டு எம்மாலியன்ற மட்டுந் தனித்தமிழில் தொடர்பாக நடத்தி வருகின்றேம்"[1] என்பர் அடிகள்.

அடிகளாரின் இத்தகைய குறிப்புகள் தமிழ்நூற் பதிப்பு வரலாற்றில் பெரிதும் குறிக்கத்தக்கனவாம்.

தமிழ்நூலாக்கத்தில், நூலினை எழுதுதல், பதிப்பித்தல், அச்சிடுதல், வெளியிடுதல், விற்பனை செய்தல் ஆகிய அனைத்துப் பணிகளையும் நூலாசிரியரே ஏற்றுச் செயல்படும் நிலையில் ஏற்படும் பொருள் இழப்புகள், கால இழப்புகள் போன்றவை மிகுதியாம். அடிகளாரின் காலத்திலிருந்தே இந்நிலை தொடர்வது நோக்கத்தக்கது.

### அடிகளின் புரவலர்கள்

இவ்வாறு அரும்பாடுபட்டு அடிகளார் எழுதி வெளியிட்ட நூல்கள் தமிழ் மக்கள் நல்வாழ்க்கைக்கு வழிகாட்டும் ஒளிவிளக்காகும். அடிகளாரின் நாற்பதுக்கும் மேற்பட்ட உரைநடைநூல்களை முறையாகக் கற்பவர்கள் தமிழ்மொழியின் தெய்விக ஆற்றலையும், தனித்தன்மையினையும், தமிழினத்தின் பண்பினையும், நனிநாகரிகத்தினையும், தமிழ்நாட்டின் தொன்மையினையும் பல்கலை வளத்தினையும் நன்குணர்ந்து இறும்பூதெய்துவார்கள் என்பது திண்ணம். இதனை உண்மையாகவே உணர்ந்து தெளிந்த மெய்யன்பர்கள் பலர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்தனர்.

அடிகள் கிறித்தவக் கல்லூரி வேலையை விட்ட பின்னர், வருவாயின்றி, நிலம், வீடு முதலிய உரிமைப்பொருள்கள் ஒன்றுமின்றித் தம்மை யுள்ளிட்ட பதின்மருக்கு உணவளித்து வாழ வேண்டிய நிலையிலிருந்தார். அரும்பெரும் நூல்களை ஆராய்ச்சிக்காக விலை கொடுத்து வாங்குவது, பெருஞ் செலவிட்டு

---

1. தமிழர் மதம், முகவுரை, பக்.5-7.

நூல்களைப் பதிப்பித்து வெளியிடுவது என்பதே வேலையாக இருந்த நிலையில் பணத்தட்டுப்பாடு மிகுந்து வந்தது. இறையருளால், அடிகளுக்குப் புரவலர்கள் சிலர் கிடைத்தனர். அவர்கள் அன்று அடிகட்கு வாய்த்தமையால்தான் அடிகளின் அறிவின்பத்தைத் தமிழகம் பெற்றுய்கின்றது. அவர்களுள் பின்வரும் சிலரைப்பற்றி அடிகள் தம் நாட்குறிப்பு வாயிலாக அறிகிறோம்.

திரு.வ.திருவரங்கம் பிள்ளை, தேவகோட்டை ஏ.ஆர்.எல்.என்.எல். நாராயணன் செட்டியார், மாத்தளை வக்கீல் அரியநாயகம், குலசேகரன்பட்டினம் ராம.ப. செந்திலாறு முகம்பிள்ளை, கொழும்பு முதலியார் சி.இராசநாயகம், மாரிக்குப்பம் ஏ.கே. முருகேசன், வேலூர் வாசுதேவ முதலியார், மானாமதுரை எம்.ஏ.எஸ். முத்துப்பிள்ளை, செல்லம்பிள்ளை, வேலூர் பாலகிருஷ்ணன், அப்பாவுகவுண்டர், யாழ்ப்பாணம் செவ்வந்திநாதன், கோலாலிப்ஸ் டி.எஸ். சுப்பிரமணியம், எஸ். சின்னத்தம்பி, அ.மாணிக்கம், இளவழகனார், பத்மநாபன், சிரம்பான் ராமலிங்கம், பினாங்கு சபாபதி, பாளையங்கோட்டை பண்டிதர் வீரபாகு முதலியோரும் மற்றுஞ் சிலரும் அடிகளின் புரவலர்கள் ஆவர் என்பர்.[1]

மேற்குறிப்பிட்ட புரவலர்களில், வேலூர் வாசுதேவ முதலியார் அவர்கள், இவ்அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் முனைவர் வே.இரா. மாதவன் அவர்களின் தந்தையார் வேலூர் இசைப் பேராசிரியர் மா.இராமமூர்த்தி அவர்களின் பாட்டனார் என்பது இவண் குறிப்பிடத்தக்கதாகும். மறைமலையடிகளார் தம் காலத்தில் வேலூர் தோபாசாமிமடம் போன்ற இடங்களில் அடிக்கடி சொற்பொழிவுகளை நிகழ்த்திப் பல அன்பர்களை மகிழ்வித்து வந்தனர் என அறிகிறோம்.

## கழகத்தொண்டு

மறைமலையடிகளாரின் நூல்களைப் பல்லாயிரக் கணக்கில் நாடெங்கும் பரவச் செய்தவர்கள் கழக ஆட்சியில் தாமரைச் செல்வர் வ.சுப்பையாபிள்ளை மற்றும் அவர் தமையனார் திருவரங்கர் இருவருமேயாவர்.

“ஒரு பாசுவெல் இல்லையானால் எப்படி சான்சன் இல்லையோ அதுபோல் மறைமலையடிகளுக்குப் பெரும் விளம்பரத்தைத் தேடித் தந்தவர் திரு.சுப்பையா பிள்ளை அவர்களே”

---

1. மறை. திருநாவுக்கரசு, மறைமலையடிகள் வரலாறு, பக்.829-831.

என்பர் புலவர் இரா.இளங்குமரன் அவர்கள். "என் தமையனார் திருவரங்கர் இல்லாவிட்டால் மறைமலையடிகளாரின் பெருமை இவ்வளவு விளக்கமுற்றிருக்காது" என்பர் திரு.வ. சுப்பையா பிள்ளை அவர்கள்.

"எனக்குக் கிடைக்கும் புகழுக்கும் பெருமைக்கும் உரியவர்கள் என் அருமைத் தமையனார் திருவரங்கனார் அவர்களும் தனித் தமிழ்த் தந்தை மறைமலையடிகளாரும் ஆவர்'' என்றும் திரு. வ. சுப்பையாபிள்ளை அவர்கள் குறிப்பர்.

அடிகளார் திருவரங்கனாரைக் கொழும்பிலே 1914ஆம் ஆண்டில் முதலில் கண்டார். அடிகளாரின் நூல் வெளியீடு, விற்பனை ஆகியவற்றுக்குத் திருவரங்கர் உதவியதுடன் பெரும்பொருளை நன்கொடையாகவும் தந்தார். 1917இல் மீண்டும் கொழும்புவிற்கு அழைத்தார். திரு.வ.சுப்பையாபிள்ளையும் தொடர்பு கொண்டார்.

'திருசங்கர் கம்பெனி' (திருவரங்கர் சங்கரநாராயணர் கம்பெனி) 1917இல் கொழும்புவில் நிறுவப்பட்டது. அடிகளார் நூல்களை விற்பதற்காகவே இது நிறுவப்பட்டது. இந்நிறுவனமே சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் தோன்றுதற்கு வாய்த்த முன்னோடியாக அமைந்தது. ஓராண்டிற்குப்பின் கொழும்பிலிருந்து சென்னைக்கு இந்நிறுவனத்தை மாற்றினர்.

21-9-1920இல் திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்- திருநெல்வேயிலில் பதிவு செய்யப்பட்டது. சென்னையில் கழகக் கிளைநிலையம் தொடங்கப்பட்டது. பின்பு அதனுடன் திரு. சங்கர் கம்பெனி இணைந்தது. திரு.வ. சுப்பையாபிள்ளை அதன் முகவராக மாறினார்.

அடிகளாரின் அன்புமகள் நீலாம்பிகையாரைத் திருவரங்கர் 2-9-1927இல் மணந்தார். 23-4-1944இல் மறைந்தார். 5-11-1945இல் நீலாம்பிகையாரும் மறைந்தார். 15-9-1950இல் அடிகளார் மறைந்தார்.

அடிகளார் எழுதிவைத்த இறுதிமுறிப்படி, அடிகளார் தொகுத்து வைத்த நூல்களோடு (4000), கழகம் அதுகாறும் தொகுத்து வைத்திருந்த நூல்களையும் (5000) கொண்டு சென்னை இலிங்கிச் செட்டித் தெரு 105எண் வளமனையில் 24-8-1958இல் மறைமலையடிகள் நூல் நிலையத் திறப்பு விழா நிகழ்ந்தது. திரு. முத்துக்குமாரசாமி அவர்கள் நூலகரானார். இப்பெருமகனாரின் முயற்சியால் 35,000க்கு மேற்பட்ட அரிய நூல்களைக் கொண்ட

தமிழ்ப் பெரு நூலகமாக இன்று திகழ்கிறது. வேறு எங்கும் கிடைக்காத பல நூல்கள் இங்கே உள்ளன.

மறைமலையடிகள் காத்தளித்த நூல்களை அப்படியே காத்தும், அவற்றின் மேலும் பல நூல்களைச் சேர்த்துக் காத்தும், மறைமலையடிகளாரின் நூல்களைப் பல பதிப்புகளாக வெளியிட்டு உலகெங்கும் பரவச் செய்தும் தமிழ்த் தொண்டாற்றிய பெருமை அனைத்தும் கழக ஆட்சியர் தாமரைச்செல்வர் திரு.வ.சு. அவர்களையே சாரும்.

### தவவாழ்வு

சமயம், இறைமை ஆகியவற்றில் அழுத்தமான நம்பிக்கை கொண்ட அடிகள் இறுதிவரை இல்லறத்தில் இருந்து கொண்டே தவவாழ்வை மேற்கொண்டு வந்தார். அவ்வாறே பிறரும் வாழ வேண்டுமெனவும் வலியுறுத்தி வந்தார்.

பொதுநிலையில், துறவு மேற்கொண்டவர் இரந்து பொருள் பெறுதல் கூடாதென்பதால் எவ்வாறு வாழ்க்கையை நடத்த இயலும் என்பது பலருக்கு ஐயம். இதற்கும் அடிகளே விடையளிக்கின்றார்.

**"கரவா துவந்தீயுங் கண்ணன்னார் கண்ணும்**
**இரவாமை கோடி யுறும்."**

என்று தெய்வத் திருவள்ளுவர் பணித்தமையால், துறவொழுக்கத்தை மேற்கொண்டார் எவரும் எவரையும் இரந்து உணவும் உடையும் பொருளும் பிறவும் பெறுதல் சிறிதும் ஆகாது. அற்றேல், "முனிவரும் மன்னரும் முன்னுவ பொன்னால் முடியும்" என மாணிக்கவாசகப் பெருமான் அருளிச் செய்தபடி தவவொழுக்கத்தை நடத்துதற்கும் பொருள் வேண்டுமாகலின் அதனைப் பெறுமாறு யாங்ஙனமெனின்; மாணாக்கர்க்கு நூல் கற்பித்தலாலும், நூல் எழுதுதலாலும், நூல் வெளியிடுதலாலும், அவைகளில் சொற்பொழிவுகள் நிகழ்த்துதலாலும், நோய் தீர்த்தலாலும், இறைவனை நோக்கித் தமக்கு வேண்டுவன வெல்லாம் அகங்குழைந்து வேண்டுதலாலுந் தமக்கு இன்றியமையாது வேண்டுவனவெல்லாம் குறைவறப் பெற்றுத் தமது தவமுயற்சியை இனிது நடத்தலாம் என்க என்கிறார் அடிகள்.[1]

இவ்வாறு, அடிகளாரின் தமிழ் வாழ்வே தவ வாழ்வானது. இனிய பல புரவலர்களால் அவர்தம் வாழ்வு இனிதானது. ஏற்றமிகு

---

1. தமிழர் மதம், பக்.312-313.

தனித்தமிழ் நூல்கள் பல இப்பாரெங்கும் பரவியதும் அவர்தம் வாழ்வின் பயனானது.

## தமிழ்த்தாயை மறவாத பெரும் பேறு

எங்கும் எப்பொழுதும் எந்நிலையிலும் தமிழின் சீரிளமைத் திறம் வியந்து பாராட்டி மகிழ்ந்தவர் மறைமலையடிகள். நம் செந்தமிழ்மொழி ஒன்றுமே எல்லாம் வல்ல இறைவனைப்போல் என்றும் இறவாத இளமைத்தன்மை வாய்ந்து இலங்குகின்றது என்பது அவர்தம் நம்பிக்கை. தமிழ்மொழியிலுள்ள நூற்பெருக்கம் போல் வேறு எம்மொழியிலும் இல்லை என்பதே அவர் துணிபு. இத்தமிழ்த்தாயை மறவாது பேணும் பெரும்பேற்றை அனைவரும் பெற வேண்டுகிறார் இவர்.

"மொழியின் அமைப்பையும் மக்களியற்கை உலக இயற்கைகளையுந் திறம்பட விரித்துரைத்த **தொல்காப்பியம்** போன்ற மிகப் பழைய நூலை நமது செந்தமிழிலன்றி வேறு மொழிகளிற் காணல் இயலுமோ?

அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நாற்பொருளையும் முற்றும் எடுத்து விளக்கிய **திருக்குறள், நாலடியார்** போன்ற அரும்பெரு நூல்களை நம் செந்தமிழ் மொழியன்றி வேறு எந்த மொழியேனும் உடையதாமோ?

**சிலப்பதிகாரம், மணிமேகலை** என்னும் பெரும் பழந்தமிழ்க் காப்பியங்களோடு ஒத்தவை எம்மொழியிலேனும் உளவோ?

உலக வியற்கை பிறழாது பாடிய **பத்துப்பாட்டு, கலித்தொகை** முதலான பழைய தமிழ்ப்பாட்டுகளுக்கு நிகரானவை வேறெந்த மொழியிலேனும் எடுத்துக் காட்ட இயலுமோ?

**திருவாசகம், திருச்சிற்றம்பலக்கோவை, தேவாரம், பெரியபுராணம்** என்னுந் தெய்வத் தமிழ் நூல்கள், கன்னெஞ்சமுங் கரைந்துருகி எத்திறத்தவரும் இறைவன் அருட்பெருக்கில் அமிழ்ந்தி இன்புருவினராய் நிற்குமாறு செய்தல் போல, வேறு எந்த மொழியில் உள்ள எந்நூலேனுஞ் செய்தல் கண்டதுண்டோ?

மக்கள் முடிவாய்த் தெரியவேண்டும் மெய்ப்பொருள்களை யெல்லாந் தெளித்துக்கூறி முடிவு கட்டிய **சிவஞான போதம், சிவஞானசித்தி** போன்ற மெய்ந்நூல்களும், அவற்றிற்கு மெய்யுரை

விரித்த சிவஞான முனிவர் நுண்ணுரை போன்ற உரைநூல்களுந் தமிழிலன்றி வேறெந்த மொழியிலேனுங் காணப்படுவதுண்டோ?

இந்நூற் பொருள்களென்னுந் தீம்பாலை நமதுயிரெல்லாந் தித்திக்கக் குழைத்தூட்டும் நம் தமிழ்த்தாயை மறவாது பேணும் பெரும் பேற்றை நம் தமிழ்மக்கள் எல்லாரும் பெற்றுச் சிறந்திடுவாராக!'' என இவ்வாறு அடிகளாரைப்போல் உளம் நெகிழ்ந்துரைப்பவர் எவருமே இல்லை எனலாம்.

## தனிச்செந்தமிழ்நூல் போற்றுவோம்

பழந்தமிழ் நூல்களை நவில்தொறும் நவில்தொறும் நயம் கண்டு மகிழ்ந்தவர் மறைமலையடிகளார். இத்தகைய நூலின்பத்தை உலக மக்கள் அனைவரும் நுகர்ந்து தமிழே உலக முதன்மொழி, முதுமொழி, என்றும் மாறா இளமை நலம் பொருந்திய மொழி எனப் போற்ற வேண்டும் என விழைந்தவர் மறைமலையடிகளார். வேத காலத்திற்கும் முன்னரே எழுத்துருவம் பெற்ற ஏற்றமிகு தமிழ்மொழியின் எண்ணற்ற நூல் வளமையை ஆய்வுலகத்திற்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் எடுத்துக்காட்டி விளக்குவதில் முதன்மையான தமிழர் மறைமலையடிகளே யாவார்.

அருந்தமிழ் நூல்களைத் தாமே முயன்று கற்றும், தம் பேச்சிலும் எழுத்திலும் அவற்றை எடுத்துக்காட்டியும், பிற்காலத்துக்காக அவற்றைக் காத்தளித்தும் புகழ் எய்திய மறை மலையடிகளாரைப் போற்றுவோர் அவர் வழியில் தமிழ் காக்க முனைதல் வேண்டும். முனைந்தால் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்குங் காணோம்' என்று உலகமக்கள் கூறும் நிலை உருவாகும் என்பது திண்ணம்.

# பின்னிணைப்புகள்

## 1. மறைமலையடிகள் வாழ்க்கைக் குறிப்புகள்

15-7-1876 : பிறந்தநாள்

இயற்பெயர் : வேதாசலம்

பிறந்த விண்மீன் : பரணி

பிறப்பிடம் : நாகப்பட்டினம் அருகே காடம்பாடி

தந்தையார் : சொக்கநாத பிள்ளை (மருத்துவர்)

தாயார் : சின்னம்மையார்

பள்ளிக்கல்வி : நாகப்பட்டினம் வெஸ்லியன் மிஷன் பள்ளி. வகுப்புத் தலைவர் என்னும் சிறப்பும், தலைமை மாணவர் என்னும் தேர்ச்சியும் பெறுதல்.

1888 : வயது பன்னிரண்டு. ஐந்து வகுப்பு நிறைவு. தந்தையார் சொக்கநாதர் இயற்கை எய்தியமை. வீட்டிலே தமிழ்க்கல்வி, வெளியிலே சமயக்கல்வி, கிடைத்த தமிழ் நூல்களையெல்லாம் கற்றல். நாகையில் 'இந்து மதாபிமான சங்கம்' நிறுவி அதன்மூலம் சைவ சமய அறிவு பெருக்குதல்.

1891 : வயது பதினான்கு. ஒன்பதாம் வகுப்பு. பள்ளிப் படிப்பு நிறுத்தம். வெ. நாராயண சாமிப்பிள்ளை, சோம சுந்தர நாயகர் தொடர்பு. முறைப்படி தமிழ்ப்பயிற்சி துவக்கம்.

1893 : வயது பதினேழு. திருமணம். ஒன்றுவிட்ட மாமன் மகள் சவுந்தரவல்லி மணப்பெண். வயது பதின்மூன்று.

1894 : வயது பதினெட்டு. பெண் மகவு, சிந்தாமணி பிறத்தல்.

2-12-1895 : பேராசிரியர் சுந்தரம்பிள்ளை அறிமுகம். சான்றிதழ் வழங்கல். திருவனந்தபுரம் மார்த்தாண்டன் தம்பியின்

ஆங்கிலப்பள்ளியில் தமிழாசிரியப் பணியை ஏற்றல். சைவ சபைகளில் உரையாற்றல்.

12-9-1896 : திருவனந்தபுரம் அரசர் கல்லூரியில் நாடகத்தமிழ் பற்றி ஆராய்ச்சிப் பொழிவு செய்தல். உடல்நலக் குறைவு. நாகை திரும்புதல்.

1897 : சோமசுந்தர நாயகர் விருப்பிற்கிணங்கித் 'துகளறு போதம்'- நூறு பாடல்களுக்கு உரை வரைதல். 'முதற்குறள் வாத நிராகரணம்' கட்டுரை வெளியிடல். சித்தூர் முறை மன்ற நடுவர் நல்லசாமி தொடர்பு. சித்தாந்த தீபிகை தமிழ்ப்பகுதிப் பொறுப்பு ஏற்றல்.

21-6-1897 : சித்தாந்த தீபிகை முதல் இதழ் வெளிவரல். முதல் ஐந்து இதழ்களுக்கு அடிகள் ஆசிரியர்.

9-3-1898 : சென்னை, கிறித்துவக் கல்லூரியில் தமிழாசிரியர் பொறுப்பு ஏற்றல். வயது இருபத்து மூன்று. தொடர்ந்து பதின்மூன்று ஆண்டுகள் பணி. பல நூல்கள் கற்றல்.

1898 : துகளறு போதம்-உரைநூல்-முதற்பதிப்பு. முதற்குறள் வாத நிராகரணம்- முதற்பதிப்பு. சித்தாந்த ஞானபோதம், சதமணிக்கோவை குறிப்புரை.

1899 : வேதாந்த மத விசாரம்- முதற்பதிப்பு

19-4-1900 : அடிகள் இல்லத்திற்கு ஆறுமுகநாவலர் வருகை.

1900 : திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை, வேத சிவாகமப் பிரமாண்யம்- முதற்பதிப்பு.

22-2-1901 : சோமசுந்தரநாயகர் மறைவு. 'சோமசுந்தர காஞ்சி'- இரங்கல் மாலை பாடியது.

1902 : ஞானசாகரம் (அறிவுக்கடல்) முதல் மலர் வெளியிடல்.

20,27-9-1903 : முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை எழுதுதல்.

18-10--1903 : அருட்பா-மருட்பா போர் - வழக்காடல்கள்.

18-11-1903 : அருட்பா ஆய்வுரை வெளியிடல் (கிடைத்திலது)

1903 : நீலாம்பிகை-பெண் மகவு பிறத்தல்

24,25-5-1904 : தமிழ்ச் சங்க மூன்றாம் ஆண்டுவிழாவில் உரையாற்றல். பாண்டித்துரையார் மகிழ்வு.

| | | |
|---|---|---|
| 1904 | : | திருஞானசம்பந்தன்-ஆண்மகவு பிறத்தல். |
| 18-5-1905 | : | திருப்பாதிரிப்புலியூரில் ஞானியாரைக்காணல். |
| 7-7-1905 | : | சைவ சித்தாந்த மகா சமாசம் நிறுவுதல். |
| 29-5-1905 | : | வ.உ.சி. சந்திப்பு. |
| 26-5-1906 | : | தமிழ்ச்சங்க ஐந்தாம் ஆண்டுவிழா. டாக்டர் உ.வே.சாமிநாதய்யர் தலைமையில் 'பட்டினப் பாலைப் புத்துரை' பற்றி விரிவுரை. |
| 26-12-1906 | : | சிதம்பரம் சமாசம் முதலாண்டு விழா. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை வரைதல். |
| 1906 | : | மாணிக்கவாசகன்-ஆண் மகவு பிறத்தல். |
| | | சைவசித்தாந்த ஞானபோதம் - முதற்பதிப்பு. |
| | | பண்டைக்காலத் தமிழரும் ஆரியமும்- முதற்பதிப்பு |
| 21,22-1-1907 | : | 'சிவராசயோகி' இராசானந்த சுவாமிகளை வணங்கல். |
| 1907 | : | சாகுந்தல நாடகம்- முதற்பதிப்பு. |
| 1907 | : | திருநாவுக்கரசு - ஆண்மகவு பிறத்தல். |
| 7-6-1908 | : | இராசானந்த சுவாமிகள் அடிகளாருக்கு சிவராசயோகக் கலையை அறிவுறுத்தல். |
| 1908 | : | The Oriental Mystic Myna-ஆங்கில இதழ் வெளியிடல். ஓராண்டு 12 இதழ்கள் வந்தன,. |
| | | சிந்தனைக் கட்டுரைகள் - முதற்பதிப்பு. |
| 22-2-1911 | : | பல்லவபுரம் சாவடித் தெருவில் மனையிடம் வாங்கல். |
| 10-4-1911 | : | கிறித்துவக் கல்லூரியில் பேராசிரியர் வேலையிலிருந்து விலகுதல். |
| 24-4-1911 | : | சமரச சன்மார்க்க நிலையம் தோற்றுவித்தல். |
| 1-5-1911 | : | பல்லவபுரம் மாளிகையில் குடியேறல். |
| 1911 | : | திரிபுரசுந்தரி - பெண்மகவு பிறத்தல். |

27-8-1911 : துறவு மேற்கொள்ளுதல்.

நாகை வேதாசலம் பிள்ளை-சுவாமிவேதாசலம் ஆனமை.

17,19-12-1911 : தூத்துக்குடி சைவ சித்தாந்த சபை 28ஆம் ஆண்டு விழா.

1911 : மரணத்தின் பின் மனிதர் நிலை - முதற் பதிப்பு.

குமுதவல்லி : நாகநாட்டரசி - முதற்பதிப்பு.

21-3-1913 : வடநாட்டுச் சுற்றுலா மேற்கொள்ளல்.

23-3-1913 : விசயவாடா காணல்.

27-3-1913 : தவளேசுவரம் காணல்.

30-3-1913 : பூரி சகந்நாதம் காணல்.

1-4-1913 : புவனேசுவரம் காணல்.

4-4-1913 : கல்கத்தா காணல்.

7-4-1913 : பேலூர் மடம், தட்சணேசுவரம்.

4-5-1913 : கல்கத்தாவில் 'சன்மார்க்க சபை' நிறுவுதல். தார்சிலிங் மலையைக் காணல், காசியில் தங்குதல், கங்கையில் நீராடல், அன்னிபெசண்டு அம்மையார் உரைகேட்டல். அரித்துவாரம் சென்று தங்குதல். 'உலக மதம்' என்னும் பொருளில் ஆங்கிலக் கட்டுரை வரைதல். இமயச்சாரலில் பல இடங்களைக் காணல்.

15-6-1913 : தில்லிமாநகர் காணல். ஆக்ரா, பம்பாய் வரல். செகந்திராபாத்தில் பல நிகழ்ச்சிகள்.

11-7-1913 : சென்னை வருகை.

20-7-1913 : மயிலாப்பூர் இராணடே மண்டபத்தில் பாராட்டுவிழா.

8-12-1913 : அன்னையார் சின்னம்மையார் 75 வயதில் மறைவு.

1913 : சாதி வேற்றுமையும் போலிச் சைவரும்-முதற்பதிப்பு.

7-1-1914 : கொழும்புத் துறையை அடைதல்.

இளைஞர் திருவரங்கம் சந்திப்பு.

| | | |
|---|---|---|
| 27-2-1914 | : | கொழும்பு நகரில் சமரச சன்மார்க்க சபை நிறுவுதல். மாத்தளை, அநுராதபுரம், தலைமன்னார், திருக்கேத்தீசுவரம் செல்லல். கப்பலில் இராமேசுவரம் திரும்பல். |
| 25-3-1914 | : | பல்லவபுரம் திரும்புதல். |
| 12-12-1916 | : | T.M. Press (திருமுருகன் அச்சுக்கூடம்) அமைத்தல். தனித்தமிழ் உணர்வு மலர்தல். |
| 21-5-1917 | : | இலங்கைச் செலவு மேற்கொள்ளல். |
| 23-5-1917 | : | கொழும்பில் வரவேற்பு. பல தலைப்புகளில் உரை. |
| 29-8-1918 | : | திருச்செந்தூர், சைவமாநாடு: தமிழ்மொழி ஓர் உயர்தனிச் செம்மொழி என முடிவு செய்தளித்தது. |
| 1-2-1920 | : | 'செந்தமிழ்க் களஞ்சியம்' என்னும் திங்கள் இதழ் வெளிவந்தது. திருவாசகத்திற்கு உரை எழுதுதல். |
| 16-12-1921 | : | மூன்றாம் முறை இலங்கைச் செலவு மேற்கொள்ளல். |
| 21-12-1921 | : | யாழ்ப்பாணம் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் விபுலானந்த அடிகள் வேண்டுகைப்படி, 'திருக்குறள்' பற்றி உரையாற்றல். |
| 1921 | : | பல உரைகள் நிகழ்த்துதல். |
| | | கோகிலாம்பாள் கடிதங்கள் - முதற்பதிப்பு. |
| | | பொருந்தும் உணவும் பொருந்தா உணவும் - முதற்பதிப்பு. |
| | | அறிவுரைக் கொத்து - முதற்பதிப்பு. |
| | | கழலை நோய்க்கு ஆட்படல். |
| 20-1-1922 | : | யாழ்ப்பாணத்தில் நிகழ்ச்சிகள். |
| 1922 | : | யோக நித்திரை : அறிதுயில் - முதற்பதிப்பு. |
| 1923 | : | வேளாளர் நாகரிகம் - முதற்பதிப்பு. |
| 31-12-1925 | : | சைவ சித்தாந்த மகா சமாசத்தின் இருபதாம் ஆண்டு விழா. |
| 1925 | : | பலி விலக்கு இயக்கம். 'சிறு தேவதைகட்கு உயிர்ப்பலி யிடலாமா?' |
| 2-2-1927 | : | மயிலை கபாலீசுவரர் கோயிலில் நீலாம்பிகையார் திருவரங்கனார் திருமணம். |

| | | |
|---|---|---|
| 23,24-7-1927 | : | கரந்தைத் தமிழ்ச்சங்கம் - ஆண்டுவிழா. |
| 1927 | : | மனித வசியம் : மனக்கவர்ச்சி- முதற்பதிப்பு. |
| 15-10-1927 | : | திருச்சி, சைவ சித்தாந்த மாநாடு. |
| 1929 | : | திருப்பாதிரிப்புலியூர், சைவர் மாநாடு. |
| 1929 | : | பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்- முதற்பதிப்பு. கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா- முதற்பதிப்பு. |
| 1930 | : | மறைமலையடிகள் கல்விக் கழகம் நிறுவியது. |
| | | மாணிக்கவாசகர் வரலாறும் காலமும்-முதற்பதிப்பு. |
| 2-2-1931 | : | பொதுநிலைக்கழக மாளிகை மாடியில் 'அம்பலவாணர் திருக்கோயில்' குடமுழுக்கு. மணிமொழி நூல்நிலையம் உருவாக்குதல். |
| 1933 | : | மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை-முதற்பதிப்பு. |
| 1934 | : | சிறுவர்க்கான செந்தமிழ்- முதற்பதிப்பு. |
| | | சாகுந்தல நாடக ஆராய்ச்சி - முதற்பதிப்பு. |
| 1935 | : | Ocean of Wisdom ஆங்கில இதழ் - முதற்பதிப்பு. |
| | | மாணிக்கவாசகர் மாட்சி - முதற்பதிப்பு. |
| 1936 | : | முற்காலப் பிற்காலப் புலவோர் - முதற்பதிப்பு. |
| | | தமிழ்நாட்டவரும் மேல்நாட்டவரும் - முதற்பதிப்பு. |
| | | Tamilian And Aryan Form of Marriage - முதற்பதிப்பு. |
| 11-9-1937 | : | திருவல்லிக்கேணிக் கடற்கரைக் கூட்டம். |
| 4-10-1937 | : | கோகலே மண்டபத்தில் இந்தி எதிர்ப்பு மாநாடு. |
| 1937 | : | Ancient and Modern Tamil Poets - முதற்பதிப்பு. |
| | | இந்தி பொது மொழியா ? - நூல் வெளியிடல். |
| 3-6-1938 | : | சைதாப்பேட்டை இந்தி எதிர்ப்பு மாநாடு. |
| 16-7-1939 | : | கோகலே மண்டபம், திருமண மாநாடு. |
| 10-10-1940 | : | பச்சையப்பன் மண்டபம், அனைத்து இந்தியத் தமிழர் மத மாநாடு. |
| 1940 | : | திருவாசக விரிவுரை-முதற்பதிப்பு. |
| | | Saiva Siddanta As a Philosophy of Practical Knowledge- முதற்பதிப்பு. |

| | | |
|---|---|---|
| 15-10-1941 | : | தமிழர் மதம் - முதற்பதிப்பு. |
| 28-4-1944 | : | திருவரங்கர் இயற்கை எய்துதல். |
| 5-11-1945 | : | மகள் நீலாம்பிகையார் இயற்கை எய்துதல். |
| 17-7-1948 | : | சென்னை, தமிழ் மாகாண இந்தி எதிர்ப்பு மாநாடு. |
| 1949 | : | அம்பிகாபதி-அமராவதி நாடகம் எழுதியது (இறுதி நூல்) |
| 24-5-1950 | : | சவுந்தரம் அம்மையார் இயற்கை எய்துதல். |
| 15-8-1950 | : | அடிகளார் நோய்வாய்ப்படுதல். |
| 15-9-1950 | : | மாலை 3.30 மணிக்கு அடிகளார் பொன்னுடல் நீங்கிப் புகழுடல் உற்றார். |
| 17-9-1950 | : | அடிகளார் உடற்பொடி கடலோடு கலந்தது. |
| 1951 | : | திருக்குறள் ஆராய்ச்சி - முதற்பதிப்பு. |
| 1952 | : | மாணிக்கவாசகர் வரலாறு- முதற்பதிப்பு. |
| 1954 | : | அம்பிகாபதி-அமராவதி - முதற்பதிப்பு. |
| 1957 | : | மறைமலையடிகளார் கடிதங்கள்-முதற்பதிப்பு. |
| | | இளைஞர்க்கான இயன்றமிழ்-முதற்பதிப்பு. |
| | | சோமசுந்தர நாயகர் வரலாறு - முதற்பதிப்பு. |
| 1958 | : | சிவஞான போத ஆராய்ச்சி- முதற்பதிப்பு. |
| 24-8-1958 | : | மறைமலையடிகளார் நூலகம் திறக்கப்பட்டது. |
| 17-7-1962 | : | பல்லவபுரப் பொது நிலைக்கழக மாளிகையே மறைமலையடிகள் கலைமன்றம் என்ற பெயரில் திறக்கப்பட்டது. |
| 1969 | : | Can Hindi be a Lingua Franca of India-முதற்பதிப்பு |
| 1971 | : | அறிவுரைக் கோவை - முதற்பதிப்பு. |
| 1972 | : | உரைமணிக்கோவை - முதற்பதிப்பு. |
| 1976 | : | அடிகளார் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள். |
| | | கருத்தோவியம் - முதற்பதிப்பு |
| 1977 | : | மறைமலையடிகள் பாமணிக்கோவை - முதற்பதிப்பு. |

## 2. மறைமலையடிகள் நிகழ்த்திய சொற்பொழிவுகள் சில

| நாள் | நிகழிடம் | தலைப்பு |
|---|---|---|
| 1888 | இந்துமதாபிமான சங்கம், நாகப்பட்டினம் | பல தலைப்புகளில் |
| 1896 | சைவ சித்தாந்த சபைகள், திருவனந்தபுரம் | சைவசித்தாந்தம் |
| 12-9-1896 | அரசர் கல்லூரி திருவனந்தபுரம் | நாடகத்தமிழ் (தலைமை: பேரா.சுந்தரம்பிள்ளை) |
| 20,27-9-1903 | சிந்தாதரிப்பேட்டை சென்னை | அருட்பாவின் சிறப்பு |
| 18-10-1903 | வேணுகோபால் சென்ட்ரல் ஹால், சென்னை. | அருட்பாவின் சிறப்பு |
| 24,25-5-1904 | தமிழ்ச்சங்கம், மதுரை | தமிழர் நாகரிகத்தின் பழமையும் சிறப்பும், பண்டைக்காலத்தமிழர் ஆரியர். (தலைமை: கனகசபைப்பிள்ளை) |
| 27-2-1905 | ஆடிசன்பேட்டை சத்திரம், காஞ்சிபுரம் | அருட்பா |
| 18-5-1905 | ஞானியார்மடம், திருப்பாதிரிப்புலியூர் | திருச்சிற்றம்பல விளக்கம் (தலைமை: ஞானியாரடிகள்) |
| 30-5-1905 | சைவசித்தாந்தசபை, தூத்துக்குடி | ஞானசம்பந்தர் |
| 1-6-1905 | சங்கரராமேசுரர் கோயில் தூத்துக்குடி | கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் |
| 1-7-1905 | உறையூர், திருச்சி | அருட்பா |
| 28-10-1905 | சென்னை | மெய்கண்டசித்தாந்தம் (தலைமை: சர்.ஏ.கனகசபைப் பிள்ளை) |
| 24-12-1905 | தஞ்சாவூர் | சைவ சித்தாந்தம் (தலைமை: பூவை கலியாண சுந்தரம்) |

| | | |
|---|---|---|
| 26-5-1906 | தமிழ்ச்சங்க ஐந்தாம் விழா மதுரை | பட்டினப்பாலை ஆராய்ச்சி (தலைமை: டாக்டர் உ.வே.சா.) |
| 18-10-1906 | மெய்கண்டார் விழா சென்னை | சைவ சித்தாந்தம் |
| 26-12-1906 | உயர்நிலைப்பள்ளி சிதம்பரம் | பிராணாயாமம் (தலைமை: சர். பொன்னம்பலம் இராமநாதன்) |
| 27-12-1906 | உயர்நிலைப்பள்ளி சிதம்பரம் | பிராணாயாமம் (தலைமை: சர். பொன்னம்பலம் இராமநாதன்) |
| 28-12-1906 | உயர்நிலைப்பள்ளி சிதம்பரம் | Saiva Siddhanta (தலைமை: சர். பொன்னம்பலம் இராமநாதன்) |
| 3-7-1907 | ஞானியார் மடம் திருப்பாதிரிப்புலியூர் | முத்திசாதனம் |
| 7-7-1907 | ஞானியார் மடம் திருப்பாதிரிப்புலியூர் | திருச்சிற்றம்பல விளக்கம் |
| 25,27-12-1907 | சிதம்பரம் | சைவசித்தாந்தம் (தலைமை: பாண்டித்துரைத்தேவர்) |
| 24-5-1908 | தமிழ்ச்சங்க ஏழாம் ஆண்டு விழா, மதுரை | குறிஞ்சிப்பாட்டு ஆராய்ச்சி (தலைமை: பாண்டித்துரைத் தேவர்) |
| 28-5-1909 | பெசன்ட் லாட்ஜ் கழகம், சென்னை | சாங்கியமும் சித்தாந்தமும் (ஆங்கிலம்) |
| 28-5-1909 | லைப்ரரி யூனியன், பறங்கிமலை | கீதை |
| 29-8-1909 | சிவனடியார் திருக்கூட்டம் சென்னை | சித்தாந்தமும் இலக்கியமும் |
| -12-1909 | திருச்சி | சைவசித்தாந்தம் |
| 20-8-1910 | சரசுவதிசங்கம், பறங்கிமலை | திருவள்ளுவர் |

| | | |
|---|---|---|
| 16,18-12-1910 | சைவசித்தாந்த சபை, தூத்துக்குடி | சித்தாந்தபோதம் |
| 20-12-1910 | சைவசித்தாந்த சபை, தூத்துக்குடி | திருஞானசம்பந்தர் |
| 24-12-1910 | திருச்செந்தூர் | சைவசமயம் |
| 25-12-1910 | உடன்குடி | கடவுள் நிறைவு |
| 14-7-1911 | நடராசபத்தசபை, சூளை | பண்டைத்தமிழர் வீர வாழ்க்கை |
| 16-10-1911 | இராமநாதபுரம் | சைவசித்தாந்தம் |
| 24-10-1911 | பரமக்குடி | அன்பு |
| 27-10-1911 | மதுரை ஆதீனம், மதுரை | திருஞானசம்பந்தர் |
| 5,9-11-1911 | சைவசித்தாந்தசபை, வெளிப்பாளையம் | உயிரியல், கடவுளியல் |
| 10-11-1911 | மஞ்சக்குப்பம் | கல்வியியல் |
| 2-12-1911 | சத்திவிலாச மண்டபம், திருவண்ணாமலை | சமரச சன்மார்க்கம் |
| | தோப்பாசாமி மடம் வேலூர், வ.ஆ.மா., | வேதாந்தமும் சித்தாந்தமும் |
| 15-12-1911 | பக்திவினை கழகம், கோவில்பட்டி | சைவசித்தாந்தத்தின் முடிவு |
| 17,19-12-1911 | சித்தாந்தசபை, தூத்துக்குடி | உலகமதமும் சமரச சன்மார்க்கமும் |
| 21-1-1912 | சைவ சித்தாந்த சபை, வேலூர் | திருஞானசம்பந்தர் |
| 21-1-1912 | சைவ சித்தாந்த சபை, வேலூர் | ஊன் விலக்கு |
| 1-2-1912 | சத்தியதருமச்சாலை வடலூர் | சன்மார்க்க லட்சியம் |
| 5-2-1912 | விக்டோரியா கிளப், மஞ்சகுப்பம் | சீவகாருண்யம் |

| | | |
|---|---|---|
| 7-3-1912 | சைவசித்தாந்த சபை வெளிப்பாளையம் | சித்தாந்தம் |
| 8-3-1912 | நாகப்பட்டினம் | பிராணாயாமம் |
| 14,17-3-1912 | தஞ்சாவூர் | வேதாந்த சித்தாந்த சமரசம், பிரணவம். |
| 18-3-1912 | அரித்துவாரமங்கலம் | பிரணவம் |
| 14-4-1912 | தமிழ்ச்சங்கம், இளங்காடு, தஞ்சாவூர் | சம்பந்தர் வரலாற்றுண்மை |
| 15-4-1912 | திருக்காட்டுப்பள்ளி | சிவலிங்கம் |
| 21,23,28-4-1912 | போத்தனூர், கோவை | ஆத்ம விசாரம், குகப்படலம். |
| 29-4-1912 | தியாசொபிகல் மண்டபம் பொள்ளாச்சி | திருஞானசம்பந்தர் வாழ்க்கைச் சிறப்பு |
| | அரண்மனை, புரவிபாளையம் | பக்தி |
| 7,9-6-1912 | சைவசபை, பாளையங்கோட்டை | தமிழ் |
| 6-6-1912 | நெல்லையப்பர் கோயில் திருநெல்வேலி | அத்வைத சித்தாந்தம் |
| 12-6-1912 | நெல்லையப்பர் கோயில் திருநெல்வேலி | திருஞானசம்பந்தர் |
| 19-6-1912 | அம்பாசமுத்திரம் | பக்தி |
| 23-6-1912 | திருநெல்வேலி | சிவலிங்கம் |
| 24-6-1912 | திருநெல்வேலி | உமாமகேசுவரர் |
| 25-6-1912 | திருநெல்வேலி | பக்தி |
| 28,30-6-1912 | சத்சனசபை, தூத்துக்குடி | உமாமகேசுவரர் |
| 17-7-1912 | திருநாவுக்கரசு மடம், குற்றாலம். | அன்பு, சிவலிங்கம் |
| 15,17-9-1912 | சைவசித்தாந்த சபை, திருத்தருப்பூண்டி, தஞ்சாவூர் | ரிக்வேதமும் பழைய உபநிடதங்களும் திருஞானசம்பந்தர். |

| | | |
|---|---|---|
| 23-9-1912 | பட்டுக்கோட்டை | பிரணவம் |
| 26,29-9-1912 | சைவசித்தாந்த சபை வெளிப்பாளையம் | ஆத்மலட்சணம் சிவலிங்க வழிபாடு |
| 3-12-1912 | சன்மார்க்க சங்கம் கடலூர் | சன்மார்க்கம் |
| 7-1-1913 | திருவல்லிக்கேணி சென்னை | தமிழர் நாகரிகம் |
| 9-2-1913 | மகாசனசபை மண்டபம், இராயப்பேட்டை, சென்னை | திராவிட நாகரிகம் |
| 13-4-1913 | கல்கத்தா | திருஞானசம்பந்தர் (ஆங்கிலம்) (தலைமை:பி.கே. ஆச்சார்யா) |
| 16-4-1913 | கல்கத்தா | சாங்கியமும் சைவசித்தாந்தமும் (தலைமை: ஹரீந்திரநாத் டட்டா) |
| 4-5-1913 | கல்கத்தா | அன்பு |
| 27-6-1913 | செகந்தராபாத் | அன்பு |
| 29-6-1913 | செகந்தராபாத் | ஆத்மலட்சணம் |
| 1-7-1913 | செகந்தராபாத் | கோயில் வணக்கம், சுந்தரர், மாணிக்கவாசகர் |
| 6-7-1913 | செகந்தராபாத் | திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர். |
| 20-7-1913 | ரானடே மண்டபம், மயிலாப்பூர், சென்னை | வடஇந்தியப் பயண அனுபவங்கள் |
| 20,21-12-1913 | சைவ சித்தாந்த சபை, தூத்துக்குடி | சைவசித்தாந்தம் |
| 4-1-1914 | தூத்துக்குடி | திருஞானசம்பந்தர் சரித்திரப் பெருமை |
| 7,10,13,18-1-1914 | தம்பையாசத்திரம் கொழும்பு | திருஞானசம்பந்தர், சிவலிங்கம், வேதாந்த சித்தாந்த சமரசம், ஆத்ம லட்சணம். |

| | | |
|---|---|---|
| 1-2-1914 | கொழும்பு | கொல்லாமை உயிர்களிடத்தன்பு. |
| 1-3-1914 | தமிழ் இளைஞர் கலைக்கழகம், கொழும்பு | சமரச சன்மார்க்கம் சைவ சித்தாந்த சமயத்தின் குறிக்கோள் (தலைமை: வேலுப்பிள்ளை) |
| 5-3-1914 | விவேகானந்த சபை, மாத்தளை | இந்துமதம் |
| 8-3-1914 | விவேகானந்த சபை, மாத்தளை | அன்பு |
| 11-3-1914 | விவேகானந்த சபை, மாத்தளை | சிவலிங்கம் |
| 18-3-1914 | தலைமன்னார் | சைவசமய மாண்பு |
| 21-3-1914 | தலைமன்னார் | அன்பு |
| 3-5-1914 | பொள்ளாச்சி | நடராசமூர்த்தம் |
| 10-5-1914 | பாலக்காடு | பக்தி |
| 13-5-1914 | நீலகிரி | கடவுள்பாலும் மக்கள் பாலும் அன்பு |
| 23,25-6-1914 | நாகபட்டினம் | இந்துசமயச்சிறப்பு |
| 28-6-1914 | நாகபட்டினம் | சிதம்பர தத்துவார்த்தம் |
| 26-7-1914 | சித்திவிநாயகர் கோவில், ஆலந்தூர் | சைவசித்தாந்தம், அப்பூதியடிகள் |
| 28-7-1914 | சுப்பிரமணியர்கோயில், சூளை. | சீவகாருண்யம் |
| 14-9-1914 | வைசிய சிவானந்த சபை தேவகோட்டை | சமரச சன்மார்க்கம் |
| 20-9-1914 | வைசிய சிவானந்த சபை தேவகோட்டை | சீவகாருண்யம் |
| 20,22-12-1914 | சைவசித்தாந்த சபை, தூத்துக்குடி | பிராணாயாமம், சைவசித்தாந்தம் (தலைமை: சிதம்பரநாத முதலியார்) |

| | | |
|---|---|---|
| 4-1-1915 | பாளையங்கோட்டை | அன்பு |
| 7,8-1-1915 | விருதுபட்டி | அன்பு<br>சைவ சித்தாந்தம் |
| 29-1-1917 | ஆரல்வாய்மொழி,<br>திருநெல்வேலி | திருஞானசம்பந்தர் |
| 4-2-1917 | ஞானோதய சபை,<br>கோட்டாறு | அன்பே சிவம் |
| 9-2-1917 | பள்ளிமண்டபம் | மக்கள் கடமை |
| 12-2-1917 | பள்ளிமண்டபம் | சமரச சன்மார்க்கம் |
| 25-2-1917 | திருநெல்வேலி | உமாமகேசுவரர் |
| 1-3-1917 | சிவன்கோயில்,<br>பாளையங்கோட்டை | சைவசித்தாந்தம்,<br>பசுபதிபாச இலக்கணம். |
| 11-3-1917 | பஞ்சவாரணேசுவரர் கோயில்,<br>உறையூர் | ஆத்ம ஆலயம் |
| 16-3-1917 | விக்டோரியா எட்வர்ட்<br>மண்டபம், மதுரை | கடவுளின் ஆண்பெண்<br>வடிவத் தன்மை. |
| 21-3-1917 | விக்டோரியா எட்வர்ட்<br>மண்டபம், மதுரை | ஆத்ம லட்சணம் |
| 27-6-1917 | தம்பையா சத்திரம்,<br>கொழும்பு | உமாமகேசுவரர் |
| 28-6-1917 | ஜிந்தும்பட்டிமண்டபம்<br>கொழும்பு | சைவசித்தாந்தம் |
| 1-7-1917 | நாடகமன்றம், கொழும்பு | அப்பூதியடிகள் |
| 5-7-1917 | நாடகமன்றம், கொழும்பு | சைவமுந்தமிழும் (தலைமை:<br>சர்.பி. அருணாசலம்) |
| 11-7-1917 | நாடகமன்றம், கொழும்பு | அன்பு |
| 16-7-1917 | நாடகமன்றம், கொழும்பு | கோயில் வணக்கம் |
| 23-7-1917 | நாடகமன்றம், கொழும்பு | பிறவிப்பயன் |
| 22-2-1918 | குன்றத்தூர் | சேக்கிழார் வாழ்க்கை |

| | | |
|---|---|---|
| 17-8-1918 | சைவமாநாடு, அம்மன்புரம், திருச்செந்தூர் | ஞானசம்பந்தர் |
| 18-8-1918 | சைவமாநாடு, அம்மன்புரம், திருச்செந்தூர் | தாயின்கடமை |
| 29-8-1918 | சைவமாநாடு, அம்மன்புரம், திருச்செந்தூர் | உயிர்ப்பண்பு |
| 25-9-1918 | திருஞானசம்பந்தர் கோயில் திருநெல்வேலி | சுந்தரர் |
| 26-9-1918 | சிவன்கோயில், பாளையங்கோட்டை | பழந்தமிழர் நாகரிகம் |
| 21-12-1921 | மானிப்பாய் இந்துக்கல்லூரி யாழ்ப்பாணம் | திருக்குறள் |
| 25-12-1921 | கீரிமலை, யாழ்ப்பாணம் | திருஞானசம்பந்தர் மாண்பு |
| 30-12-1921 | மானிப்பாய் இந்துக்கல்லூரி, யாழ்ப்பாணம் | திருக்குறள் (தலைமை: விபுலானந்த அடிகள்) |
| 2-1-1922 | சித்தங்கேணிக் கல்விச் சாலை மண்டபம், வட்டுக்கோட்டை | சைவசித்தாந்தம் |
| 5-1-1922 | பார்வதி விலாச வித்யாசாலை, யாழ்ப்பாணம் | மக்களின் உயிரிலக்கணம் |
| 8-1-1922 | நீர்வேலி | கடவுள் இருதிறமாய் நிற்கும் நிலை. |
| 11-1-1922 | கந்தர் ஓடை | கடவுளின் ஆண் பெண் உருவ நிலை |
| 14-1-1922 | ரிக்வே மண்டபம், யாழ்ப்பாணம் | பழந்தமிழர் நாகரிகம் |
| 20-1-1922 | ரிக்வே மண்டபம், யாழ்ப்பாணம் | பழந்தமிழர் நாகரிகம் |
| 17-2-1922 | தனுக்கோடி | தமிழரின் கடவுட்கொள்கை |
| 23-3-1922 | தமிழ்ச்சங்கம், தொண்டை மண்டலம் உயர்நிலைப்பள்ளி, சென்னை | தமிழர் நாகரிகம் |

| | | |
|---|---|---|
| 2-4-1922 | சௌந்தரிய மாலி, கோவிந்தப்பநாயகன் தெரு, சென்னை, | பசுபதிபாசம் |
| 16-4-1922 | செயின்ட்பால் உயர்நிலைப் பள்ளி, சென்னை | தமிழர் நாகரிகம் |
| 15-11-1922 | மாகாணக் கல்லூரி மெய்ப்பொருளாய்வுக் கழகம், சென்னை | சைவ சித்தாந்தம், பகுத்தறிவுக்கான உண்மைக்கொள்கைகள் |
| 7-2-1923 | தியசாபிகல் லாட்ஜ், திருவல்லிக்கேணி, சென்னை | சைவசித்தாந்தமும் கடவுள் இலக்கணமும் |
| 20-2-1923 | தொண்டைமண்டலம் பள்ளி தங்கசாலை தெரு, சென்னை | தனித்தமிழ்நலம் |
| 31-3-1923 | உலகமதமாநாடு, இந்துப்பள்ளி திருவல்லிக்கேணி, சென்னை. | சைவசித்தாந்தம் (ஆங்கிலம்) |
| 17-6-1923 | கலைக்கழகம், பல்லாவரம் | ஒன்றென்றிரு |
| 14-10-1923 | திருக்குறள் விழா, மயிலாப்பூர், சென்னை | திருக்குறள் |
| 1-1-1924 | சௌந்தரிய மாலி, சென்னை | சிவம் |
| 8-2-1924 | சாதுமகா சங்கக் கூட்டம், பச்சையப்பன் மண்டபம், சென்னை | யோகம் (தலைமை: ஜஸ்டிஸ் மாசிலாமணிப்பிள்ளை) |
| 7-3-1924 | திருமறைக்காடு | கோயில் வணக்கம் |
| 20-7-1924 | சிவனடியார் திருக்கூட்ட வெள்ளிவிழா, பச்சையப்பன் மண்டபம், சென்னை | உலகமதம் |
| 4-10-1925 | சித்தாந்தப் பிரகாசசபை பச்சையப்பன் மண்டபம், சென்னை | கடவுள் உருத்திர (சிவன்) வடிவினர் என்பதற்கான காரணம் |
| 27-12-1925 | விஜிடேரியன் லீக், ஆலந்தூர், சென்னை | சைவ உணவு |
| 3-1-1926 | இந்து உயர்நிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி, சென்னை | The Souls Emancipation (உயிர்கட்டிலிருந்து விடுதலை) |

| | | |
|---|---|---|
| 29-4-1926 | கோகலே மண்டபம் சென்னை | சைவ உணவின் நலம் |
| 23-7-1926 | புரசைவாக்கம், சென்னை | பசுபதிபாசம் |
| 15-8-1926 | புரசைவாக்கம், சென்னை | தமிழ் கற்பது எப்படி |
| 23-10-1926 | மாணவர் சங்க விழா, சிட்டணஞ்சேரிக் கோயில், பாலூர் | சைவ சித்தாந்தத்தின் உயர்வு |
| 15-10-1927 | சைவ சித்தாந்த சபை விழா மலைக்கோட்டை, திருச்சி | கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா. |
| 16-5-1929 | சைவர் மாநாடு திருப்பாதிரிப்புலியூர் | பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம் |
| 24-5-1929 | சத்திய தரும சாலை, வடலூர் | சன்மார்க்கம் |
| 9-6-1932 | பச்சையப்பன் மண்டபம், சென்னை | நமது மொழியும் சமயமும் |
| 16-4-1933 | வேதாகமோக்த சைவ சித்தாந்தசபை, சூளை, சென்னை | இயற்கையும் கடவுட் கவர்ச்சியும் |
| 8-11-1933 | சிந்தாதரிப்பேட்டை, சென்னை | அகநானூறு |
| 16-7-1939 | தமிழர் திருமணமாநாடு, சென்னை | ஆரியர்-தமிழர் மணமுறைகள் |
| 19-10-1940 | அனைத்திந்தியத் தமிழர் மதமாநாடு, பச்சையப்பன் மண்டபம், சென்னை | தமிழர் மதம் |

# துணை நூல்கள்


1. அறிவுரைக் கொத்து, மறைமலையடிகள், பாரிநிலையம், சென்னை, 1967.

2. உரைமணிக்கோவை, மறைமலையடிகள், கழக வெளியீடு, 1972.

3. ஓங்கார உண்மையும் திருவைந்தெழுத்துண்மையும், மறைமலையடிகள், கழக வெளியீடு, 1958.

4. கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா, மறைமலையடிகள், கழக வெளியீடு, 1968.

5. கழக ஆட்சியர் வ.சு. வரலாறு, புலவர் இரா.இளங்குமரன், கழக வெளியீடு, 1981.

6. கால்டுவெல் ஒப்பிலக்கலணம், கழக வெளியீடு, 1976.

7. குமுதவல்லி நாகநாட்டரசி, மறைமலையடிகள், கழக வெளியீடு, 1966.

8. கோகிலாம்பாள் கடிதங்கள், மறைமலையடிகள், கழக வெளியீடு, 1972.

9. சாகுந்தல நாடக ஆராய்ச்சி, மறைமலையடிகள், கழக வெளியீடு, 1960.

10. சாகுந்தல நாடகம், மறைமலையடிகள், கழகவெளியீடு, 1907.

11. சாதி வேற்றுமையும் போலிச் சைவரும், மறைமலையடிகள், கழக வெளியீடு, 1963.

12. சித்தாந்த ஞான போதம், வேதாந்த மத விசாரம், நாகபட்டினம் வேதாசலம் பிள்ளை, சி.என். பிரஸ், சென்னை, 1899.

13. சிந்தனைக் கட்டுரைகள், மறைமலையடிகள், கழகவெளியீடு, 1963.

14. சிவஞானபோத ஆராய்ச்சி, மறைமலையடிகள், கழக வெளியீடு, 1958.

15. சைவ சமயம், மறைமலைஅடிகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.

16. சைவ சித்தாந்த ஞானபோதம், மறைமலையடிகள், கழக வெளியீடு, 1959.

17. சோமசுந்தரக் காஞ்சியாக்கம், மறைமலையடிகள், திருமுருகன் அச்சுக்கூடம், பல்லாவரம், 1941.

18. சோமசுந்தர நாயகர் வரலாறு, மறைமலையடிகள், கழக வெளியீடு, 1957.

19. தமிழ் உணர்ச்சி, பாரதிதாசன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1993.

20. தனித்தமிழ் இயக்கம், புலவர் இரா. இளங்குமரன், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.

21. தனித்தமிழ் மாட்சி, மறைமலைஅடிகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2000.

22. தமிழ்த் தொண்டாற்றிய சான்றோர்கள், வரதராஜன், தாமரை பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., சென்னை, 2001.

23. தமிழர் மதம், மறைமலையடிகள், திருமுருகன் அச்சுக்கூடம், பல்லாவரம், 1941.

24. திருவாசக விரிவுரை, மறைமலையடிகள், கழக வெளியீடு, 1968.

25. திருவொற்றி முருகர் மும்மணிக்கோவை, உரையுடன், மறைமலையடிகள், கழக வெளியீடு, 1965.

26. தொலைவிலுணர்தல், மறைமலையடிகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.

27. பட்டினப்பாலை ஆராய்ச்சியுரை, மறைமலையடிகள், கழக வெளியீடு, 1966.

28. பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், மறைமலையடிகள், கழக வெளியீடு, 1966.

29. பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம், மறைமலையடிகள், கழக வெளியீடு, 1968.

30. பொருந்தும் உணவும் பொருந்தா உணவும், மறைமலையடிகள், கழக வெளியீடு, 1961.

31. மக்கள் நூறாண்டு உயிர்வாழ்க்கை, மறைமலையடிகள், மணிவாசகர் நூலகம், சென்னை, 1998.

32. மறைமலையடிகள், இரா.இளங்குமரன், சாகித்திய அக்காதெமி, புதுதில்லி, 2000.

33. மறைமலையடிகள் ஆராய்ச்சித்திறன், இரா. இளங்குமரன், கழக வெளியீடு, 2000.

34. மறைமலையடிகள் நூல் நிலைய 20 ஆம் ஆண்டு நிறைவு விழா மலர், கழக வெளியீடு, 1979.

35. மறைமலையடிகள் வரலாறு, மறை.திருநாவுக்கரசு, கழகவெளியீடு, 1959.

36. மறைமலையடிகள் வரலாறு, திரு புலவர் அரசு, கழக வெளியீடு, 2002.

37. மாணிக்கவாசகர் மாட்சி, மறைமலையடிகள், திருமுருகன் அச்சுக்கூடம், பல்லாவரம், 1935.

38. மாணிக்கவாசகர் வரலாறுங் காலமும், மறைமலையடிகள், கழக வெளியீடு, 1967 (இரண்டு பகுதிகள்)

39. முல்லைப்பாட்டு ஆராய்ச்சியுரை, மறைமலையடிகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1998.

40. முற்கால பிற்காலப் புலவோர் வாழ்க்கை, மறைமலை அடிகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2000.

41. முனிமொழிப் பிரகாசிகை, நாகபட்டினம் வேதாசலம் பிள்ளை, பண்டிதமித்திரன் பிரஸ், சென்னை, 1899.

42. யோக நித்திரை அல்லது அறிதுயில், மறைமலையடிகள், கழக வெளியீடு, 1965.

43. வாழ்வும் வழிபாடும், மறைமலைஅடிகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2000.

44. வேளாளர் நாகரிகம், மறைமலையடிகள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1997.

45. ஹிந்தி பொதுமொழியா?, மறைமலையடிகள், சந்திரா அச்சுக்கூடம், கருவூர், 1937.

*****

## உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை – 600 113
## அண்மை வெளியீடுகள்

| | |
|---|---|
| தட்சிணாமூர்த்தி குருமுகம் - 100 | 50.00 |
| நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் | 50.00 |
| அருந்தமிழ் அறிஞர் அ.ச.ஞா | 50.00 |
| ஆராய்ச்சிப் பேரறிஞர் தி.வை. சதாசிவ பண்டாரத்தார் | 45.00 |
| விவிலியத் தமிழ் | 40.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-1 | 80.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-2 | 85.00 |
| இக்கால உலகிற்குத் திருக்குறள் தொகுதி-3 | 95.00 |
| திராவிட மொழி இலக்கியங்கள் | 180.00 |
| நாவல்கலையியல் | 50.00 |
| சங்கரநமச்சிவாயர் | 60.00 |
| பண்டைத் தமிழ் எழுத்துக்கள் | 40.00 |
| Agreement in Dravidian Languages | 100.00 |
| நாடகவியல் | 70.00 |
| அறிவியல் தமிழ் அறிஞர் பெ. நா. அப்புசுவாமி | 60.00 |
| சங்க பெண்பாற் புலவர்களின் மொழியும் கருத்தும் | 30.00 |
| தமிழியல் ஆய்வுச் சிந்தனைகள் | 100.00 |
| தமிழக வரலாறு மக்களும் பண்பாடும் | 125.00 |
| தெசிணி-யின் தமிழாக்கப் பாடல் திரட்டு | 50.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| தமிழ்ச் சமூகவியல் ஒரு கருத்தாடல் | 25.00 |
| பெரியாரின் பண்பாட்டுப்புரட்சி | 25.00 |
| வ. உ. சி. வளர்த்த தமிழ் | 20.00 |
| குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு | 80.00 |
| தமிழ் நாட்டுப்புறவியல் ஆய்வின் வரலாறு | 50.00 |
| தமிழ் நாடகம் – நேற்றும் இன்றும் | 30.00 |
| நாடகமும் நாடகக் கம்பெனி அனுபவங்களும் | 60.00 |
| தொல்காப்பியப் பாவியல் கோட்பாடுகள் | 40.00 |
| தனிநாயகம் அடிகளாரின் சொற்பொழிவுகள் | 40.00 |
| பரதநாட்டிய சாஸ்திரம் | 150.00 |
| இந்திய விடுதலைக்குப் பின் தமிழிலக்கியச் செல்நெறிகள் | 55.00 |
| தொல்காப்பிய இலக்கண மொழியியல் கோட்பாடுகள் | 70.00 |
| கருவூரார் பல திரட்டு | 70.00 |
| தமிழ் மொழியின் வரலாறு | 30.00 |
| பாரதி இந்தியா | 40.00 |
| தமிழில் மருத்துவ இதழ்கள் | 50.00 |
| தமிழ்ச் சுருக்கெழுத்து நூல் | 50.00 |
| தமிழர் நாட்டு விளையாட்டுகள் | 75.00 |

Pub.No.493 **அருந்தமிழ் நூற்காவலர் அடிகளார்** 55.00